# ஸ்ரீகலா SRIKALA




ஸ்ரீகலா SRIKALA
கானலே...
காட்சிப்பிழையாய்...
காதல்...!
ஸ்ரீகலா
KAANALE!
KAATCHIPPIZHAIYAAI
KADHAL...!!!


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

# ஸ்ரீகலாவின் "கானலே!!! காட்சிப்பிழையாய்... காதல்!"

**Contents**


காட்சிப்பிழை : 1
காட்சிப்பிழை : 2
காட்சிப்பிழை : 3
காட்சிப்பிழை : 4
காட்சிப்பிழை : 5
காட்சிப்பிழை : 6
காட்சிப்பிழை : 7
காட்சிப்பிழை : 8
காட்சிப்பிழை : 9
காட்சிப்பிழை : 10
காட்சிப்பிழை : 11
காட்சிப்பிழை : 12
காட்சிப்பிழை : 13
காட்சிப்பிழை : 14
காட்சிப்பிழை : 15
காட்சிப்பிழை : 16
காட்சிப்பிழை : 17
காட்சிப்பிழை : 18
காட்சிப்பிழை : 19
காட்சிப்பிழை : 20
காட்சிப்பிழை : 21
காட்சிப்பிழை : 22

காட்சிப்பிழை : 23
காட்சிப்பிழை : 24

PDF தமிழ்.com
WWW.PDFTAMIL.COM

“காந்தா…” வெளியில் செல்வதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்த காந்தரூபனின் அருகில் வந்த அவனின் அன்னை காவேரி… ஏதோ சொல்ல வந்தவராய் அவன் முகம் பார்த்துத் தயங்கி நின்றார்.

“என்னம்மா சொல்லுங்க…?” சட்டையின் பொத்தானைப் போட்டபடி அன்னையிடம் வினவினான் அவன்.

“இன்னைக்கு சாயங்காலம் நம்ம கார்த்திகாவை பொண்ணுப் பார்க்க வர்றாங்க…” பாதியில் நிறுத்தியவரைப் பார்த்தவன், “அதான் எனக்குத் தெரியுமேம்மா… ஈவ்னிங் நான் சீக்கிரம் வந்தர்றேன்” என்றவன் தன் சட்டை, பேண்ட் பைகளில் கையை விட்டு அதிலிருந்த பத்து அம்பது என்றிருந்த ரூபாய் தாள்களை சேகரித்து எண்ணிப் பார்த்தவன், பின் தன் மேஜை இழுப்பறையைத் திறந்து அதிலிருந்து சில ரூபாய் தாள்களை எடுத்து… எல்லாவற்றையும் சேர்த்து அன்னையின் கைகளில் கொடுத்தவன்,

“இதில் இருநூறு ரூபா இருக்கு… போதுமாம்மா? ஈவினிங் எப்படியும் கையில் பணம் வந்திரும்… இப்ப இதை வச்சு சமாளிச்சுக்கங்கம்மா”

“இதுவே தாராளமா போதும்ப்பா…” அவர் பதிலளிக்க… அவன் சரி என்பதுப் போல் தலையசைத்து விட்டு அறையை விட்டு வெளியில் வந்தான்.

கூடத்தின் ஒரு மூலையில் சுவற்றில் மரப்பலகை வைத்து அடித்து… அதில் விளக்கு மற்றும் சாமிப் படங்களை வைத்திருந்தனர். அதன் முன் வந்து நின்றவன், கண்மூடி சாமியைக் கும்பிட்டு விட்டு நெற்றியில் சிறு தீட்டலாய் குங்குமத்தை வைத்துக் கொண்டான்.

“சரிம்மா… நான் கிளம்பறேன்…” என்றபடித் தன் தொழிலுக்கு வேண்டிய உபகரணங்கள் அடங்கிய தோல்

பையை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு வெளியில் வந்தான்.

“அப்புறம்…”

“எதுவா இருந்தாலும் சொல்லுங்கம்மா…” புன்னகை மாறாமல் கேட்ட மகனைப் பார்க்கும் போது அந்தத் தாய் மனம் நெகிழ்ந்தது. எத்தனைத் துன்பம் வந்தாலும் அவனின் புன்னகை மட்டும் என்றுமே வாடியது இல்லை.

“அம்மா… இந்தக் கஷ்டம் எல்லாம் நிரந்தரம் இல்லை… என்னைக்காவது ஒருநாள் நாம நல்லா வருவோம் பாருங்க. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு” தன்னம்பிக்கையுடன் கூறும் மகன் அவரைப் பொறுத்தவரையில் தகப்பன் சாமி.

“நாளைக்கு மறுநாள் காஞ்சனாவை அவள் வீட்டில் இருந்து… இங்குக் கூட்டிட்டு வரணும்”

“அம்மா… எல்லாம் எனக்கு நியாபகம் இருக்கு. நான் பார்த்துக்கிறேன்… நீங்க தேவையில்லாம எல்லாத்தையும் யோசிச்சு… உங்களைக் கஷ்டப்படுத்திக்காதீங்க” புன்னகையுடன் அன்னைக்கு ஆறுதல் சொன்னான் அவன்.

“கவலைப்படாம எப்படிப்பா இருக்க முடியும்? காஞ்சனாவுக்கு இது ரெண்டாவது டெலிவரி தானே… அதை அவங்க வீட்டில் வச்சுப் பார்த்துக்காம… அதையும் நம்மளப் பார்க்கச் சொன்னா எப்படிப்பா?” மூத்த மகளின் புகுந்த வீட்டை நினைத்து ஆதங்கப்பட்டார் அவர்.

“அம்மா…” கண்டிப்புடன் அவரைப் பார்த்தவன், “நம்ம வீட்டுப் பொண்ணுக்கு நாம செய்றோம். அவங்க செஞ்சா என்ன… செய்யலைன்னா என்ன? அண்ணங்காரன் நான் எதுக்கு இருக்கேன்…? கடைசி வரைக்கும் என் தங்கைகளுக்கு நான் செய்வேன். காஞ்சனாவை கொஞ்சம் நினைச்சுப் பாருங்க… அப்படியாவது அவள் நாலைஞ்சு மாசம் இங்கே வந்து நிம்மதியா இருக்கட்டுமே” உண்மையில் அவன் மனம் மூத்த தங்கைக்காக வருந்தியது.

PDF தமிழ் .com

காஞ்சனாவின் புகுந்த வீட்டில் மாமியார், மாமியார், நாத்தனார், கொழுந்தன் என்றுக் கொஞ்சம் பெரியக் குடும்பம். அவளின் கணவன் இளங்குமரன் அரசாங்க உத்தியோகம் பார்க்கிறான். அவன் ஒருவன் தான் அந்த வீட்டில் இப்போதைக்கு சம்பாதிக்கும் ஒரே ஆண் பிள்ளை. அதனாலேயே காஞ்சனாவின் புகுந்த வீட்டினர் அவளிடம் சற்றுப் பயந்துத் தான் நடந்துக் கொள்வர். நடந்துக் கொள்கிறார்களோ இல்லை நடிக்கிறார்களோ? எது உண்மை என்பது அந்த இறைவனுக்கே வெளிச்சம். காஞ்சனா – இளங்குமரன் இவர்களுக்கு ஒரே மகள் அன்புமலர்... இரண்டு வயதாகிறது.

புகுந்த வீட்டின் மொத்த வேலைகளும் மருமகள் என்றப் பேரில் அவள் தலையில் தான் விழும். அவளும் முகம் சுளிக்காமல் செய்வாள். ஒருநாள் திடீரென்று அவள் வீட்டிற்குப் போன காந்தன் அதைக் கண்டு விட்டான். செல்லமாக வளர்த்தத் தங்கையின் நிலைக் கண்டு அவன் மனம் வலித்தது.

“அண்ணா... நம்ம வீட்டு வேலைகளை நாம செய்றதுல என்னக் கஷ்டம் வந்திறப் போகுது? நாளைக்கு உனக்குக் கல்யாணமாகி நம்ம வீட்டுக்கு அண்ணி வந்துட்டா... அவங்கத் தானே வீட்டு வேலையெல்லாம் செஞ்சாகணும். அதுக்கு அவங்க வீட்டில் இருந்துச் சண்டைக்கு வந்தா... நீ என்னப் பண்ணுவ?”

“அதெப்படி சண்டைக்கு வர முடியும்? அது அவள் கடமை...”

“அதே மாதிரி தான் இதுவும் என் கடமைண்ணா” பெரிய மனுசி போல் பேசியத் தங்கையைப் பிரமிப்பாய் பார்த்தான் அவன்.

அன்றுத் தான் பார்த்ததைத் தான் இன்று அன்னையிடம் நினைவுக் கூர்ந்தான். அதைக் கேட்டு காவேரியும் சரியென்பதுப் போல் தலையசைத்தார். அவர் முகத்தில் ஓடியக் கவலை ரேகைகளைக் கண்டவன்,

“இன்னைக்குப் போற ஃப்ரோக்ராமில் நிறையப் பணம் தர்றேன்னு சொல்லியிருக்காங்க... அதனால உங்க கவலையெல்லாம் தள்ளி வச்சிட்டு, ஈவ்னிங் என்ன டிபன் செய்யலாம்ன்னு மட்டும் யோசிங்க” அவர் முகத்தில் புன்னகைக் கீற்றலைக் கண்டவனுக்கு அப்பொழுது தான் நிம்மதியாக இருந்தது.

“வர்றேன்ம்மா...” என்றவன் தன் பைக்கைக் கிளப்பிக் கொண்டுச் செல்ல... அவன் போவதைப் பார்த்தபடி நின்றிருந்தார் அவர். அவரின் மனதில் சொல்லொண்ணா துயரம் மண்டியது.

திருநெல்வேலியைச் சேர்ந்தக் காந்திநாதன் – காவேரியின் மூத்த மகன் தான் காந்தரூபன். அவனுக்கு அடுத்து காஞ்சனா, கார்த்திகா என்று இருப் பெண்கள். காந்திநாதன் தொழிற்சாலை ஒன்றில் வேலைப் பார்த்துக் கொண்டிருந்தார். சொற்ப வருமானம் என்றாலும் நிம்மதியாகத் தான் இருந்தனர். அப்போது தான் அந்தத் துயர நிகழ்வு நடந்து அவர்களை நிலைக்குலையச் செய்தது. காலை வேளையில் பேருந்து கூட்டத்தில் படியில் நின்றுப் பயணம் செய்தவர் கால் வழுக்கிக் கீழே விழ, பின்னால் வந்துக் கொண்டிருந்த மற்றொருப் பேருந்தின் சக்கரம் இரக்கமே இல்லாமல் அவரின் மேலேறி அவரை நசுக்கியது.

காலையில் நன்றாகச் சென்றவரை மருத்துவமனையில் சேர்த்து இருப்பதாக சொல்லவும் குடும்பத்தினர் மொத்தமும் அடித்துப் பிடித்துக் கொண்டு அங்கு ஓடினர். எந்தவிதச் சிகிச்சையும் பலனின்றி அவர் இறந்துவிட மொத்தக் குடும்பமும் நிலைக் குழைந்துப் போனது. காந்தரூபன் அப்பொழுது பி.காம் தான் படித்து முடித்திருந்தான். சிஏ பண்ண வேண்டும் என்றத் தன் ஆசையை மனதின் உள்ளேயே புதைத்துக் கொண்டுப் புகைப்படக் கடை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தான்.

அங்கு புகைப்படக் கலையைக் கற்றுத் தேர்ந்தவன்... தனியாகத் தொழில் தொடங்கி இரு வருடங்கள் தான்

PDF தமிழ் .com

ஆகிறது. இவனுக்கு உதவியாக சுடலை என்பவன் கூடவே இருக்கிறான். ரொம்பவும் பிரபலம் அடையவில்லை என்றாலும்… அவனுக்கு என்றுச் சில வாடிக்கையாளர்கள் இருந்தனர். தேவையான வருமானம் வந்தப் போதிலும்… சில நேரங்களில் இது போல் பற்றாக்குறை நிலையும் வந்துவிடும்.

காந்தனுக்கு என்று சில ஆசைகள் இருந்தது. இதை ஆசை என்றுச் சொல்வதை விடக் குறிக்கோள் என்றுச் சொல்லலாம். அது அடுக்குமாடிக் குடியிருப்பில் சொந்தமாக இரண்டுப் படுக்கையறைகள் கொண்ட வீடு ஒன்று மற்றும் புத்தம் புதியதாக இரு சக்கர வாகனம் ஒன்று… இது இரண்டும் தான் அவனுடையை இப்போதையக் கனவு. அதை அடையவே அவன் நெடுந்தூரம் பயணப்பட வேண்டும். அதற்குத் தான் மிகவும் சிக்கனமாக இருந்து சேமித்து வருகிறான்.

இன்று அவனின் தோழன் அறிவுமதியின் நண்பனுக்குக் கோவிலில் வைத்துக் கல்யாணம். அதற்குப் புகைப்படம் எடுக்கத் தான் அவன் சென்றுக் கொண்டிருந்தான். நகரின் ஒதுக்குப் புறத்தில் இருந்த அந்தக் கோவிலில் கல்யாணத்திற்கு என்று யாரும் வந்ததுப் போல் தெரியவில்லை. இவ்வளவு ஏன் கல்யாணம் என்ற ஒன்று நடப்பதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. குழப்பம் அடைந்தவனாய் தன் நண்பனுக்கு கைப்பேசியில் அழைத்தான்.

“அறிவு எங்கேடா இருக்க? கோவில்ல கல்யாணத்துக்கான ஏற்பாடு ஒண்ணையும் காணோம்?” படபடவென அவன் பொரிய, மறுபக்கம் இருந்த அறிவுமதி,

“கொஞ்சம் இருடா… நான் ஐஞ்சு நிமிசத்தில் வந்துருவேன்…” சொல்லியபடி அவன் அழைப்பை அணைக்க… காந்தனுக்கு கோபமாக வந்தது. ஏதோ சரியில்லை என்று அவன் உள் மனம் சொல்லியது.

“சாரிடா… சாரிடா” மன்னிப்புக் கேட்டபடி அருகில் வந்த நண்பனை முறைத்தான் காந்தன்.

“என்னடா... நடக்குது?” அவன் கோபமாக கேட்க,

“என்ன நடக்குது... ஒண்ணும் நடக்கலியே...? அதோ அந்த மாடு கூட அசையாம அங்கே நின்னு புல் மேயுது. நீயும் நானும் இங்கே நின்னுட்டு தான் இருக்கோம்” நகைச்சுவையாய் பேசிய அறிவை முறைத்தான் அவன்.

“திருட்டுக் கல்யாணம் பண்ணப் போறீங்களா?” அடக்கப்பட்ட கோபத்துடன் அவன் கேட்க... பதில் சொல்ல முடியாமல் முழித்தான் அறிவு. காதல் திருமணம் என்றாலே வேப்பங்காயாய் கசக்கும் நண்பனுக்குக் காதலின் மகத்துவத்தை உணர்த்தாமல் இருந்தத் தன் தவறை நினைத்து இப்பொழுது மனதுக்குள் நொந்துக் கொண்டான் அறிவு.

“இல்லடா காந்தா...” அறிவு இழுக்கும் போதே...

“அப்போ உண்மையில் திருட்டுக் கல்யாணம் தானா? போடா நீயும்... உன் பிரண்ட்டும்... இந்த மாதிரி திருட்டுக் கல்யாணத்துக்கு எல்லாம் நான் போட்டோ எடுக்க மாட்டேன்” கோபமாய் சொல்லியபடிக் கிளம்பியவனை,

“அறிவு அண்ணா... அவர் கிட்டச் சொல்லுங்க... இது திருட்டுக் கல்யாணம் இல்ல... காதல் கல்யாணம்ன்னு. அப்புறம் ஒரு கல்யாணத்துக்கு எவ்வளவுப் பணம் வாங்குவாரோ அதை விடப் பத்து மடங்குப் பணம் தர்றேன்னு சொல்லுங்க...” குயில் போன்றக் குரல் ஒன்று அவனைத் தடுத்தது.

‘எவ அவ...?’ மனதுக்குள் நினைத்துக் கொண்டே திரும்பியவன்... அப்படியே பிரமித்தான்.

சரிகை கரையிட்டப் பருத்தி சேலை அணிந்து மிதமான ஒப்புனையுடன் அழகாக இருந்தவளைக் கண்டு அவன் இதயம் தாளம் தப்பியது. இது மாதிரி அழகியை படத்திலும், புத்தகத்திலும் மட்டுமே பார்த்தவனுக்கு... நேரில் கண்டதும் கண் இமைக்க மறந்து அவளை பார்த்தான். அவள் குரலில் மட்டும் குயில் அல்ல... அவள் அழகிலும் மயில் தான் என்று

PDF தமிழ் .com

மனதில் எண்ணிக் கொண்டான். ஆனாலும் அவள் பேசியது அவனுக்குக் கடுப்பைக் கிளப்பியது.

“எவ்வளவுப் பணம் கொடுத்தாலும்… நான் இந்தக் கல்யாணத்துக்கு போட்டோ எடுக்க மாட்டேன்னு அவங்கக் கிட்டச் சொல்லிருடா அறிவு” அவளைப் போலவே நண்பனிடம் சொல்வதுப் போல் அவளிடம் சொன்னான்.

“மிஸ்டர்… உங்கப் பிரச்சினைத் தான் என்ன? எதுக்கு இப்படிக் கோபப்படுறீங்க?” நேரடியாக அவள் அவனிடம் கேட்டதும் அவன் ஒரு கணம் தடுமாறித் தான் போனான்.

“அரசி… அவனுக்கு லவ் பண்றது பிடிக்காது… இப்படி பெத்தவங்களுக்குத் தெரியாம கல்யாணம் பண்ணிக்கிறது அதை விடப் பிடிக்காது. நீ கொஞ்சம் இரும்மா… நான் அவனைப் பேசிச் சரி கட்டுறேன்” என்ற அறிவு பேசும் முன் காந்தன் அவளைப் பார்த்து,

“ஏங்க உங்களைப் பார்த்தாப் பணக்கார வீட்டுப் பொண்ணு மாதிரி இருக்கு. எதுக்குங்க உங்களுக்கு இந்தக் காதல் கத்திரிக்காய் எல்லாம்… கல்யாணம் வேணும்ன்னு உங்க வீட்டில் சொன்னீங்கன்னா… அடுத்த நிமிசம் அமெரிக்கா மாப்பிள்ளை இருந்து உள்ளூர் பணக்காரன் வரைக் கொண்டு வந்து வரிசையில் நிறுத்துவாங்க. அதை விட்டுட்டு இப்படி ஓடி வந்துக் கல்யாணம் பண்ணிக்கணுமா?” அவள் கழுத்தில், காதில் கிடந்த வைரங்களையும், அவள் வந்திறங்கிய வெளிநாட்டுக் காரையும் கண்டு அவளின் வசதியைக் கணித்தவனாய் அவன் பேசினான்.

“ப்ளீஸ் ஸ்டாப் இட்…” ஒற்றைக் கையை அவன் முகம் பார்த்து நீட்டியவளின் முகம் அவன் பேசியப் பேச்சால் கோபத்தில் சிவந்து இருந்தது.

“என்னைய பார்த்தா உங்களுக்கு எப்படித் தெரியுது மேன்… கல்யாணத்துக்கு அலையறவ மாதிரியா இருக்கு? நான் யார் தெரியுமா? என் ஆம்பிசன் என்னன்னுத் தெரியுமா? எதுவுமே தெரியாம நீங்களா வாய்க்கு வந்ததை எப்படிப்

பேசலாம்?” கோபத்தில் மூச்சு வாங்க நின்றிருந்தவளின் அழகு... அவனின் மனதைக் கொள்ளைக் கொள்வதாய் இருந்தது. அவசரமாய் தன் பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டான்.

அவன் மேற்கொண்டு பதில் சொல்வதற்கு முன் மணப்பெண்ணும், மணமகனும் வந்துவிடப் பேச்சு நின்றது. அவள் அவனை முறைத்துக் கொண்டே அந்தப் பெண்ணோடு உள்ளே சென்றுவிட்டாள்.

‘பார்றா... இப்போ நான் என்னச் சொல்லிட்டேன்னு இப்படி முறைக்கிறா? நீங்க சொன்னதுப் போல் நான் கல்யாணப் பொண்ணு இல்லன்னு சொன்னா... நானும் சாரி மேடம்ன்னு சொல்லிட்டுப் போயிட்டே இருந்திருப்பேன். அதை விட்டுட்டு முறைக்கிறதைப் பாரு’ மனதுக்குள் கொதித்தவனை, அறிவு கோவிலுக்குள் இழுத்துச் சென்றான்.

“சாரிடா காந்தா... பெண்ணோட வீட்டில் இவங்க லவ் தெரிஞ்சு... இன்னும் மூணு நாளில் கல்யாணம் வச்சுட்டாங்க. அதான் இப்படி அவசரமா... உனக்குப் பிடிக்காதுன்னு தெரியும். லம்ப்பா ஒரு அமௌன்ட் தர்றேன்னு சொன்னதும்... அது வேற யாருக்கோ கிடைக்கிறதை விட உனக்குக் கிடைக்குமேன்னு தான்... நான் செஞ்சது தப்புன்னா மன்னிச்சிருடா...” அறிவு மன்னிப்பு வேண்ட... அவன் நட்பில் மனம் நெகிழ்ந்தான் காந்தன்.

“ம்ப்ச்... பரவாயில்ல விடுடா... பொண்ணு நல்ல வசதி போலிருக்கே. ஆனால் பையன் சுமாரான வசதி மாதிரியிருக்கு. எப்படிடா இது ஒத்து வரும்?” என்று அறியாமல் கேட்ட நண்பனை, ‘அற்பப் பதரே’ என்பதுப் போல் கேவலமாய் ஒரு பார்வைப் பார்த்து வைத்தான் அறிவு.

“அதெல்லாம் ஒத்து வரும்... அதுக்குத் தான் காதல் என்கிற அருமருந்து இருக்கே. உன் கிட்டப் போய் இதை எல்லாம் நான் சொல்லிட்டு இருக்கேன் பாரு... உனக்குத் தான்

PDF தமிழ் .com

காதல்ன்னாலே பிடிக்காதே" சலிப்பாய் அறிவு சொல்லும் போதே,

"டேய்... நான் ரெண்டு தங்கச்சிகளோட பிறந்து இருக்கேன். அவங்க இந்த மாதிரி செஞ்சா எங்களுக்கு எப்படி கஷ்டமாயிருக்கும்? அது மாதிரி தானே அந்தப் பொண்ணைப் பெத்தவங்களுக்கும் கஷ்டமாயிருக்கும்? நீ யோசிக்காம பேசுற மாதிரி... என்னால பேச முடியாதுடா" அவசரமாய் மறுத்துப் பேசினான் காந்தன்.

"ஆமாடா... ஊர் உலகத்துல தங்கச்சி கூடப் பிறந்தவன் எல்லாம் காதலிக்கிறது இல்ல பாரு. நீ பேசாம இரு... இல்ல நான் ஒண்ணுக் கிடக்க ஒண்ணுப் பேசிறப் போறேன்" கடுப்புடன் அறிவு பேச,

"அதுக்குத் தான் சொல்றது... எல்லாப் பொண்ணுங்களையும் தங்கச்சி மாதிரி பார்க்கணும்ன்னு"

"போதும்டா... டிஆர் மாதிரி தங்கைக்கோர் கீதம் பாடாதே... என்னால தாங்க முடியல..." கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சியவன், "எல்லாப் பொண்ணுகளையும் தங்கச்சியா பார்த்தேன்னா... அப்புறம் உனக்கு எப்படிக் கல்யாணம் நடக்கும்?" அதி முக்கியமான சந்தேகத்தை அவனைப் பார்த்துக் கேட்க... காந்தன் முறைத்த முறைப்பில் அங்கிருந்து ஓடியே விட்டான் அறிவுமதி.

மனதில் மூண்ட எரிச்சலை தள்ளி வைத்துவிட்டு தொழில் பக்தித் தலைத் தூக்க, புகைப்படக் கருவியைக் கையில் எடுத்து அதன் லென்சை சரி பார்த்தான். அப்பொழுது சற்றுத் தள்ளிச் சிறுமி ஒருத்தி நின்றுக் கொண்டிருக்க... அவளை புகைப்படம் எடுக்க எண்ணி கருவியின் விசையை அவன் இயக்கிய நேரமும்... அப்பொழுது பார்த்து அரசி என்று அறிவால் விளிக்கப்பட்ட அந்த பெண் குனிந்து அந்தச் சிறுமியின் கன்னத்தில் முத்தமிட்ட நேரமும் ஒன்றாக இருந்தது.

புகைப்பட வெளிச்சத்தில் நிமர்ந்த அவள்... அங்கு புகைப்படக் கருவியை கையில் வைத்துக் கொண்டிருந்த

அவனைக் கண்டதும் கோபமாய் முறைத்தாள். முதலில் தன் செயலுக்காக அவள் என்னச் சொல்வாளோ என்றுத் திகைத்தவன்... பின் தன் மேல் எந்தக் குற்றமும் இல்லை என்ற நினைவில் தோளை அசால்ட்டாக குலுக்கிக் கொண்டான். அவள் தன்னை முறைப்பதைக் கண்டுக் கொள்ளாமல் கோவிலின் கோபுரத்தை புகைப்படம் எடுப்பதற்காக அதைத் தன் புகைப்படக் கருவியின் மூலம் நோக்கினான். அவனின் அலட்சியத்தைக் கண்டவளுக்குச் சினம் தலைக்கேற... கனல் பார்வைப் பார்த்தபடி அவனை நோக்கி வந்தாள் அரசி என்றழைக்கப்படும்
வசீயரசி.

PDF தமிழ் .com

காந்தனின் செய்கையில் ஆத்திரம் தலைக்கேறிய வசீயரசி... வேகமாய் அவன் அருகில் வந்து அவன் கையிலிருந்தப் புகைப்படக் கருவியைப் பிடுங்கினாள். அவளின் இந்தச் செயலை அவன் முற்றிலும் எதிர் பார்க்கவில்லை.

“ஏய்... என்னப் பண்ற?” அவளிடம் கொடுத்து விடாமல் இருப்பதற்காக அதை இறுகப் பற்றிக் கொண்டு அவன் போராடினான். அவளும் விடாமல் அவனுடன் போராடி, அவனுடையப் புகைப்படக் கருவியை வெற்றிகரமாகக் கைப்பற்றினாள். அவள் அதைக் கைப்பற்றிய வெற்றியைக் கொண்டாட முடியாமல் அந்தோ பரிதாபம்... அது கீழே விழுந்து உடைந்தது. ப்ளாஷ் ஒரு பக்கம், லென்சை மூடியிருந்த மூடி மறுபக்கம் எனத் தனித் தனியாக கீழே விழுந்து நொறுங்கியது.

புகைப்படக் கருவி கீழே விழுந்து நொறுங்குவதைக் கண்ட காந்தனோ... தன் உயிரே கீழே விழுந்து நொறுங்குவதுப் போன்ற ஒரு வலியை மனதினுள் உணர்ந்தான். இதுநாள் வரை அவனின் குடும்பத்தினரைப் பட்டினிப் போடாமல்... நான்குப் பேர் மதிக்கும் படி கௌரவமாய் வாழ வழி வகுத்தப் பொக்கிஷத்தை ஒரு நொடியில் கீழே போட்டு வீணடித்த அவளைக் கண்களில் நெருப்புப் பறக்கப் பார்த்தான் அவன். அடுத்தக் கணம் அவனின் கை இடியாய் அவளின் கன்னத்தில் இறங்கியது.

வசீயரசியோ அவன் அடித்தக் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு பிரம்மைப் பிடித்ததுப் போல் அப்படியே நின்று விட்டாள். எல்லாமே வினாடி நேரத்தில் நடந்து முடிந்து விட்டது. சட்டென்றுத் தன்னிலைக்கு வந்தவள், பதிலுக்குத் தன் கையை அவனைப் பார்த்து ஓங்கும் முன்... அவளின் கையை முறுக்கிப் பிடித்துத் தடுத்தவன் சட்டென்று அதை உதறித் தள்ளினான். அதில் நிலைத் தடுமாறிக் கீழே விழப் போனவள் சுதாரித்துக் கொண்டு,

“ஏய் என்னை யாருன்னு நினைச்ச? என்னோட பவர் தெரியாம என்னையே அடிச்சுட்ட இல்ல? உன்னை என்னப் பண்ணுறேன் பாரு? என் அப்பா கிட்டச் சொன்னேன்... அடுத்த நிமிசம் நீ உன் குடும்பத்தோட நடுரோட்டில் நிற்க வேண்டி வரும்” ஆக்ரோசமாய் அவள் கத்தியதைத் தொடர்ந்து அவனும் பதிலுக்குக் கத்தினான்.

“நீ யாராயிருந்தா... எனக்கென்ன? போ... போய் உன் அப்பா கிட்டப் போய் சொல்லு. இல்ல உன் மாமன் கிட்டப் போய் சொல்லு. இங்கே நடக்கிறது ஒண்ணும் மன்னராட்சியும் இல்ல... நீ ஒண்ணும் இளவரசியும் இல்லை. நீ சொன்னதைக் கேட்டுப் பயப்படுறதுக்கு வேற ஆளை பாரு... அதுக்கு நான் ஆளில்லை” பதிலுக்கு எகிறியவன், குனிந்துக் கீழே கிடந்தக் கருவியின் உடைந்தத் துண்டுகளை அவசரமாகப் பொறுக்கினான்.

அதற்குள் இருவரின் கோபக் குரல் கேட்டு அறிவு அங்கே ஓடி வந்தான். வசீயரசி கோபமாய் குனிந்திருந்தக் காந்தனை முறைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவன் புரியாமல் முழித்தான்.

“என்ன அரசி என்னாச்சு?” கவலையுடன் கேட்டவனை... கொஞ்சமும் கோபம் குறையாமல் அவனைப் பார்த்தாள்.

“உங்க... பிரெண்ட் என்னை அடிச்சுட்டான்...” சொல்லும் போதே அவள் கண்கள் கலங்கியது.

அதைக் கேட்டதும் அறிவு அதிர்ந்துப் போய்விட்டான். அவளைப் பற்றிய முழுவிவரமும் அவனுக்குத் தெரியுமாததால் அவன் உள்ளுக்குள் சற்றுப் பயந்துத் தான் போனான்.

“காந்தா... லூசாடா நீ... எதுக்குடா தேவையில்லாம அரசியை அடிச்ச? அவள் அப்பா யார் தெரியுமா? பிசினெஸ்மேன் கரிகாலன் தெரியும் தானே உனக்கு... அவர் மகள் தான் இவள்...” அறிவு சொன்னதைக் கேட்டுக் கீழே குனிந்திருந்தக் காந்தன் விழிகளை உயர்த்தினான்.

அவனும் அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கரிகாலன் இந்தத் திருநெல்வேலி மாவட்டத்தில் பெயர் சொல்லக் கூடிய அளவில் பெரும்புள்ளி. அவரின் மகளா இவள்? என்று அதிர்ந்துப் போனவனின் கைகள் உடைந்தத் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு அப்படியே அந்தரத்தில் நின்றது. அதற்காக அவள் செய்தது சரி இல்லையே. அவனின் மனதில் இருந்த நியாயவான் கேள்வி கேட்க, வீம்புடன் எழுந்து நின்றான்.

“அதுக்காக எல்லாத்தையும் பொறுத்துக்கணும்ன்னு அவசியம் இல்லை அறிவு. இந்தப் பிடாரி என்ன செஞ்சான்னு நீயே கேளு? அதுக்கப்புறம் என் மேல் தப்பிருந்தா என்னைக் கேள்விக் கேளு” காந்தன் நிமிர்ந்து சொன்னதிலேயே அவன் மேல் தவறு இருக்க வாய்ப்பில்லை என்று அறிவுக்கு நிச்சயமாய் புரிந்துப் போனது. காந்தன் சொல்வதை முழுமையாகக் கேட்டவனுக்குத் தலைச் சுற்றியது. யார் பக்கம் சார்ந்துப் பேசுவது என்று இப்பொழுது அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

“என்னது நான் பிடாரியா? ஹலோ... என்னக் கொழுப்பா உனக்கு? தேவையில்லாம பேசாதே...” அவள் கொதித்துப் போனாள். பதிலுக்குக் காந்தன் பேசும் முன் அவனைத் தடுத்த அறிவு,

“காந்தா... என்ன இருந்தாலும் ஒரு பொண்ணை... நீ கை நீட்டி அடிச்சிருக்கக் கூடாது?” கொஞ்சம் காட்டாமாகத் தான் சொன்னான் அவன்.

“அப்போ இவ செஞ்சது மட்டும் நியாயமா? இவ என் கையை உடைச்சு இருந்தாக் கூடக் கவலைப்பட்டிருக்க மாட்டேன். ஆனால் என் குடும்பத்துக்கே சோறு போடுற... அன்னதேவியை உடைச்சுட்டா டா... இதை நான் எப்படிப் பொறுத்துப் போக முடியும்?” காந்தன் சொல்லும் போதே அவன் குரல் கம்மியது. இவ்வளவு ஏன் அவனின் கண்கள் கூட லேசாகக் கலங்கியது. அதை அவளும் கண்டுவிட்டாள்.

ஆனால் அவன் அடித்ததில் கொதித்திருந்த அவள் மனம் அதைப் பார்த்து பெருத்த ஆறுதல் அடைந்தது.

‘உனக்கு இதுவும் வேணும்… இன்னமும் வேணும். ஒருவேளை சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டா தான் உனக்கு எல்லாம் புத்தி வரும்’ மனதுக்குள் பொருமிக் கொண்டாள்.

“அறிவு அண்ணா… கேமிரா தானே உடைந்தது. என்னமோ அவனோட உயிர் போன மாதிரி எதுக்கு வீணா சீன் போடறான்? இது இல்லன்னா இன்னொண்ணு வாங்கிக்க வேண்டியது தானே? ஒருவேளை வாங்குறதுக்கு வக்கில்லையோ? அப்படி வக்கில்லாதவனுக்கு எதுக்கு ரோசம், கோபம் எல்லாம்?” அவன் வறுமையை, இயலாமையைச் சுட்டிக் காட்டிப் அவள் பேசியதுக் கேட்டு அவன் ரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது.

“ஏய் என்னடி ரொம்பத் தான் வாய் நீளுது… இன்னொரு அறை விட்டேன்னு வை… கன்னம் ரெண்டும் பழுத்திரும்” சுட்டு விரல் நீட்டி எச்சரித்தக் காந்தனை அடக்க பெரும்பாடுப் பட்டான் அறிவு.

“காந்தா… போதும்டா சண்டை… உள்ளே வந்து ஃபோட்டோ எடுக்கும் வழியைப் பாரு” அவனைச் சமாதானப்படுத்தும் விதமாக அறிவு பேச, அதைக் கேட்டு அவள் ஆத்திரம் அடைந்தாள்.

“என்ன அறிவு அண்ணா… இவ்வளவுப் பெரிய விசயம் நடந்து இருக்குன்னு நான் சொல்றேன். நீங்க என்னடான்னா கூலா அவரை ஃபோட்டோ எடுக்கக் கூப்பிடுறீங்க? இதுக் கொஞ்சமும் நல்லாயில்ல… சொல்லிட்டேன்”

“இப்போ நான் என்னச் செய்யட்டும் அரசி…?” பவ்யமாக அறிவு கேட்டது காந்தனுக்கு பிடிக்கவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றிருந்தான்.

“முதல்ல அவனை என்னிடம் மன்னிப்புக் கேட்கச் சொல்லுங்க…” அசால்ட்டாய் அவள் கூறியதுக் கேட்டு

தமிழ் நாவல்

இருவருமே அதிர்ந்துப் போயினர்.

“டேய் அறிவு... இவ மனசுல என்னத் தான்டா நினைச்சுட்டு இருக்கா? மன்னிப்பு... அதுவும் நான்... போயும் போயும் இவ கிட்ட...” அறிவைப் பார்த்துக் கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் காந்தன்,

“அப்படின்னா... இந்த ஃஆபர் அவனுக்கு இல்லைன்னு சொல்லுங்க அறிவு அண்ணா” அவள் சொல்லி முடிக்கும் முன் குறுக்கிட்டக் காந்தன்,

“அப்படி என் தன்மானத்தை விலைப் பேசித்தான் நான் சம்பாதிக்கணும்ன்னு அவசியம் எனக்கில்லை. நான் வர்றேன் அறிவு...” என்றவன் உடைந்தப் பொருட்களைக் கையில் எடுத்துக் கொண்டு... அவளை மேலும் கீழுமாய் அலட்சியமாய் ஒரு பார்வைப் பார்த்தவாறு,

“மன்னிப்பா கேட்கச் சொல்ற...? முடியாது போடி..” நிதானமாய் அவளைப் பார்த்து ஒவ்வொரு வார்த்தையாய் சொல்லியவன், பின் இருவரையும் திரும்பிப் பார்க்காமல் நடந்தான். அதைக் கேட்டு அவள் உள்ளம் கொந்தளித்தது.

என்னத் தான் அறிவு வசீயரசி பக்கம் சார்ந்துப் பேசினாலும், காந்தனின் தன் மானத்திற்கு இழுக்கு வருவதை அவனும் விரும்பவில்லை. அதனால் அவனை மறுபடியும் அழைக்க விருப்பமில்லாதவனாய் நின்றிருந்தான். அவளோ காந்தனின் செயலைக் கண்டு கொதிப்பின் உச்சத்தில் இருந்தாள்.

‘ஏழைக் குசும்புங்கிறது சரியாத் தான் இருக்கு. ஒருவேளைச் சாப்பாட்டுக்குப் போராடுற அவனுக்கு இவ்வளவுக் கொழுப்பு இருந்தா... மூணு வேளையும் நெய்யும், பாலும் சாப்பிடுற எனக்கு எவ்வளவு கொழுப்பு இருக்கும்? போடா நீயும்... உன் கேமிராவும்...’ இகழ்ச்சியாக நினைக்கும் போது தான்... தான் எதற்காக அவனுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தோம் என்பதே அப்போது தான் அவளுக்கு நினைவு வந்தது.

“அறிவு அண்ணா… என்னோட ஃபோட்டோ அவனோட பிலிம் ரோலில் இருக்கு. அதை எப்படியாவது வாங்கிக் கொடுத்திருங்க?” என்றவளை மேலும் கீழும் உணர்ச்சியில்லாமல் பார்த்த அறிவு,

“அதை வச்சுக்கிட்டு அவன் என்னச் செய்யப் போறான்? கண்டிப்பா என் கிட்ட கொண்டு வந்துக் கொடுப்பான். நானே உன் கிட்ட வந்துத் தர்றேன். நான் ஒண்ணு சொன்னா கோச்சுக்க மாட்டியே அரசி… அவன் அடிச்சது நான் சரின்னே சொல்ல மாட்டேன். ஆனா அவன் கேமிராவை நீ உடைச்சதுக் கொஞ்சமும் சரியில்லை. அவன் உன்னை ஃபோட்டோ எடுத்தது தான் பிரச்சினைன்னா… நீ நினைக்கிற அளவுக்குத் தப்பான ஆள் அவன் கிடையாது. தங்கச்சிக் கூடப் பிறந்திருக்கோம்ங்கிற ஒரு காரணத்தினாலேயே எந்தப் பெண்ணையும் தப்பானக் கண்ணோட்டத்தில் அவன் பார்க்க மாட்டான். நிச்சயம் அவன் உன்னைப் ஃபோட்டோ எடுத்திருக்க மாட்டான். அந்தச் சின்னப் பொண்ணை எடுக்கும் போது நீயும் சேர்ந்து அதில் விழுந்திருப்ப… தற்செயலா நடந்த விசயத்தை இப்படிப் பெரிசாக்கிட்டியே” ஆதங்கத்துடன் பொரிந்தவனை கூர்மையாய் பார்த்தவள்,

“நீங்க என்னச் சொன்னாலும் அவன் செஞ்சது தப்புத் தான் அண்ணா. இதை இத்தோட விடுங்க. எங்க அப்பாவுக்கு மட்டும் அவன் என்னை அடிச்சது தெரிஞ்சது… அந்த நிமிசம் அவன் காலி” தான் செய்ததைப் பற்றிக் கொஞ்சமும் கவலைக் கொள்ளாமல் அவள் மறைமுகமாய் அறிவுக்கு எச்சரிக்கை விடுக்க… அவன் உள்ளுக்குள் நொந்துப் போனான்.

“இப்போ எப்படி ஃபோட்டோ எடுப்பது?” எரிச்சலுடன் அவளைப் பார்த்துக் கேட்டான் அறிவு.

“இதில் எடுக்க வேண்டியது தான்…” தன் ஐபோனை அவன் கண் முன் ஆட்டியவள் கோவிலினுள் செல்ல… விதியை நொந்தப்படி அறிவு அவளைப் பின் தொடர்ந்தான்.

கடைக்குள் நுழைந்தக் காந்தன் தலையைப் பிடித்தப்படி அப்படியே அமர்ந்து விட்டான். ஒருநாளும் சோர்ந்துப் போகாதவன் இப்படி சோர்ந்துப் போய் அமர்ந்திருப்பதைக் கண்டச் சுடலை,

“என்ன அண்ணாச்சி... இப்படிச் சடவா இருக்கீக?” கவலையுடன் அவன் அருகில் வந்து நின்றான்.

“கேமிரா உடைஞ்சு போச்சுடா...” கண்களில் கவலையுடன் சொன்னவனைப் புரியாமல் பார்த்தான் சுடலை.

“எப்படி அண்ணாச்சி...?”

“கைத் தவறி விழுந்திரிச்சுடா...” ஏனோ அவளை பற்றிச் சொல்ல மனம் வராமல் பொய் கூறினான்.

“உண்மையைச் சொல்லுங்க அண்ணாச்சி... கைத் தவறி விழுந்துச்சா இல்ல யாராவது உடைச்சுட்டாங்களா?” காந்தன் தன் பொருட்களை எவ்வளவுப் பத்திரமாகக் கையாளுவான் என்பது அவனுக்கும் தெரியும்... அதனால் இதை அவனால் நம்ப முடியவில்லை.

“உண்மையாத் தான்டா சொல்றேன்... ரிப்பேர் பண்ணக் கொடுத்திருக்கேன். பத்து பதினைஞ்சு நாள் ஆகும்ன்னு சொன்னான். ரொம்ப அர்ஜென்ட்ன்னு சொன்னதும்... இன்னும் மூணு நாளுல கொடுக்கிறேன்னு சொல்லியிருக்கான்”

“இப்போ என்ன அண்ணாச்சி பண்றது?” சுடலைக்கும் கவலையாக இருந்தது. அவனுக்குமே இதை நம்பித் தான் பொழைப்பு ஓடுது.

“அதெல்லாம் பார்த்துக்கலாம்... நீ கவலைப்படாதே...” என்று ஆறுதல் சொன்னவன் கவலையில் மூழ்கினான்.

********************************

வீட்டுக்குள் நுழையும் போதே வசீயரசி ஆத்திரத்தில் தன் கையிலிருந்தக் கார் சாவியை ஒருபுறமும், கைப்பையை மறுபுறமும் தூக்கிப் போட்டு விட்டு... அங்கிருந்த சோபாவில்

சாய்ந்தமர்ந்துக் கண்களை மூடிக் கொண்டாள். மூடிய விழிகளில் அவன் அவளை அடித்தக் காட்சியே வர... தாங்க மாட்டாதவளாய் கண்களைத் திறந்தாள்.

'என் அப்பா கூட என்னை அடித்தது இல்லை. இவன் யார் என்னை அடிக்க...?' அவள் உள்ளம் உலைக்களமாய் கொதித்தது.

"என்னடி வந்ததும் வராம உம்ன்னு உட்கார்ந்திருக்க... பொம்பளப் புள்ளைக்குக் கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா... இப்படியா எல்லாத்தையும் தூக்கி எறிவ?" அவள் தூக்கி எறிந்ததை எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டே கேட்டார் அவளின் அன்னை கலைமகள்.

"அம்மா... சும்மா சும்மா எதையாவது பேசிக் கோபத்தைக் கிளப்பாதே" அவள் கோபத்துடன் கத்தும் போதே கரிகாலன் வீட்டிற்குள் நுழைந்தார்.

திருநெல்வேலியில் பேர் சொல்லக் கூடிய செல்வந்தர்களுள் அவரும் ஒருவர். பல ஈகைக் காரியங்களைச் சத்தமில்லாமல் செய்து வரும் நல்ல மனிதர் இவர். இவரின் மனைவி கலைமகள். இவர்களுக்கு பிரியன், இளவரசி மற்றும் வசீயரசி என்று மூன்றுப் பிள்ளை முத்துக்கள். பிரியன் தந்தையைப் பின் பற்றி அவரின் தொழில்களைப் பார்த்துக் கொள்கிறான். அடுத்து உள்ளவள் இளவரசி... அவளை கலைமகளின் அண்ணன் பையனுக்கு... அதாவது சொந்தத் தாய்மாமன் மகனுக்குத் திருமணம் செய்துக் கொடுத்து இருக்கிறார்கள். உள்ளூரில் தான் வசிக்கிறாள். அவளின் கணவன் கீர்த்திகனும் தொழில் தான் செய்து வருகிறான். அவர்களின் குடும்பமும் வசதியானக் குடும்பம் தான்.

கரிகாலனுக்கு தன் மூத்த மகவு இருவரை விடவும் மூன்றாவது மகளான வசீயரசி மீது பாசம் சற்று அதிகம். அவள் பிறந்தப் பின் தான் அவரின் வசதி வாய்ப்புகள் அதிகரித்தது என்பது அவரின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது. அதனாலேயே அவள் எதுச்

தமிழ் நாவல்

செய்தாலும் அவரால் அவளைத் தண்டிக்க முடியாது. அந்தளவுக்கு கண்மூடித்தனமான அன்பு அவள் மீது.

“என்ன உங்க அம்மா என்னச் சொல்றா?” என்று மகளைப் பார்த்துக் கேட்டவர், “ஏண்டி என் மகளைக் கரிச்சுக் கொட்டலன்னா உனக்குத் தூக்கம் வராதே” என்று மனைவியைத் திட்டியவர் மீண்டும் மகளிடம் திரும்பினார்.

“என்னப் பாப்பா... இவ்வளவுக் கோபமா உட்கார்ந்து இருக்க?” அவள் அருகில் அமர்ந்து தலையைக் கோதிக் கொடுத்துக் கேட்கவும் அவளால் பேசாமல் இருக்க முடியவில்லை.

காந்தனுக்கும் அவளுக்கும் கோவில் பிரகாரத்தில் நடந்தச் சண்டையை மட்டும் தன் தந்தையிடம் சொன்னவள்... அவள் செய்து வைத்தக் காதல் திருமணத்தைப் பற்றியும், காந்தன் தன்னை அடித்ததைப் பற்றியும் அவள் சொல்லவில்லை. முதலாவது காரியத்தைச் சொன்னால் அவள் தந்தைக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ... அதனால் வாயைத் திறக்கவில்லை. இரண்டாம் காரியம் அவளுக்கு ஒன்று என்றால் தந்தைக்குக் கண் மண் தெரியாமல் கோபம் வரும். அவன் அடித்தததற்கு தான் அவனின் தொழிலை அவள் சில நாள் முடக்கிவிட்டு வந்துவிட்டாளே... அதுவே அவளுக்கு திருப்தியாய் இருந்ததால்... அவன் அடித்ததைப் பற்றி அவரிடம் சொல்லவில்லை. சொல்லி முடித்ததும், ‘தான் செய்தது தவறா?’ என்று அறியாப் பிள்ளை போல் ஒரு பார்வை பார்த்தாள்.

“பாப்பா... அவன் உன்னை வேணும்ன்னே ஃபோட்டோ எடுக்கலங்கிறப்ப நீ செஞ்சதும் தப்புத் தானே... அதான் நம்ம அறிவு அவ்வளவு சொல்லி இருக்கானே... அந்தப் பையன் நல்லவன்னு. அப்புறம் ஏன் பாப்பா கோபப்பட்ட? என் பாப்பாவால் நாலு பேர் வாழ்ந்ததா தான் இருக்கணும். யாருடைய வயித்துலயும் என் மக அடிச்சதா இருக்கக் கூடாது. அறிவு கிட்டச் சொல்லி நாளைக்கு அந்தத் தம்பியைக் கூட்டிக்கிட்டு வரச் சொல்லு... வேற நல்லக் கேமிரா ஒண்ணு வாங்கிக் கொடுத்திரலாம். அப்படியே

அந்தப் ஃபோட்டோ, நெகடிவ் எல்லாம் அவன் கிட்டயிருந்து வாங்கிறலாம். என்ன நான் சொல்றது சரி தானேடா?" தந்தையின் சொல்லில் அவளால் மறுத்துப் பேச முடியவில்லை. மௌனமாய் தலையை ஆட்டினாள்.

'அவன் கேட்டக் கேட்டுக்கு புதுக் கேமிராவா? மவனே அதையும் உடைச்சுத் தான்டா உன் கையில் கொடுப்பேன்' மனதில் அவனை நினைத்துக் கறுவினாள் அவள்.

கரிகாலன் மகளைச் சமாதானப்படுத்தி அவளை மதிய உணவை உண்ணச் செய்தவர்... தானும் உண்டு விட்டு அவளுடன் பேசிக் கொண்டிருந்தார்.

"என்னம்மா... பி.எஸ்சி மேத்ஸ் படிச்சு முடிச்சாச்சு. அடுத்து மேலப் படிக்கப் போறியா? இல்லை மாப்பிள்ளைப் பார்க்கவா?"

"நல்லாயிருக்கு நீங்க கேட்கிறது? அவளுக்கு மாப்பிள்ளை பார்க்குறதுக்கு அவ கிட்டேயே கேட்குறிங்களா? பேசாம நம்ம அர்ஜுனுக்கே பேசி முடிச்சிடலாம். அடுத்த வாரம் அவனும் கனடாவுல வேலையை முடிச்சிட்டு இங்கே பெங்களூரில் வந்து செட்டில் ஆகப் போறானாம். நேத்து தான் இளா சொன்னாள். என் ரெண்டுப் பொண்ணுங்களும் என் அண்ணன் வீட்டுக்கே மருமகளாப் போனா எனக்கும் நிம்மதி... அவங்களும் ஒருத்தருக்கு ஒருத்தர் அனுசரணையா இருப்பாங்க. அதுக்குத் தான் நான் சொல்றேன்" கலைமகள் தன் விருப்பத்தை சொன்னார்.

அதைக் கேட்டு வசீயரசி ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருப்பதைக் கண்ட கரிகாலன், "என்னம்மா... அம்மா சொல்றபடி உனக்கு அர்ஜுனைப் பேசி முடிக்கலாமா?" அதையும் மகளிடம் கேட்டக் கணவரைக் கண்டுத் தலையில் அடித்துக் கொண்டார் கலைமகள்.

"அப்பா... நீங்க பார்க்கிற மாப்பிள்ளை யாராயிருந்தாலும் எனக்கு ஓகே தான். ஆனால் நான் எம்.எஸ்சி படிச்சு முடிச்சு... நம்ம கம்பெனி ஏதாவது ஒண்ணுல நிர்வாகம்

தமிழ் நாவல்

பார்க்கணும்ப்பா. அதுக்கு அப்புறம் தான் கல்யாணம் எல்லாம்…” முடிவாய் சொன்னவளிடம் மேற்கொண்டுப் பேச அவரால் முடியவில்லை.

“கலை… முதல்ல பிரியனுக்கு பொண்ணுப் பார்ப்போம். அதுக்கு அப்புறம் அரசி கல்யாணத்தைப் பத்தி யோசிப்போம்” மகளுக்கு ஆதரவாய் பேசியவரைக் கண்டு,

“என்னவோ போங்க… நீங்களாச்சு… உங்க மகளாச்சு…” நொடித்துக் கொண்டே எழுந்த கலைமகள் உள்ளே செல்ல முயலும் போது,

“கரிகாலா… யோவ் கரிகாலா…” சப்தமிட்டுக் கொண்டே அங்கு வந்தார் தர்மர். காலையில் வசீயரசி காதல் திருமணம் செய்து வைத்தப் பெண்ணின் தகப்பன் தான் அவர். அவரைப் பார்த்ததும் பயத்துடன் தந்தையின் பின்னால் சென்று மறைந்துக் கொண்டாள் அவள்.

“அடடே தர்மா… வா… வா…” உற்சாகமாய் வரவேற்ற கரிகாலன் அவரை அமரும்படி சைகை செய்தார். தர்மரும் அவரும் நெருங்கிய சிநேகிதர்கள்.

“நான் உட்கார்ந்து விருந்து சாப்பிட வரல கரிகாலா…” இத்தோடு உன் வரவேற்பை நிப்பாட்டு என்பதுப் போலிருந்தது தர்மரின் பேச்சு.

“என்ன தர்மா… எதுக்கு இவ்வளவு கோபம்?” கரிகாலன் எழுந்து நண்பன் அருகில் வந்து அவரின் கையைப் பிடித்துத் தன் அருகில் அமர வைத்தார்.

“இப்போ சொல்லு என்ன விசயம்?” தர்மரைப் பார்த்து அவர் கேட்க…

“அதை உம் பொண்ணுக்கிட்ட கேளு…” கோபத்தோடு வசீயரசியை உறுத்து விழித்தார் தர்மர். அவளோ அங்கிருந்துத் தப்பித்துச் செல்ல முடியாமல் முள் மேல் இருப்பதுப் போல் அவஸ்தையாய் நெளிந்தாள்.

“அரசி கிட்டேயா? என்ன அரசி என்ன விசயம்?” நண்பன் கோபப்படுவதுப் போல் மகள் என்னச் செய்திருப்பாள் என்றுத் தெரியாமல் அவரும் குழம்பினார். அவளோ தந்தைக் கேட்டும் வாயைத் திறக்கவில்லை.

“ஏண்டி… அப்பா கேக்குறாங்கல்ல… ஊமைக்கோட்டான் மாதிரி நின்னுக்கிட்டு இருந்தா என்ன அர்த்தம்? வாயைத் திறந்துப் பதிலைச் சொல்லு?” கலைமகள் மகளின் தோளை இடித்து மெல்லியக் குரலில் திட்டினார்.

“அதெப்படி அவளால் பேச முடியும்? ஏன்னா அவ செஞ்சிட்டு வந்திருக்கக் காரியம் அப்படி?” என்ற தர்மர்… காலையில் தன் மகள் காதல் திருமணம் செய்ததில் வசீயரசிக்கும் உள்ளத் தொடர்பைத் தெளிவாகக் கரிகாலனுக்கு எடுத்துரைத்தார். அவருக்கும் தன் மகள் செய்து வைத்தக்

தமிழ் நாவல்

காரியத்தின் வீரியம் புரிய... அப்படியே திகைத்துத் தான் போனார்.

'அவ்வளவு சொன்ன நீ... இதை மட்டும் சொல்லலியே அரசி...' என்றுக் குற்றச்சாட்டும் பார்வை ஒன்றை மகளைப் பார்த்து வீசினார். பின் நொடிப் பொழுதில் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"தர்மா... உன் பொண்ணு செஞ்சத் தப்புக்கு என் பொண்ணைக் குறைச் சொல்றது... எனக்குச் சரியாப்படல. உன் பொண்ணு தான் அவள் சார்பா இவளைச் சாட்சிக்குக் கூப்பிட்டு இருக்கலாம். இவ்வளவு நாள் பழகிய பிரெண்ட் ஆச்சேன்னு என் மகளும் அங்கே போயிருக்கலாம். உன் மகள் காதலுக்கும் என் பொண்ணுக்கும் எந்தச் சம்பந்தமும் இருக்காது. என் பொண்ணைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். என்ன அரசி நான் சொல்றது சரி தானே?" கரிகாலன் கேட்டதும்... அவ்வளவு நேரம் எப்படித் தப்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தவளுக்குப் பிடிமானம் கிடைத்து விட,

"ஆமாம்ப்பா... கோவிலுக்கு வான்னு சொன்னா... அதான் நான் அங்கே போனேன். ஆனால் அங்கே இப்படிக் கல்யாணம் பண்ணிப்பான்னு எனக்குத் தெரியாதுப்பா" பாவம் போல் இமைத் தட்டி விழித்தவளைக் கண்டதும் கரிகாலன் மனம் உருகிப் போய்விட்டது.

"பார்த்தியா தர்மா... உன் பொண்ணு தான் கெட்டதும் இல்லாமல்... என் பொண்ணையும் சேர்த்துக் கெடுத்திருக்கா... இதுக்கு நான் தான் உன் வீடு தேடி வந்து உன்னைக் கண்டிச்சிருக்கணும்" சற்றுக் குரலை உயர்த்தினார் கரிகாலன்.

"ஆமாம்... கரிகாலா... அரசி சொன்னதும் தான் எனக்கும் விளங்குது. இந்தப் பாவிப் புள்ள இப்படித் துரோகம் பண்ணிட்டுப் போயிருச்சே" தலையில் கை வைத்தப்படிப் புலம்பியவரைப் பார்ப்பதற்கு மிகவும் பாவமாய் இருந்தது.

“தர்மா… நடந்தது நடந்துப் போச்சு… இனி பேசி ஒண்ணும் ஆகப் போறது இல்ல. பையன் எப்படி? அவன் குடும்பம் நமக்கு ஒத்து வருமா?” கரிகாலன் தர்மரிடம் எல்லாவற்றையும் கேட்டு விசாரித்தவர்,

“பையன் நல்ல வேலையில் இருக்கான். குடும்பமும் நல்லக் குடும்பமாத் தான் தெரியுது. என்ன வசதித் தான் கொஞ்சம் குறைவாயிருக்கு. பேசாம உன் தொழில்ல ஏதாவது ஒண்ண அவன் கிட்டக் கொடுத்துப் பார்த்துக்கச் சொல்லு. பையனும் நமக்கு அடங்கி இருப்பான். என்ன நான் சொல்றது சரி தானடா?”

“இருந்தாலும் சாதி வேற வேற… அது ஒண்ணு தான் மனசுக்கு உறுத்தலா இருக்கு கரிகாலா”

“அதெல்லாம்… ஒரு பேரக் குழந்தைப் பிறந்தா சரியாப் போகும் தர்மா. இவ்வளவு யோசிக்கிறவன் பொண்ணைச் சரியா வளர்த்துக்கணும். அதைக் கோட்டை விட்டுட்டு இப்ப உட்கார்ந்து குத்துதே… குடையுதேன்னா எப்படி? முதல்ல அவங்களை வீட்டுக்குக் கூட்டிட்டு வார வழியைப் பாரு”

மகளின் திருமணத்தை அவர் ஒத்துக் கொண்டால் தான் எஞ்சியக் கௌரவமாவது மிஞ்சும். இல்லை வீணே அவப் பெயர் தான் என்பது அவருக்கும் தெரியும். அதனால் அவரின் கூற்றைத் தர்மரும் சரியென்று ஒத்துக் கொண்டு கிளம்பிச் சென்றார்.

“பாப்பா இங்கே வா…” தன் மகளை அழைத்தார் கரிகாலன். அவர் முன் பவ்யமாக வந்து நின்றாள் அவரின் செல்ல மகள்.

“உண்மையைச் சொல்லு… அவ லவ் மேரேஜ் பண்ணப் போறான்னுத் தெரிஞ்சுத் தானே அங்கே போன” கூர்மையாய் அவளைப் பார்த்தபடி அவர் கேட்க… பதில் பேச முடியாமல் தலையைக் குனிந்தாள் அவள்.

“அப்போ… இந்த கேடுக் கெட்டச் செயலுக்கு நீயும் துணைப் போயிருக்கியாடி அரசி” நெஞ்சில் கையை வைத்தபடி

கலைமகள் அப்படியே சோபாவில் சரிந்து அமர்ந்தார். மகளிடம் இத்தகையைத் துணிச்சலை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

“அப்பா...” என்றுத் தயங்கிய மகளைக் கண்டிப்புடன் பார்த்தவர்,

“இங்கே பார் பாப்பா... அவ காதல் பண்றா... இல்ல கருமாதிப் பண்றா... அது எனக்குத் தேவையில்லை. ஆனால் நீ ஏன் அதுக்கு உடந்தையா இருந்த?”

“அவ ரொம்ப வற்புறுத்துனாப்பா... அதான் வேற வழியில்லாமல்...” தந்தையின் கண்டிப்புக் குரல் கேட்டு அவளின் கண்கள் கண்ணீரைச் சொரிந்தது. மகளின் கண்ணீரைக் கண்டதும் பதறிப் போனவராய்,

“அச்சோ... என்னப் பாப்பா இது? உனக்காகத் தான் தர்மர் கிட்ட அவ்வளவுச் சமாதானமாப் பேசினேன். நான் அப்பவே சொன்னேனே... என் பெண்ணால் எல்லாரும் வாழ்ந்ததா இருக்கணும்... யாரும் தாழ்ந்ததா இருக்கக் கூடாது. நீ முன்னே இருந்து நடத்தி வச்சக் கல்யாணம் தோல்வியில் முடியக் கூடாதுன்னு தான் தர்மரை நான் சமரசம் செய்தேன். இப்போ உனக்குத் திருப்தியா பாப்பா?” மகளின் அழுதக் கண்களைத் துடைத்துக் கொண்டே அவர் சொல்ல... அதைக் கண்டுக் கலைமகள் தலையில் அடித்துக் கொண்டார்.

“நல்லாயிருக்கு நீங்க பேசுறது. அவ செஞ்சிட்டு வந்தக் காரியத்துக்கு நாலு சாத்து சாத்துறத விட்டுட்டு... நீங்க என்னடான்னா அவளை கொஞ்சிட்டு இருக்கீங்க... இது கொஞ்சமும் சரியில்லை. நாளைக்கு இவளும் இதே மாதிரி ஒரு காரியம் பண்ணிட்டு வந்தா இப்படித்தான் சப்போர்ட் பண்ணுவீங்களா?” ஆதங்கப்பட்டத் தன் மனைவியை முறைத்தவர்,

“அவன் பொண்ணை வளர்க்கத் தெரியாமல் வளர்த்து இருக்கிறான். அதான் காதல் கீதல்ன்னு வந்து நிக்குது. ஆனால் நான் என் பொண்ணை எந்தளவுக்குப் பாசத்தோட

வளர்க்கிறேன்னு அவளுக்கு நல்லாவே தெரியும். நான் தலைக்குனியற மாதிரி என் பொண்ணு நடந்துக்க மாட்டா. என்னப் பாப்பா... நான் சொல்றது சரி தானே?”

“ஹன்ட்ரட் பெர்செண்டேஜ் கரெக்ட்ப்பா... நான் எதுக்குக் காதலிக்கணும்... ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கணும்? நீங்க யாரைச் சொல்றீங்களோ அவனைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்” தந்தையின் தோளில் சலுகையாய் சாய்ந்துக் கொண்டு செல்லம் கொஞ்சியவாறுச் சொன்னவள்,

“அம்மா... என் மேல் உனக்கு ஏன் இத்தனைக் காண்டு? நான் அப்பா சொல்றப் பையனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு... வரதட்சணைங்கிறப் பேரில் உன் சொத்தை எல்லாம் சுருட்டிட்டுப் போகலாம்ன்னு பார்த்தா... நீ என்னை ஓட்டாண்டியா துரத்தலாம்ன்னு ப்ளான் போடுறியா? இருந்தாலும் உனக்கு இந்த ஓரவஞ்சனை ஆகாதும்மா... உன் அருமைப் புத்திரன் ஒருத்தனுக்கு மட்டும் இவ்வளவுச் சொத்துக் கிடைக்கணும்ன்னு நீ நினைக்கிறதுக் கொஞ்சமும் நல்லாயில்ல... சொல்லிட்டேன்” சுட்டு விரல் நீட்டி எச்சரித்த மகளைக் கண்டு இருவருக்குமே சிரிப்பு குமிழிட்டது.

“சரியான வாலுடி நீ...” செல்லமாக அவளை அடித்த கலைமகள் சட்டென்றுச் சிரித்து விட்டார். அவரைப் பார்த்து மற்ற இருவரும் வாய் விட்டுச் சிரித்தனர்.

****************************************

“என்னக் காந்தா... ஏன் ஒரு மாதிரியா இருக்க?” காவேரி மகனின் அருகில் வந்து அமர்ந்தார். தரையில் கால்களை நீட்டியவாறு சுவற்றில் உடலைச் சாய்த்து அமர்ந்திருந்தவன் பார்வை விட்டத்தில் நிலைக்குத்தி இருந்ததைக் கண்டுத் தான் அவர் அப்படிக் கேட்டது.

“ஒண்ணுமில்லைம்மா...” என்று அவருக்குப் பதிலளித்தவன், “பணம் போதுமாம்மா...?” கவலையுடன்

கேட்டவனின் கவலை என்ன? என்பது அந்தத் தாயுள்ளத்துக்குப் புரிந்துப் போனது.

“தாராளமாப் போதும்ப்பா... இதுக்குத் தான் இடிஞ்சிப் போன மாதிரி உட்கார்ந்திருக்கியா? நல்லப் புள்ள நீ... எழுந்து எனக்குக் கூடமாட உதவி செய்... வா” என்று அவனை எழுப்பி விட்டவர், வீட்டு வேலைகளைச் செய்யச் சொன்னார். அவனும் தங்கையுடன் சேர்ந்து வீட்டைச் சுத்தப்படுத்துவதில் தன் மனதைச் செலுத்தினான்.

மாப்பிள்ளை வீட்டினர் வந்துப் பெண் பார்த்து விட்டு... ஊருக்குப் போய் தகவல் சொல்வதாகக் கூறி விட்டுப் புறப்பட்டுச் செல்ல... அவனின் முகம் விழுந்துவிட்டது.

“இவங்களுக்கு என்னத்தான்ம்மா பிரச்சினை? எல்லாரும் ஒரே மாதிரிச் சொல்லிட்டுப் போறாங்களே?” ஆதங்கத்துடன் கேட்டவனைப் பார்த்துக் கேலியாய் சிரித்த அவன் தங்கை கார்த்திகா,

“எல்லாம் பணம் தான்ண்ணா பிரச்சினை...” என்று விரக்தியாய் சொன்னவளைக் கவலையுடன் பார்த்தவனை, “எனக்குன்னு ஒருத்தன் இனிமேலா பிறக்கப் போறான். நேரம் வரும் போது என்னைத் தேடி வருவான்... இதுக்குப் போய் நீங்க ஏண்ணா கவலைப்படுறீங்க?” அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அறிவுமதி அங்கே வந்தான்.

“காந்தா... காந்தா...” வெளியில் நின்றப்படி நண்பனை அழைத்தான் அறிவு. காந்தனுக்கு தங்கைகள் இருந்தக் காரணத்தாலோ என்னமோ முதலில் இருந்தே அறிவு அவன் வீட்டினுள் செல்ல மாட்டான். எந்த முக்கியமான விசயம் என்றாலும் வெளியில் இருந்துப் பேசிவிட்டுப் போய்விடுவான். ஏனெனில் அக்கம் பக்கத்தவரின் தவறானப் பேச்சுகளைத் தவிர்ப்பதற்காகத் தான் அது.

“என்னடா இங்கே எதுக்கு வந்திருக்க?” கோபமாய் கேட்டப்படி அவனை நோக்கி வந்தான் காந்தன்.

“என் மேல் ஏன்டா கோபப்படுற? நான் என்னச் செஞ்சேன்?” பரிதாபமாகக் கேட்ட அறிவை பதில் சொல்லாமல் முறைத்தான்.

“தப்பு என் மேல் இல்லைன்னு உனக்கு நல்லாத் தெரியும்... அப்படி இருந்தும் நீ எனக்குச் சப்போர்ட் பண்ணாம... அவளுக்குத் தானே சப்போர்ட் பண்ணின?” கோபமாய் படபடவெனப் பொரிந்தவனை என்னச் சொல்லிச் சமாதானம் செய்வது என்று அறிவுக்குப் புரியவில்லை.

“எல்லாம் எனக்குத் தெரியும்டா. அதான் அவ உன்னை மன்னிப்புக் கேட்கணும்ன்னு சொன்னப்போ கூட நான் பேசாம இருந்தேனே. அதுக்கு எனக்கு உடன்பாடு இல்லைன்னு அவக்கிட்ட நேரடியா சொல்லிட்டேன். உன் சுயமரியாதைக் காப்பாத்தத் தான் நீ போனப்பவும் நான் உன்னைக் கூப்பிடல. என்னை நீயே புரிஞ்சிக்கலன்னா எப்படிடா?” அறிவு பாவம் போல் கேட்க, அதற்கு மேல் தாங்க மாட்டாமல் அவனை அணைத்துக் கொண்டான் காந்தன்.

“சாரிடா... ஏதோ கோபத்தில்...” அவன் தடுமாற...

“பரவாயில்ல விடுடா...” அவனைச் சமாதானப்படுத்திய அறிவு தன் சட்டைப் பையில் இருந்துப் பணத்தை எடுத்து,

“இதில் ஐயாயிரம் இருக்கு. செலவுக்கு வச்சுக்கோடா” நண்பனின் கையில் திணிக்க... அவன் அன்பில் காந்தன் திணறித் தான் போனான்.

“அறிவு... எதுக்குடா இதெல்லாம்...” அவனின் வார்த்தைகள் நெகிழ்ந்தது.

“வச்சுக்கோடா... எனக்கென்ன குடும்பமா குட்டியா? ரொம்ப பெரிய செலவா வந்திறப் போகுது” அறிவு பிறந்ததுமே தாய் இறந்து விட... தந்தையின் அன்பில் தான் அவன் வளர்ந்தான். அன்னை இல்லாதக் குறையே தெரியாமல் வளர்த்தத் தந்தையும் போன வருடம் தான் இறந்துப் போனார். இப்போ அவன் தனிக்காட்டு ராஜா... மத்திய வங்கி ஒன்றில் பணி புரிகிறான்.

அந்நேரம் பார்த்து அவனின் அலைப்பேசி அழைத்தது. அதில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்தும் பயப்பக்தியுடன் அதை எடுத்துக் காதில் வைத்தவன்,

“சொல்லுங்க பெரியப்பா... ம்... ம்...” வெகு பவ்யமாய் அவன் பேசப் பேச... அதைப் பார்த்துக் கொண்டிருந்தக் காந்தனுக்கு சிரிப்பு வந்தது. பேசி முடித்ததும் நிம்மதிப் பெருமூச்சொன்றை விட்ட அறிவை கேலியாய் பார்த்தவன்,

“என்னடா காதலிக்கிட்டப் பேசுற மாதிரி... உங்கப் பெரியப்பா கிட்டப் பயத்தோட பேசுற?” நக்கலாய் அவன் கேட்க,

“என்னடா கிண்டலா உனக்கு? அவரு உன்னயத் தான்டா கூட்டிட்டு வரச் சொன்னாரு. நாளைக்குக் காலையில் நீ என்னோடக் கிளம்பி வர்ற வழியைப் பாரு” அறிவு சொல்லச் சொல்ல... நண்பனைப் புரியாமல் பார்த்தான் காந்தன்.

“என்னை எதுக்குடா உன் பெரியப்பா கூப்பிடறாரு?” சந்தேகமாய் அவன் கேட்க,

“அவருதான்டா அரசியோட அப்பா...” அறிவு அவனுக்கு விளக்கினான்.

“அரசி...?” கேள்வியாய் நண்பனைக் கேட்டவன்... யோசனையாய் நெற்றியைச் சுருக்கினான்.

“அதான்டா... காலையில் சண்டைப் போட்டாளே...” அறிவு நியாபகப்படுத்த...

“அவரு உன் பெரியப்பான்னு நீ சொல்லவே இல்ல...” குறைப்பட்டுக் கொண்டான் காந்தன்.

“அவரு... எனக்கு ஒண்ணுவிட்டப் பெரியப்பா டா. என்னத் தான் சொந்தம்ன்னாலும் பணக்காரங்கக்கிட்ட லிமிட்டா இருக்கிறது தான் நல்லது. அதான் அவரைத் தெரிஞ்ச மாதிரி காட்டிக்க மாட்டேன்”

“ஓ...” என்றவன் அதற்கு மேல் பேசவில்லை. அவனுக்கு உள்ளுக்குள் குழப்பமாய் இருந்தது. அவள் ஏதும் தன்னைப் பற்றித் தவறாய் சொல்லி வைத்திருப்பாளோ? அதைப் பற்றி விசாரிக்கத் தான் கூப்பிட்டு இருக்காரோ? பலவாறு எண்ணித் தனக்குள் குழம்பியவன்... பின் தன் மேல் தவறில்லை என்ற தைரியத்தில்... நாளைய விடியலை எதிர் நோக்கி நம்பிக்கையுடன் காத்திருந்தான்.

*************************

“என்னடா அறிவு... உன் வேலையெல்லாம் எப்படி போயிட்டு இருக்கு?” சம்பிரதாயமாய் அறிவை பார்த்துக் கேட்ட கரிகாலன், அவன் பதில் சொல்லும் முன்,

“ஏண்டா... சின்னப் புள்ளைக தான் அறிவில்லாம ஏதோ ஒரு காரியம் செஞ்சா... அதுக்கு நீயும் கூடக் கூட்டுச் சேர்ந்திருக்கியே... உன்னை என்னச் செய்யலாம்டா... நீயே சொல்லு?” அவர் கோபமாய் கேட்க, அதிலிருந்து தப்பிக்கும் மார்க்கம் அறிவுக்கு தெரியாததால்,

“பெரியப்பா... நீங்க கூட்டிட்டு வரச் சொன்னீங்களே... அவன் தான் இது. பேரு காந்தரூபன்” காந்தனை அவருக்கு அறிமுகப்படுத்தினான்.

“வணக்கம் சார்...” என்றக் காந்தன், “உங்க பொண்ணு ஃபோட்டோவும், நெகட்டிவும் இதில் இருக்கு. நான் அவங்களை வேணும்ன்னே ஃபோட்டோ எடுக்கல சார்” என்றபடி ஒரு கவரை அவரிடம் நீட்டியவனை... மேலும் கீழுமாய் பார்த்துத் தன் பார்வையால் எடைப் போட்டவர்... அவனை மெச்சுதலாய் பார்த்தார்.

“எம் பொண்ணு செஞ்சத் தப்புக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்ப்பா. விளையாட்டுப் புள்ளை... எல்லாத்தையும் விளையாட்டுத்தனமாய் எடுத்துக்குது. உன் கேமிராவை உடைச்சதை அவ சொன்னா. அதைக் கேட்டு எனக்குத் தான் வருத்தமா இருந்தது. உம் பொழைப்பே அதை நம்பித் தான் இருக்குன்னு எனக்குத் தெரியும்” என்றவர், உள்ளே திரும்பி, “அரசி... அந்தப் புதுசை

எடுத்துட்டு வா...” என்றுக் குரல் கொடுக்க... அடுத்த நொடி அவள் கையில் புத்தம் புதிய நவீனப் புகைப்படக் கருவியைச் சுமந்துக் கொண்டு அங்கே வந்து நின்றாள்.

“இந்தா பாப்பா... உன் ஃபோட்டோ... நான் சொல்லல தம்பி மேலே எந்தத் தப்பும் இருக்காதுன்னு. நீ தான்ம்மா தேவையில்லாம கோபப்பட்டு இருக்க...” என்றவர் கையிலிருந்தக் கவரை மகளிடம் நீட்டினார். தந்தையிடம் இருந்து அதை வாங்கிக் கொண்டே காந்தனைப் பார்த்தவளின் பார்வை... அவனைச் சூரியனாய் சுட்டெரித்தது. அவனோ தைரியமாய் அவள் பார்வையைத் தாங்கி நின்றான்.

“பாப்பா... அந்த கேமிராவை இப்படிக் கொடு” என்று மகளிடம் இருந்து அதை வாங்கியவர், “இந்தப்பா... எம் மக உடைச்சதுக்குப் பதிலா புதுசு வாங்கித் தந்துட்டேன்... உனக்காக சென்னையில் இருந்து ராவோடு ராவாய் தருவிச்சேன்”

கரிகாலன் மகளுக்காக மன்னிப்புக் கேட்டதுமே காந்தனின் மனதில் அவர் ஒருபடி உயர்ந்துத் தான் போனார். அதிலும் அவனுக்காக... அவனின் தொழிலை முன்னிட்டு அவர் புகைப்படக் கருவியை வாங்கிக் கொடுத்தக் கருணையைக் கண்ட அவன் பிரமித்தான். இத்தகைய கருணை வள்ளலுக்குப் போய்... இப்படியொரு ராட்சசி மகளா? மனதுக்குள் நினைத்தவன் கசந்தான்.

“வேண்டாம் சார்... இன்னும் ரெண்டு நாளில் என்னோடக் கேமிரா ரிப்பேர் பண்ணி வந்திரும். உங்க நல்ல மனசுக்கு ரொம்ப நன்றி சார்” அவன் அதை மறுக்க... அவர் ஆச்சிரியமாய் அவனைப் பார்த்தார்.

“இந்தக் காலத்துல... இப்படியொருப் பையனா? வேண்டாம்ன்னா பரவாயில்ல தம்பி... ரிப்பேருக்கானச் செலவைச் சொல்லு... அதையாவது நான் தார்றேன்”

“இல்ல வேண்டாம் சார்... என்னால கொடுக்கும் அளவுக்குக் கட்டுப்படியானத் தொகைத் தான் அது. உங்களை மாதிரிப்

பெரிய மனுசங்க உறவுக் கிடைக்கறதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும். எனக்கு உதவி செய்யணும்ன்னு நீங்க நினைச்சீங்கன்னா… ஏதாவது நல்ல ஆபர் வந்தாச் சொல்லுங்க சார்…” என்றவன் தன் அறிமுக அட்டையை அவரிடம் நீட்டினான்.

“அதுக்கு என்ன தம்பிச் சொல்லிட்டாப் போச்சு…” என்றவர் அதைக் கை நீட்டி வாங்கிக் கொண்டார். அவரின் பெருந்தன்மையில் அவனின் மனம் நிறைந்து இருந்தது.

“சரிங்க சார்… நாங்க கிளம்பறோம்…” என்றவன் கிளம்ப எத்தனிக்கும் முன் அவளை நிமிர்ந்துப் பார்த்தவன்,

“தேங்க்ஸ் மேடம்…” என்று அவளைப் பார்த்துச் சொல்ல… அவனின் நன்றி எதற்கு என்று அவளுக்கு தெரியுமாதலால் அவனை வெற்றுப் பார்வைப் பார்த்தாள்.

“எதுக்குப்பா தேங்க்ஸ்? அவ பண்ணிய வேலைக்கு நியாயத்துக்கு உனக்குக் கோபம்ல வந்திருக்கணும்” கரிகாலன் புரியாமல் கேட்க… அவன் அவளை விளங்காதப் பார்வை ஒன்றைப் பார்த்தான்.

‘ரொம்ப முழிக்காதே… எங்க அப்பாவுக்கு மட்டும் நீ பண்ணினது தெரிஞ்சது… உன் தோளை உரிச்சு உப்பு கண்டம் போட்டுருவாரு. அவருக்கு பதிலா நான் தான் உனக்கு பெரிய தண்டனையா கொடுத்திட்டேனே. அந்த தண்டனையே போதும்ங்கிறதால… பாவம் பொழைச்சுப் போன்னு உன்னை விட்டுட்டேன்’ மனதுக்குள் அவனிடம் பேசியவள் அதை தன் கண்ணில் பிரதிபலித்தாள்.

“அவங்களால தான் உங்கள் அறிமுகம் எனக்குக் கிடைச்சிருக்கு… அதுக்குத் தான் தேங்க்ஸ் சொன்னேன் சார்” அவளின் பார்வையின் அர்த்தம் புரிந்தும் அவன் புன்னகையுடன் சொல்ல,

“ஹா… ஹா… அதுவும் சரி தான். என் பொண்ணு ராசி அப்படித் தம்பி. அவள் ஆரம்பிச்சு வைக்கிறது எதுவுமே நல்லதில் தான் முடியும்” அவர் சொன்னதைக் கேட்டு

ஆமோதிப்பதைப் போல் தலையசைத்தவன், பின் விடைப்பெற்றுக் கொண்டு வெளியில் வந்தான்.

அவள் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்வளவு ஏழ்மையிலும் வலிய வந்த உதவியை... நிமிர்ந்து நின்று மறுத்த அவனின் தன்மான குணம் அவள் மனதைச் சிறிது அசைத்துப் பார்த்தது. ஆனாலும் அவன் தன்னை அடித்ததற்காக மன்னிப்புக் கேட்காததால் ஏற்பட்டக் கோபம்... அவள் அடி மனதில் நீறு பூத்த நெருப்பாய் கனன்றுக் கொண்டிருந்தது.

“மலர்...” தேவியின் குரல் கேட்டு... தன் கையிலிருந்த அன்புமலர் திரும்பிப் பார்த்ததைத் தொடர்ந்து... காந்தனும் திரும்பிப் பார்த்தான். தேவி இளங்குமரனின் தங்கை.

“அத்தே... நா இங்கிருக்கேன்...” மலர் தன் மழலைக் குரலில் அவளை அழைக்க...

“நீ இங்கே இருக்கியா? உங்க மாமா வந்தா... எங்களை எல்லாம் மறந்துடுவியே” மலரின் கன்னத்தை செல்லமாய் கிள்ளியபடி சொன்ன தேவியின் பார்வை காந்தனின் மேல் காதலாய் நிலைத்தது. அவளின் பார்வையின் அர்த்தம் உணர்ந்தவனாய் அவன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

காஞ்சனாவை அழைத்துப் போவதற்காக காலையில் அவள் வீட்டிற்கு அன்னையுடன் வந்து விட்டான். இளங்குமரன் அலுவலக விசயமாய் வெளியில் சென்றிருப்பதால் அவன் வரும் வரை காத்திருக்க வேண்டியதாய் போயிற்று. காவேரி காஞ்சனாவுடன் உள்ளே வேலையாய் சென்றுவிட... இவன் மலரை தூக்கிக் கொண்டுத் தோட்டத்திற்கு வந்து, அவளை கையில் வைத்துக் கொண்டு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான்.

“மலர் சாப்பிடணும்ல... அத்த கிட்ட வர்றியா?” கையிலிருந்த இட்லியை எடுத்து மலரை நோக்கிக் காண்பித்து அவளை அழைக்க...

“மாத்தேன் போ...” என்று மலர் மாமாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“மலர் நல்ல பொண்ணு தானே... அத்த கிட்டப் போய் சமத்தா சாப்பிட்டு வருவியாம். மாமா உனக்காக இங்கேயே வெய்ட் பண்றேன்” அவன் சமாதான வார்த்தைகள் கூற...

“ம்ஹூம்...” என்று மறுத்த மலர், உணவு ஊட்டுவதற்கு ஏதுவாக தன் வாயைத் திறந்தாள்.

“நீ உங்க மாமா கிட்டேயே இரு... நான் உனக்கு ஊட்டுறேன்” என்ற தேவி... மலரின் வாயில் உணவைப் பிட்டு வைத்தாள்.

உணவு ஊட்டும் சாக்கில் தன் அருகில் நின்றிருந்த தேவியின் நெருக்கம் அவனுக்கு பெருத்த அவஸ்தையைக் கொடுத்தது. சில சமயம் அவளின் கை அவன் கன்னத்தில் பட்டது... சில சமயம் அவன் தோளில் பட்டது. அவளை அவனால் திட்டவும் முடியாது... அதே சமயம் தள்ளி நிற்கவும் அவனால் முடியவில்லை. அவள் வேண்டுமென்றே செய்கிறாள் என்பது அவளின் இதழோரம் பூத்த ரகசியச் சிரிப்பில் தெரிந்தது.

“என்ன அத்தான்... இந்த நெளி நெளிறீங்க? இதுக்கே இப்படின்னா கல்யாணத்துக்கு அப்புறம் என்னப் பண்ணுவீங்க?” பொங்கி வந்தச் சிரிப்பை அடக்கியபடி அவள் கேட்க... அதை கேட்டு அவனுக்குக் குப்பென்று வியர்த்தது.

“என்னச் சொல்ற நீ?” புரியாமல் அவன் விழிக்க...

“ம்... சோத்துக்கு உப்பில்ல... சொரக்காக்கு பருப்பில்லன்னேன்...” என்று சொல்லியவாறு சிரித்தவள், “எங்க அப்பா, அம்மாவுக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கு. ராஜாவுக்கு கார்த்திகாவையும், உங்களுக்கு என்னையும் பேசலாம்ன்னு. என் கிட்ட கேட்டாங்க... நானும் நம்ம அண்ணியோட அண்ணன் தானேன்னு சரின்னு சொல்லிட்டேன். அண்ணன், அண்ணிக்கும் விசயம் தெரியும்... ” அவனை பார்த்துக் கண்சிமிட்டிச் சிரித்தாள்.

தன் பெற்றோர்கள் காந்தனை அவளுக்கு மணம் முடிக்க கேட்டதில் இருந்து எழுந்த மனதைரியம், அதிலும் தங்கைகளுக்காக காந்தன் அவளை எப்படியும் திருமணம் செய்து கொள்வான் என்ற அசட்டு நம்பிக்கை எல்லாமுமாக சேர்ந்து... அவளை துணிச்சலுடன் அவனை நெருங்கும்படி செய்திருந்தது.

ராஜா காஞ்சனாவின் கொழுந்தன்... இப்போதைக்கு கிடைத்த வேலை செய்துக் கொண்டிருந்தாலும்... அரசாங்க உத்தியோகத்துக்கு முயற்சி செய்துக் கொண்டிருக்கிறான். இளங்குமரனும் தன்னாலான உதவியை அதற்குச் செய்து வருகிறான். கார்த்திகாவை அவனுக்கு கொடுப்பதில் காந்தனுக்கு எந்த மறுப்பும் இல்லை. ஆனால் வசதி குறைவு என்ற காரணத்தினாலேயே காஞ்சனாவிடம் பாராமுகம் காட்டும் குடும்பத்தில் மேலும் இன்னொரு பெண்ணைக் கட்டிக் கொடுக்க வேண்டுமா? என்ற எண்ணம் தான் அவன் மனதில் ஓடியது. தன் திருமணத்தைப் பற்றி அவன் கொஞ்சமும் யோசித்துப் பார்த்தது இல்லை.

“என்ன அத்தான்... நியூஸ் கேட்டு பிரீஸ் ஆகிட்டீங்க?” தேவி கேட்கவும் தான்... தன் யோசனையை தள்ளி வைத்து விட்டு அவளை பார்த்தான்.

“ஒண்ணுமில்ல...” என்று தலையை அசைத்தவன் பேசாமல் நின்றான்.

“மலர்... சமத்து சீக்கிரம் சாப்பிட்டுட்டாளே...” அவள் கன்னம் வழித்துக் கொஞ்சியவள்... அவள் வாயைத் துடைக்கிறேன் பேர்வழி என்று காந்தனின் உடல் மீதும் தன் கைகளைப் பரவ விட்டாள். அவனோ அவள் தொடுகையில் உடல் கூசிப் போய் நின்றான்.

அவனுக்கு அவளின் செய்கை கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவளை கோபமாய் பேச அவனுக்கு ஒரு நொடி போதாது. ஆனால் அவன் ஏதும் அவளை திட்டிப் பேசி... அதை அவள் வேறு மாதிரி தன் குடும்பத்தினரிடம் திரித்துக் கூறிவிட்டால்... அதன் எதிரொலி தன் தங்கை மீது தான் எதிரொலிக்கும் என்பது அவனுக்கு நன்குத் தெரியும். அதனால் வாயை மூடிக் கொண்டு அமைதியாய் இருந்தான்.

அதையே தேவி சம்மதமாய் எடுத்துக் கொண்டு அவனிடம் மேலும் மேலும் நெருங்கினாள். உணவு பரிமாறும் போது அவன் அருகே நின்றுக் கொண்டு வேண்டுமென்றே

உரசியவாறு பரிமாறினாள். கையைக் கழுவிக் கொண்டு அவன் வரும் போது... கையைத் துடைப்பதற்கு ஏதுவாக தன் புடவைத் தலைப்பை அவள் நீட்ட... அதற்கு மேல் அவனால் தாங்க முடியவில்லை. தன் பொறுமையைக் கை விட்டவனாய்,

“ஏய்... பொண்ணுன்னா... அடக்கமாய் இருக்கணும். இந்த மாதிரி அடங்காம இருக்கக் கூடாது” மெல்லியக் குரலில் அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவன் சீற... அதில் கொஞ்சம் அடங்கியவள் கையிலிருந்தத் துண்டை அவனிடம் நீட்டினாள். அதை வாங்காமல் அலட்சியமாய் நடந்தவனை வழி மறித்தவள்,

“இன்னும் எத்தனை நாளைக்கு இந்த கோபம்ன்னு நானும் பார்க்கிறேன். என் கழுத்துல மூணு முடிச்சு போடுவீங்கல்ல... அதுக்கப்புறம் இருக்கு என் கச்சேரி...” உதட்டைச் சுழித்து சிரித்தவள் அவன் மேல் தன் மேனி முழுவதும் படும்படி உரசிக் கொண்டு அந்த இடத்தை விட்டுச் செல்ல... அவனோ தலையில் அடித்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

காஞ்சனாவை தங்கள் வீட்டிற்கு கூட்டிக் கொண்டு வருவதற்குள் அவன் ஒருவழியாய் ஆகிப் போனான். அன்றைக்கு இரவே காஞ்சனா அம்மாவிடமும், அண்ணனிடமும் பேச வேண்டும் என்று வந்து நிற்க... அவனுக்கு விசயம் என்னவென்று புரிந்துப் போனது.

“அம்மா... என் கொழுந்தனுக்கு நம்ம கார்த்திகாவை கேட்குறாங்க. நீங்க என்னம்மா நினைக்கிறீங்க?” தங்கை பேசியதுக் கண்டு அவன் அயர்ந்துப் போனான். இந்த பெண்கள் தங்கள் காரியம் கை கூட எவ்வளவு அழகாய் காய் நகர்த்துகிறார்கள் என்று வியந்துப் போய் அவளைப் பார்த்தான்.

“உன் கொழுந்தனுக்கா...?” வாயைப் பிளந்தார் காவேரி. “அதிசயமா இருக்கு... உன் மாமியாக்காரி குறைஞ்சது அம்பது பவுன் இல்லாம பொண்ணு பேச மாட்டாளே. இதுக்கு எப்படி ஒத்துக்கிட்டா?”

“ராஜாவுக்கு கார்த்திகாவை பேசுற மாதிரி... தேவிக்கு நம்ம அண்ணனை கேட்குறாங்க” ஒருவழியாய் விசயத்தைப் போட்டு உடைத்தாள் காஞ்சனா.

“அதானே பார்த்தேன்... சோழியன் குடுமி சும்மா ஆடுமா என்ன? உன் மாமியார் இந்த ஒண்ணுமில்லாத வீட்டில் பொண்ணு எடுக்கிறத கவுரவக் குறைச்சலா நினைப்பாளே... இப்போ என்ன இறங்கி வந்திருக்காளேன்னு பார்த்தேன். கடைசியில் இதான் சேதியா?” என்று அங்கலாய்த்தவர், “கார்த்திகா விசயம் சரி... நாம முடிவு பண்ணினா அவ அதை தட்ட மாட்டா. ஆனா காந்தா என்ன நினைக்கிறானோ?” என்றபடி மகனை பார்க்க,

“அம்மா... இப்போ எனக்கு கல்யாணம் வேணாம். முதல்ல கார்த்திகா கல்யாணம் முடிப்போம். அதுக்கு அப்புறம் நான் நிறைய முன்னேற வேண்டி இருக்கு. என் கல்யாணத்தோட அவள் கல்யாணத்தைப் போட்டுக் குழப்பிக்காதீங்க” உறுதியாய் அவன் தன் முடிவைச் சொல்ல...

“அண்ணா... என் கொழுந்தன் என்கிறதுக்காக சொல்லல... இதை விட அருமையான மாப்பிள்ளையை... கார்த்திகாவுக்கு நாம பார்க்க முடியுமா சொல்லுங்க? பொண்ணு கொடுத்து... பொண்ணு எடுக்கும் போது அவங்களுக்கும் கொஞ்சம் பயம் இருக்கும். அதனால எந்தப் பிரச்சினையும் வராது. நமக்கும் எந்தச் செலவும் கிடையாது. வரதட்சிணைன்னு பெருசா வேணாம்ன்னு சொல்லிட்டாங்க. கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கண்ணா”

காஞ்சனா சொல்லவும் அவன் உள்ளே திரும்பி கார்த்திகாவை பார்த்தான். விழிகளில் எதிர்பார்ப்பை தேக்கியபடி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தவளைக் கண்டதும் அவன் மனதில் கனிவு வந்தது. அவன் என்றுமே தனக்கான யோசித்ததுக் கிடையாது. அவன் எப்பொழுதும் தங்கைகளின் நலனை மட்டுமே யோசித்து வாழ்ந்திருக்கிறான். இன்றும் தன் சின்னத் தங்கைக்காக இதை ஏற்றுக் கொள்வது என்று முடிவு செய்தான்.

“சரி காஞ்சி… இதுக்கு நான் சம்மதிக்கிறேன். அம்மா நீங்க மேற்கொண்டு பேச வேண்டியதைப் பேசுங்க” இருவரையும் பார்த்துச் சொன்னவன்… “கார்த்திகா உனக்கு ஓகே தானே” உள்ளே பார்த்து அவன் கேட்க…

“போங்கண்ணா…” என்ற கார்த்திகாவின் குரலும், அவள் அங்கிருந்து ஓடியதின் அடையாளமாக அவள் கொலுசு சிணுங்கிய ஒலியும் கேட்க… அதை கேட்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

“காஞ்சி… உங்க மாமனார், மாமியாரா இந்த விசயத்தை ஆரம்பிக்கிற வரைக்கும் நாம கொஞ்சம் பொறுமையா இருக்கலாம்…” திடீரென்று காவேரி சொல்லவும்… புரியாமல் விழித்தாள் காஞ்சனா.

“நாமளா வலிய போக வேண்டாம்ன்னு பார்க்கிறேன். அவங்களே சம்பந்தம் பேச வந்தா அப்போ பேசிக்கலாம். ஏன்னா… இப்போ உன்னோட டெலிவரி இருக்கு… அப்புறம் கார்த்திகாவுக்கும் இன்னும் கொஞ்சம் நகை வாங்க வேண்டி இருக்கு. கல்யாண செலவு அப்படி இப்படின்னு பணம் அதிகம் தேவைப்படும். அதனால தான் சொல்றேன் காஞ்சி”

அன்னை கூறியதின் அர்த்தம் புரிந்து காஞ்சனா சரியென்பது போல் தலையாட்டினாள். தங்கைக்காக சம்மதித்திருந்தாலும் காந்தனுக்கு ஏதோ ஒன்றிலிருந்து தப்பித்தது போல் சற்று நிம்மதியாய் இருந்தது. ஆனாலும் அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

*******************************************

“டேய் தடியா… நான் போறதும் போகாததும் என் இஷ்டம்… நீ தலையிடாதே” காலையில் ஆறு மணிக்கு வரவேற்பறையின் நடுவில் நின்றுக் கொண்டு கோபமாய் வசீயரசி கத்திக் கொண்டிருக்க… கலைமகள் மகளின் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைத்தார்.

“அவன் வயசென்ன...? உன் வயசென்ன...? கொஞ்சமாவது அண்ணன்ங்கிற மரியாதை கொடுக்கிறியா? நாளைக்கு அவனுக்குன்னு ஒருத்தி வந்தா... என்னை தான் நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி கேள்விக் கேட்பா. பொண்ணை இப்படி துப்பில்லாம வளர்த்து வச்சிருக்கியேன்னு என் மூஞ்சில காறி துப்புவா”

அன்னை கொட்டியத் தன் தலையை தடவிக் கொண்டு, “இரு இரு... அப்பா வந்ததும் உன்னைப் போட்டுக் கொடுக்கேன்” என்று அவரைப் பார்த்துப் பழிப்புக் காட்டியவள்,

“டேய் அண்ணா... உன் பொண்டாட்டிய இவ்வளவு பேசவிட்டு நீ வாய் பார்த்துட்டு இருப்பியா என்ன? அவளை இழுத்து வச்சு நாலு அறை விட மாட்ட?” அண்ணனை அன்னையிடம் மாட்டி வைக்கத் திட்டம் தீட்டினாள்.

இப்போ தங்கைக்கு ஆதரவாய் பதில் சொன்னால்... அன்னையை எதிர்த்தது போல் ஆகிவிடும். அதே சமயம் அன்னைக்கு ஆதரவாய் பேசினால்... தங்கையின் கூற்றை ஆமோதிப்பது போலாகிவிடும். யார் பக்கம் பேசுவது என்றுத் தெரியாமல் தலையில் கையை வைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டான் பிரியன்.

“போடி அவனை ஏதாவது சொல்லிக் குழப்பிவிடு. உனக்கு இதே வேலையாப் போச்சு” என்று அவளை அதட்டியவர், “பிரியா... உன் பிரெண்ட் கல்யாணத்துக்கு போகணும்ன்னு சொன்னியே... நீ கிளம்புற வழியைப் பாரு” அவனை துரிதப்படுத்த...

“அதை பத்தி தான்ம்மா அவ கிட்டப் பேசினேன். அதுக்குத் தான் இந்த குதி குதிக்கிறா”

“நீ கல்யாணத்துக்கு போறதுக்கும் அவ கோபப்படுறதுக்கும் என்ன சம்பந்தம்?” புரியாமல் கலைமகள் கேட்க,

“நீங்களும் அப்பாவும் மதுரையில நடக்கிற சொந்தக்காரங்கக் கல்யாணத்துக்குக் கிளம்பணும். நான்

என் பிரெண்ட் கல்யாணத்துக்குப் போகணும். அதனால நம்ம மேனேஜர் பொண்ணு கல்யாணத்துக்கு அவளை போகச் சொன்னா... மாட்டேங்கிறா” பிரியன் அன்னையிடம் புகார் படித்தான்.

“அதானே நீ அங்கே போனா என்னடி? நிர்வாகம் பார்க்கணும்ன்னு ஆசை இருக்குல்ல... அப்போ இந்த மாதிரி அவங்க வீட்டு விசேசத்துக்கும் போயிட்டு வரணும். அப்பத்தான் அவங்களும் நம்ம கிட்ட மரியாதையா, நேர்மையா இருப்பாங்க” கலைமகள் மகளுக்கு விளக்க... அவளோ போகவா? வேண்டாமா? என்று மனதுக்குள் ஒத்தையா? ரெட்டையா? போட்டுக் கொண்டிருந்தாள்.

“என்ன காலையில் மாநாடு நடக்குது?” நடைப்பயிற்சி முடிந்து அப்பொழுது தான் உள்ளே வந்த கரிகாலன் கேட்டுக் கொண்டே அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

“அப்பா... இந்தாங்க டவல்...” என்றபடி துண்டை அவரிடம் நீட்டினாள் அவரின் செல்ல மகள் வசீயரசி.

“பாப்பான்னா என் பாப்பா தான்...” என்று அவளின் செயலை எண்ணி சிலாகித்தவர்... “அப்புறம் பாப்பா... நம்ம மேனேஜர் பொண்ணு கல்யாணத்துக்கு போயிட்டு வந்திருடா. எங்களுக்கு வேற கல்யாண வீடு இருக்கு. அங்கே போறதுல உனக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லியே?” அவர் கேட்க,

“இல்லப்பா... நான் கட்டாயம் போறேன். அதை சொல்றதுக்கு முந்தி அம்மா என்னை தப்பா புரிஞ்சிக்கிட்டு... தலையில் கொட்டிட்டாங்க” வேண்டுமென்றே வருந்தும் குரலில் கூற... அவ்வளவு தான் அவருக்கு கோபம் வந்துவிட்டது.

“உனக்கு எத்தனைத் தடவைச் சொல்றது... வளர்ந்தப் பொண்ணை அடிக்காதேன்னு... இனி அவளை அடிச்ச... உனக்கு அதை விட வட்டியும் முதலுமாய் திருப்பிக் கிடைக்கும்” மனைவியைக் கண்டித்தவர்...

“இனியும் அம்மா திட்டினா… அவ அம்மா வீட்டுக்கு அனுப்பிறலாம் என்ன பாப்பா?” மகளிடம் கொஞ்சிக் கொண்டே சொல்ல,

“அதெல்லாம் வேண்டாம்ப்பா… போனா போகுதுன்னு மன்னிச்சு விட்டுறலாம்” என்று பெரிய மனதுடன் அவள் சொல்ல… கலைமகள் அவளை பார்த்து,

“என்னடிச் சொன்ன… போனாப் போகுதுன்னா என்னை இருக்கச் சொல்ற? உன்ன…” அவர் மீண்டும் அடிக்க வரும் முன் அங்கிருந்து ஓடி விட்டாள்.

“ஆனாலும் ரொம்ப தான் செல்லம் கொடுக்கிறீங்க…” கணவரிடம் மனத்தாங்கல் பட்டுக் கொண்டார் கலைமகள். பிரியனும் அதையே ஆமோதிக்க…

“நம்ம வீட்டில் இருக்கும் வரை செல்லமா இருந்துட்டுப் போகட்டுமே… சின்னப் பொண்ணுத் தானே” மனைவியிடம் எடுத்துச் சொல்ல… அவர் மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை.

“அம்மா… நான் எந்தப் புடவை கட்டணும்னு வந்து எடுத்துக் கொடுங்கம்மா?” மேலிருந்து அவள் குரல் கொடுக்க…

“ஆளு தான் வளர்ந்து இருக்க… ஆனா ஒரு மண்ணும் தெரியல” திட்டிக் கொண்டே கலைமகள் எழுந்துச் செல்ல அதை சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் கரிகாலன்.

“அப்பா… நான் எப்படி இருக்கேன்?” என்றபடித் தன் முன் வந்து நின்ற மகளின் அழகுக் கண்டு அவர் பிரமித்தார்.

தங்க நிறத்தில் அகல கரையிட்டப் பட்டுச் சேலையும், நீண்ட தலைமுடியை பின்னி மல்லிகைப் பூச்சூடி, வைர நகைகளை அணிந்து… அந்த தேவலோக அழகியை ஒத்த அழகுடன் இருந்த மகளைக் கண்டு அவருக்கு மனம் நெகிழ்ந்து கண்கள் கலங்கியது.

“என் பொண்ணுக்கு என்ன குறைச்சல்… அழகுடா நீ…” அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டார்.

“மாமா… அத்தை…” குரல் கொடுத்தபடி உள்ளே நுழைந்தான் அர்ஜுன். உள்ளே வந்தவனின் கண்கள்… அங்கு அழகுத் தேவதையாய் நின்றிருந்த அத்தை மகளைக் கண்டதும் வியப்பில் விரிந்தது.

“அத்தே… இது நம்ம வாலு அரசி தானா?” நம்ப முடியாத பாவனையில் அவன் வினவினான்.

“வா அர்ஜுன்…” கரிகாலனும், கலைமகளும் அவனை வரவேற்க… “வாடா மாப்பிள்ளை…” என்று அழைத்தபடி அவனை தோளோடு தழுவிக் கொண்டான் பிரியன்.

“அர்ஜுன் அத்தான்… எப்படி இருக்கீங்க?” குதூகலமாய் அவனை வரவேற்றாள் வசீயரசி. அதை கரிகாலன், கலைமகள், பிரியன் மூவரும் தங்கள் மனதில் குறித்துக் கொண்டு… தங்களுக்குள் அர்த்தமாய் பார்வையைப் பரிமாறிக் கொண்டனர்.

“சரி மாப்பிள்ள… நான் என் பிரெண்ட் கல்யாணத்துக்குப் போக வேண்டி இருக்கு. ஆப்டர்நூன் வரை இங்கே தானே இருப்ப?” பிரியன் கேட்க,

“புல் டே நான் இங்கே தான் இருப்பேன். நீ போயிட்டு வாடா மச்சான்” அர்ஜுன் அவனுக்கு விடை கொடுக்க… பிரியன் கிளம்பினான்.

“அரசி… ஏஞ்சல் மாதிரி எங்கே கிளம்பிட்ட?” அவன் கேட்க… அவளுக்குப் பதிலாய் பதில் சொன்ன கரிகாலன்,

“அர்ஜுன்… நீயும் அவ கூட போயிட்டு வாயேன்… அவளுக்கு துணைக்குத் துணையாச்சு” என்று அவர் சொல்ல…

“உங்க பொண்ணுக்கு நான் துணையா… குட் ஜோக் மாமா… அவ தான் எனக்கு துணையா வருவா” என்று சொல்லியவன் வாய் விட்டு சிரித்தான்.

“அர்ஜுன்… அப்புறம் என்ன செய்யலாம்ன்னு உத்தேசம்…?” கரிகாலன் அவன் வேலையைப் பற்றி வினவ,

“பெங்களூருல ஒரு ஜாப் கிடைச்சிருக்கு. அப்பாவும், அண்ணனும் இங்கேயே தொழிலைப் பாருன்னு சொல்றாங்க. அதான் என்ன செய்யலாம்ன்னு ஒரே யோசனையா இருக்கு?”

“அவங்க சொல்றதும் சரி தானே அர்ஜூன். நீ வாங்குற சம்பளத்தை விட அதிக வருமானம் நம்ம தொழிலில் வரும் போது... நீ எதுக்கு அடுத்தவன் கிட்டக் கை நீட்டிச் சம்பளம் வாங்கணும்? மாப்பிளையும் ஒத்த ஆளா எத்தனை நாள் தான் கஷ்டப்படுவாரு...”

“ம்... நீங்க சொல்றதும் சரி தான் மாமா... யோசிக்கிறேன்” என்று அவரிடம் பணிவாய் சொன்னவன், “போலாமா அரசி...” என்று அவளிடம் கேட்க...

“போலாம் அத்தான்” என்றபடி எழுந்தவள் இருவரிடமும் விடைப் பெற்று வெளியில் வந்தாள்.

அவனிடம் சும்மாவாவது காரை ஓட்டு என்று சொல்லாமல் அவள் ஓட்டுனர் இருக்கையில் அமர, அதை கண்டு அவன் மனதுக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

“அரசி... நீ மாறவே இல்ல...” சொல்லியபடி முன்பக்கம் ஏறி அமர்ந்தான்.

“இது என்னுடைய பேவரைட் கார்... இதை எதுக்காகவும் யாருக்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டேன்” சிரித்தபடி சொன்னவள் காரைக் கிளப்பினாள்.

“என்னங்க... ரெண்டுப் பேருக்கும் ஜோடிப் பொருத்தம் நல்லாயிருக்குல்ல...” கலைமகள் கணவரிடம் கேட்க...

“ம்... ரொம்ப பொருத்தமாயிருக்கு...” பதில் சொன்னவரின் குரல் நெகிழ்ந்திருந்தது.

காரில் அமர்ந்திருந்த அர்ஜூனோ வசீயரசியின் அருகாமையில் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்தான். வெளிநாட்டில் வெள்ளைத் தோல் அழகிகள் பலருடன் அவன் பழகி வந்தாலும்... மண்ணின்

மனம் மாறாமல் அழகாய் இருக்கும் அத்தை மகளின் நினைவில்... யாரிடமும் சிக்கிக் கொள்ளாமல் கற்புக்கரசனாய் திரும்பி வந்திருக்கிறான். அந்தளவுக்கு அவள் அழகில் அவன் மயங்கி இருந்தான். ஆனால் இதையெல்லாம் அவள் உணரவில்லை. சிறுவயதில் இருந்து விளையாடி வந்த மாமா மகன் என்ற நினைவிலேயே அவனை அவள் எண்ணியிருந்தாள்.

**************************************

“சுடலை... வாசலில் இருந்த கோலத்தை கவர் பண்ணினியா... அப்புறம் அந்த பேனர்... மணமக்களோட பேரு... எல்லாத்தையும் கவர் பண்ணிட்டியா?” காந்தன் பரபரப்புடன் கேட்க...

“இதை எல்லாம் நீங்க சொல்லணுமா அண்ணாச்சி... எல்லாத்தையும் கவர் பண்ணிட்டேன்” ஆதரவாய் பதிலளித்தான் சுடலை. காந்தன் புகைப்படம் எடுக்க... சுடலை வீடியோ எடுத்துக் கொண்டிருந்தான்.

வாசலில் வரவேற்பில் நின்றுக் கொண்டு வந்தவர்களைப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தவன்... அப்பொழுது அங்கு வந்துக் கொண்டிருந்தவளைக் கண்டுத் திகைத்துப் போய் தன் முகத்துக்கு நேரே பிடித்திருந்தப் புகைப்படக் கருவியை விலக்கிவிட்டு அவளை நேரடியாய் பார்த்தான்.

காந்தன் தன்னைப் பார்த்து அதிர்ந்துப் போய் நின்றிருந்ததைக் கண்ட வசீயரசியின் உதட்டில் அலட்சியப் புன்னகைப் பூத்தது. அவன் தன்னைப் பார்க்கிறான் என்பதை தெரிந்துக் கொண்டவள்... வேண்டுமென்றே அர்ஜூனின் கையோடு தன் கையைக் கோர்த்துக் கொண்டு அவனை கர்வமாய் பார்த்தபடி உள்ளே நுழைந்தாள்.

‘இவ எங்கே இங்கே? இவளின் வசதிக்கும் இந்த கல்யாணத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லியே? ஒருவேளை மண்டபம் மாறி வந்துட்டாளோ?’ குழப்பத்துடன் வசீயரசியையே பார்த்துக் கொண்டிருந்தான் காந்தரூபன்.

இளங்குமரனின் சித்தப்பா பையனுக்கு தான் இன்று திருமணம். குமரன் தான் காந்தனை புகைப்படம் எடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தான். புகைப்படம் எடுக்க வந்த இடத்தில் அவளை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதிலும் ஒரு ஆடவனின் கையை கோர்த்து கொண்டு அவள் நின்றவிதம் அவனுக்குள் குழப்பத்தை உண்டு பண்ணினாலும்... வெளியே அவன் ஒன்றும் காட்டிக் கொள்ளவில்லை.

காந்தனுக்கு காதல் என்றால் பிடிக்காது என்று தெரிந்திருந்ததால்... அவள் அவனை வெறுப்பேற்ற எண்ணி அர்ஜுனின் கையை வேண்டுமென்றே தான் பிடித்தாள். ஆனால் அவன் அதை கண்டு கொள்ளவில்லை என்றதும் அவளுக்கு சப்பென்று ஆகிவிட்டது.

“வாங்கம்மா... வாங்கய்யா...” என்று பெண்ணின் பெற்றவர் அவர்களை வரவேற்கவும் தான் அவன் சற்று சுதாரித்தான்.

“என்ன தம்பி... எங்க முதலாளியம்மாவை ஃபோட்டோ எடுக்காம இருக்கீங்க?” அவர் அவனை கேட்கவும்... அவன் அவளை கூர்மையாய் பார்த்தான். பின்பு அவர் புறம் திரும்பியவன்,

“சித்தப்பா... உங்க முதலாளியம்மாவை ஃபோட்டோ எடுக்கலாமான்னு அவங்க கிட்ட பெர்மிசன் கேட்டுக்கோங்க... இல்லைன்னா அவங்களுக்கு கோபம் வந்து கேமிராவை தூக்கிப் போட்டு உடைச்சிருவாங்க” நக்கலாய் சொன்னவன் அவள் முகத்தை ஆழ்ந்துப் பார்த்தான்.

அவன் பேசியதுக் கேட்டு அவளுக்கு கோபம் வந்து அவள் முகம் சிவந்துப் போனது. ஆனாலும் அதை எளிதாய் மறைத்துக் கொண்டவள்... வலிய வரவழைத்த புன்னகையுடன்,

“ம்... அந்த பயம் இருந்தா சரி தான் மேனேஜர்... இப்ப ஃபோட்டோ எடுக்க சொல்லுங்க...” அவரை பார்த்து அவள் சொல்ல... இப்பொழுது கோபம் கொள்ள வேண்டியது அவனின் முறையாயிற்று. அவளை அவன் முறைத்துக் கொண்டு நிற்க,

“தம்பி... கல்யாண வீட்டில் எதுக்கு வீண் வாக்குவாதம்... அவங்களை ஃபோட்டோ எடுப்பா...” அவர் சொல்லவும்... அவன் தன் புகைப்படக் கருவி மூலம் அவர்கள் இருவரையும் நோக்கினான்.

வசீயரசி அர்ஜூனின் கையை கோர்த்து இருந்த விதம்... அர்ஜூனின் பார்வை அவளை மையலாய் தழுவியது எல்லாவற்றையும் கண்ட காந்தனுக்கு இருவருக்கும் இடையில் உள்ள உறவு புரிந்தது. இருவருமே ஒருவருக்கொருவர் படைத்ததுப் போல் அழகாய், அம்சமாய் பொருந்தி இருந்ததைக் கண்டவன்... மனதுக்குள் அவர்களின் ஜோடிப் பொருத்தத்தை பாராட்டிக் கொண்டான்.

அவனும் எத்தனையோ ஜோடிகளை புகைப்படம் எடுத்து இருக்கிறான். ஆனால் இது போல் அழகான, பொருத்தமான ஜோடியை அவன் புகைப்படம் எடுத்ததில்லை. தனது தொழில் திறமைக்கு சவால் விடுவது போல் நின்றிருந்தவர்களை புதிய கோணத்தில் அழகாய் புகைப்படம் எடுத்தான்.

“அரசி... இந்த மாதிரி லோ கிளாஸ் ஆளுங்க கிட்ட உனக்கு என்னப் பேச்சு வேண்டியிருக்கு? ஐ டோன்ட் லைக் திஸ்” உள்ளே சென்றவளுடன் இணைந்து நடந்தபடி அர்ஜூன் படபடவென பொரிந்தான்.

“கூல் அர்ஜுன்... அவனுக்கு எல்லாம் இந்த மாதிரி தான் பதில் சொல்லணும்” அலட்சியமாய் பதில் சொன்னபடி அவள் செல்ல... அவர்கள் பேசிய வார்த்தைகள் ஒன்று விடாமல் அவன் காதில் விழுந்தது. கொஞ்ச நேரம் முன்பு அவன் மனதில் தோன்றிய இணக்க நிலை மறைந்து... அந்த வார்த்தைகளின் தாக்கம் அவன் ரத்தத்தைக் கொதிக்கச் செய்தது. முயன்று தன்னை கட்டுப்படுத்திக் கொண்டவன் தன் வேலையில் கவனமானான்.

முன் வரிசையில் அர்ஜுனுடன் அமர்ந்திருந்த வசீயரசியின் கண்கள் அவளையும் அறியாமல் காந்தனையே முற்றுகையிட்டது. அவளின் வாய் அர்ஜுனிடம் பேசிக் கொண்டிருந்தாலும் அவளின் கவனம் முழுவதும் அவன் மீதே இருந்தது. ஓடி ஓடி அவன் வேலை செய்த பாங்கு, எல்லோரிடமும் சிரித்த முகமாய் பேசியது, அதிலும் பெண்களிடத்தில் அவன் காட்டும் மரியாதை எல்லாவற்றையும்... அவள் ஒருவித ஆராய்ச்சி பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அத்தான்...” என்றபடி அருகில் வந்து நின்ற தேவியை அவன் மறந்தும் திரும்பிப் பார்க்கவில்லை. மணமேடையில் அமர்ந்து சடங்குகள் செய்துக் கொண்டிருந்த மணமக்களை புகைப்படம் எடுப்பதில் அவன் மும்முரமாய் இருந்தான்.

அவளும் சளைக்காமல் அவன் தன் புறம் திரும்பும் வரை அங்கேயே நின்று கொண்டிருந்தாள். மணமக்கள் உடை மாற்ற செல்ல... அவன் சற்று நிம்மதியாகி ஓய்வாக நின்றான்.

“அத்தான்... ரொம்ப டயர்டா இருக்கீங்க போல... இந்த கூல் ட்ரிங்க்சை குடிங்க” கையிலிருந்த குளிர்பானத்தை அவன் முன் நீட்டினாள்.

“உனக்கு வேற வேலையே இல்லையா?” அடிக்குரலில் சீறியவன்... சுற்றும் முற்றும் தன் பார்வையை ஓட விட்டான்.

முதல் வரிசையில் அமர்ந்துக் கொண்டு தன்னை இகழ்ச்சியான புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்த

வசீயரசி அவன் கண்ணில் பட்டாள். அவளின் பார்வையின் அர்த்தம் உணர்ந்து அவனுக்கு நாக்கை பிடுங்கிக் கொள்ளலாம் போலிருந்தது. 'இதற்கு எல்லாம் காரணம் இந்த தேவி தான்' என்று தேவி மேல் கண்மூடித்தனமான கோபம் வந்தது.

"தேவி... இது உங்க சித்தப்பா வீட்டு கல்யாணம். உன் சொந்தக்காரங்க எல்லாம் பார்த்துட்டு இருக்காங்க... முதல்ல நீ இங்கிருந்து கிளம்பு" அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவன் சொல்ல...

"பார்த்தா பார்த்துட்டு போகட்டுமே... அப்படியாவது சீக்கிரம் நல்லது நடந்தா சரி தான்..." என்றவள் அவனை விட்டு அசைவதாய் இல்லை. அவளிடம் போராடி பார்த்து தோற்றவனாய் அவன் வேறுவழியின்றி அவளை மறந்தவனாய் தன் தொழிலில் மூழ்கி போனான்.

காந்தனையும், அவன் அருகில் நின்றிருந்த பெண்ணையும் மாறி மாறி பார்த்த வசீயரசிக்கு கோபம் கோபமாய் வந்தது. 'அன்றைக்கு பெரியதாய் எனக்கு அட்வைஸ் செஞ்சான். காதலிக்காத என்னை பார்த்து என்னவெல்லாம் கேட்டான்? இப்ப இவன் மட்டும் என்ன ஒழுங்கா? இவனும் தானே காதலிக்கிறான்? இருடா... என் கிட்ட நீ மாட்டாமலா போய்டுவ... நாக்கை பிடுங்கிக்கிற மாதிரி நாலு கேள்வி கேட்கல... நான் அரசி இல்லடா...' மனதில் சூளுரைத்தவள்... அதற்கான சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தாள்.

திருமணம் முடிந்து உணவு அருந்துபவர்களை புகைப்படம் எடுக்க எண்ணி காந்தன் சுடலையுடன் மண்டபத்தின் உணவு கூடத்தை நோக்கி நடந்தான். அங்கே ஒவ்வொருவரையும் விடாமல் புகைப்படம் எடுத்தவன் வசீயரசியின் பக்கம் வந்ததும் ஒரு நொடி தாமதித்து... பின் தன் வேலையை செவ்வனே செய்தான். அவனை கண்டதும் வசீயரசி உதட்டில் தோன்றிய நக்கல் சிரிப்புடன்,

"அர்ஜுன்... ஊருக்கு தான் உபதேசம்ங்கிற பழமொழி நீங்க கேள்விப்பட்டு இருக்கீங்களா?" அர்ஜுனைப் பார்த்துக் கேட்க... அவன் புரியாமல் விழித்தான்.

“புரிய வேண்டியவங்களுக்கு புரிஞ்சா சரி…” அமர்த்தலாய் சொன்னவள் அவனை ஆழ்ந்து பார்த்தாள். அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பது காந்தனுக்கு புரிந்தது. ஆனால் அவனால் பதில் சொல்ல முடியாத நிலை. எல்லாம் இந்த தேவியால் வந்தது என்று மனதுக்குள் தேவியை கண்டபடி அர்ச்சித்தான்.

அப்பொழுது பார்த்து ஒரு சிறுமி ஒருத்தி அழுதபடி அங்கே வந்து சுற்றும் முற்றும் பார்க்க… அதை கண்ட அரசி பரிதாபப்பட்டு தன் கையை நீட்டி அவளை தன் அருகில் அழைத்தாள். அந்த சிறுமியோ பயந்துப் போனவளாய் வர மறுத்து மறுப்பாய் தலையை அசைத்தாள். அரசி எழுந்துப் போய் அவளை தூக்கியவள் தன் இலையில் இருந்த ஜாங்கிரியை எடுத்து அவளிடம் கொடுக்க… அந்த சிறுமி முகத்தில் லேசாக புன்னகை வந்தது. இதையெல்லாம் கண்ணிமைக்காமல் ஆச்சிரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் காந்தன்.

“அம்மு… உன்னை எங்க எல்லாம் தேடுறது… நீ இங்கே இருக்கியா?” என்றபடி அதன் தாயார் அங்கு வர… சிறுமி இவளிடமிருந்து தன் அன்னையிடம் தாவினாள்.

“ரொம்ப தேங்க்ஸ்ம்மா…” என்றபடி அதன் தாயார் செல்ல… அரசி தன் இருக்கையில் வந்து அமர்ந்தாள்.

“அரசி… உனக்கு எதுக்கு இந்த தேவையில்லாத வேலை…? நம்ம ஸ்டேடஸ் என்ன? இவங்க ஸ்டேடஸ் என்ன?” அர்ஜுன் அவளிடம் முணுமுணுக்க… அவனை அவள் கண்டிப்புடன் பார்த்தாள்.

“அர்ஜுன் நீங்க பேசறது சரியில்ல… நம்ம ஸ்டேடஸ்க்கு என்ன… பெரிய மன்னர் பரம்பரையா நாம? ஒரு நாலு தலைமுறைக்கு முன்னே நாம எப்படி இருந்தோம்ன்னு நமக்கு எப்படி தெரியும்? இங்கே ஸ்டேடஸ்ன்னா பணத்தை வேணும்ன்னா சொல்லலாம். அந்த பணத்தை இவங்களும் சம்பாதிக்க ரொம்ப நாள் ஆகாது. அப்போ இவங்களை நமக்கு சரி சமமா ட்ரீட் பண்ணுவீங்களா? முதல்ல மனுசங்களை மதிக்க கத்துக்கோங்க அர்ஜுன். அதிலும்

சின்ன பசங்க கிட்ட போய் ஸ்டேடஸ் பார்த்துக்கிட்டு...” மெல்லிய குரலில் அவள் பேசினாலும்... அங்கு நின்று கொண்டிருந்த காந்தனின் காதிலும் அது விழுந்தது.

‘பார்றா... சாத்தான் வேதம் ஓதுது...’ என்று அவன் மனதுக்குள் நக்கலாக நினைத்தாலும்... அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவளின் இன்னொரு பக்கத்தை சுட்டிக் காட்டியது. அது அவளை பற்றிய நல்ல எண்ணத்தை அவனின் மனதில் விதைத்தது.

எல்லாவற்றையும் புகைப்படம் எடுத்து முடித்த காந்தன் தன் உபகரணங்களை எல்லாம் அதன் அதன் பைகளில் பத்திரமாக வைத்து மூடி சுடலையிடம் கொடுத்தவன், “இதை கொண்டு போய் நீ முன்னாடி வை... அடுத்து மாப்பிள்ளை வீட்டுக்கு போகணும்...” என்றபடி சொல்ல... அவனும் சரியென்று தலையாட்டி விட்டுச் சென்றான்.

அப்பொழுது பார்த்து அவனை ஒரு கரம் பிடித்து இழுத்தது. அவன் திகைத்து போனவனாய் அது யார் என்று பார்க்க... அது தேவி என்று தெரிந்ததும் அதிர்ந்து போனான்.

“ஏய்... என்ன பண்ற...?” அவன் பதற... அவளோ தன் உடலை சுவற்றில் சாய்த்து, அவனை தன் மேல் சாய்த்து இரு கரங்களால் அவனை பற்றிக் கொண்டாள். அவனோ பிடிமானம் இல்லாமல் தன் கையை சுவற்றில் அவளின் இரு புறமும் ஊன்றிக் கொண்டான். பார்ப்பவர்களுக்கு அவன் தான் தன் கையணைப்பில் அவளை வைத்திருப்பதுப் போல் தோன்றும்.

“அத்தான்... என்னை என்ன சுத்தல்ல விட்டுட்டு இருக்கீங்க... ஆனா அதுக்கு எல்லாம் அசர்ற ஆள் நான் இல்லை. இப்போ எப்படி என் கிட்ட வசமா மாட்டிக்கிட்டீங்க பார்த்தீங்களா?” அவள் சரசமாய் பேசியபடி அவனை மேலும் தன்னுடன் அணைக்க நினைக்க... அவனோ அவளை விட்டு எப்படி விலகுவது? என்று திமிறி கொண்டு நின்றிருந்தான்.

அப்பொழுது யாரோ வரும் ஓசை அவளுக்கு கேட்க... அவனை பிடித்திருந்த பிடியை விலக்கியவள் சற்றுக்

குனிந்து அவனிடமிருந்து விலகி ஓடிவிட்டாள். அவளின் இந்த திடீர் செயலில் அவன் தான் தட்டுத் தடுமாறி பின் புறமாக விழப் போனவன் யார் மேலோ மோதி... அவரோடு சேர்ந்து கீழே விழுந்தான்.

மெத்தென்ற உடலின் ஸ்பரிசமும், பூவாசமும் மோதிய நபர் பெண் என்று சொல்லாமல் சொல்லியது. அதிலும் அவன் கை பட்ட இடத்தின் செழுமை, மென்மை உணர்ந்தவன் சட்டென்று பதறிப் போய் எழுந்தான். தான் மோதி சாய்த்த நபரை கை கொடுத்து தூக்க நினைத்து அவன் அவர் முகம் பார்க்க... பார்த்தவன் அப்படியே திகைத்தான். ஏனெனில் கையை உதறிக் கொண்டு எழுந்துக் கொண்டிருந்தது வசீயரசி.

“உனக்கு எவ்வளவு திமிர் இருந்தா... என் மேல வந்து இடிப்ப?” அவனை பார்த்து கோபமாய் கேட்டவள், பட்டென்று கண்ணிமைக்கும் நேரத்தில் அவனை அடித்துவிட்டாள்.

அவன் கை பட்ட இடம் அவளுக்கு பெருத்த ஆத்திரத்தை உண்டு பண்ண... பெண்ணுக்கே உரிய அன்னிச்சை செயலாய் தான் அவள் அவனை அடித்தது. அதில் எந்தவித உள்நோக்கமும் இல்லை. ஆனால் ஏனோ அவனை அடித்ததில்... பதிலுக்கு பதில் என்றதில்.... இதுவரை கொதித்துக் கொண்டிருந்த அவள் உள்ளம் சட்டென்று அமைதியடைந்தது போல் தோன்றியது.

அவள் அடித்த கன்னத்தை பிடித்துக் கொண்டு நின்றவனுக்கு அவமானம் பிடுங்கி தின்றது. ஒரு பெண்ணின் கையால்... அதுவும் இந்த மாதிரி கீழ்த்தரமான செயலுக்காக அடி வாங்கியது அவன் ஆண்மைக்கு பெருத்த இழுக்காக இருந்தது. அவனின் முகம் அவமானத்தில் கன்றி சிவந்து இறுகிப் போனது.

அப்பொழுது தான் அவனுக்கு தான் கல்யாண மண்டபத்தில் நின்று கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு வர... சுற்றிலும் தன் பார்வையை சுழற்றினான். நல்லவேளை இந்த இடம் ஒதுக்கு புறமாய் இருந்ததால் யாரும் அவர்களை கவனிக்கவில்லை. இப்பொழுது

அவனின் கோபம் முழுவதும் அவள் மேல் திரும்பியது. தற்செயலாக நடந்த ஒன்றிற்கு தன்னை அவள் அடித்தது கண்டு அவன் மனம் ஆறவில்லை.

“என்னையாடி அடிச்ச... உன்ன...” அவன் கோபத்துடன் கர்ஜித்துக் கொண்டே அருகில் வர... அவள் பயத்துடன் சுவற்றுடன் ஒன்றினாள். யாராவது உதவிக்கு வர மாட்டார்களா என்று அவள் சுற்றும் முற்றும் பார்க்க... அந்த பக்கம் யாரும் வருவதற்கான அறிகுறி தெரியவில்லை.

‘நான் மேனேஜரை பார்த்து சொல்லிட்டு வர்றேன். நீங்க போய் காரில் உட்காருங்க...’ என்று அர்ஜுனை காருக்கு அனுப்பி வைத்த தன் முட்டாள்தனத்தை எண்ணி மனதுக்குள் நொந்துக் கொண்டாள்.

அவளின் இருபுறமும் தன் கையை ஊன்றி அவளை சிறை செய்தவன் அவள் விழிகளுக்குள் உற்று பார்த்தான். அவனின் கண்களில் தெரிந்த கோபத்தின் சீற்றத்தில் அவள் உள்ளுக்குள் குளிரெடுத்தது. ஆனாலும் அதை மறைத்து கொண்டு மனதில் எழுந்த அசட்டு தைரியத்துடன் வீம்பாய், திமிராய் அவனை பார்த்தாள். அவள் என்ன தான் தைரியமாக தன்னை வெளிக்காட்டிக் கொண்டாலும் அவளின் கண்ணில் தெரிந்த அச்சத்தை அவன் கண்டு கொண்டான். அதை கண்டவன் என்ன நினைத்தானோ சட்டென்று தன் கையை விலக்கினான்.

அவள் அடித்ததில் கோபப்பட்ட அவன் மனம் சற்று நிதானமடைந்து யோசித்து பார்த்தது. தன்னை அடித்ததற்கான காரணம் சட்டென்று அவனுக்கு விளங்கியது. தற்செயலாய் தான் அவள் மீது மோதியதை... தான் வேண்டுமென்றே மோதியதாய் அவள் நினைத்துக் கொண்டாள் என்பதை அவன் உணர்ந்தான். அதில் அவன் கை அவளின் உடலில் பட கூடாத இடத்தில் அழுந்த பதிந்ததை நினைத்து அவனுக்கே சற்று வருத்தமாய் போயிற்று. அத்தனையும் யோசித்து பார்த்தவனுக்கு அவள் மேல் கோபம் வரவில்லை... மாறாக அவளின் செயலில் இருந்த நியாயத்தை அவன் நியாய புத்தி சுட்டிக் காட்ட,

“மேடம்… நீங்க நினைப்பது போல் நான் பொம்பளை பொறுக்கி இல்ல… நம் முதல் சந்திப்பு தப்பா இருந்தாலும்… நான் தப்பானவன் இல்லை. மன்னிச்சுக்கோங்க…” என்றவன் அதற்கு மேல் நிற்காமல் அங்கிருந்து நகர்ந்து விட்டான். அவளோ அவன் பேச்சில் திகைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டாள்.

**************************************************

“இளா… எவ்வளவு பெரிய நல்ல விசயம் சொல்லியிருக்க…. நானும், அரசியும் உடனே கிளம்பி வர்றோம்” சந்தோசமாய் கலைமகள் அலைப்பேசியில் பேசி கொண்டிருக்க… என்னவென்று பார்வையால் வினவியபடி அவர் அருகில் வந்து அமர்ந்தாள் வசீயரசி.

“நம்ம இளா உண்டாகி இருக்காளாம்…” அவர் சந்தோசமாய் சொல்ல… அதை கேட்ட அவள்,

“ஹேய்… நம்ம வீட்டுக்கு குட்டி பாப்பா வர போகுதா? ஜாலி… ஜாலி…” சந்தோசத்தில் கத்தி குதூகலித்தவள்… அன்னையின் கையிலிருந்து அலைப்பேசியை பறித்து அக்காவிற்கு வாழ்த்து சொன்னாள்.

“அரசி அம்மா கிட்ட ஃபோனை கொடு…” இளவரசி சொன்னதும் அன்னையிடம் அவள் அலைப்பேசியை கொடுக்க…

“அம்மா… ஹாஸ்பிட்டலுக்கு போய் கன்பார்ம் பண்ணனும். நீங்க கூட வர்றீங்களா? அவரும் மாமாவும் சென்னைக்கு போயிருக்காங்க… அர்ஜுனும் அவன் பிரெண்டை பார்க்க மதுரைக்கு போய்ட்டான். அத்தையை பத்தி உங்களுக்கே தெரியும்… ஹாஸ்பிட்டல் மருந்து வாடை அவங்களுக்கு பிடிக்காது”

“இளா… இதுக்கு போய் நீ இவ்வளவு விளக்கம் சொல்லணுமா? உடனே நானும் அரசியும் வர்றோம். நீ கவலைப்படாதே” என்றவர் சின்னமகளை கிளம்ப சொல்லி,

தானும் கிளம்பி... இருவரும் மூத்த மகள் வீட்டிற்கு புறப்பட்டு சென்றனர்.

“அம்மா... இன்னும் ரெண்டு பேர் இருக்காங்க... அவங்க முடிந்ததும் நாம தான்...” வசீயரசி அன்னையிடம் சொல்லிவிட்டு தன் சகோதரியின் அருகில் அமர்ந்தாள்.

அப்பொழுது மருத்துவரின் அறையில் இருந்து வெளியில் வந்த ஒரு பெண் இவர்கள் அருகில் வந்து அமர்ந்தாள். அவள் அரசியை பார்த்து சினேகமாய் சிரிக்க... பதிலுக்கு அரசியும் அவளை பார்த்து சிரித்தாள். அந்நேரம் வெளியில் இருந்து உள்ளே வேகமாய் வந்த ஒருவன்,

“காஞ்சி... செக்கப் முடிச்சிட்டியா?” என்று கேட்க... அந்த குரல் பழக்கப்பட்ட குரலாய் இருக்க... அரசி நிமிர்ந்து அவனை பார்த்தாள்.

அங்கே காந்தன் நின்று கொண்டிருந்ததை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவனையும், அந்த பெண்ணையும் அவள் குழப்பத்துடன் பார்க்க... அவனும் அவளை அங்கே எதிர் பார்க்கவில்லை என்பது அவனின் அதிர்ந்த பார்வையிலேயே தெரிந்தது.  அவளை கண்டதும் அவன் தலை தானாக கவிழ்ந்தது. மலருக்கு காய்ச்சல் இருந்ததால் காவேரியால் காஞ்சனாவுடன் வர முடியவில்லை. அதனால் காந்தன் அவளுக்கு துணையாக வந்திருந்தான்.

“ம்... முடிஞ்சது அண்ணா... உங்களுக்காக தான் வெயிட் பண்ணிட்டு இருந்தேன்” என்றபடி எழுந்தவள்... இவளை பார்த்து சிரித்துவிட்டு அவனுடன் இணைந்து நடந்தாள். காந்தன் மறந்தும் அரசியை ஏறிட்டு பார்க்கவில்லை. அவன் தன் தங்கையிடம் பேசியபடி... அவளை கைத்தாங்கலாய் நடத்தி செல்வதை அமைதியாய் பார்த்துக் கொண்டிருந்தாள் வசீயரசி.

அவனின் அந்த அக்கறை அவளுக்கு வித்தியாசமாக பட்டது. அவளுக்கும் ஒரு அண்ணன் இருக்கிறான் தான்... ஆனால் இதுவரை அவன் அவளிடம் இது போல் அன்பாய், பரிவாய் நடந்து கொண்டதாய் அவளுக்கு நியாபகம்

இல்லை. அவளுக்கு அந்த காஞ்சியை பார்க்கும் போது சற்று பொறாமையாக கூட இருந்தது.

“ஹேப்பி பர்த் டே அர்ஜுன் அத்தான்…” வசீயரசி அலைப்பேசியில் அர்ஜுனுக்கு வாழ்த்து சொல்ல… அவனோ அதில் அகமகிழ்ந்து போனான்.

“தேங்க்யூ அரசி… தேங்க்யூ…” மனப்பூர்வமாய் அவளுக்கு நன்றி சொன்னான்.

“அத்தான்… வெறும் தேங்க்சோட விட்டுருவேன்னு நினைச்சீங்களா? எனக்கு நீங்க ட்ரீட் கொடுக்கணும்…” அவள் குரல் குயிலாய் கொஞ்ச… அதில் தன்னைத் தொலைத்தவனால் மறுத்து கூற முடியுமா என்ன?

“என்ன அரசி… இப்படி சொல்லிட்ட… உனக்கு இல்லாத ட்ரீட்டா… கட்டாயம் ட்ரீட் தர்றேன்… இன்னைக்கு நைட் ரெடியா இரு… நான் வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்”

“ம்… ஓகே… ஆனா நீங்க எனக்கு மட்டும் தனியா… ட்ரீட் கொடுக்கணும். கூடவே இந்த கும்பலை எல்லாம் கூப்பிட கூடாது” ஓரக் கண்ணால் அருகில் அமர்ந்திருந்த அன்னையை நமட்டுச் சிரிப்புடன் பார்த்தவாறு அவள் சொல்ல… கலைமகள் அவளை முறைத்தார்.

“யாரையும் கூப்பிடல… போதுமா… நீ, நான் மட்டும் தான் ஓகேவா?”

“டபுள் ஓகே அர்ஜுன் அத்தான்” என்றவள் மேலும் சில வார்த்தைகள் பேசிவிட்டு வைத்தாள்.

“ஏண்டி… நாங்க எல்லாம் உனக்கு கும்பலா தெரியுதா?” கலைமகள் அவள் காதை செல்லமாக முறுக்கிக் கொண்டு கேட்க…

“இல்லையா பின்னே… இங்கே நாம நாலு பேரு… அங்கே ஐஞ்சு பேரு… மொத்தம் ஒன்பது பேர்… அப்ப இது கும்பல் இல்லாம என்னவாம்” சிரிக்காமல் சொன்ன மகளை பார்த்து அவருக்கு சிரிப்பு வந்தது.

“அர்ஜூன் கூட தனியா போகணும்ன்னா போயிட்டு வா... அதுக்கு ஏன் இப்படி சுத்தி வளைச்சு பேசுற...?”

“அம்மா... ஸ்டாப்... ஸ்டாப்... நீங்க வீணா கற்பனை வளர்த்துக்காதீங்க... நான் கல்யாணத்துக்கு முந்தி எந்த கற்பனையும் வச்சுக்கிறதா இல்லை. இன்னைக்கு அர்ஜூன் பர்சுக்கு வைக்கிற வேட்டுல... அதுக்கு அப்புறம் என்னை அவன் ட்ரீட்டுக்கே கூப்பிட கூடாது... ஹா... ஹா...” என்று வயிற்றை பிடித்துக் கொண்டு அவள் சிரிக்க...

“உன்னை எல்லாம் திருத்த முடியாது... என்னமோ போ... பார்த்துடி... என் அண்ணன் மகன் பத்திரம்...” விளையாட்டாய் அவளை எச்சரித்தவர் உள்ளே சென்றார்.

‘அட போம்மா... உன் அண்ணன் மகன் இன்னைக்கு என் கையில் மாட்டிக்கிட்டு எப்படி திண்டாட போறான்னு பாரு...’ என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டவளுக்கு அந்நேரம் தெரிந்திருக்கவில்லை... தான் அவன் கையில் மாட்டிக் கொண்டு என்ன பாடுபட போகிறோம் என்று...? விதி கோரமாய் சிரித்தபடி அவளை பின் தொடர்வதை அவள் அறியவில்லை. அறிந்த போதோ அது அவள் வாழ்க்கையையே புரட்டி போட்டு இருந்தது.

“வாவ் அரசி... அப்படியே அந்த வானுகல தேவதை மண்ணில் இறங்கி வந்தது போலிருக்கு...” இளஞ்சிவப்பு சுடிதாரில் அழகாய் கிளம்பி வந்த வசீயரசியை பார்த்து அர்ஜூன் கண்ணிமைக்க மறந்தவனாய் மயங்கி போய் நின்றிருந்தான்.

“அத்தான்... உங்களுக்கு எப்பவுமே விளையாட்டு பேச்சு தான்... வாங்க போவோம்...” என்றபடி அவன் காரில் அவள் ஏற...

“மாமா, அத்தை எங்கே அரசி?” அவன் கேட்டுக் கொண்டே ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்தான்.

“ரெண்டு பேரும் அவங்க பிரெண்ட் வீட்டுக்கு போயிருக்காங்க” என்றவள் வெளிப்புறம் வேடிக்கை

பார்த்துக் கொண்டு வர, அப்பொழுது தான் அந்த வித்தியாசத்தை அவள் உணர்ந்தாள்.

காரில் தவழ்ந்த மிதமான நறுமணத்தையும் மீறி மதுவின் வாடை அவளின் நாசியை துளைத்தது. அவள் சந்தேகமாய் அருகில் அமர்ந்திருந்த அர்ஜுனை பார்த்தாள். அவனோ காரை ஓட்டுவதில் மும்முரமாய் இருந்தான்.

“அத்தான்... குடிச்சியிருக்கீங்களா?” அவளின் கேள்வியில் திடுக்கிட்டு போய் அவளை திரும்பி பார்த்தான் அர்ஜுன்.

“அது... வந்து...” அவன் இழுக்க...

“அத்தான் உண்மையை சொல்லுங்க...” அவள் கேட்டதும், ‘ஆம்’ என்பது போல் தலையசைத்தவன்,

“நைட் உன் கூட டைம் ஸ்பென்ட் பண்ணனும்ன்னு ஆப்டர்நூன் என் பிரெண்ட்ஸ்க்கு பார்ட்டி கொடுத்தேன்... அதுல கொஞ்சம்... லைட்டா...” மேலே பேச முடியாமல் அவன் திணறினான்.

“ஆப்டர்நூன் அடிச்ச மப்பு இன்னமும் இருக்குன்னா... அது உங்களுக்கு கொஞ்சமா...” கொஞ்சம் கோபமாய் இரைந்தவள்... பின் சற்று குரலை தாழ்த்தி, “உங்க நல்லதுக்கு தான் சொல்றேன். இனி இந்த மாதிரி பழக்கங்களை கொஞ்சம் குறைச்சுக்கோங்க அத்தான்” மென்மையாய் அவனுக்கு அறிவுரை சொல்ல...

“உன் பேச்சை நான் தட்டுவேனா அரசி... நீ சொல்லிட்ட இல்ல... இனிமே இந்த கருமத்தை தொடவே மாட்டேன்” சத்தியம் செய்யாத குறையாக அவன் சொல்ல... அதை கேட்டு,

“குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சுங்கிற மாதிரி... உங்க பேச்சு இல்லியே...” அவள் சிரிக்க...

“நிச்சயமாய் என்னை நீ நம்பலாம்...” என்று உறுதியாய் சொன்னவன் அவளுடன் இணைந்து நகைத்தான்.

நட்சத்திர ஹோட்டலில் அவனுடன் இணைந்து உணவு அருந்திய போதும் அவளுக்கு பெரியதாய் வித்தியாசம் ஒன்றும் தெரியவில்லை. எப்பொழுதும் போல் கலகலப்பாய் அவனுடன் பேசிக் கொண்டு அந்த இரவு பொழுதை கழித்தவளுக்கு அந்த நேரம் மிகவும் ரம்மியமாய் இருந்தது. சுமார் இரண்டு மணி நேரம் அவனுடன் அரட்டை அடித்து, உணவு அருந்தி முடிந்து விட்டு... ஹோட்டலின் பின் புறம் இருந்த கார் நிறுத்தும் இடத்திற்கு வந்து காரில் ஏறும் போது, காரின் பின் பக்க கதவை திறந்த அர்ஜுன்,

"அரசி ப்ளீஸ்..." என்க... அவளும் அதை தவறாய் எடுத்து கொள்ளாமல் அவன் சொல்படி கேட்டு பின் புறம் ஏறி அமர்ந்தாள். அவளை தொடர்ந்து அவனும் பின்பக்கமாய் ஏறி அமர,

"என்ன அத்தான்... முஸ்தீபுகள் எல்லாம் பலமாயிருக்கு... என்ன விசயம்?" அவள் சிரித்தபடி கேட்க... அவளின் சிரிப்பில் அவன் மயங்கினாலும் தான் செய்யப் போகும் காரியத்தை அவள் எப்படி எடுத்து கொள்வாளோ? என்று அவனுக்கு பயமாய் இருந்தது.

"அத்தான்... வேர்க்குது... ஏசியை போடுங்களேன்" என்றவள் காரின் இருக்கையில் சாய்ந்தமர... அவன் காரின் கதவை மூடிவிட்டு ஏசியை போட்டுவிட்டான். இந்த சூழ்நிலை கூட அவன் செய்ய போகும் காரியத்துக்கு சாதகமாய் இருக்கவே... மனதுக்குள் தன் அத்தை மகளுக்கு நன்றி சொல்லிக் கொண்டான்.

"எவ்வளவு நேரம் தான் மனதுக்குள் யோசித்துக் கொண்டு இருப்பீங்க... சொல்லுங்க அத்தான்?" தலையை சாய்த்து அவள் கேட்க... அவளை இறுக்கி அணைத்து அவளில் இதழில் கவிதை எழுத வேண்டும் என்று அவன் மனம் துடித்தது.

'ச்சீ கேவலமான மனமே... நீ அடங்கி இருக்க மாட்ட... அவள் என்னவள்... எனக்கு மட்டுமே சொந்தமானவள்... முத்தம் எல்லாம் காதலை சொன்ன பின்பு தான்...' ஒருவழியாய் தன் மனதை அடக்கியவன்... தன் பேண்ட் பாக்கெட்டில்

இருந்து ஒரு சிறிய பெட்டியை எடுத்து... அதை திறந்து ஒரு அழகிய வைர மோதிரத்தை கையில் எடுத்தான். அவனையும் அவன் கையிலிருந்த மோதிரத்தையும் மாறி மாறி பார்த்தவள்... ஒன்றும் புரியாமல் அவனை பார்த்து விழித்தாள்.

“அரசி... ஐ லவ் யூ... லவ் யூ மை ஏஞ்சல்...” என்று சொல்லி கொண்டே அவன் அந்த மோதிரத்தை அவள் கையில் அணிவிக்க வர... அவள் தன் கையை வெடுக்கென்று அவனின் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டாள்.

“அத்தான்... என்ன உளறல் இது?” அவள் குரலில் மிதமிஞ்சிய சினம் இருந்தது.

“அரசி... நம்ம ரெண்டு பேர் வீட்டிலும் நமக்கு கல்யாணம் பேச ஆரம்பிச்சுட்டாங்க... உனக்கு தெரியும் தானே...” அவன் ஏக்கமாய் கேட்க...

“ம்... ஆனா என் அப்பா உறுதியாய் இன்னமும் சொல்லல... அதனால தேவையில்லாமல் மனசுக்குள் ஆசையை வளர்த்துக்க வேணாம் அத்தான்...” அவள் கண்டிப்புடன் சொல்ல...

“உன் அப்பாவுக்கும் அந்த ஆசையிருக்கு அரசி... இன்னமும் என் காதலை ஏற்பதில் என்ன தடையிருக்கு?”

“அத்தான்... எனக்குன்னு சில பாலிசிகள் இருக்கு... அதில் ஒண்ணு... திருமணத்துக்கு பின்... என் கழுத்தில் தாலி ஏறிய பின் என் கணவனை மட்டும் தான் நான் காதலிப்பேன்... அவனுக்குமே அதற்கு பின் தான் என் மனதில் இடம் உண்டு. அதுக்கு முன் தேவையில்லாத இந்த மாதிரி சலனத்துக்கு இடம் கொடுப்பதாய் இல்லை...” அவள் உறுதியாய் அவன் காதலை மறுக்க...

“நான் உன் மாமன் மகன்... என் மேல் நம்பிக்கை இல்லையா?” அவன் பரிதாபமாய் அவளிடம் கெஞ்சினான்.

“நீங்கன்னு இல்ல... யாராயிருந்தாலும் இது தான் என்னுடைய பதில்... மணவறை வந்து கூட நின்ற

திருமணங்களை எனக்கும் தெரியும் அத்தான்... அதனால நமக்குள் இதெல்லாம் வேணாம்" அவளின் ஆணித்தரமான பேச்சில் அவனின் காதல் ஆட்டம் கண்டது.

"அப்போ... என் மேல் உனக்கு காதல் இல்லையா? உன் அப்பா என்னை தவிர... வேற யாரையாவது மாப்பிள்ளையாய் கொண்டு வந்தால்... நீ அவனை கல்யாணம் பண்ணிக் கொள்வாயா?" கேட்கும் போதே அவன் குரல் நடுங்கியது.

"என் பிரெண்ட்ஸ் நிறைய பேர் காதலிச்சு கல்யாணம் பண்ணியிருக்காங்க... ஆனா எனக்கு காதல்ல அவ்வளவா நம்பிக்கை இல்லை அத்தான்... நிச்சயமாய் என் அப்பா காண்பிக்கும் பையனுக்கு தான் நான் கழுத்தை நீட்டுவேன்... அது நீங்களா இருந்தாலும் சரி... வேற யாராயிருந்தாலும் சரி..." அவள் தன் மனதை அவனுக்கு தெளிவாய் சொல்ல... அவனுக்கு தான் பைத்தியம் பிடித்தது போல் ஆகிவிட்டது.

இவ்வளவு அழகான அத்தை மகளை வேறு ஒருவனுக்கு விட்டுக் கொடுக்க அவனுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. அப்பொழுது தான் சட்டென்று அவன் அந்த காரியத்தை செய்தான். அவளின் கையை இறுக பற்றிக் கொண்டு அவளை தன்னை நோக்கி அவன் இழுக்க... அவனின் எதிர்பாராத இந்த செய்கையில் அவள் திகைத்து தான் போனாள்.

"அத்தான்... என்ன செய்றீங்க... நான் போறேன் விடுங்க..." என்றவள் காரின் கதவை திறக்க முயல... தன் ஒரு கையால் அவளின் கையை லாவகமாய் தட்டி விட்டவன், மறுகையால் காரின் ரிமோட்டால் கதவை சென்ட்ரல் லாக் பண்ணினான்.

"அத்தான்..." அவள் அதிர்ந்து போய் அவனை பார்க்க...

"அரசி... உன்னை என்னுடையவளாக்க... எனக்கு வேறுவழியில்லை... ப்ளீஸ் கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ... அதுக்கு அப்புறம் நானே உன்னை வீட்டில் கொண்டு விட்டுர்றேன்" என்றவன் அவள் முகம்

நோக்கி குனிந்தான். அவன் அருந்திய மதுவின் போதையும் அவனுக்கு துணை சேர... தன் காரியத்தில் அவன் மும்முரமாய் ஈடுபட்டான்.

மாமன் மகன் வில்லனாய் மாறி போனதை நம்ப முடியாமல் அவள் திகைத்து இருந்தது ஒரு கணம் தான்... பின் சுதாரித்து கொண்டு அவனிடம் இருந்து விடுபட போராடினாள். யாராவது காப்பாற்ற மாட்டார்களா? என்று வெளியில் தன் பார்வையை செலுத்தினாள். வார நாட்கள் என்பதால் அங்கு ஆட்கள் நடமாட்டம் சுத்தமாய் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஒன்றிரண்டு கார்கள் தான் நின்றுக் கொண்டிருந்தது.

“ப்ளீஸ் அத்தான்... என்னை விட்டுவிடு... என் அப்பாவிற்கு தெரிஞ்சா அவ்வளவு தான்...” கெஞ்சி கொண்டே அவள் மிரட்ட...

“தெரிஞ்சா என்ன?” அலட்சியமாய் சொன்னவன், “அடுத்த முஹூர்த்ததில் நம் கல்யாணம் நடக்கும்...” மிதப்பாய் அவளுக்கு பதிலளித்தவன் அவளின் பெண்மையை சூறையாடுவதில் தன் முழு வேகத்தையும் காட்டினான்.

வசீயரசியின் வார்த்தையின் அர்த்தத்தை முழுமையாக புரிந்து கொள்ளாமல்... பெரியவர்களிடம் பேசி திருமணம் மூலம் அவளை தன்னவள் ஆக்கிக் கொள்ள நினைக்காமல்... ஆத்திரத்தில் அறிவிழந்து அவளின் வாழ்க்கை தன்னோடு தான் என்று முடிவு செய்தவனாய் அவளை தன் வசப்படுத்துவதில் கண்ணாய் இருந்தான் அர்ஜுன்.

****************************************

“சுடலை... நீ ஆட்டோவில் போ... கேமிரா பத்திரம்...” என்று அவனை எச்சரித்து விட்டு ஹோட்டலை விட்டு வெளியில் வந்தான் காந்தரூபன்.

இன்று ஒரு சின்ன குழந்தையின் பிறந்தநாள் கொண்டாட்ட விழாவை புகைப்படம் எடுப்பதற்காக இங்கே வந்திருந்தான்

அவன். வந்த வேலை ஒன்பது மணிக்குள் முடிந்துவிட்டது. இனி வீட்டிற்கு புறப்பட வேண்டியது தான் என்று மனதுக்குள் எண்ணியவன்... பின் பக்கம் இருந்த வாகன நிறுத்துமிடத்திற்கு சென்றான். அங்கே தான் அவனின் இருசக்கர வாகனத்தை நிறுத்தியிருந்தான்.

அவனது பைக் இருந்த இடத்திற்கு சற்று முன்பாக நின்றிருந்த கார் சற்று குலுங்கியபடி இருக்க... அதை வித்தியாசமாய் பார்த்தவன் அதை தாண்டி செல்ல முற்பட்டான். அப்பொழுது வித்தியாசமான முனங்கல் ஒலி அதிலிருந்து வர... அதை கேட்டு அவன் முகம் இறுகி போனது.

'சென்னை மாதிரி பெரிய சிட்டியில் தான் இது போல் நடந்து கொள்கிறார்கள் என்றால்... நம் ஊரிலும் இந்த மாதிரி நடக்கிறதே... ச்சே... விவஸ்தை கெட்ட ஜென்மங்கள்... அப்படி அவசரம் என்றால்... ஹோட்டலில் ரூம் போட்டு தங்கள் அந்தரங்கத்தை அரங்கேற்றி கொள்ள வேண்டியது தானே... இந்த மாதிரி பொது இடத்தில் போய் இப்படி நடந்து கொள்கிறார்களே...' மனதுக்குள் கோபமாய் நினைத்தான்.

அவனுக்கு வந்த கோபத்தில் காரை தட்டி உள்ளே இருப்பவர்களை தட்டிக் கேட்கலாமா? என்று கூட எண்ணினான். அந்த வெளிநாட்டு காரை பார்த்ததும் அந்த எண்ணத்தை மாற்றி கொண்டான். காரின் விலையே அரை கோடி பெறும்... இத்தகைய விலையில் வாங்க கூடியவன் நிச்சயம் பெரிய ஆளாய் தான் இருப்பான்... தான் தேவையில்லாமல் தலையிட்டு பிரச்சினை வளர்த்துக் கொள்ள வேண்டுமா? என்று எண்ணியவன் அந்த இடத்தை தாண்டி சென்றான்.

"ச்சீ... என்னை விடுடா... அர்ஜுன் ப்ளீஸ்..." பெண் ஒருத்தி பரிதாபமாய் கெஞ்சும் குரல் அவனுக்கு மெல்லியதாய் கேட்க... சுற்றும் முற்றும் அவன் திரும்பி பார்த்தான். அந்த குரல் காரிலிருந்து தான் வருகிறது என்பது அவனுக்கு தெளிவாய் புரிய... அதற்குள் என்ன நடக்கிறது? என்பது அவனுக்கு முற்றிலும் தெரிந்து போனது.

யாரோ இருவர் தங்கள் அந்தரங்கத்தை அரங்கேற்றுகிறார்கள் என்று கண்டு கொள்ளாமல் போக நினைத்தவனால்... ஒரு பெண்ணை அப்படியே ஆபத்தில் விட்டு விட்டு போக முடியவில்லை. தன் கண்களை சுழல விட்டவன் பார்வையில்... அங்கே மூலையில் கிடந்த இரும்பு தடி ஒன்று பட... ஓடி போய் அதை கையில் எடுத்தான். என்ன நடந்தாலும் பரவாயில்லை... அந்த பெண்ணை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று எண்ணியவன் கார் கதவின் கண்ணாடியில் ஓங்கி அடித்தான்.

அர்ஜூன் அப்பொழுது தான் அரசியை தன் முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருந்தான். இன்னும் கொஞ்ச நேரம் சென்றிருந்தால்... அவள் அவனவள் ஆகியிருப்பாள். அதற்குள் கார் கண்ணாடி உடையும் சப்தமும்... அடுத்து கண்ணாடி சில்லுகள் அவன் மேல் தெறித்து விழவும்... ஆத்திரம் தலைக்கேற... அவன் திரும்பினான்.

காந்தனை அர்ஜூனுக்கு அடையாளம் தெரியவில்லை... ஆனால் காந்தனுக்கு அவனை நன்கு அடையாளம் தெரிந்தது. ‘இவன் எங்கே இங்கே...?’ காந்தன் யோசித்தது ஒரு நொடி தான்... அடுத்த நொடி கையை உள்ளே விட்டு கார் கதவை திறக்க முயன்றான். முடியவில்லை... கோபத்துடன் அர்ஜூனின் சட்டையை பிடித்து இழுத்து கதவில் உடைந்து நீட்டி கொண்டிருந்த கண்ணாடியின் மீது அவன் கழுத்தை அழுத்தி வைத்தவன்... அவனை எரித்து விடுவது போல் பார்த்தான்.

“கார் ரிமோட்டை கொடுடா...” குரலை உயர்த்தி கேட்டும் அர்ஜூன் கொடுக்காமல் இருக்கவும் அவன் கழுத்தை கண்ணாடியில் வைத்து அழுத்த... அவன் கழுத்தில் கீறல் ஏற்பட்டு லேசாக ரத்தம் கசிந்தது. அதில் பயந்து போன அர்ஜூன் ரிமோட்டை அவனிடம் கொடுக்க... அடுத்த நொடி ரிமோட்டை இயக்கி கார் கதவை திறந்தவன் அவனை இழுத்து வெளியில் போட்டான்.

தன் காரியம் தடை பெற்றதாலும், தனக்கு ரத்த காயத்தை உண்டு பண்ணியதாலும்... அர்ஜுன் கோபமாய் அவனை அடிக்க வர... அவ்வளவு தான் காந்தனுக்கு ஆத்திரம் தலைக்கேறியது. அவன் அந்த அர்ஜுனை அடித்து புரட்டி எடுத்து விட்டான். அர்ஜுன் மது அருந்தி இருந்ததாலோ என்னமோ அவனால் காந்தனை வெகு நேரம் சமாளிக்க முடியவில்லை. அவனின் சராமாரியான அடிகளை தாங்க முடியாமல் அர்ஜுன் கீழே விழுந்தான். அவன் கீழே விழுந்ததும்... காந்தனின் பார்வை காரின் உள்பக்கம் சென்றது. அங்கே அரைகுறை ஆடையில் இருந்த வசீயரசியை கண்டதும் அவன் அதிர்ந்து தான் போனான்.

காந்தன் அர்ஜுனை அடிக்கும் போதே வசீயரசி அவனை அடையாளம் கண்டு விட்டாள். அவனின் திகைத்த பார்வையில் அவள் அப்படியே கூனி குறுகி போய்விட்டாள். அவன் பார்ப்பதற்கு முன்பே... களைந்திருந்த தன் ஆடைகளை அவள் சரி செய்துவிட்ட போதும்... ஆங்காங்கே இருந்த கிழிசல்களை அவளால் மறைக்க முடியவில்லை. அந்த கிழிசல்கள் அவளின் உள்ளாடையை பளிச்சென்று வெளிச்சம் போட்டு காண்பிக்க... கை கால்களை குறுக்கிக் கொண்டு... அவமானத்தில் முகம் சிவக்க... தலை குனிந்து அழுது கொண்டு அமர்ந்திருந்தாள்.

காந்தனை ஏறெடுத்து பார்க்க முடியாமல் வசீயரசிக்கு உடல் எல்லாம் கூசியது. அவள் மனதில் கழிவிரக்கம் அலை அலையாய் எழ... முழங்காலை இரு கைகளால் இறுக கட்டிக் கொண்டு, அதில் முகம் புதைத்து தேம்பி தேம்பி அழுதாள்.

எவனின் இயலாமை சுட்டிக் காட்டி இகழ்ந்து பேசினாளோ... அவன் முன்னே இப்படி ஆடைகள் கிழிந்து எளியவளாய், பிச்சைக்காரியாய் தான் இருக்கும் தோற்றம் அவள் மனதை பிழிய... அவளின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாக வழிந்தோடியது. எவனை வெறுப்பேற்ற அர்ஜுனின் கையை பற்றி கொண்டு கர்வமாய் அவனை பார்த்தாளோ அவன் கண் முன்னேயே... அவளின் கற்பை காக்க வேண்டிய அர்ஜுனே... அதை சூறையாடிய கொடுமை நிகழ்ந்ததை எண்ணி எண்ணி மனதுக்குள் குமைந்தாள்.

காந்தனோ அவளை கண்ட திகைப்பில் இருந்து அவனால் மீள முடியவில்லை. அன்று அன்றலர்ந்த மலர் போல் அழகாய் இருந்தவள்... இன்று காய்ந்த பூ சருகாய் தன் முன் இருந்த அவளின் நிலையை எண்ணி மனதுக்குள் வருந்தினான். அன்று அந்த அர்ஜுனுடன் அவள் கை கோர்த்து வந்த கோலம்... அவன் கண் முன்னே வலம் வந்தது. அன்று அவளை காதலாய் பார்த்தவன்... இன்று ஏன் அவளின் கற்பை களவாட எண்ணினான்? என்று காந்தனின் மனதில் கேள்வி எழுந்தது.

தனக்குள் அழுது கரைந்து கொண்டிருந்தவள் மனதில் ஏதோ ஒன்று தோன்ற தன் தலையை திருப்பி அவனை பார்த்தாள். சொந்த தாய்மாமன் மகனே அவளிடம் கேவலமாக நடக்க முயன்றான் என்றால்... காந்தனை அவள் எவ்வாறு எல்லாம் மட்டம் தட்டி நடந்து இருப்பாள். அதற்கு எல்லாம் சேர்த்து அவன் அவளை பழிவாங்க என்று... தன்னை ஏதும் செய்துவிட்டால்...? மனதுக்குள் பல கேள்விகள் படையெடுக்க... அவள் அச்சத்துடன் அவனை பார்த்தாள். காரில் இருந்து வெளியேறி தப்பிச் செல்ல முடியாதபடி அவள் உடைகள் கிழிந்திருப்பதை

உணர்ந்தவள்... தன் கை கால்களை இன்னமும் குறுக்கிக் கொண்டு பயத்தில் அந்த இருக்கையோடு ஒடுங்கினாள்.

அவள் கண்களில் அச்சத்தையும், அவளின் செயலில் பயத்தையும் பார்த்தவன்... "நீங்க பயப்பட வேணாம் மேடம்..." என்றவன் தன் சட்டையை கழட்டி அவளிடம் நீட்ட... அவளோ அதை வாங்கவும் தயங்கினாள்.

"ஆபத்துக்கு பாவமில்லை மேடம்..." என்று அவள் கையில் தன் சட்டையை வலுகட்டாயமாய் திணித்தவன், அவளின் அனுமதியை வேண்டாமல் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்து காரை கிளப்பினான்.

தன் கையிலிருந்த அவனின் சட்டையை வெறித்து பார்த்தவள்... வேறுவழியின்றி தன் மானத்தை காப்பதற்காக அதை அணிந்து கொண்டாள். பின்பு முன்புறம் இருந்த கண்ணாடி வழியே அவள் யோசனையுடன் அவனை பார்க்க... அவளின் பார்வையின் அர்த்தம் புரிந்தவன்,

"உங்கள வீட்டில் கொண்டு போய் விட்டுர்றேன்... நீங்க என்கிட்ட பயப்பட தேவையில்லை... உங்களுக்கு ஒண்ணுன்னா... அறிவு என்னை சும்மா விட்டுருவானா என்ன? அதனால தைரியமா என் கூட வாங்க..." அவன் தன் வார்த்தைகளால் அவளுக்கு தைரியமூட்டினான்.

அறிவு என்ற பெயரை கேட்டதும் அவள் மனம் சற்று அமைதியுற... ஒன்றும் பேசாமல் அவன் பேச்சை ஆமோதிப்பது போல் தலையை அசைத்தவள் இருக்கையில் சாய்ந்து கண் மூடினாள். அர்ஜுனுடன் அவள் போராடியதால் ஏற்பட்ட மனஅழுத்தம் அவளை கொஞ்சம் கொஞ்சமாய் ஒருவித மயக்க நிலைக்கு அழைத்துச் சென்றது.

கார் கிளம்பும் சத்தத்தில் கீழே விழுந்து கிடந்த அர்ஜுன் தன் உணர்வடைந்து... தன் பலத்தை எல்லாம் ஒன்று திரட்டி எழுந்தவன் ஹோட்டலின் முகப்பிற்கு வந்தான். அங்கிருந்த ஆட்டோ ஒன்றில் ஏறியவன்,

“அந்த காரை முந்திட்டு போப்பா...” என்று அதிகாரமாய் சொல்ல... அதன் ஓட்டுனர் அவனின் சொல்லுக்கு பணிந்து வேகத்தை கூட்டினான்.

அவன் நினைத்தது போல் கார் வருவதற்கு முன்பே தன் அத்தையின் வீட்டை அடைந்தவன்... கையில் கிடைத்த பணத்தை அள்ளி ஆட்டோ ஓட்டுனரிடம் கொடுத்துவிட்டு அவசரமாய் உள்ளே நுழைந்தான்.

“அடடே... அர்ஜுன் வாப்பா...” என்று வரவேற்ற கரிகாலன்... அவனின் தோற்றத்தில் தெரிந்த மாற்றத்தில் துணுக்குற்று...

“அர்ஜுன்... என்னப்பா ஆச்சு... இப்படி உடம்பு பூராவும் அடி விழுந்திருக்கு...” பதற்றத்துடன் அவனை கேட்டவர்... அப்பொழுது தான் தன் மகள் அங்கு இல்லாததை கவனித்தார்.

“அரசி எங்கேப்பா...?” கண்களில் உயிரை தேக்கியபடி அவனை பார்த்து கேட்க... அவனோ பதில் சொல்ல முடியாமல் தலை கவிழ்ந்தான்.

“டேய்... என் பொண்ணு எங்கேடா?” அவனின் சட்டையை பிடித்து கொண்டு ஆத்திரமாய் அவர் கேட்க... அவரின் ஓங்கிய குரல் கேட்டு வீட்டினுள் இருந்த கலைமகளும், பிரியனும் வரவேற்பறைக்கு வந்தனர்.

“அப்பா... என்ன இது? நம்ம வீட்டுக்கு மாப்பிள்ளையா வர போறவனின் சட்டையை பிடிச்சுக்கிட்டு...” அவர் கையை கோபத்துடன் விலக்கினான் பிரியன்.

“முதல்ல அரசி எங்கேன்னு கேளு...?” அவர் இன்னமும் கோபம் குறையாமல் கொந்தளிக்க... அங்கே அரசி இல்லாததை பிரியனும், கலைமகளும் கவனித்தனர்.

“ஐயோ... அர்ஜுன் என் மகள் எங்கே?” கலைமகள் அழுதபடி கேட்க...

“சொல்லுடா அரசி எங்கே?” என்று பிரியனும் கேட்க... அர்ஜூன் மெல்ல வாயை திறந்தான்.

“ஒருத்தன் என்னை அடிச்சு போட்டுட்டு அரசியை...” அதுக்கு மேல் சொல்ல முடியாமல் தவிப்பது போல் தவித்தவன்... போலியாய் அழ ஆரம்பித்தான்.

“என்னடா சொல்ற?” இப்பொழுது பிரியன் அவன் சட்டையை பிடித்து ஆங்காரமாய் கேட்க... அப்பொழுது கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

உடனே கரிகாலன் வாயிலுக்கு விரைய... அவரை பின் தொடர்ந்து அனைவரும் அங்கே சென்றனர். அது அர்ஜூனின் கார் என்றதும் கரிகாலன் யார் காரை ஓட்டிக் கொண்டு வந்தது என்று கூட கவனியாமல் ஓடிச் சென்று பின்புற கதவை திறந்தார். அங்கே மகள் அமர்ந்திருந்த கோலம் கண்டு,

“அரசி...” என்று பெருங்குரலெடுத்து அலறியவர்... அவசரமாய் அவளை அப்படியே தன் இரு கைகளில் அள்ளிக் கொண்டு வேகமாய் வீட்டினுள் விரைந்தார். கலைமகள் தலையில் அடித்தபடி அழுது கொண்டே... ஓட்டமும் நடையுமாய் அவரின் பின்னால் சென்றார்.

காந்தன் ஓட்டுனர் இருக்கையில் இருந்து இறங்கியவன்... அர்ஜூனை முறைத்துக் கொண்டே... பிரியனிடம் நடந்ததை சொல்ல வந்தான். அதற்குள் அர்ஜூன் அவனை முந்திக் கொண்டு,

“பிரியா... இவன் தான் என்னை அடித்து போட்டுவிட்டு... நம்ம அரசியை...” அர்ஜூன் முடிக்கும் முன்... பிரியன் ஆவேசமாய் காந்தன் மீது பாய்ந்திருந்தான்.

காந்தன் சட்டை இல்லாமல் பனியனுடன் இருந்த தோற்றம் வேறு அவனின் ஆத்திரத்தை அதிகமாய் கிளப்பிவிட்டது. அது தன் தங்கையின் மானத்தை காப்பாற்ற தான் அவன் கழட்டி கொடுத்திருந்தான் என்பதை அவன் அறிந்திருக்கவும் இல்லை... உணர்ந்திருக்கவும் இல்லை.

காந்தன் என்ன? ஏது? என்று சுதாரிப்பதற்குள் பிரியன் அவனை அடுத்தடுத்து அடிக்க... அவனுடன் அர்ஜூனும் சேர்ந்து கொண்டான். ஒத்தை ஆளாய் காந்தனிடம் வீரத்தை காட்ட முடியாதவன்... இப்பொழுது துணைக்கு ஆள் சேர்ந்ததும் தன் வீரதீரத்தை அவனிடம் காட்டினான். அதிலும் சற்று முன் காந்தன் அடித்த அடிகள் இன்னமும் அவனுக்கு வலியெடுக்க... இது தான் சாக்கு என்று காந்தனை மொத்து மொத்து என்று மொத்திவிட்டான். இருவரின் அடியில் நிலைக்குலைந்து போன காந்தனால் அந்த அடிகளை தாங்க முடியாமல் அவனின் உடல் சோர்வுற ஆரம்பித்தது.

காந்தனை அவ்வளவு அடித்தும் ஆவேசம் அடங்காதவனாய் பிரியன்... அவனை அப்படியே ஓங்கி ஒரு குத்து விட... முன்புறம் இருந்த இரும்பு கேட்டின் மீது காந்தனின் தலை மோதியது. மோதிய தலையில் இருந்து ரத்தம் வழிய சுயநினைவை இழந்த அவன் அப்படியே கீழே விழுந்தான். உண்மையை சொல்ல வந்தவன் அது முடியாமல்... அடி வாங்கி இப்பொழுது கேட்பாரற்று, அநாதையாய் தரையில் வீழ்ந்து கிடந்தான்.

அப்பொழுதும் ஆத்திரம் அடங்காத பிரியன் அவனை ஓங்கி உதைத்தான். அர்ஜூனும் தன் பங்கிற்கு அவனை காலால் எட்டி உதைத்து தன் ஆத்திரத்தை தணித்து கொண்டான். அப்போது உள்ளிருந்து வந்த கரிகாலன்... பிரியனும், அர்ஜூனும் ஒருவனை போட்டு அடித்துக் கொண்டிருப்பதை கண்டவர் அங்கே வேகமாய் வந்தார்.

“டேய்... ரெண்டு பேரும் என்னடா... செய்றீங்க?” அவர்களின் செயலை தடுத்தபடி சொன்னவரை... கொஞ்சமும் ஆத்திரம் குறையாமல் பார்த்த பிரியன்,

“இவன் தான்ப்பா... அர்ஜூனை அடிச்சுப் போட்டுட்டு... நம்ம அரசியை நாசம் பண்ணியவன்” சொல்லிக் கொண்டே அவன் மீண்டும் காந்தனை உதைக்க... அதில் காந்தன் மல்லாக்க விழுந்தான். அவனின் முகத்தை பார்த்து அதிர்ந்து போனார் கரிகாலன்.

“டேய்... இது அறிவு பிரெண்ட்டுடா...” அவர் அதிர்ச்சியுடன் கூவினார்.

“ஓ... இவன் அறிவு பிரெண்ட் வேறயா? நாளைக்கு அந்த அறிவுக்கு இருக்கு கச்சேரி...” பிரியன் அறிவை திட்ட... கரிகாலன் காந்தன் முகம் நோக்கி குனிந்தார்.

“டேய்... ஏண்டா... என் மகளை நாசம் பண்ணின? நாங்க உனக்கு என்னடா துரோகம் பண்ணினோம்?” கேள்வி மேல் கேள்வி கேட்டவர்... அவன் கன்னத்தில் சராமாரியாய் அடிக்க ஆரம்பித்தார். அவரின் அடியை உணரும் நிலையில் அவன் இல்லை என்பது அவருக்கு புரியவில்லை. தன் மனதின் ஆத்திரத்தை எல்லாம் அவன் மீது காட்டியவர்... ஒரு கட்டத்திற்கு மேல் தாங்க முடியாமல்... அங்கேயே மடிந்து அமர்ந்து அழ ஆரம்பித்தார்.

“அப்பா...” இதுநாள் வரை தன் தந்தை அழுது பிரியன் கண்டதில்லை. அவரின் கண்ணீர் கண்டு அதிர்ந்து போனவன், “அப்பா... நான் இப்பவே போலீசை கூப்பிட்டு இந்த நாயை நாலு தட்டு தட்ட சொல்றேன்” கோபத்துடன் அவன் தன் அலைப்பேசியை எடுக்க... அதில் அர்ஜுன் தான் பயந்து போனான்.

காவல்துறை, வழக்கு என்று போனால் அவனின் வண்டவாளம் அல்லவா தண்டவாளம் ஏறிவிடும். அதிலும் அரசி கண்விழித்தாள் என்றால் தான் செத்தோம் என்பதை உணர்ந்து கொண்டவன் அங்கிருந்து புறப்பட எண்ணினான்.

“போலீஸ் எல்லாம் வேணாம் பிரியா... முதல்ல அறிவை வர சொல்...” அவர் குரல் பலகீனமாய் ஒலித்தது.

“ம்...” என்று அரைகுறை மனதாய் தலையாட்டியவன் அறிவை அழைத்தான். அந்த நேரத்தில் பிரியனின் அழைப்பைக் கண்ட அறிவு... என்னமோ ஏதோவென பதறி கொண்டு அங்கே வந்தான்.

“என்ன பிரியா...? எதுக்கு வர சொன்னே...?” வாசலில் நின்றிருந்த பிரியனை கண்டு அவன் பதட்டத்துடன் கேட்க...

“முதல்ல... உள்ளே வா...” இறுகிய முகத்துடன் அவனை அழைத்து போய் தன் தந்தையின் முன் நிறுத்தினான் பிரியன்.

யோசனையுடன் உள்ளே வந்த அறிவு அங்கே யாரோ கீழே விழுந்து கிடப்பதை கண்டான். யார் என்ற ஆவல் மனதில் எழ... கீழே கிடந்தவனை உற்று நோக்கினான். அது தன் நண்பன் காந்தன் என்று தெரிந்ததும் அதிர்ந்து போனவனாய் அவனை நோக்கி கீழே குனிந்தான். அவனின் உடலில் இருந்த காயம் ஏதோ விபரீதத்தை அவனுக்கு உணர்த்த... கரிகாலன் பக்கம் திரும்பினான்.

“பெரியப்பா... இவன் என்ன தப்பு பண்ணினான்னு இப்படி அடிச்சுப் போட்டு இருக்கீங்க?”

“இவன் பண்ணிய காரியத்துக்கு கொலையே பண்ணி இருப்பேன்...” ஆத்திரமாய் கத்தியவர்... அர்ஜூன் சொன்னதை ஒன்று விடாமல் அவனிடம் கூறினார்.

“பெரியப்பா... உங்களை ரொம்ப பெரிய மனுசன்னு நினைச்சேன்... அது உங்க பணத்தை பார்த்து இல்ல... அது உங்க குணத்தை பார்த்து தான். ஆனா இன்னைக்கு நீங்க அப்படி இல்லைன்னு நிரூபிச்சிட்டீங்க... கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாமல் இப்படி நடந்துகிட்டீங்களே...” என்று தாங்கமாட்டாமல் சொன்னவன்,

“தப்பு செஞ்சவன் யாராவது என்னை கையும் களவுமாய் பிடிச்சிக்கோன்னு முன்னுக்கு வந்து நிற்பானா? அவன் தப்பிச்சு போக நினைப்பானா? இல்லை என்னை அடிச்சு கொல்லுங்கன்னு நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு உங்க கண் முன் நிற்பானா? அதிலும் என் நண்பன் இந்த மாதிரி விசயத்தில் சொக்க தங்கம். நீங்க சொல்லி அவனை பத்தி எனக்கு தெரியணும் இல்ல. எனக்கு அவனை பத்தி நல்லா தெரியும். எங்கேயோ தப்பு நடந்திருக்கு” இந்த இடத்தில் நிறுத்தியவன்... அர்ஜூனை சந்தேகமாய் பார்த்தபடி,

“எதுக்கும் அரசி எந்திரிச்சதுக்கு அப்புறம் நல்லா விசாரிச்சிட்டு... ஒரு முடிவுக்கு வாங்க” என்றவன் குனிந்து கஷ்டப்பட்டு காந்தனை தூக்கி தன் தோளில் சாய்த்து கொண்டு அங்கிருந்து வெளியேற போனான்.

“அப்போ நான் பொய் சொல்றேன்னு சொல்றீயா?” அர்ஜுன் ஏகத்துக்கும் எகிற... அவனை துச்சமாய் பார்த்த அறிவு, “அது நான் சொல்லணும்னு அவசியம் இல்லை... அரசியே மயக்கம் தெளிஞ்சு சொல்வா...” என்று சொன்னவன் திரும்பி பார்க்காமல் நடந்தான்.

“மாமா... அவன் ஏதோ தப்பா...” அர்ஜுன் பேசும் போதே அவனை கையமர்த்தி தடுத்த கரிகாலன்...

“முதல்ல நீ வீட்டுக்கு கிளம்பு... நாளைக்கு காலையில் பேசிக்கலாம்...” என்றவர் யோசனையாய் உள்ளே போக... அர்ஜுன் முகம் தொங்கி போனவனாய் தன் காரை எடுத்துக் கொண்டு வெளியேறினான். பிரியன் ஒன்றும் தோன்றாதவனாய் தலையில் கையை வைத்து கொண்டு அப்படியே நின்றுவிட்டான்.

“பாப்பா கண்ணு முழிச்சாளா?” என்று கேட்டுக் கொண்டே மகளின் அறைக்குள் நுழைந்தார் கரிகாலன்.

அவ்வளவு நேரம் உலகமே அழிந்து விட்டது போல் கவலையுடன் இருந்த அவர்... அறிவின் பேச்சை கேட்டதில் இருந்து அவரது மனதில் சிறிது நம்பிக்கை தலை தூக்க... சற்று நிம்மதியாய் உணர்ந்தார்.

மகளுக்கு உடை மாற்றி விட்டு அவள் அருகில் அமர்ந்து தலையை தடவிக் கொண்டு அமர்ந்திருந்த கலைமகள் கணவனின் குரல் கேட்டு நிமிர்ந்தார். அவரின் முகம் அழுதழுது வீங்கி போய் சிவந்திருந்தது.

“என்னங்க... எனக்கு என்னமோ பயமாயிருக்கு... நீங்க டாக்டருக்கு ஃபோன் பண்ணீங்களா?”

“ம்... இப்போ வந்துருவாரு...” அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே... பிரியன் மருத்துவருடன் உள்ளே

நுழைந்தான்.

“என்ன கரிகாலா... பேபிக்கு என்ன ஆச்சு?” அவரிடம் கேட்டார் அவரின் நண்பரான குடும்ப மருத்துவர்.

“ஒரு சின்ன ஆக்சிடென்ட்... பாப்பா காரில் இருந்து கீழே விழுந்தவள் முள் செடி மேலே விழுந்துட்டா... அந்த முள் அவள் உடல்ல குத்தி கிழிச்சுருச்சு... அதிர்ச்சியில் அவ மயக்கம் போட்டு விழுந்துட்டா...” நண்பராய் இருந்தாலும் சமாளித்து பதில் கூறினார் கரிகாலன்.

அவளை பரிசோதித்து... அவளின் காயங்களுக்கு மருந்திட்ட மருத்துவர், “நீ சொன்ன மாதிரி அதிர்ச்சியில் தான் மயக்கம் போட்டு இருக்கா... அவ தானா எழுந்துக்கிற வரைக்கும் யாரும் அவளை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்...” என்றவர் வேறு ஒன்றும் கேள்வி கேட்காமல் விடை பெற்றார்.

அவள் மேனியில் இருந்த காயங்கள் நகக் கீறல்களால் ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவர் ஒன்றும் முட்டாள் அல்ல. அவரின் மருத்துவ அறிவு என்ன நடந்து இருக்கும்? என்பதை துல்லியமாக ஊகித்தது. ஆனாலும் நண்பனை மேலும் மேலும் கேள்வி கேட்டு சங்கடப்படுத்த விரும்பாமல் அவர் வெளியேறினார்.

“டாக்டர் சொன்னதை கேட்ட தானே... அவளை தொந்திரவு பண்ணாதே. இன்னைக்கு அவ கூட துணைக்கு படுத்துக்கோ...” மனைவிக்கு உத்தரவிட்ட கரிகாலன் மகளின் தலையை மென்மையாக வருடி கொடுத்தார்.

‘நீ எழுந்து உண்மையை சொல்லுவதற்காக தான் நான் பொறுமையா இருக்கேன். உன்னை இந்த கதிக்கு ஆளாக்கியது யார் என்று தெரிந்தால்... அவனை... என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது? அது அந்த காந்தனா இருந்தாலும் சரி... அர்ஜுனா இருந்தாலும் சரி...’ அவர் மனம் கோபத்தில் கொந்தளித்தது. மகளுக்கு பெரியதாய் ஆபத்து வந்திருக்காது என்று அவர் மனம்

எண்ணினாலும்... செல்லமாய் வளர்த்த மகளின் இந்த நிலை அவரை கொலைவெறிக்கு தூண்டியது.

“அய்யோ... என் கண்ணே... உனக்கு போய் இப்படி ஒரு அவலம் நடக்கலாமா? அதுவும் நாங்க எல்லாம் உயிரோடு இருக்கும் போது...? உன்னை கெடுத்து நாசமாக்கியவன் நாசமா போக... கட்டையில் போக...!! பூ மாதிரி இருந்த உன்னை இப்படி ஆக்கியவன் புழுத்து தான் சாவான்...” என்ற ஒப்பாரி குரலில் வசீயரசி மெதுவே கண் விழித்தாள்.

அவள் அருகில் அமர்ந்து கொண்டு தலையில் அடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்த அர்ஜுனின் அம்மா... அதாவது அவளின் அத்தை கண்ணில் பட்டார். அவரை பார்த்ததும் அவசரமாய் எழுந்து அமர்ந்தவளுக்கு... சற்று முன் அவர் கூறிய வாரத்தைகள் மெதுவே அவளின் காதில் நுழைந்து மூளையில் ஆணி அடித்தார் போல் உறைத்தது. அது அவளை வெகுவாய் அதிரச் செய்து... கல்லாய் தனக்குள் இறுக செய்தது.

வசீயரசி தனக்குள் இறுகி கல்லாய் சமைந்திருந்தது ஒரு கணம் தான்... அடுத்த நொடி கட்டிலில் இருந்து வேகமாய் இறங்கியவள்... அங்கே அறையின் மூலையில் கண்களில் பயத்துடன் நின்றிருந்த அர்ஜுனை நோக்கி ஆவேசமாய் போனாள்.

“ஏண்டா நாயே... பண்ற தப்பு எல்லாம் நீ பண்ணிட்டு... எல்லார் கிட்டேயும் என்ன கதை டா அளந்து விட்டிருக்க...” ஆத்திரத்துடன் அவன் சட்டை காலரை பற்றி அவள் கேட்க... அவளின் ஆவேசத்தில் அங்கிருந்த அனைவரும் திக் பிரம்மை பிடித்து அப்படியே நின்று விட்டனர்.

“நல்லா இருக்குடியம்மா... நீ கூச்சல் போடுறது... நீ கெட்டு சீரழிஞ்சது பத்தாதுன்னு... பழியை என் புள்ள மேலே வேற தூக்கி போடுறியா?” அவளுக்கு குறையாத ஆவேசத்துடன் கேட்டபடி அவள் அருகில் வந்த அத்தை... அவளின் பிடியில் இருந்த மகனின் சட்டை பகுதியை மிகுந்த சிரமப்பட்டு விடுவித்தார்.

“மச்சான்... தங்கச்சி பேசுறது கொஞ்சமும் நல்லாயில்ல... தேவையில்லாம என் மகளை பேச வேணாம்ன்னு சொல்லுங்க” கரிகாலன் அர்ஜுனின் அப்பாவிடம் கடுமையாக சொல்ல... அதை கேட்டு அவரின் மூத்த மாப்பிள்ளையும், அர்ஜுனின் அண்ணனுமான கீர்த்திகன்,

“அப்போ அரசி பேசுறது மட்டும் நியாயமா மாமா?” என்று அவன் ஏகத்துக்கும் எகிறினான்.

“அப்பா... அவங்க உங்க மச்சான் மட்டும் அல்ல... என் மாமனாரும் கூட... கொஞ்சம் பார்த்து பேசுங்கப்பா...” இளவரசி அவரிடம் கெஞ்சினாள். அப்பாவின் பேச்சால் எங்கே தன் வாழ்க்கை பறி போய்விடுமோ? என்று அவள் உள்ளுக்குள் பயந்தாள். அதில் தங்கையின் நலன் அவளுக்கு பின்னுக்கு தள்ளப்பட்டது.

இப்போது கரிகாலன் என்ன பேசுவது? என்ன செய்வது? என்று தெரியாமல் தடுமாற... பிரியன் தன் சின்ன தங்கையை அதட்டினான்.

“அரசி... இது என்ன ஆம்பிளையை போய் சட்டையை இழுத்து பேசுறது? அதுவும் அவன் உன்னை கட்டிக்க போறவன்... அவன் கிட்ட இப்படியா நடந்துக்கிறது? கண்ட கண்ட படம் பார்த்து ரொம்ப தான் கெட்டு போய்ட்ட...” அண்ணன், அக்காவின் பேச்சில் திகைத்து போய் நின்றிருந்தவளை... அவளின் அம்மாவின் புலம்பல் அவளை அப்படியே அதிர்ச்சியில் உறையச் செய்தது.

“அன்னைக்கு நீ அந்த பையன் கிட்ட வம்பு பண்ணிட்டு வந்தப்பவே எனக்கு தெரியும். நாள பின்னே நீ இப்படி தான் வந்து நிப்பன்னு... நீ அவன் வயத்துல அடிச்ச... அவன் உன் வாழ்க்கையையே ஒரேடியா அழிச்சுட்டான். அதுக்கு தான் பொட்டப் புள்ள அடங்கி ஒடுங்கி வீட்டுக்குள்ள இருக்கணும்ன்னு சொல்றது. எங்கே என் சொல் பேச்சு நீயும் கேக்குறது இல்ல... உன் அப்பனும் கேக்குறது இல்ல. இப்படி அவுத்து விட்ட கோவில் மாடு மாதிரி ஊர் மேஞ்சா... இப்படி தான் விபரீதம் நடக்கும். நீ கெட்டதும் இல்லாம... இப்படி நம்ம குடும்ப மானத்தை சந்தி சிரிக்க வச்சிட்டியேடி பாதகத்தி...” பெருங்குரலெடுத்து அழுதார் கலைமகள்.

தன்னுடன் பிறந்த உடன்பிறப்புகள் பேசியது கூட அவளுக்கு அதிர்ச்சியை தரவில்லை. ஆனால் தன்னை பெற்ற அன்னையே இவ்வாறு பேசவும் அவள் நிலைக்குலைந்து போனாள். கடைசியில் ஆதரவு தேடி தந்தையின் முகம் பார்க்க... அவரோ யோசனையுடன் அவள் முகம் பார்த்து நிற்க கண்டு உள்ளுக்குள் உடைந்து போனாள்.

“அப்பா... நீங்களாவது நான் சொல்றதை நம்புங்களேன்...” அவளின் கெஞ்சும் குரல் அவரை அசைக்க... ‘சொல்லு...’ என்பது போல் சைகை செய்தார். நடந்தது அனைத்தையும் ஒன்றுவிடாமல் கூறியவள்... அர்ஜுனை எரித்து விடுவது போல் பார்த்தபடி,

“செய்றது எல்லாம் செஞ்சிட்டு ஒண்ணும் தெரியாதவன் மாதிரி… காலையில் குடும்பத்தோட இங்கே வந்து நிக்கிறான் பாருங்க… இவனை…” அவன் மேல் மறுபடியும் பாய போனவளை தடுத்து நிறுத்திய கரிகாலன், “அதான் ஒண்ணும் நடக்கலியே… பின்னே எதுக்கு சும்மா சும்மா… அவனை அடிக்க கையை ஓங்குற. பொம்பள புள்ள அடங்கி ஒரு ஓரமா இரு” என்று அவளை அதட்டியவர் அர்ஜுன் அருகில் வந்து அவனின் கையை பிடித்து கொண்டு,

“மன்னிச்சுக்கோங்க மாப்பிள்ள… அரசி ஏதும் தப்பா நடந்திருந்தா… என்னை மன்னிச்சுக்கோங்க” மகளை இந்த கதிக்கு ஆளாக்கியவனை கண்டம் துண்டமாய் வெட்டிப் போட வேண்டும் என்ற அவரின் வெறியை… மகளின் நடத்தையை கேவலமாய் பேசி விடுவார்களோ என்ற பய உணர்வு வென்று விட… தானாக முன் வந்து அவரே மன்னிப்பு கேட்டார்.

அவரின் வார்த்தையில் அவள் தான் அதிகம் அதிர்ந்து போனாள். தந்தை மன்னிப்பு கேட்கும் அளவுக்கு தான் என்ன தவறு செய்தோம்? தவறு செய்தது எல்லாம் அவன் தானே என்று கோபமாய் அவனை உறுத்து விழித்தாள்.

“ஏதோ வயசு கோளாறுல நீங்க நடந்துகிட்டதை அரசி தான் தப்பா புரிஞ்சிக்கிட்டு அழுது… ஆர்ப்பாட்டம் பண்ணிட்டா… அவள் சார்பில் நான் மன்னிப்பு கேட்டுக்கிறேன். என்னைக்கு இருந்தாலும் அவள் உங்க சொத்து… அவளை என்ன வேண்டுமானாலும் செய்றதுக்கு உங்களுக்கு முழு உரிமை இருக்கு” கரிகாலன் பேச பேச… அர்ஜுன் குளிர் விட்டு போனவனாய் கர்வமாய் அரசியை பார்த்தான்.

“அப்படி சொல்லுங்க அண்ணாச்சி… நான் கூட என்னமோ ஏதோன்னு பயந்து போயிட்டேன். அர்ஜுனு… இதை சொல்ல தயங்கிட்டு தான் அப்படி சொன்னியா? நல்ல புள்ள நீ. அண்ணாச்சி… இதுக்கு மேலேயும் தாமதிக்க கூடாது… முதல்ல இதுங்க ரெண்டுக்கும் கல்யாணத்தை முடிக்கிற வழியை பாருங்க… என்னங்க நான் மட்டும் சொல்லிட்டு இருக்கேன்… நீங்களும் உங்க மாப்பிள்ளை கிட்ட

சொல்லுங்க...” அத்தையம்மாள் அடுத்த கட்டத்திற்கு அழகாய் காய் நகர்த்தினார்.

வசீயரசி தன் கற்பை காந்தனிடம் இழந்துவிட்டாள் என்ற பதட்டத்தில் இருந்தவர்களுக்கு... அப்படி ஒன்றும் நடவாதது பெருத்த நிம்மதியை கொடுத்தது. அதில் அர்ஜுன் செய்த தவறு ஒன்றுமில்லாததாய் போய்விட்டது. அவன் கட்டிக்க வேண்டியவன் தானே என்று எல்லோரும் அவனுக்கு ஒத்து ஊதியது அவனுக்கு சாதகமாய் ஆனது. அதில் அவன் பெருத்த நிம்மதி அடைந்தான்.

“ஆமாம் மாப்பிள்ள... முதல்ல கல்யாணத்தை முடிப்போம்... பையனும் ரொம்ப ஆசையா இருக்கான்” அர்ஜுனின் அப்பாவும் கரிகாலனிடம் கேட்க... அவரும் சந்தோசத்துடன் சம்மதித்தார்.

தன்னை சுற்றிலும் என்ன நடக்கிறது என்று புரியவே வசீயரசிக்கு ரொம்ப நேரம் ஆனது. அதிலும் தந்தை பேசியதில் மனம் மற்றும் உடல் மரத்து போய் நின்றிருந்தவளுக்கு அந்த கல்யாண பேச்சு நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது. அந்த பேச்சை சகிக்க முடியாதவளாய்,

“எல்லாரும் என் ரூமை விட்டு வெளியில் போறீங்களா இல்லையா?” ஆவேசமாய் அவள் கத்த... பிரியன் அவளை அடிக்க கையை ஓங்கினான். அதை தடுத்த கரிகாலன்,

“பிரியா... எல்லாரையும் வெளியில் கூட்டிட்டு போப்பா. கலை... அப்படியே கோழி அடிச்சு குழம்பு வச்சு... விருந்துக்கு ஏற்பாடு பண்ணு. நான் அரசி கிட்ட பேசிட்டு வர்றேன்” என்று மகனிடமும், மனைவியிடமும் கூறியவர், தன் சம்பந்தியிடம் திரும்பி, “இருந்து சாப்பிட்டுட்டு தான் போகணும் மச்சான்...” சிரித்தபடி அவர் உபசாரம் செய்ய... அதில் அர்ஜுனின் பெற்றோருக்கு முகம் மலர்ந்தது.

“அதுக்கென்ன இருந்து விருந்து சாப்பிட்டுட்டு தான் போவோம்” என்றவர்கள் அறையை விட்டு வெளியேற... கரிகாலன் மகளிடம் வந்தார்.

“பாப்பா...” என்று அவர் அழைக்கவும்... அவரை காண விரும்பாதவளாய்... முகத்தை திருப்பி கொண்டு கட்டிலில் போய் தொப்பென்று அமர்ந்தாள். அவரும் சளைக்காமல் அவள் அருகில் சென்று அமர்ந்தவர்,

“இங்கே பார் பாப்பா... அர்ஜுன் தான் செய்ததை வேணும்னே மறைச்சு பொய் சொல்லியிருக்க மாட்டான். அவன் சொன்னா நாம என்ன சொல்வோமோ? என்ன பண்ணுவோமோங்கிற பயத்தில் மாத்தி சொல்லியிருக்கான். ஏதோ அவன் உன் மேல உள்ள ஆசையில் அவசரப்பட்டு அப்படி நடந்து இருக்கலாம். மத்தபடி அவன் ரொம்ப நல்லவன் பாப்பா. உன்னை தவிர மத்த பொண்ணுங்க யார் கிட்டேயும் அவன் இப்படி நடந்தது இல்ல. எனக்கு அவனை பத்தி நல்லா தெரியும். அப்படி அவன் பொம்பளை பொறுக்கியா இருந்திருந்தா... அவனை உனக்கு நான் கல்யாணம் கட்டி வைக்க நினைப்பேனா... அப்பா சொல்றதை கொஞ்சம் யோசிச்சு பாருடா...”

“அதுக்காக அவன் செய்தது தப்பு இல்லைன்னு ஆகிருமா அப்பா. என் விருப்பம் இல்லாம... ஒரு தேர்ட் கிரேட் பொறுக்கி மாதிரி அவன் என்னை...” மேலே சொல்ல முடியாமல் அவள் முகத்தை மூடி கொண்டு அழுதாள்.

ஒரு ஆண்மகனான அந்த தகப்பனால் தன் பெண்ணின் பெண்மைக்கே உரித்தான இந்த நுண்ணிய உணர்வை புரிந்து கொள்ள முடியவில்லை.

“அரசி... எத்தனை தடவை தான் சொன்னதே சொல்லி அழுதுட்டு இருப்ப... ஏதோ தப்பு நடக்க இருந்தது... ஆனா யார் செய்த புண்ணியமோ அது நடக்கல. அதுக்கு சந்தோசப்படுறத விட்டுட்டு சும்மா அழுதுட்டு இருக்காதே. அர்ஜுனை நீ கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கலைன்னா... உன் மாமா குடும்பம் மொத்தமும் நீ கெட்டு போனவள்னு ஊர் பூரா தண்டோரா போட்டுருவாங்க. இது உனக்கு தேவையா சொல்லு? ஒருவேளை அது தான் உனக்கு ஓகேன்னாலும் கூட... எனக்கு என் மானம் மரியாதை தான் முக்கியம். அது

அர்ஜூனுக்கும் உனக்கும் நடக்கும் கல்யாணத்தில் தான் இருக்கு. உலகம் பூரா தேடினாலும் அர்ஜுன் மாதிரி... அழகானவன், படிச்சவன், திறமைசாலி, பணக்காரன் உனக்கு கிடைக்க மாட்டான். அதனால சும்மா முரண்டு பிடிக்காம சொன்னதை கேளு..." அவர் நீளமாய் பேசி முடிக்க... அவரையே கண்ணிமைக்காமல் பார்த்தவள்,

"நீங்க பேசுறது எல்லாம் பேசி முடிச்சிட்டீங்களா...? அப்படியே நான் சொல்றதையும் கேட்டுக்கோங்க. என்னை... என் பெண்மையை கேவலப்படுத்தின... அந்த அர்ஜுனை நான் கல்யாணம் பண்ணிக்கிறதும் தூக்கில் தொங்குறதும் ஒண்ணு தான். இதுக்கு மேலேயும் நீங்க வற்புறுத்தினா... நிஜமாவே நான் தூக்கில் தொங்கிடுவேன். அதுக்கு அப்புறம் வசீயரசிங்கிற உங்க பொண்ணை ஃபோட்டோவில் மட்டும் தான் பார்க்க முடியும். இவளை எப்படியாவது காவல் காத்து அர்ஜுனுக்கு கல்யாணம் பண்ணி வச்சிடலாம்ன்னு மட்டும் நினைக்காதீங்க... நான் சொன்னதை செய்வேன்னு உங்களுக்கு நல்லாவே தெரியும்" என்றவள் அதற்கு மேல் பேச பிடிக்காதவளாய் படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

தன் செல்ல மகள் உயிரை விட்டு விடுவேன் என்றதும் அதுவரை குடும்ப கௌரவத்தின் காரணமாக அவர் மனதில் புதைத்து போயிருந்த பாசம் மெதுவாய் வெளிவர... அவரின் கண்கள் கலங்கியது. படுத்திருந்த மகளை ஒரு நிமிடம் பார்த்தவர்... பின் ஒன்றும் பேசாமல் அறையை விட்டு வெளியேறினார். நேரே தன் மச்சான் குடும்பத்தினரிடம் சென்று...

"அரசி இந்த திருமணத்துக்கு ஒத்துகிட்டா... ஆனா ஒரே ஒரு விசயம் மட்டும் கேட்டுகிட்டா..." என்றவர் நிறுத்திவிட்டு அவர்கள் முகம் பார்க்க... என்னவாக இருக்கும் என்ற யோசனையில் எல்லோரின் முகமும் சுருங்கியது.

"அது வேற ஒண்ணுமில்ல... மேலே படிக்கணும்ன்னு ஆசைப்படறா... அதான் படிச்சி முடிச்சிட்டு அப்புறமா..." இந்த

இடைப்பட்ட காலத்தில் மகளின் சம்மதத்தை எப்பாடு பட்டாவது வாங்கி விடலாம் என்று அவர் நினைத்தார்.

“அதுக்கென்ன மாப்பிள்ள... தராளமா படிக்கட்டும். நம்ம புள்ள எங்க போயிட போகுது. அதே மாதிரி அர்ஜுனும் தொழிலில் கொஞ்சம் பழகிக்கட்டும். அதுக்கு அப்புறம் கல்யாணத்தை வச்சுக்கலாம்” அர்ஜுனின் தந்தையும் சம்மதிக்க... பெருத்த நிம்மதியாய் இருந்தது கரிகாலனுக்கு.

**************************************************

“எந்த எடுபட்ட நாயி என் மகனை போட்டு இப்படி அடிச்சது?” அது மருத்துவமனை என்பதை கூட உணராமல் காவேரி ஆற்றாமையில் புலம்பி தள்ளிக் கொண்டிருந்தார்.

“அம்மா... கொஞ்ச நேரம் பேசாம இருங்கம்மா...” காந்தன் தான் அன்னையை கட்டுப்படுத்தினான்.

“உனக்கு என்ன ஈசியா சொல்லிட்ட... ஓடியாடிய புள்ள இப்படி படுக்கையில் கிடக்குறது பார்த்து... என் மனசு ஆற மாட்டேங்குதே காந்தா...” அவனின் தலையை சுற்றி பெரிய கட்டு, உடம்பெல்லாம் ஆங்காங்கே பேண்டேஜ் போட்டு இருக்க... அதை கண்ட அந்த தாயுள்ளம் பதைபதைத்து போனது.

“விடும்மா... நடந்து முடிஞ்சதையே பேசிக்கிட்டு...” அத்துடன் அந்த பேச்சிற்கு முற்று புள்ளி வைத்தான் அவன்.

அவனின் மனதுக்குள் திரும்ப திரும்ப... அவளின் அலுங்கிய தோற்றமே நினைவு வந்தது. அவளை தான் ஏதோ செய்துவிட்டோம் என்று எண்ணி தான் அவர்கள் அப்படி நடந்து கொண்டார்கள் என்பது அவனுக்கு புரிந்தது. அவர்களின் கோபத்தில் கூட நியாயம் இருக்கிறது... ஆனால் அந்த பொட்டைப் பயலும் சேர்ந்து அல்லவா தன்னை அடித்தான்... அதை நினைக்கும் போதே காந்தனுக்கு ஆத்திரத்தில் கண்கள் சிவந்தது.

“காந்தா... இப்போ எப்படி இருக்கு?” என்று கேட்டபடி அறிவு உள்ளே வர... அவனை நெகிழ்ச்சியோடு பார்த்தான்

காந்தன். அந்த நேரத்தில் மட்டும் அறிவு வரவில்லை என்றால் தன் நிலை... எண்ணி பார்த்தவனுக்கு அச்சத்தில் மனம் சிலிர்த்து போனது.

“அம்மா... நீங்க வீட்டுக்கு போங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில் காந்தனை டிஸ்சார்ஜ் பண்ணிருவாங்க. நான் அவனை என் வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்” அறிவு சொல்ல... அவனை தயக்கமாய் பார்த்தார் காவேரி.

“எதுக்கு தம்பி உனக்கு கஷ்டம்? நான் எங்க வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்”

“நான் மட்டும் என்ன காட்டுக்கா கூட்டிட்டு போறேன்னு சொன்னேன். வீட்டுக்கு தான் கூட்டிட்டு போறேன்னு சொல்றேன்” விளையாட்டாய் சொன்னவன், “அம்மா... அங்கே இருக்கிறது ஒரு கட்டில்... அதுவும் இப்போ காஞ்சி இருக்கும் நிலையில் அவளுக்கு வேணும். இப்போ காந்தன் இருக்கிற நிலையில் அவனால் கட்டில் இல்லாமல் சமாளிக்க முடியாது. என் வீட்டில் நான் மட்டும் தான் தனியா இருக்கேன். நான் அவனை பார்த்துக்கிறேன். நீங்க கவலைப்படாம போங்க...” அவருக்கு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தவன்... காந்தனை மருத்துவமனையில் இருந்து தன் வீட்டிற்கு அழைத்து வந்தான்.

காந்தன் தூங்கிய பின்... அதற்கு மேல் மனம் தாங்காமல் அறிவு வசீயரசிக்கு அலைப்பேசியில் அழைத்தான்.

“ஹலோ அண்ணா... எப்படி இருக்கீங்க?” அவள் ஆவலாய் அவன் நலம் விசாரிக்க... அவ்வளவு தான் அவனுக்கு கோபம் பொத்து கொண்டு வந்தது.

“எனக்கென்ன நான் நல்லா தான் இருக்கேன். இங்கே உனக்காக ஒருத்தன் அடிவாங்கிட்டு படுத்து இருக்கானே... அவனை பத்தி ஒரு வார்த்தையாவது கேட்கணும்ன்னு உனக்கு தோணுச்சா...?” கோபத்துடன் அவன் கேட்க... அவள் பதில் பேச முடியாமல் திகைத்து போனாள்.

“நீங்க... உங்க பிரெண்ட்... அந்த காந்தனையா சொல்றீங்க?” கேட்கும் போதே... அவள் குரல் நடுங்கியது.

“ஆமா... அவனை தான் சொல்றேன்...” அறிவு புரியாமல் அவளுக்கு பதிலளித்தான்.

“அய்யோ அண்ணா... எனக்கு எதுவுமே தெரியாது...” என்றவள் அங்கு நடந்தது அனைத்தையும் சொல்லி முடித்தாள். அவளின் கதையை கேட்ட அறிவுக்கு அவளை கண்டு பரிதாபமாக இருந்தது.

“எனக்கு வர்ற ஆத்திரத்திற்கு அந்த அர்ஜுன் ராஸ்கலை...” அறிவு கோபத்தில் பல்லை கடித்தவன்... அவளின் அண்ணனும், அர்ஜுனும் சேர்ந்து காந்தனை அடித்ததை ஒன்று விடாமல் கூறினான்.

“அண்ணா இவ்வளவு நடந்து இருக்கு... யாரும் என்கிட்ட ஒண்ணுமே சொல்லல...” அவள் மிகவும் வருத்தப்பட... அவளை கண்டு அறிவுக்கு மனம் இளகியது.

“சரிம்மா... இதுக்கு எதுக்கு நீ வருத்தப்பட... எல்லாம் கெட்ட நேரம் விடு” என்றவன் “எதுக்கும் நீ அந்த அர்ஜுன் கிட்ட ஜாக்கிரதையா இரு” என்று அவளை எச்சரித்தவன் அழைப்பை துண்டிக்க நினைக்க,

“அண்ணா... ஒரு நிமிசம்...” அவனை தடுத்து நிறுத்திய வசீயரசி... “அவ... அவர் எப்படி இருக்காருண்ணா...?”

அவளின் கேள்வியின் அர்த்தம் புரிந்த அறிவு... காதில் வைத்திருந்த அலைபேசியை தன் கண் முன் கொண்டு வந்து... நம்ப முடியாமல் கண்ணிமைக்க மறந்தவனாய் அதை உற்று நோக்கினான்.

வசீயரசி ஏதோ ஒரு பாடலை முணுமுணுத்து கொண்டு வரவேற்பறைக்கு வந்தவள்... அங்கே அவள் அன்னை அலைப்பேசியில் பேசி கொண்டிருப்பதை கண்டு யோசனையாய் அவரை பார்த்தாள். பின்பு அவரை கண்டு கொள்ளாதவளாய் அங்கிருந்த மற்றொரு சோபாவில் அமர்ந்தவள் தன்னுடைய அலைப்பேசியில் டெம்பில் ரன் விளையாட ஆரம்பித்தாள்.

கலைமகள் சின்ன மகளை கண்டதும் அவசரமாய் அலைப்பேசியை அணைத்தவர், “நான் கோவிலுக்கு போயிட்டு வர்றேன்...” அவளை பார்த்து சொல்ல... அவளோ சரியென்றும் சொல்லவில்லை... அவரை நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

“திமிர்... உடம்பெல்லாம் திமிர்... இந்த திமிருக்கு நீ நல்லா பட தான்டி போற...” அவர் அவளை வசைமாறி மொழிய... அப்போதும் அவள் தன்னை கண்டு கொள்ளாததால் அவர் கோபமாய் விருட்டென்று அங்கிருந்து நகர்ந்தார்.

அவர் போனதும் நிமிர்ந்தவள் முகத்தில் அலட்சிய புன்னகை பூத்தது. என்று அவர் அவளை தேவையில்லாமல் பேசினாரோ... அன்றிலிருந்து அவள் அவரிடம் பேசுவதை நிறுத்திவிட்டாள். அதே போல் தான் அவள் அண்ணனிடமும், அக்காவிடமும் சுத்தமாய் பேசுவதில்லை. தந்தையிடம் மட்டும் தான் பேசுவாள். அதுவும் முன்பு போல் கலகலப்பாய் பேசுவது என்பது குறைந்து போய்... தேவைக்கு ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டுமே பேசுவாள். அதை கூட அவர் தான் வலிய வந்து அவளிடம் பேச வேண்டும்.

அவளின் நிலை கண்டு அவளுக்கே ஒரு சில சமயம் மனதில் சொல்ல முடியாத வலி எழும். செய்யாத தவறுக்காக தான் சிலுவை சுமக்க... தவறு செய்த அர்ஜுன் நெஞ்சை நிமிர்த்தி கொண்டு கம்பீரமாய் வலம் வருவது அவள் மனதை உறுத்தியது. இதற்கு எல்லாம் காரணம்

தான் பெண்ணாய் பிறந்த பாவம் தானோ என்ற கழிவிரக்கம் அவள் நெஞ்சை வலிக்க செய்தது.

சொந்த வீட்டில் அந்நியவளாய் வாழ்வது எவ்வளவு கொடுமை என்பது இப்போது தான் அவளுக்கு புரிந்தது. இருந்தாலும் தன் தன்மானத்தை விட்டு அவர்களிடம் பேச அவள் மனது இடம் கொடுக்கவில்லை. தன்னை புரிந்து கொள்ளாதவர்களிடம் என்ன பேசியும் பிரயோஜனமில்லை என்பதை அவள் உணர்ந்தே இருந்தாள். தன் யோசனையில் உழன்று கொண்டிருந்தவளை அவளின் அலைப்பேசி இசைத்து சுய உணர்விற்கு கொண்டு வந்தது.

யார் என்று எடுத்து பார்த்தாள்... அது அவள் அக்காவிடம் இருந்து வந்திருந்தது. மனதில் மூண்ட எரிச்சலில் அதை எடுக்காமல் கண்களை மூடி கொண்டு சோபாவில் சாய்ந்தாள். மீண்டும் மீண்டும் இளவரசி அவளை அழைக்க... கோபத்துடன் அதை எடுத்து காதில் வைத்தவள், ஒன்றும் பேசாமல் அமைதி காத்தாள்.

“நீ பேச மாட்டேன்னு எனக்கு தெரியும்... என்ன இருந்தாலும் நீ என் தங்கச்சி... நான் உன்னை அப்படியே விட்டு விட முடியுமா? உன்ன மாதிரி எல்லாம் எனக்கு வீம்பு பிடிக்க தெரியாது. சரி இப்போ எதுக்கு அதை பேசிட்டு விடு... நான் எதுக்கு ஃபோன் பண்ணினேன் தெரியுமா? அர்ஜுன் உன்னை பார்க்க அங்கே நம்ம வீட்டுக்கு வர்றான். எங்க கிட்ட கோபப்படுற மாதிரி அவன் கிட்ட பேசி வைக்காதே. அதை சொல்ல தான் நான் ஃபோன் எடுத்தேன். பார்த்து பக்குவமா நடந்துக்கோ...”

இளவரசி சொன்னதும் தான் அன்னை திடீரென்று கோவிலுக்கு கிளம்பி போனதன் ரகசியம் புரிய... அவளின் மனம் கசந்தது. பெண்ணின் கற்பை களவாட நினைத்தவனிடமே மீண்டும் தன் பெண்ணை விட்டுவிட்டு போகும் அன்னையின் செயலை எண்ணி மனதுக்குள் அருவருத்தாள். அன்னையின் மீதான எரிச்சல் அவள் அக்காவிடம் திரும்பியது.

“பக்குவமா நடந்துக்கிறதுன்னா… என்ன அர்த்தம் அக்கா…? அவன் படுக்கைக்கு கூப்பிட்டாலும்… சரின்னு அவன் கூட போய் படுக்கணுமா?” வாளின் கூர்மையுடன் அவளின் வார்த்தைகள் வந்து விழுந்தது.

“ஆத்தாடி… என்னடி ரொம்ப தான் வாய் நீளுது. ஆனாலும் உனக்கு இவ்வளவு நெஞ்சழுத்தம் ஆகாதுடி. நான் என்ன சொல்றேன்… நீ என்ன பேசற? உண்மையை சொல்லுடி… அவன் கிட்ட உண்மையிலே நீ கெட்டு போயிட்டியா? அதனால் தான் எங்க அர்ஜுனை வேணாம்ன்னு சொல்றீயா? அவனுக்கு என்னடி குறைச்சல்?” இளவரசி ஆக்ரோசமாய் கத்த…

“எங்க அர்ஜுன்… ம்ஹும்… அதே இது எங்க அரசின்னு நீ ஏன் என்னை நினைக்க மாட்டேங்கிற…? அப்படி நீ நினைச்சு இருந்தா… நீ இப்படி பேச மாட்டே” என்றவள் அதற்கு மேல் பேச பிடிக்காதவளாய் அலைப்பேசியை அணைத்து சோபாவில் தூக்கி போட்டாள்.

ஏனோ யாருமில்லாத தனிமை சூழ்ந்தது போல் மனதுக்குள் கலக்கமாய் இருந்தது. அதுவும் அவளின் சகோதரி பேசிய வார்த்தைகள் அவளின் நெஞ்சில் குத்தீட்டியாய் குத்தி அவளை ரணப்படுத்தியது. அவளையும் அறியாமல் அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. அதை துடைக்கும் எண்ணம் கூட இல்லாமல் அப்படியே அமர்ந்திருந்தாள்.

அன்று அந்த காந்தன் அவளை கொண்டு வீட்டில் விட்டதோடு சரி… அதுக்கு அப்புறம் அவனை அவள் சந்திக்கவே இல்லை. இவ்வளவு ஏன் அவனை பற்றி அவள் அதிகம் நினைப்பது கூட இல்லை. அறிவிடம் அலைப்பேசியில் அவனை பற்றி விசாரித்தவளால்… ஏனோ அவனிடம் பேச முடியவில்லை. அதேசமயம் நேரில் அவனை சென்று பார்க்கவும் அவளால் முடியவில்லை.

அன்று அவன் தன்னை அரைகுறை ஆடையில் பார்த்தது பெருத்த அவமானமாக அவள் மனதில் ஆழ பதிந்திருக்க… எந்த முகத்தை வைத்து கொண்டு அவனை சந்திக்க முடியும்? என்ன தான் இருந்தாலும் அவனும் ஒரு ஆண்

மகன் தானே… தன்னை ஏதும் தவறாக ஒரு பார்வை பார்த்துவிட்டால்… அதற்கு தயங்கியே அவள் அவனை பார்க்க போகவில்லை.

அறிவிடம் கூட இரண்டு மூன்று முறை அவனின் நலம் விசாரித்தாள். அவன் நன்றாகி விட்டான் என்பது தெரிந்ததும் நிம்மதியடைந்தவளாய்… அதற்கு பின் அறிவிடம் கூட அவள் பேசவில்லை. அவளின் மானத்தை காப்பாற்றியவன் என்ற வகையில் அவன் மீது அவளுக்கு நன்றியுணர்வு இருக்கிறது. அதற்கு மேல் அவனை பற்றி நினைக்க அவளுக்கு ஒன்றுமே இல்லை. ஆனால் இவர்கள் அவனுடன் தன்னை சம்பந்தப்படுத்தி பேசுவதை விடவே மாட்டார்களா? என்று அவளுக்கு உள்ளுக்குள் ஆயாசமாக இருந்தது.

அந்த சோர்வு எல்லாம் கொஞ்ச நேரம் தான்… எப்போதும் போல் அவளின் மனதைரியம் அவளை வழி நடத்த… உள்ளுக்குள் சென்றவள் அதே வேகத்தில் திரும்பி வந்து சோபாவில் அமர்ந்தாள். தன் கையோடு கொண்டு வந்த பொருளை தன் அருகில் மறைத்து வைத்தவள், ‘வாடா… இன்னைக்கு உன்னை என்ன பண்றேன்னு பாரு…’ மனதுக்குள் கருவியவள் அர்ஜுனின் வருகைக்காக காத்திருக்கலானாள்.

“ஹாய் ஏஞ்சல்…” ஆர்ப்பாட்டமாய் உள்ளே நுழைந்தான் அர்ஜுன்.

‘கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாமல்… குற்ற உணர்வு இல்லாமல்… என் முன் வந்து நிற்கும் தைரியத்தை பார்’ மனதுக்குள் குமைந்தவள்… அவனை உணர்ச்சியற்ற பார்வை பார்த்தாள்.

“என்ன அரசி… அப்படி முழிச்சு பார்க்கிற…” என்றபடி அவள் அருகில் வந்து அமர்ந்தவன், “நீ கல்யாணத்துக்கு சம்மதிச்சதுக்கு ரொம்ப தேங்க்ஸ் அரசி… என்னடா தேங்க்சை ரொம்ப லேட்டா சொல்றானேன்னு பார்க்கிறியா? என்ன செய்ய… உங்க அப்பா உன்னை பார்க்கவே விட மாட்டேங்கிறாரே…” அவன் சலிப்பாய் சொல்ல…

'ம்... என்னை பார்த்தா... நீ என்ன கதிக்கு ஆளாவேன்னு அவருக்கு நல்லா தெரியும். அதான் அப்படி பண்ணி இருக்கிறாரு' மனதுக்குள் நினைத்தவள் ஒன்றும் பேசாமல் அமைதியாய் இருக்க...

"அரசி அன்னைக்கு ஏதோ போதையில் அப்படி தப்பா நடந்துக்கிட்டேன். சாரிடா... நான் உன்னை எவ்வளவு காதலிக்கிறேன் தெரியுமா?" இதை அவன் சொல்லும் போது அவள் உதடுகள் ஏளனமாய் வளைந்தது.

"உன் மேலே உயிரையே வச்சிருக்கேன்... என்னை புரிஞ்சுக்கோ..." என்றவன் அவள் கையை பிடிக்க வர, அவளோ அவன் கையை தட்டி விட்டு சற்று தள்ளி அமர்ந்தாள்.

"அரசி... என் கிட்ட அலட்சியம் காட்டாதே... அப்புறம் பின்னாடி ரொம்ப வருத்தப்படுவே..." என்று குரலை உயர்த்தியவன், "உன்னை என்ன வேணும்ன்னாலும் செய்யலாம்ன்னு உங்க அப்பாவே பெர்மிசன்... கொடுத்து இருக்கிறாரு... நான் நினைச்சா... உன்னை..." அவள் அருகில் வந்து அவளை அணைக்க வர, அதுவரை அவள் காத்து வந்த பொறுமை காற்றில் பறந்தது.

"கையை எடுறா நாயே... இதுக்கு மேலே என்னை தொட்ட... உன் குடலை உருவி மாலையா போட்டுருவேன்..." அருகில் மறைத்து வைத்திருந்த கத்தியை கையில் எடுத்தவள்... அதை அவனை நோக்கி நீட்டியபடி... கண்களால் அவனை சுட்டெரித்தாள்.

"ஏய் அரசி... என்ன இது ரௌடி மாதிரி பிகேவ் பண்ற..." பதட்டத்துடன் சொன்னவன்... அவள் கையிலிருந்த கத்தியை பிடுங்க வந்தான். சட்டென்று அங்கிருந்து எழுந்தவள்,

"தேவையில்லாம சீன் போடாம மரியாதையா ஓடி போயிரு..." பெண் புலியாய் சீற்றத்துடன் அவள் சீற, அவனோ அதில் பயந்து போய் எழுந்து வாயிலை நோக்கி

ஓடினான். அவளிடம் இருந்து சற்று தூரம் சென்று பாதுகாப்பாய் தள்ளி நின்றவன்,

“என்னடி ரொம்ப தான் ஆட்டம் போடுற... கல்யாணம் முடியட்டும் அதுக்கு அப்புறம் வச்சுக்கிறேன் என் கச்சேரியை...” ஆங்காரமாய் கத்தியவன் திரும்பியும் பார்க்காமல் வெளியேறினான்.

வசீயரசி தன் சக்தி எல்லாம் வடிந்தார் போல் சோபாவில் தொப்பென்று அமர்ந்தாள். முதலில் எல்லாம் அர்ஜுனை பார்க்கும் போது பாசம் பொங்கும். இப்போதோ அவனை பார்க்கும் போது அவளுக்கு அருவருப்பாய் இருந்தது. இவ்வளவு நடந்ததுக்கு பிறகும் இனி இந்த வீட்டில் இருக்க முடியுமா? என்று அவளுக்கு சந்தேகமாக இருந்தது.

ஒருபக்கம் அம்மா, அண்ணன், அக்கா இவர்களின் தவறான பேச்சு... மறுபுறம் இந்த அர்ஜுனின் தவறான நடத்தை எல்லாமுமாய் சேர்ந்து அவளின் கழுத்தை நெறிப்பது போலிருந்தது. இனியும் இங்கே இருந்தால்... மூச்சு முட்டியே தான் இறந்து போவோம் என்பது அவளுக்கு தெள்ள தெளிவாய் புரிந்தது. தன் மனசுக்குள் நீண்ட நேரம் பெருத்த ஆலோசனை நடத்தியவள்... பிறகு நிதானமாய் முடிவெடுத்தாள். தந்தை வந்ததும் அதை செயலாக்க எண்ணி... அவரின் வருகைக்காக காத்திருந்தாள்.

இரவு கரிகாலன் வீட்டிற்குள் நுழைந்ததுமே வசீயரசியின் முகம் தெளிவில்லாமல் இருப்பதை கண்டவர்... நேரே மகளின் அருகில் வந்து அமர்ந்தவர்,

“என்னடா... முகம் எல்லாம் ஒரு மாதிரியா இருக்கு? யாரவது ஏதாவது சொன்னாங்களா?” பரிவாய் கேட்க... அவரின் பரிவு கண்டு அவளுக்கு கண்ணை கரித்தது.

அப்படியே தந்தை தோள் சாய்ந்து ஒரு மூச்சு மனதில் உள்ள கவலை எல்லாம் சொல்லி அழலாமா? என்று கூட அவள் நொந்த மனம் ஒரு கணம் யோசித்தது. ஆனால்... ஆனால்... அவரும் இவர்கள் எல்லோருடனும் சேர்ந்து கொண்டு...

தான் என்ன சொல்ல வருகிறோம் என்பதை கவனியாமல்... அந்த அர்ஜுனுக்கு சார்பாக தானே பேசினார்.

பெற்ற பெண் தன்னை நம்பாமல்... அவனிடம் ஏன் அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்? அதனால் தானே அவன் குளிர் விட்டு போய் அலைகிறான். இதை எல்லாம் நினைத்தவள் மனம் மீண்டும் கடினமுற்றது. கண்களில் துருத்தி கொண்டிருந்த கண்ணீரை இமை தட்டி சரி செய்தவள்... முயன்று தன்னை சமாளித்து கொண்டு,

“நான் உங்க கிட்ட ஒரு விசயம் பேசணும்” முகத்திலும், குரலிலும் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பேசியவளை கண்டு அவரின் மனம் வலித்தது. பழைய நிலையில் தன் மகள் இருந்திருந்தால்... இந்நேரம் அவளின் உற்சாக கூவலில் அந்த வீடே ரெண்டு பட்டிருக்கும்.

“சொல்லுடா... அப்பா கிட்ட சொல்ல என்ன தயக்கம்?”

“நான் எம்.எஸியை சென்னையில் படிக்கலாம்ன்னு இருக்கேன்” அருகில் அமர்ந்திருந்த கலைமகளும், பிரியனும் அவளை புரியாமல் பார்த்தனர்.

“பாப்பா...” அவளின் முடிவு கண்டு கரிகாலன் தான் அதிர்ந்து போனார். அவரின் ஒருநாளின் பொழுது அவளின் முகத்தில் விழித்தால் தானே நல்லபடியாக தொடங்கும். அப்படிப்பட்ட மகள் தன்னை விட்டு பிரிவதா? அதை தன்னால் தாங்கி கொள்ள முடியுமா? ம்ஹூம்... அவள் தன்னை விட்டு போக அனுமதிக்க கூடாது என்று நினைத்தவர்,

“பாப்பா... இங்கே இல்லாத காலேஜா... இங்கே இல்லாத எம்.எஸியா? இதுக்கு நீ ஏன் சென்னைக்கு போகணும்?”

“எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கல... எங்கேயாவது தொலை தூரமாய் போகணும்ன்னு இருக்குப்பா”

“ஏண்டி... இங்கே இருக்க பிடிக்கல...? கையும் களவுமா மாட்டிக்கிட்டோமேன்னு இருக்கா? தள்ளி போனா தானே உன் இஷ்டத்துக்கு ஊர் மேய முடியும்... அதுக்கு தானே

இப்படி பேசற?” கலைமகள் சொல்லி முடிக்கவில்லை... கரிகாலனின் கை அவரின் கன்னத்தில் பலமாய் இறங்கி இருந்தது.

“இதுக்கு மேலே எம் மகளை ஒரு வார்த்தை பேசுன... நான் பொல்லாதவன் ஆகிடுவேன். இந்த கல்யாணமே என் பொண்ணு மானம் போகாம இருக்கணும்ன்னு தான் நான் பேசினேன். இல்ல... உன் அண்ணன் மகன் செஞ்ச வேலைக்கு அவனை நான் கண்டந்துண்டமா வெட்டி போட்டிருப்பேன். அரசி மேல தப்பு இல்லைன்னு தெரிஞ்சும் திரும்ப திரும்ப ஏதாவது பேசின... அப்புறம் நான் உண்மையிலேயே கொலைகாரன் ஆகிருவேன்” மனைவியை ஆத்திரத்துடன் அவர் கண்டிக்க... பிரியன் தான் அன்னையை சமாதானப்படுத்தினான்.

“ஏண்டா கண்ணு... இந்த அப்பா இருக்கும் போது நீ இப்படி பேசலாமா?”

“ப்ளீஸ்ப்பா... நிஜமாவே என்னால முடியலப்பா...” கண்களில் கண்ணீர் வழிய இரு கைகளையும் ஏந்தி கொண்டு அவள் கெஞ்சியதை கண்டவரின் இதயம் சுக்கு நூறாய் உடைவது போலிருந்தது.

“அய்யோ பாப்பா... நீ யார் கிட்டேயும்... எதுக்காகவும் கெஞ்ச கூடாது... அது இந்த அப்பாவா இருந்தாலும் சரி. இப்ப என்ன உனக்கு சென்னையில் படிக்கணும் அவ்வளவு தானே... நாளைக்கே அங்கே உள்ள காலேஜ் எல்லாத்திலும் அப்ளிகேசன் வாங்க சொல்றேன். உனக்கு ஓகேவாடா?” மகளுக்காக அவர் சம்மதிக்க... அதில் சற்று மனம் நெகிழ்ந்தவள் மௌனமாய் சரியென்பது போல் தலையசைத்தாள்.

“வேணும்ன்னா... ஒண்ணு செய்வோம்... நீயும், நானும் சென்னைக்கு போயிட்டு சுத்தி பார்த்திட்டு... அப்படியே திருப்பதிக்கு போயிட்டு வருவோம்” அவர் மகளின் மனதை மாற்ற எண்ணி அவளிடம் கேட்க,

“ஏங்க நானும் வரவா?” கணவர் தன்னை அடித்தது கூட மறந்துவிட்டு கலைமகள் ஆர்வமாய் கேட்க,

“ஏன் அங்கேயும் வந்து அரசி நிம்மதி கெடுக்கவா? அதெல்லாம் வேணாம்... நானும், எம் மகளும் மட்டும் தான் போறோம்” என்று உறுதியாய் அவர் சொல்ல,

“தேங்க்ஸ்ப்பா...” மெல்லிய குரலில் தந்தைக்கு நன்றி சொன்னவள் தன் அறையை நோக்கி சென்றாள்.

நன்றி சொல்லி தன்னை அந்நியப்படுத்தி விட்டு போகும் தன் செல்ல மகளை பார்த்தவரின் கண்கள் கலங்கியது. அதை மனைவிக்கும், மகனுக்கும் தெரியாமல் சட்டென்று மறைத்து கொண்டார்.

சென்னையில் பல இடங்களுக்கு சென்று வந்தாலும் அவளின் மனம் அமைதியடையும் வழியை காணோம். ஏனோ நெருஞ்சி முள்ளாய் ஏதோ ஒன்று அவளின் நெஞ்சில் இருந்து குத்தி கொண்டே இருந்தது. அதில் அவளின் இயல்பு தொலைந்து போய்... கலகலப்பு குறைந்து போய்... எப்போதும் எதையோ வெறித்து கொண்டு அமைதியாய் அமர்ந்திருந்தாள். எதிலும் ஒரு பற்றற்ற நிலையில் அவள் இருந்தாள் என்றால் மிகையாகாது.

திருப்பதியில் கோவிலுக்குள் நுழையும் வரையிலும் கூட அவள் மனம் அப்படி தான் இருந்தது. கோவிலுக்கு சென்று கடவுளை தரிசிக்கும் போது... அந்த திருவுருவத்தின் பிரம்மாண்டத்தில் அவளின் உள்ளம் சிலிர்த்தது. அந்த பிரமிப்பில் அவளுக்கு கடவுளிடம் என்ன வேண்டுவது என்று கூட தெரியவில்லை. ஏனெனில் தேவைக்கு அதிகமான பணம், செல்லம், நினைத்ததை நினைத்த நேரம் சாதிக்கும் அதிகாரம் எல்லாம் அவளிடம் இருந்தது.

ஏனோ அந்நேரம் அவள் மனக்கண்ணில் காந்தனின் முகம் தோன்றியது. அன்று அவன் மட்டும் தன்னை காப்பாற்றி இருக்கா விட்டால்... அவளின் பணத்தால் அவளின் மானத்தை வாங்கியிருக்க முடியுமா? கற்பு போனது போனது தானே... எந்தவித உள்நோக்கமும் இல்லாமல் தன்

மானத்தை காப்பாற்றிய அவன் நன்றாக இருக்க வேண்டும் என்று அவள் மனம் பிரார்த்தித்தது.

கடவுள் முன் ஒரு நொடி தான் நின்றிருப்பாள்... அந்த ஒரு நொடியும் அவனின் நலத்தை மட்டும் தான் அவள் வேண்டினாள். அதில் அன்பு இல்லை... காதல் இல்லை... காமம் இல்லை... அவன் மீதான நன்றியுணர்வு மட்டுமே அவளின் மனதில் இருந்தது.

“அறிவு… இன்னைக்கு நான் எங்க வீட்டுக்கு போகலாம்ன்னு இருக்கேன்டா…” காந்தரூபன் அறிவிடம் சொல்ல… அறிவு அவனை முறைத்து பார்த்தான்.

காந்தன் அறிவின் வீட்டிற்கு வந்து ஐந்து நாட்கள் ஆகிவிட்டது. இதற்கு மேலும் வீட்டினுள் அடைப்பட்டு சோம்பி கிடக்க அவன் மனம் ஒப்பவில்லை. சுடலை தான் தொழிலை பார்த்து கொள்கிறான். ஏதோ ஐந்து நாள் என்பதால் அவன் சமாளித்து விட்டான். இன்னும் கூடுதல் ஒரு நாள் சென்றாலும் அவனால் தனியாய் சமாளிக்க முடியாது என்பது காந்தனுக்கு நன்கு தெரியும்.

இந்த ஐந்து தினங்களாக அம்மா, தங்கைகள் கலகலப்பு இல்லாமல்… அவர்களின் குரல் கேட்காமல் இருப்பது… அவனுக்கு சற்று வெறுமையாக இருந்தது. அதிலும் ‘மாமா’ என்று கூவி கொண்டு தன் கழுத்தை கட்டி கொண்டு செல்லம் கொஞ்சும் மலரின் நியாபகம் அவனை அதிகமாய் வாட்டியது.

“உதை பட போற… இன்னும் கொஞ்ச நாள் ரெஸ்ட் எடுத்துட்டு போடா…” அறிவு அவனை பார்த்து சத்தம் போட்டான்.

“அதுக்கு இல்லடா… எல்லா கட்டையும் பிரிச்சாச்சு… தலையில் மட்டும் சின்ன பிளாஸ்டர் இருக்கு. மத்தபடி என் உடம்புக்கு ஒண்ணுமில்ல… நான் நல்லா தான் இருக்கேன்” என்று நிறுத்தியவன், “எத்தனை நாள் தான் சும்மா இருக்கிறது. நம்ம பொழைப்பையும் பார்க்கணும் அறிவு. நாலு காசு பார்த்தா தான் வர போற செலவுகளை தைரியமா சந்திக்க முடியும்…” தயக்கத்துடன் முடித்தான். காந்தனின் கவலை என்னவென்பது அறிவுக்கு புரிய அவன் அமைதி காத்தான்.

“சரிடா… கிளம்பு போகலாம்…” தன்னிடம் இருந்த சிறிய காரை நண்பனுக்காக எடுத்தான். அவன் அலுவலகம் செல்வது இருசக்கர வாகனத்தில் தான். முக்கிய

தேவையை தவிர பெரும்பாலும் அவன் காரை எடுப்பதில்லை.

“ஏண்டா… இந்த அரசி ரெண்டு நாளா ஃபோன் மேல ஃபோனா போட்டுட்டு இருந்தா… நீ நல்லாயிட்டேன்னு எப்போ சொன்னேனோ… அதுக்கு அப்புறம் ஆள் பேச்சு மூச்சை காணோம்” அறிவு ஆற்றாமையில் புலம்ப… காந்தனோ பதில் எதுவும் சொல்லாமல் வெளிப்புறம் வேடிக்கை பார்த்து கொண்டு வந்தான்.

அறிவு ஓர கண்ணால் நண்பனை பார்த்தான். அவனின் உணர்ச்சியில்லாத முகத்தில் இருந்து அவனால் ஒன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. அன்று அரசி காந்தனை பற்றி பேசும் போது அவன் என்று அழைக்க வந்து அப்புறம் அவர் என்று திருத்தியதை அறிவு மனதில் குறித்து கொண்டான்.

அவன் மனம் குறித்த செய்தியை மெய்ப்பிக்கும் வண்ணம்… காந்தனின் நலம் விசாரித்து அடுத்தடுத்து அவளிடமிருந்து அழைப்பு வந்தது. ஓஹோ… கதை அப்படி போகிறதா என்று நினைத்தால்… கடைசியில் இப்படி ஒன்றுமில்லாததாய் ஆகிவிட்டது குறித்து அவனுக்கு வருத்தமாய் இருந்தது. அவளோ அதற்கு அடுத்து பேசவில்லை… அவள் தான் அப்படி என்றால் காந்தனோ அவளை பற்றியே பேசவில்லை. என்ன தான் நடக்கிறது என்று அவன் மண்டை காய்ந்தது தான் மிச்சம்.

“டேய் நான் அரசியை பத்தி பேசிட்டு வர்றேன்… நீ என்னடான்னா ஒண்ணும் பேசாம வர்ற…” காந்தன் நிதானமாய் நண்பனை திரும்பி பார்த்தான்.

“அவங்களை பத்தி பேச என்ன இருக்கு?” புரியாமல் கேட்டான் அவன். அவனின் பதிலில் அறிவு கொஞ்சம் அதிர்ந்து தான் போனான்.

“ஒண்ணுமே இல்லையாடா?” அவனை ஆழ்ந்து பார்த்து கொண்டே கேட்டான் அறிவு.

“என்ன ஒண்ணுமே இல்லையான்னா... என்ன அர்த்தம்? அன்னைக்கு ஏதோ ஆபத்தில் இருந்தாங்க... உதவி பண்ணினேன். அதை அவங்க வீட்டில் புரிஞ்சிக்காம என்னை போட்டு அடிச்சிட்டாங்க. இதில் பேச என்ன இருக்கு? ஒருவேளை... உங்க பொண்ணை காப்பாத்தியதுக்கு என்னை எப்படி அடிக்கலாம்ன்னு அவங்க கிட்ட சண்டை போட சொல்றியா?” என்று கேட்ட காந்தனை சந்தேகமாய் பார்த்தான் அறிவு. ஆனால் காந்தனின் முகத்தில் இருந்த அறியாமையில் தன் சந்தேகத்தை கைவிட்டான் அவன்.

காந்தன் ஒரு கதாநாயகனின் வீரத்துடன் அரசியை ஆபத்தில் இருந்து காப்பாற்றி இருக்கிறான். அதனால் அரசிக்கு அவன் பால் அன்பு பெருகி... அதுவே காதலாக மாறும். அவளின் காதல் காந்தனையும் அசைத்து பார்த்து... அவனையும் காதல் வலையில் விழ வைக்கும் என்றெல்லாம் அவன் கற்பனை செய்து வைத்திருந்தான். ஆனால் நடக்கும் நடப்பை பார்த்தால்... இருவருக்கும் இடையில் அன்புக்கே பஞ்சமாக இருக்கும் போலிருக்கே?

‘அப்புறம் எப்படி இந்த சினிமாவில் எல்லாம் அப்படி காட்டுகிறார்கள்... மோதல், காதல் என்று...’ என்று யோசித்தவன் தன் எண்ணம் புஸ்வாணம் ஆனதில் சற்று ஏமாற்றம் அடைந்தான்.

“காந்தா... அரசி பத்தி என்ன நினைக்கிற?” நேரிடையாவே அறிவு அவனை கேட்க,

“ஏண்டா... அன்னைக்கு நான் அவ்வளவு வாங்கி கட்டிக்கிட்ட பின்னும் உனக்கு இந்த மாதிரி கேள்வி எல்லாம் எப்படி கேட்க முடியுது?” அவனையே திருப்பி கேட்டான் காந்தன்.

“அது அப்போ... இப்போ நீ அவளை ஆபத்தில் இருந்து காப்பாத்தி இருக்க...” முடிக்காமல் இழுத்தான் அறிவு.

“அவங்கன்னு இல்ல... யாராயிருந்தாலும் நான் காப்பாத்தி தான் இருப்பேன். இதுக்கு மேலே அவங்களை பத்தி பேச ஒண்ணுமில்ல... அவங்க எல்லாம் பணக்காரங்க...

இதையே சாக்கா வச்சிட்டு நாம பேசுறதை அவங்க விரும்ப மாட்டாங்க. எனக்கும் அது தேவையில்ல. நீ சொன்ன மாதிரி அவங்க மாதிரி பணக்காரங்க கிட்ட டிஸ்டன்ஸ் மெயின்டைன் பண்றது தான் நல்லது" காந்தன் சொன்னதை கேட்டு… அறிவு தனக்கு தானே மானசீகமாய் குட்டு வைத்து கொண்டான்.

"அறிவு… இதுக்கு தான் நிறைய தமிழ், தெலுங்கு படம் பார்க்கதேன்னு சொல்றது… கண்ட கண்ட குப்பை எல்லாம் பார்த்து… உன் மனசு துருப்பிடிச்சு போயிருக்கு. அதான் தேவையில்லாம ரொம்ப யோசிக்கிற… இந்த ஓல்ட் டெக்னிக்கை எல்லாம் ரியல் லைப்பில் அப்ளை பண்ணாதே…' தன் கற்பனை குதிரையின் அதிவேக ஓட்டத்தை முயன்று கட்டுப்படுத்தினான்.

******************************************

வசீயரசி தன் அறையில் இருந்து தோட்டப் பகுதியை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள். ஏனோ அந்த சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்கு மேல் கடந்திருந்த போதும்… அவளால் அதிலிருந்து மீள முடியவில்லை. எப்போதும் போல் அவள் இயல்பாக இருந்தாலும் மனதின் ஓரத்தில் அவளுக்கு அது உறுத்திக் கொண்டு வலித்தது. இப்படியே வீட்டுக்குள் அடைந்து கிடந்தால் பைத்தியம் தான் பிடிக்கும் என்று நினைத்தவள் தன் தோழிகளையாவது சந்திக்க போகலாம் என்று எண்ணி கிளம்பலானாள்.

வசீயரசி கையில் கார் சாவியை சுழற்றியபடி மாடிப்படியில் இருந்து இறங்கி வருவதை கண்ட கலைமகள் முகத்தை சுளித்தார். அவள் அவரை கண்டு கொள்ளாமல் அவரை தாண்டி செல்ல முயலும் போது… கலைமகள் அவளின் கையிலிருந்த சாவியை எட்டி பிடுங்கினார். அவரின் செயல் அவளுக்கு சினத்தை உண்டு பண்ண… அவரை நேருக்கு நேராய் பார்த்து முறைத்தாள்.

"எங்கே ஊர சுத்த கிளம்பிட்ட… இனி மேல் நீ எங்கேயும் போக கூடாது?" அவர் கண்டிப்புடன் கூற… அதுவே அவளின் ஆத்திரத்தை அதிகரித்தது.

அவர் அன்பாய்... அவளின் மேல் நம்பிக்கை வைத்து... நிஜமாவே அவளின் மேல் அக்கறை கொண்டு கூறியிருந்தால்... அவள் சிரம் தாழ்ந்து அவரின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு இருப்பாள். ஆனால் அவர் வீணே அவளின் மேல் சந்தேகப்பட்டு அவளின் நடமாட்டத்தை முடுக்க நினைப்பது அவளுக்கு பெருங்கோபத்தை விளைவித்தது.

“அது நீ ஒண்ணும் சொல்ல வேணாம்... அப்பா சொல்லட்டும்...” என்றவள் சாவிக்காக தன் கையை நீட்டினாள்.

“போதும்... ஊர் ஊராய் சுத்தி... நீ கெட்டு சீரழிஞ்சது போதும். இனியாவது இந்த அம்மா பேச்சை கேட்டு ஒழுங்கா நடந்துக்கோ” அவர் சற்றும் இளகாமல் பேச...

“இதுக்கு எல்லாம் காரணம்... உன் அருமை அண்ணன் மகன். அவனை விட்டுட்டு நீ ஏன் என் மேல பாயற?” அவளும் பதிலுக்கு அன்னையை காய்ந்தாள்.

“சும்மா கிடந்தவனை உசுப்பேத்தி விட்டது யாருடி? நீ தானே அவன் கையை பிடிச்சு தொங்கிட்டு அலைஞ்ச... ஊசி இடம் கொடுக்காம நூல் எப்படி நுழையும்?” அவரின் வார்த்தைகள் அவளை குறி பார்த்து சரியாய் தாக்கியது.

அவரின் வார்த்தைகளில் இருந்த உண்மையை அவளை சுட... கண்கள் கலங்க அவரை நிமிர்ந்து பார்த்தாள். சட்டென்று எழுந்த கேவலை கட்டுப்படுத்த முடியாமல் வாயில் கையை வைத்து கொண்டு மாடியேறியவள் கண்களில் கண்ணீர் நிற்க மாட்டாமல் வழிந்தோடியது.

“மயிலே மயிலே இறகு போடுன்னா போடாது... உனக்கு எல்லாம் இப்படி தான் பேசணும். பொட்டக்கழுதை ஒரு இடத்தில் அடங்கி நிக்குதா? எப்ப பாரு ரங்கராட்னம் மாதிரி ஊரை சுத்திட்டு...” மகளை அடக்கி விட்டோம் என்ற வெற்றிக் களிப்பில் அவர் உள்ளே சென்றார்.

மறுநாள் காலையில் அரசியை பார்க்க வந்த கரிகாலன் அவள் இன்னமும் எழாமல் இருக்க கண்டு பதறி போய் அவள் நெற்றியில் கை வைத்து பார்த்தார். உடல் சூடு ஏதுமில்லை. தந்தையின் தொடுகையில் மெதுவே கண் விழித்தாள் மகள்.

“பாப்பா… என்னடா பண்ணுது?” கவலையுடன் கேட்டவரிடம் அவளால் வாய் திறந்து பதில் கூற முடியவில்லை. அன்னை சொன்னது போல் தவறு முழுவதும் அவள் மேல் இருக்க… அவள் யாரை நொந்து என்ன பயன்? அவளின் மனதை கழிவிரக்கம் தாக்க… அப்படியே முடங்கி போனாள்.

“என்னம்மா…?” அவள் அருகில் அமர்ந்து தலையை கோதி கொடுத்து அவர் பரிவுடன் கேட்க… அவள் ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்தாள்.

“முகம் கழுவி… பிரெஷ் பண்ணிட்டு வா… நாம ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடலாம்” அவரின் பேச்சை தட்ட முடியாமல் அவர் சொன்னதை செய்து விட்டு அவர் முன் நின்றாள்.

“போகலாமா பாப்பா?” என்று கேட்டபடி எழுந்தவர்… அவளை தன்னுடன் அழைத்து சென்றார் கரிகாலன்.

மகனுக்கு பரிமாறி கொண்டிருந்த கலைமகள் இருவரையும் கண்டதும் ஒன்றும் பேசாமல் தட்டை எடுத்து வைத்து பரிமாறினார். அன்னை பரிமாறிய இட்லியை வேண்டா வெறுப்பாய் எடுத்து வாயில் வைத்தவள்… அடுத்த கணம் அதை அப்படியே வாயிலெடுத்தாள். மனதுக்கு ஒவ்வாத உணவு… அவளின் உடலுக்கும் ஒத்துக் கொள்ளவில்லை.

“பாப்பா என்னாச்சுடா…?” கரிகாலன் பதற்றத்துடன் அவளின் தலையை தாங்கி பிடிக்க… அது அவளுக்கு இதமாய் இருக்க… அவரின் மேல் சாய்ந்து கொண்டாள். அவளை அப்படியே தாங்கியபடி எழுப்பி விட்டவர் அவளை அழைத்து வந்து சோபாவில் அமர வைத்து… ஆதரவாய் தன் மேல் சாய்த்து கொண்டார். தந்தையின் தோளில் சுகமாய்

சாய்ந்து கண்ணை மூடி கொண்டவளின் நொந்த மனதிற்கு அது பெருத்த ஆறுதலை தந்தது.

“கலை… பாப்பாவுக்கு ஹார்லிக்ஸ் போட்டு எடுத்துட்டு வா…” அவர் மனைவிக்கு ஆணையிட… அடுத்த ஐந்து நிமிடங்களில் கலைமகள் சூடான ஹார்லிக்ஸ் பானத்தோடு அங்கு வந்து நின்றார். அதை வாங்கி அரசிக்கு புகட்டி விட்ட கரிகாலன்… அவள் முழுவதும் குடித்து முடித்ததும்,

“பாப்பா… இப்போ எப்படி இருக்கு?”

“இப்போ பரவாயில்ல…” என்று அவள் தலையசைக்க… கலைமகளின் கண் அவளை ஆராய்ச்சியாய் பார்த்தது.

“அப்படின்னா… நீ படுத்து ரெஸ்ட் எடு… அப்பாவுக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு. அதை முடிச்சிட்டு சீக்கிரம் வர பார்க்கிறேன்” மகளின் அனுமதியை அவர் வேண்ட,

“எனக்கு ஒண்ணுமில்ல… நீங்க போயிட்டு வாங்க…” என்றவள் அங்கேயே சோபாவில் சுருண்டு படுத்து கொண்டாள்.

கரிகாலன் புறப்பட்டு செல்வதற்காக காத்திருந்தார் போல் கலைமகள் மகளிடம் வேகமாய் வந்தவர்,

“இந்த மாசம் குளிச்சியாடி…?” சம்பந்தம் இல்லாமல் கேள்வி கேட்கும் அன்னையை புரியாமல் பார்த்தவள்… பின் அவரை கண்டு கொள்ளாமல் கண்ணை மூடி கொண்டாள்.

“வர வர நீ என்னை மதிக்கிறதே இல்ல… உன் மனசுல என்ன தான் நினைச்சிட்டு இருக்க… முதல்ல நான் கேட்டதுக்கு பதில் சொல்லுடி…” அவரின் புலம்பல் தாங்காமல் எரிச்சலுடன் எழுந்தவள்,

“நேத்து தான் குளிச்சேன்… போதுமா?” என்றவளை அவர் நிம்மதியாய் பார்க்க… “இந்தா… இந்த முடியை தொட்டு பாருங்க… நேத்து தான் ஷாம்பூ பாத் எடுத்தேன்” அடுத்த

நொடி அவரின் நிம்மதியை தவிடு பொடியாக்கினாள் அவள்.

“லூசு... லூசு... நான் அதையாடி கேட்குறேன்...” என்றவர் அவளின் காதில் ரகசியம் பேச... அப்போது தான் அவரின் கேள்வியின் அர்த்தம் முழுமையாய் அவளுக்கு புரிந்தது. ஆனால் புரிந்த உண்மையோ அவள் மனதில் கசப்பாய் இறங்கியது.

“இப்போ இதை எதுக்கு கேட்குற...?” அதை கேட்கும் போதே அவளின் குரல் நடுங்கியது.

“நான் கேட்கிறதுக்கு உண்மையை சொல்லு... அன்னைக்கு அந்த பையன் உன்னிடம் ஏதும் தப்பா...” அவர் முடிக்கும் முன் தன் இரு காதையும் பொத்தி கொண்டவள்...

“போதும்... போதும்...” ஒரு கையால் அவரை தடுத்தவள், “இதுக்கு மேலே ஒரு வார்த்தை பேசுன... அம்மான்னு பார்க்க மாட்டேன்” முகம் கோபத்தில் சிவந்து இருக்க... வேக மூச்சு வாங்கியபடி அவரை பத்திரகாளியாய் உறுத்து விழித்தாள்.

“இப்போ உனக்கு என்ன தெரிஞ்சாகணும்... அவன் என்னை கெடுத்தானா? இல்லையான்னு தானே தெரியணும்? ஆமாம்... அவன் என்னை கெடுத்துட்டான் போதுமா உனக்கு? அவன் கிட்ட என் கற்பை இழந்துட்டேன் போதுமா? இப்போ அவன் குழந்தை என் வயத்துல வளருது. இது போதுமா? இல்லை இன்னமும் வேற ஏதாவது தெரிஞ்சுக்கணுமா?” ஆத்திரத்துடன் சொன்னவளின் வார்த்தைகளை கேட்டு...

“போச்சு போச்சு... என் நினைப்புல இப்படி மண்ணை அள்ளி போட்டுட்டியே...” என்று அவர் தலையில் அடித்து கொண்டு அழ...

“என்னம்மா என்ன சத்தம்?” என்று கேட்டபடி உள்ளே இருந்து வந்தான் பிரியன்.

“பாருடா... ஒரு அம்மாவா கவலையோட நான் கேட்டா... இவ இப்படி நம்ம தலையில் கல்லை தூக்கி போடுறா? நீயே அவளை என்னன்னு கேளு?” மகனின் ஆதரவு கிடைத்ததில்... தன் அழுத கண்களை துடைத்து கொண்டே கலைமகள் அவனிடம் நியாயம் கேட்க...

“என்ன அரசி இது? எப்ப பாரு உன்னோட ஒரே ரோதனையா போச்சு?” பிரியன் எரிச்சல் பட்டவன், “அம்மா கிட்ட அப்படி என்னடி சொன்ன?” அவன் கேட்டும் அவள் பேசாமல் இருக்க...

“அவ சொல்ல மட்டாடா... நானே சொல்றேன்...” என்றவர் மகளை பற்றி... மகனிடமே  தரக்குறைவாக சொல்கிறோம் என்ற நினைவு இல்லாமல் அவர் சொல்ல சொல்ல... பிரியனுக்கு ஆத்திரம் தலைக்கேறியது.

“என்னடி சொன்ன...?” ஆத்திரத்துடன் அவளின் தலை முடியை இறுக பற்றி இழுத்தபடி அவன் உறும... அவளோ சிறிதும் பயப்படாமல் அவனை முறைத்து பார்த்தாள்.

“ஆமா... நான் சொன்னது எல்லாம் உண்மை தான்... இப்போ என்ன செய்ய போற?” அவள் கொஞ்சமும் அஞ்சாமல் நேருக்கு நேராய் அவனை நிமிர்ந்து பார்க்க...

“உன் கிட்ட பேசி பிரயோஜனம் இல்லடி... நான் பேச வேண்டிய இடத்தில் பேசிக்கிறேன்” கோபமாய் அவளிடம் கத்தியவன்...

“அம்மா... இதை எப்படி டீல் பண்ணும்ன்னு எனக்கு தெரியும். நான் பார்த்துகிறேன்” என்றவன் வேகமாய் அங்கிருந்து வெளியேறினான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் காந்தன் அவளின் வீட்டினுள் புயலாய் நுழைந்தான். அவன் உள்ளே நுழைந்ததை கலவரத்துடன் கலைமகள் பார்க்க... அவனோ,

“எங்கே உங்க அருமை மகள்?” ஆத்திரம் சற்றும் குறையாத குரலில் கேட்க,

“யாருடா நீ… எங்க வீட்டுக்குள்ளேயே வந்து… எங்க பொண்ணையே கேட்ப?” அவன் யார் என்று தெரிந்திருந்தும் வேண்டும் என்றே அவர் குரலை உயர்த்தி பேச, அவனோ அவரை கண்டு கொள்ளாமல் அந்த வரவேற்பறையை சுற்றி தன் பார்வையை ஓட்டினான்.

சோபாவில் தூங்கி கொண்டிருந்தவள் யாரோ சத்தம் போட்டு பேசுவதை கேட்டு விழித்தவள்… அங்கே காந்தனை சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவள் அதிர்ந்து போனவளாய் தன்னையும் அறியாமல் எழுந்து நிற்க… அவனோ அவளை சுட்டெரித்து விடுவது போல் பார்த்து கொண்டே… அவளை நோக்கி வேகமாய் போனான். அவள் எதிர்பாராத நேரத்தில்… தன் இடது கையை கொண்டு அவளின் கழுத்தை நெறித்தவன்,

“நானாடி உன்னை கெடுத்தேன்… நானாடி உன் குழந்தைக்கு அப்பா… உன்னை காப்பாத்தியதுக்கு நல்ல பரிசு கொடுத்துட்ட… உன் மானம் போகாம இருப்பதுக்காக நான் கஷ்டப்பட்டதுக்கு நீ என் மானத்தை இப்படி ஒரேடியா வாங்கிட்டியே. உன்னை…” வலது கையால் அவளை அடிக்க கையை ஓங்கியவாறு ரௌத்திரத்தின் மொத்த உருவமாய் நின்றிருந்தவனை கண்டு… பயத்தில் முகம் வெளுத்து போய் உடல் நடுங்க பரிதாபமாய் அவள் நின்றிருந்தாள்.

“ச்சீ… நீ எங்கேயோ போய் கெட்டு போயிட்டு… அதுக்கு நான் தான் காரணம் சொல்ல… உனக்கு நாக்கு கூசல. கடைசில உன் பணக்கார புத்தியை காட்டிட்டியே… ச்சே…” வார்த்தைகளை தீக்கங்குகளாய் அள்ளி கொட்டியவன்… முகத்தை அருவருப்பாய் சுளித்தான்.

“டேய் என் பொண்ணை என்னடா பண்ற? அய்யயோ... முதல்ல அவ கழுத்துல இருந்து கையை எடுறா... படுபாவி என் பொண்ணை கொல்ல பார்க்கிறானே...” கலைமகளின் அலறலில் சற்று நிதானத்துக்கு வந்த காந்தனுக்கு அப்போது தான் செய்து கொண்டிருந்த காரியத்தின் வீரியம் புரிந்தது.

தன் முன் அச்சத்தில் கண்கள் விரிய, உடல் நடுங்க அவள் நின்றிருந்த கோலம் கண்டு ஓங்கிய தன் கையை கீழே இறக்கியவன் அவளை உற்றுப் பார்த்தான். அவள் கண்களில் காணப்பட்ட அச்சத்தையும் மீறி அதில் தெரிந்த அவமான உணர்வில் தன்னையும் அறியாமல் அவள் கழுத்தில் அழுத்தியிருந்த மற்றொரு கையை தளர்த்தினான்.

அவன் கையை தளர்த்தியது தான் தாமதம் அடுத்த நொடி அவள் அப்படியே மடங்கி தரையில் அமர்ந்தாள். இருகைகளால் முழங்காலை கட்டிக் கொண்டு அவன் முகம் காண வெட்கி தலையை குனிந்து இருந்தவளின் உடல் ஏனோ நடுங்கியது. குனிந்திருந்த அவளின் தலையை வெறித்து நோக்கியவன் மனதில் பலவித உணர்வு அலைகள் தாக்கியது.

அவளின் குண இயல்புக்கு மாறாய் அவள் மௌனமாய் இருந்தது கண்டு அவனுக்கு குழப்பமாய் இருந்தது. எப்போதும் சண்டை கோழியாய் சிலிர்த்து கொள்பவள் இன்று ஏனோ அமைதியாய் இருப்பது அவனுக்கு புரியாத புதிராய் இருந்தது. அவள் தான் கூறிய குற்றச்சாட்டை மறுப்பாள்... இல்லை ஏதாவது பொய் கூறி சமாளிப்பாள் என்று நினைத்தானே தவிர... அவளிடமிருந்து இந்த மாதிரியான ஒரு செயலை அவன் எதிர் பார்க்கவில்லை.

ஆனாலும் பெண்களை கொண்டாடும், மதிக்கும் தன்னை... இந்த மாதிரி கேவலமாக நடந்து கொள்ளும் நிலைமைக்கு ஆளாக்கிய அவளை கோபமாய் முறைத்து பார்த்தான்.

“எல்லாம் உன்னால் வந்தது… எதுக்குடி வீணாய் என் மேல் பழி போட்ட…?”

அவனின் கோபத்திற்கும் காரணம் இருக்கிறது. சற்று நேரத்திற்கு முன்பு தான் பிரியன் அவன் கடைக்கு வந்து அவனை வாய்க்கு வந்தபடி பேசியவன், அவனை மிரட்டி விட்டு வேறு சென்றிருந்தான். அவனின் மிரட்டலுக்கு எல்லாம் காந்தன் பயப்படவில்லை. ஆனால் அவன் கூறிய செய்தியை தான் அவனால் ஜீரணிக்க முடியவில்லை. பாவம் என்று பரிதாபப்பட்டு அவளை காப்பாற்றியதற்கு அவள் தந்த பரிசை தான் அவனால் ஏற்று கொள்ள முடியவில்லை.

வசீயரசியின் குணம் அவனுக்கு நன்கு தெரிந்ததாலோ என்னமோ அவள் இது மாதிரி சொற்களை சொல்லியிருக்க கூடும் என்று அவன் நிச்சயமாய் நம்பினான். உதவி செய்த தனக்கு உபத்திரத்தை அளித்த அவளை அவனால் மன்னிக்க முடியவில்லை. அதனால் தான் உடனே அவள் வீடு நோக்கி புறப்பட்டு வந்துவிட்டான்.

“உண்மைய தான்டா அவ சொன்னா… அவளை இந்த கதிக்கு ஆளாக்கிட்டு இப்போ மழுப்பறியா?” கலைமகள் ஆத்திரத்துடன் அவனை பார்த்து கேட்க, அன்னையின் வார்த்தையில் அவள் விலுக்கென்று நிமிர்ந்து பார்த்தாள். அவனோ, ‘இது எல்லாம் எனக்கு தேவையா?’ என்பது போல் அவளை உறுத்துப் பார்த்தான்.

“அம்மா… சொன்னது நான்… என்னிடம் கோபப்படு… அதுக்கு உனக்கு உரிமை இருக்கு. அதை விட்டுட்டு அவர் கிட்ட ஏன் கோபப்படுற?” கீழே அமர்ந்திருந்த வசீயரசி வேகமாய் எழுந்தவள் அன்னையை பார்த்து கேட்க,

“என்னடி இது அநியாயமா இருக்கு? நான் உனக்கு நல்லது தானே பேசறேன்… நல்லது பேசிய நான் பொல்லாதவள்… கழுத்தை நெறிச்சு உன்னை கொல்ல பார்த்த அவன் நல்லவனா? நல்லாயிருக்குடி உன் நியாயம்…” ஆற்றாமையில் புலம்பினார்.

“இதுவரை நீ எனக்கு செஞ்ச நல்லது போதும்மா. தயவுசெய்து இந்த பேச்சை விடு.  அவர் நிலையில் யாராயிருந்தாலும் இப்படித்தான் கோபப்பட்டு இருப்பாங்க. ஏன்னா நான் சொன்ன விசயம் அப்படி...” என்று நிறுத்தியவள்,

“ஆனா நான் இப்படி பேசியதுக்கு யார் காரணம்? நீதான்... நீ பேசிய வார்த்தைகள் தான். பெத்த பொண்ணு கிட்ட பேசுற மாதிரியா நீ பேசின? நீ என்னையும் அவரையும் சேர்த்து வைச்சு சந்தேகப்பட்ட... அதான் நான் அப்படி சொன்னேன். இதில் அவருக்கு எந்த சம்பந்தமும் இல்லை. அன்னைக்கு என்னை வீட்டில் விட்டதோடு சரி... அதுக்கு அப்புறம் அவரை நான் பார்க்கவே இல்லை. ஆதாரமே இல்லாமல் இந்த மாதிரி ஒரு பழியை போட்டா யாருக்கு தான் கோபம் வராது. அவருக்கு வந்த கோபம் நியாயமானது தான்...” அன்னையிடம் பேசியவள், அவனின் அருகில் வந்து இருகையையும் கூப்பி கண்களில் கண்ணீர் மல்க அவனை ஏறிட்டு பார்த்தவள்,

“நீங்க என்னை கொன்னா கூட தப்பில்ல. இதுக்கு எல்லாம் காரணம் நான் தான். தயவுசெஞ்சு என்னை மன்னிச்சுருங்க...” அவளின் கெஞ்சல் குரல் அவனை சற்று அசைத்து பார்த்தது என்றே சொல்ல வேண்டும்.

எப்போதும் கம்பீரத்துடன், தைரியத்துடன் நிமிர்ந்து நிற்கும் அவள் இன்று கண்களில் கண்ணீருடன் நிற்பது கண்டு அவனுக்கே அது பொறுக்கவில்லை. அவளுக்கும், அவள் அன்னைக்கும் நடந்த பேச்சு வார்த்தை வைத்து அவன் ஓரளவு விசயத்தை ஊகித்து விட்டான்.

அன்னையின் தவறான பேச்சால் அவள் கோபப்பட்டு இந்த மாதிரி பேசி இருக்கிறாள் என்பது அவனுக்கு புரிந்தது. அவளை கொன்று போட்டு விடும் அளவுக்கு கோபத்துடன் வந்தவன் தான் அவன். ஆனாலும் அவள் பக்கம் இருக்கும் நியாயம் புரிந்தவுடன் சற்று அமைதி காத்தான்.

ஆனாலும் என்னத்தான் வீட்டினரிடம் கோபம் என்றாலும் வயது வந்த பெண் இந்த மாதிரி பேசுவது... அதுவும் ஒரு

ஆண் மகனுடன் தன்னை இணைத்து பேசுவது என்பது நல்லதல்லவே. இருந்தாலும் ஏனோ அவளின் மேல் அவனுக்கு கோபம் வரவில்லை. அவளின் வீட்டார் மேல் தான் கோபம் வந்தது. பெற்ற பெண்ணை நம்பாமல் வார்த்தைகளால் குத்தி கொல்லும் இந்த மாதிரி ஆட்களை என்ன செய்ய? என்று அவன் மனம் அவளுக்காக பரிதாபப்பட்டது.

“அவனுக்காக ரொம்ப தான் உருகுற... என்னடி ரெண்டு பேரும் சேர்ந்திட்டு நாடகம் போடுறீங்களா?” என்று கேட்ட அன்னையை அற்பமாய் பார்த்தவள்,

“இந்த மாதிரி பேச்சு தான்... என்னை தேவையில்லாம பேச வச்சது. தயவு செஞ்சு இனியும் என் வாயை பிடுங்காதே” அன்னையிடம் கத்தியவள், “உன்னோட பேச்சை கேக்குறதுக்கு பதிலா அவர் என்னை கழுத்து நெறிச்சு கொன்னு போட்டு இருக்கலாம். உயிரோடு இருந்து கிடைக்காத நிம்மதி... செத்ததுக்கு அப்புறமாவது எனக்கு கிடைச்சிருக்கும்” முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

உயிரை விடும் அளவுக்கு மனம் வெறுத்திருந்த அவளை கண்டு அவன் பரிதாபப்படுவதை தவிர வேறு ஒன்றும் அவனால் செய்ய முடியவில்லை. இந்த மாதிரியான ஒரு சூழ்நிலையை எவ்வாறு கையாளுவது என்றும் அவனுக்கு தெரியவில்லை. அவன் மேல் தவறில்லை என்று அவள் சொன்ன பின்பும் அங்கே நிற்பது என்பது அவனுக்குமே அவ்வளவு உசிதமாக படவில்லை. எனவே அங்கிருந்து கிளம்ப நினைத்தான்.

“இப்போ உங்களுக்கு நல்லா புரிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறேன்” கலைமகளை பார்த்தபடி சொன்ன காந்தன், “நீங்க தவறா பேசிய ஒரு வார்த்தை எந்தளவுக்கு கொண்டு வந்து விட்டிருச்சு பாருங்க. இனிமேலாவது உங்க பொண்ணு மனசு புரிஞ்சு நடந்துக்கோங்க. அவங்க ஏதும் தவறா முடிவு எடுத்து... அதுக்கு அப்புறம் நீங்க என்ன அழுது

புலம்பியும் பிரயோஜனமில்லை” என்றவன் இருவரையும் திரும்பி பார்க்காமல் வேகமாய் வெளியேறினான்.

“உன்னால கண்ட கண்ட நாயெல்லாம் அட்வைஸ் பண்ணிட்டு போகுது. என் முன்னாடி நிக்க கூட தகுதியில்லாத பய... என்னையவே கேள்வி கேட்டுட்டு போறான். இதுக்கு எல்லாம் நீ தான்டி காரணம்” காந்தன் பேசியதால் ஏற்பட்ட கோபத்தை கலைமகள் மகளிடம் காட்டினார்.

அவளோ அவரின் வார்த்தையை கவனிக்கும் நிலையில் இல்லை. தான் மன்னிப்பு கேட்டும் அவன் தன்னை மன்னிக்காமல் போனதை எண்ணி உள்ளுக்குள் கவலை கொண்டாள். அவனை நேரில் சந்தித்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று மனதில் நினைத்து கொண்டவளுக்கு... அதன் பின் தான் நிம்மதியானது. அவளுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை... அந்த சந்திப்பிற்கு பின் தான் அவளின் நிம்மதி குலைய போகிறது என்று...

**************************************************

“குமாரு... உன் பையன் உன்னைய அப்படியே உரிச்சு வச்சிருக்கான்” இளங்குமரனின் அன்னை அவனிடம் பெருமையாய் சொல்லியபடி குழந்தையை அவனிடம் நீட்டினார்.

தன்னை போலிருந்த மகனை பெருமையாய் பார்த்தவன், அந்த மகனை பெற்றெடுத்த தன் மனைவியை காதலாய் பார்த்தான். அந்த காதலில் உருகி கரைந்தாள் அவன் அன்பு மனைவி காஞ்சனா. கொஞ்ச நேரம் முன்பும் காஞ்சனாவிற்கு இரண்டாவது குழந்தை பிறந்திருந்தது. அதற்கு தான் அவளின் மாமியார் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார். ஒட்டு மொத்த குடும்பமும் குழந்தையை பார்க்கவென கிளம்பி வந்திருந்தது.

குழந்தை பிறந்த சந்தோசத்தோட இன்னொரு சந்தோசமான செய்தியையும் சொல்லிறலாம்ன்னு

பார்க்கிறேன்” பீடிகையுடன் ஆரம்பித்தார் காஞ்சனாவின் மாமியார்.

எல்லோருக்கும் விசயம் என்னவென்று தெரிந்தாலும் ஒன்றும் பேசாமல் அவரின் முகத்தை பார்த்தனர். காந்தனோ கடமையே என்று அங்கே நின்றிருந்தான். அவனின் முகம் எந்தவித உணர்ச்சியும் காண்பிக்காமல் வெறுமையாய் இருந்தது. தேவி தான் அவனை மையலாய் பார்த்தபடி... பார்வையால் அவனை பருகோ பருகு என்று பருகிக் கொண்டிருந்தாள். அவன் மறந்தும் அவள் புறம் திரும்பவில்லை.

“சம்பந்தியம்மா... ஹாஸ்பிடல்ல வச்சு பேசுறேன்னு நினைக்க வேணாம். இன்னைக்கு இருக்கிற சந்தோசமான மனநிலையில் இதை பேசினால் நல்லாயிருக்கும்ன்னு நினைக்கிறேன். என் பொண்ணுக்கும், பையனுக்கும் உங்க பையனையும், பொண்ணையும் சம்பந்தம் பேசலாம்ன்னு நினைக்கிறேன். நீங்க என்ன சொல்றீங்க?” காவேரியிடம் அவர் நேரிடையாக கேட்க... காவேரியால் மறுக்க முடியாமல் போனது.

“நீங்க கேட்டதே ரொம்ப சந்தோசம் மதினி. ஆனா கல்யாணம் கொஞ்ச நாள் கழிச்சு வச்சுக்கிட்டா நல்லாயிருக்கும்...” காவேரி இழுக்க... காஞ்சனாவின் மாமியார் மலர்ந்த முகத்துடன்,

“அதுகென்ன சம்பந்தி... நீங்க சொல்றாப்புல கல்யாணத்தை தள்ளி வச்சுக்கலாம். ஒண்ணும் பிரச்சினையில்ல. நீங்க என்ன பேச்சு மாற போறீங்களா? இல்ல நாந்தான் பேச்சு மாற போறேன்னா... ரெண்டுமே நடக்க சான்ஸ் இல்ல. எங்க மனசுல இருந்த விருப்பத்தை சொன்னோம். நீங்களும் சரின்னு சொல்லிட்டீங்க. அப்புறம் என்ன... கல்யாணம் எப்ப வச்சாலும் பிரச்சினையில்லை” என்று அவர் காவேரியிடம் குதூகலமாய் சொல்ல, அங்கே எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

காந்தனுக்கு எந்தவித உணர்வும் தாக்கவில்லை. எல்லோரையும் போல் திருமணம் என்பது வாழ்வில் ஒரு

அங்கம் என்றே அவன் நினைத்தான். அதையும் மீறி அவனுக்கு என்று எந்த கற்பனையும் இல்லை.

“அம்மா... நான் கடைக்கு போயிட்டு வர்றேன்...” மெதுவாய் அங்கிருந்து நழுவ நினைத்து அன்னையிடம் அவன் கேட்க... அவரோ,

“என்னப்பா... எல்லோரும் இருக்கும் போது போகணும்ன்னு சொல்ற?”

“மாப்பிள்ள போயிட்டு வரட்டும் சம்பந்தி... நீங்க போங்க மாப்பிள்ள...” அவர் வார்த்தைக்கு வார்த்தை மாப்பிள்ளை என்றழைக்க... அவன் அங்கிருந்து தப்பித்தால் போதும் என்று வெளியில் ஓடி வந்து விட்டான். தேவி தான் அவன் போவதை ஏக்கமாய் பார்த்தபடி நின்றிருந்தாள்.

“அண்ணாச்சி உங்கள பார்க்க ஒரு பொண்ணு வந்திருக்கு...” சுடலை வந்து காந்தனை அழைக்கவும்... புகைப்படத்தை கழுவிக் கொண்டிருந்தவன் அவனை நோக்கி திரும்பினான்.

“யாருன்னு கேட்டியாடா?”

“ம்... கேட்டேன்... அரசின்னு சொன்னாங்க...” சுடலை சொன்னதும்... அவன் முகம் யோசனையில் சுருங்கியது. ‘அவள் எதற்காக என்னை பார்க்க வந்திருக்கிறாள்?’ மனதில் கேள்வி எழுந்தது. இரண்டு நாட்களுக்கு முன் அவளை பார்த்தது. அன்றோடு அவளுக்கும் அவனுக்குமான கணக்கு முடிந்து விட்டதாய் அவன் நினைத்திருக்க... அவள் எதற்காக தன்னை காண வந்திருக்கிறாள்? என்று யோசனையில் ஆழ்ந்தான்.

“சுடலை இந்த ஃபோட்டோ எல்லாம் கழுவிரு...” என்று தன் வேலையை அவனிடம் கொடுத்தவன் கடையின் முன்பக்கம் வந்தான்.

அந்த இடத்திற்கு சிறிது சம்பந்தம் இல்லாமல் ஒரு ராணியின் கம்பீரத்துடன் அவள் அமர்ந்திருந்ததை பார்த்துக் கொண்டே வந்தவன், தன்னை கண்டதும் எழுந்து

நின்றவளை வரவேற்பதா இல்லை என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தான். எதிரியே இருந்தாலும் வந்தவரை உபசரிப்பது தான் சிறந்த பண்பு என்று எண்ணியவன்,

“வாங்க...” என்றான் சற்றே தடுமாற்றத்துடன்.

“ம்...” அவனின் வரவேற்பை ஒற்றை வார்த்தையால் அங்கீகரித்தவள், “நான் உங்க கிட்ட பேசணும்...” சுற்றும் முற்றும் பார்த்தபடி அவனிடம் கேட்க,

“சொல்லுங்க...”

“இங்கேயா?” அவள் குழப்பத்துடன் அவனை பார்க்க...

“இங்கேயே தான்... அப்படி ஒண்ணும் கஸ்டமர் அடிக்கடி வர மாட்டாங்க. நீங்க சொல்ல வேண்டியதை தாராளமா சொல்லலாம்” அவளின் குழப்பம் கண்டு அவன் புன்னகையுடன் சொல்ல, அவளுக்கு சற்று நிம்மதியானது.

“சாரி... நான் பேசியது கொஞ்சம் அதிகம் தான்...” அவள் முடிக்கும் முன்,

“கொஞ்சம் அதிகமா? ரொம்பவே அதிகம்ங்க...” என்று அவன் சொல்ல... அவள் பயத்துடன் அவன் முகத்தை பார்த்தாள். அதில் கோபத்திற்கான சாயல் ஏதும் தெரியவில்லை. மாறாக மெல்லிய புன்னகையே இருந்தது.

“நான் மன்னிப்பு கேட்டும்... நீங்க என்னை மன்னிக்கல. நீங்க மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை சொன்னா... எனக்கு நிம்மதியா இருக்கும். அதுக்கு தான் நான் வந்தேன்...”

“இதுக்கு போயாங்க இவ்வளவு தூரம் வந்தீங்க... அறிவு கிட்ட சொன்னீங்கன்னா நானே உங்களை பார்க்க வந்திருப்பேனே... சரி விடுங்க. உங்களுக்கு இப்ப என்ன வேணும்? நான் உங்களை மன்னிக்கணுமா? மன்னிச்சாச்சு போதுமா? இப்ப சந்தோசமா?” அவன் கேட்டதும் தான் தாமதம் அவள் அவசரமாய் தலையை ‘ஆம்’ என்பது போல் அசைத்தாள். அதை கண்டு அவனுக்கு சிரிப்பு வந்தது.

“ஆனாலும் உங்களுக்கு தைரியம் ஜாஸ்திங்க… எப்படி உங்களால இப்படி போல்ட்டா பேச முடியுது?” என்று ஆச்சிரியப்பட்டவன், மென்மையான குரலில், “ஒரு சின்ன ரெக்வெஸ்ட்… விளையாட்டுக்கு கூட இந்த மாதிரி யார் கிட்டேயும் பேசிடாதீங்க. அது உங்க வாழ்க்கையை தான் பாதிக்கும். நாளைக்கு உங்களை கல்யாணம் பண்ணிக்க போறவங்க இதை கேள்விப்பட்டா எவ்வளவு வருத்தப்படுவாங்க… இதுவே உங்க மணவாழ்க்கைக்கு பிரச்சினையா கூட வரலாம். அதனால எது பேசுறதா இருந்தாலும் ஒரு முறைக்கு பல முறை யோசிச்சு பேசுங்க”

யார் அறிவுரை கூறினாலும் அலட்சியப்படுத்தும் அவளால் அவனின் இந்த கூற்றை ஏனோ அலட்சியப்படுத்த முடியவில்லை. “இனி மேல் நீங்க சொல்றதை யோசிக்கிறேன்” என்றவள், “வர்றேன்…” என்று அங்கிருந்து வெளியேற போனாள்.

“ஒரு நிமிசம்…” என்று அவளை நிறுத்தியவன், “நீங்க எப்பவும் கம்பீரமா, தைரியமா இருக்கணும். அது தான் உங்களுக்கு நல்லாயிருக்கு. அன்னைக்கு அழுதீங்க பாருங்க…. அது உங்களுக்கு செட் ஆகலைங்க…”

“இனி மேல் அழல…” என்றவள் வாயில் வரை சென்று விட்டு மீண்டும் உள்ளே வந்து அவனிடம், “அன்னைக்கு காப்பாத்தியதுக்கு ரொம்ப தேங்க்ஸ்…”

“எவ்வளவு சீக்கிரம் நன்றியை சொல்லிட்டீங்க” அவன் ஏளன குரலில் கேட்கவும், அன்றையை நிலையை நினைத்து அவளுக்கு கண்களில் கண்ணீர் மல்கியது. அவனை பார்க்க வெட்கி தானே அவள் அவனை பார்ப்பதை தவிர்த்தாள். அதை நினைத்தவள் முகம் அவமானத்தில் கன்றி சிவந்தது.

அவளின் முக மாறுதல்களை கவனித்துக் கொண்டிருந்தவனுக்கு அவளின் மனம் நன்கு புரிந்தது. தேவையில்லாமல் அன்றைய நிகழ்வை நியாபகப்படுத்தி விட்டோமோ? என்று தன்னை தானே நொந்து கொண்டான்.

“சாரிங்க… அன்னைக்கு நடந்ததை கெட்ட கனவா நினைச்சு மறந்திடுங்க. நானும் யாரிடமும் சொல்ல மாட்டேன். நீங்க என்னை நம்பலாம்” அவனின் பேச்சு அவளுக்கு நம்பிக்கையை அளிக்க… ஒரு தலையசைப்புடன் அவனிடம் இருந்து விடை பெற்றாள்.

அவள் காரிலேறி செல்வதை பார்த்துக் கொண்டிருந்தவன் மனதில், ‘எப்படி இருந்த பெண் இப்படி உருக்குலைந்து போய்விட்டாளே? அவள் வீட்டினர் மனிதர்களா? இல்லை மிருகங்களா? அவள் அண்ணனையும், அந்த அர்ஜூனையும் வைத்து பார்த்தால்… நிச்சயம் அவர்கள் மிருங்கங்கள் தான்… பாவம் அவள்…’ என்று அவனின் மனம் அவளுக்காக மருகியது.

எதேச்சையாக அந்த பக்கம் வந்த பிரியன் இவர்கள் இருவரையும் பார்த்து விட்டான். மனதில் எழுந்த ஆங்காரத்துடன் தங்கையின் காரை பின் தொடர்ந்தான். வீட்டிற்குள் அவளை தொடர்ந்து உள்ளே நுழைந்தவன் என்ன எதுவென்று கூட கேட்காமல் அவள் கையை பிடித்து இழுத்து கொண்டு அவள் அறைக்கு சென்றான். கலைமகள் மகனின் செயலை கண்டு பதட்டப்பட்டவராய் அவனை பின் தொடர்ந்தார்.

“எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா… அவனை பார்க்க… அவன் கடைக்கே போவ?” என்று கேட்டபடி… கண்ணிமைக்கும் நேரத்தில் தன் இடுப்பு பெல்ட்டை கழட்டி அவளை அடி பின்னிவிட்டான்.

அவன் என்ன தான் ரத்தம் கட்ட அடித்தாலும் அவள் ஒரு அடிக்கு கூட கத்தவில்லை… கதறவில்லை. அவளின் மனமும், உடலும் அந்தளவுக்கு மரத்து போயிருந்தது. ‘நீ யாரையோ பேசுகிறாய்? யாரையோ அடிக்கிறாய்?’ என்பது போல் கையை கட்டிக் கொண்டு அழுத்தமாய் அவள் நின்றிருந்த கோலம் கண்டு கலைமகளுக்கு வயிற்றில் புளியை கரைத்தது. இன்னமும் கொஞ்ச நேரத்தில் வீட்டிற்கு வரும் கணவனிடம்… மகனின் செயலுக்கு என்ன நியாயத்தை கற்பிப்பது என்று அவருக்கு தெரியவில்லை.

“டேய் பிரியா… அப்பா வரும் நேரமாச்சுடா… அவர் வந்து கேட்டா… என்ன பதில் சொல்றது?” அவர் பதற,

“ம்… அவரோட அருமை மகளோட வண்டவாளத்தை சொல்றது…” கோபமாய் அவன் கத்தினான்.

“டேய்… நாம நினைக்கிறது போல இல்லைடா… அவ ஏதோ கோபத்துல தான் அப்படி சொல்லியிருக்கா. அந்த பையனுக்கும் அவளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைடா” என்றவர் காந்தன் வந்து போனதை கூற,

“ஒரு சம்பந்தமும் இல்லைன்னா… இப்போ இவ எதுக்கு அவனை பார்க்க போனா? அதுக்கு பேரு காதல் இல்லாம வேற என்னவாம்?” அவன் நக்கலாய் கேட்க,

“ஆமாம்… ஆமாம்… நான் அவரை காதலிக்கிறேன்… காதலிக்கிறேன்… காதலிக்கிறேன்…” என்று உரக்க கத்தி சொன்னவள்,

“இது முன்ன சொன்ன பொய் மாதிரியில்ல… அவரை உண்மையா… உயிருக்கு உயிரா காதிலிக்கிறேன். இப்ப உன்னால என்ன செய்ய முடியும்? என்னைய அடிச்சு கொல்லுவியா? எங்கே கொல்லு பார்ப்போம்?” நெஞ்சை நிமிர்த்தி கொண்டு தைரியமாய் கேட்டவளை கண்டு அம்மாவும், மகனும் தான் அதிர்ந்தார்கள் என்றால்… அப்போது தான் வீட்டிற்குள் நுழைந்த கரிகாலனும் மகளின் வார்த்தையை கேட்டு உச்சக்கட்ட அதிர்ச்சியை அடைந்தார்.

வசீயரசியின் வார்த்தைகள் கேட்டு ஒரு நிமிடம் அதிர்ந்து நின்ற கரிகாலன்... அடுத்த நொடி வேகமாய் அதே சமயம் ஆவேசமாய் அவளின் அறைக்குள் நுழைந்தார். அங்கே மகள் இருந்த கோலம் கண்டு அவரின் ஆவேசம் அப்படியே அடங்கி அவள் மேல் அவர் வைத்திருந்த பாசம் மேலோங்கியது.

“அரசி...” என்று கூவியவாறு அவளின் அருகே வந்தவர் அவளை பாதுகாப்பாய் அணைத்து கொண்டார்.

அரசியின் உடலில் வரி வரியாய் ரத்தம் கட்டிய ஊமை காயங்களும், பிரியன் கையிலிருந்த பெல்ட்டும் என்ன நடந்திருக்கும் என்பதை அவருக்கு சொல்லாமல் சொல்லியது. அரசியை பத்திரமாய் படுக்கையில் அமர வைத்தவர், நேரே மகன் முன் வந்து நின்றார். அவனை வெற்று பார்வை பார்த்தவரின் வலது கரம் அவனின் இடது கன்னத்தை நெருப்பாய் தாக்கியது.

பிரியன் தகப்பனின் இந்த அடியை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அப்படியே கன்னத்தில் கையை வைத்து கொண்டு அதிர்ந்து போய் அவரை பார்த்தான். கலைமகளோ இனி என்ன நடக்குமோ என்ற கலவரத்தில் கணவனின் முகத்தையே பார்த்து கொண்டிருந்தார். இது எதையும் உணராமல் எங்கேயோ வெறித்து பார்த்து கொண்டு அமர்ந்திருந்தாள் வசீயரசி.

“பூ மாதிரி வளர்த்த பொண்ணுடா... என் தேவதை அவள். இந்த வீட்டு மகாலட்சுமி... அவளை போய் இப்படி அடிக்க உனக்கு எப்படிடா மனசு வந்தது?” அவரின் குரலில் இருந்தது கோபமா, ஆற்றாமையா இல்லை கவலையா என்பதை பிரித்தறிய முடியவில்லை.

“அப்பா... அவ என்ன செஞ்சிட்டு வந்தான்னு கேளுங்க” பிரியன் மேலும் பேச முற்படும் முன் அவனை கையமர்த்தி தடுத்தவர்,

“அவ என்ன செய்தாலும்... அவளை அடிக்கும் உரிமையை உனக்கு யார் கொடுத்தது? அவளை கண்டிக்க அவளை பெத்த தகப்பன் நான் இருக்கேன். நீ யாருடா அவளை கண்டிக்கவும் அடிக்கவும்?” இதை கேட்டு அவன் தலைகுனிய... மகன் தலைகுனிந்து இருப்பது பொறுக்காமல் கலைமகள்,

“அவளை நானும் தான் பெத்தேன்... அவளை கண்டிக்க எனக்கு உரிமை இருக்குல்ல...” அவர் சொன்னதும்... கோபத்துடன் அவரை முறைத்தார் கரிகாலன்.

“அன்னைக்கு வாங்கின மாதிரி அறை வாங்கணுமா உனக்கு...?” அவரின் குரலில் இருந்த ஆத்திரம் கண்டு கலைமகளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தாலும் அதை வெளியில் காட்டி கொள்ளாமல்,

“முதல்ல உங்க பொண்ணு என்ன செய்தான்னு கேளுங்க... அதுக்கு அப்புறம் எங்களை கேள்வி கேளுங்க... அடிங்க... கொல்லுங்க...” என்றவர் கணவரின் பதிலை எதிர்பாராமல் நடந்தது எல்லாவற்றையும் சொல்ல... அதை கேட்டு கரிகாலனின் நாடி நரம்பெல்லாம் ஆத்திரத்தில் துடித்தது.

“இவ்வளவு நடந்திருக்கு என் கிட்ட ஏன் யாரும் சொல்லல?” அவர் கோபமாய் கர்ஜித்ததில் கலைமகளும், பிரியனும் நடுங்கி விட்டனர்.

“உங்க கிட்ட சொன்னா... நீங்க இப்படி தான் கோபப்படுவீங்கன்னு தான் நாங்க சொல்லல...” கலைமகள் சொல்ல...

“உன்னையும், உன் மகனையும் நான் கொல்லுறதுக்கு முந்தி இங்கே இருந்து வெளியில் போங்க...” உச்சஸ்தாயில் அவர் கத்த, என்ன எது? என்று புரியாமல் இருவரும் மௌனமாய் அங்கிருந்து வெளியேறினர்.

“என்னம்மா இது? நாம சொன்னதை கேட்டு இவர் அரசியை திட்டுவார்ன்னு நினைச்சா... இவர் நம்ம கிட்ட காட்டு கத்து

கத்துறாரு… இவரை புரிஞ்சிக்கவே முடியலம்மா” பிரியன் அலுத்து கொண்டான்.

“இத்தனை வருசம் அவரோட குப்பை கொட்டுற எனக்கே அவரை புரிஞ்சிக்க முடியல… இதுல நீ எங்கே புரிஞ்சிக்கிறது” பதிலுக்கு கலைமகளும் அங்கலாய்த்தார்.

அங்கே உள்ளே கரிகாலன் மகளின் அருகில் அமர்ந்து அவளின் தலையை ஆறுதலாய் வருடிவிட்டார். அவரின் தொடுகையை உணர்ந்து அவரை திரும்பி பார்த்தவள் பின் மீண்டும் எங்கோ வெறித்து பார்க்கலானாள்.

“பாப்பா… அம்மாவும், அண்ணனும் உன்னை புரிஞ்சிக்காம பேசிட்டாங்க… ப்ளீஸ் பாப்பா… நீ தவறா ஏதும் முடிவு எடுத்துறாதே… இந்த அப்பா உனக்கு இருக்கேன்டா. உன்னை பத்தி எனக்கு நல்லா தெரியும்… நீ எந்த தப்பும் பண்ணியிருக்க மாட்ட… நான் உன்னை நம்புறேன்டா” மகளுக்கு புரிவது போல் எடுத்து அவர் சொல்ல அவளின் முகத்தில் ஏளன புன்னகை வந்து ஒட்டி கொண்டது.

“நீங்களும் தானேப்பா என்னை நம்பல… என்னை நம்பியிருந்தீங்கன்னா… அந்த அயோக்கியன் கூட எனக்கு கல்யாணம் பேசியிருக்க மாட்டீங்களே… வேண்டாம்ப்பா… என் உணர்வுகள் மரத்து போய் ரொம்ப நாளாச்சு… விடுங்க… நான் இப்படியே இருந்திட்டு போறேன். எனக்கு நல்லது செய்யணும்ன்னு நினைச்சீங்கன்னா அர்ஜுன் கூட நடக்கவிருக்கும் கல்யாணத்தை நிறுத்திடுங்க. உங்களுக்கு புண்ணியமா போகும்” எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பேசிய மகளின் குரல் அவருக்கு பெருத்த வலியை உண்டு பண்ணியது.

“சரி உன் இஷ்டப்படி இந்த கல்யாணத்தை நிறுத்தறேன்… உனக்கு அந்த அர்ஜுன் வேண்டாம். ஆனா வேற மாப்பிள்ளை பார்க்கிறேன்… நீ கல்யாணத்துக்கு சம்மதிக்கணும்” அவர் கட்டளை போல் சொல்ல…

“இப்ப தான் என்னை நம்பறேன்னு சொன்னீங்க… உடனே அதை மாத்தி பேசுறீங்களே…” என்று நிறுத்தியவள், “எங்கே

நான் அந்த காந்தனை காதலிச்சிருவேனோன்னு தானே நீங்க பயப்படுறீங்க?" அவரின் எண்ணம் போல் செல்ல மகள் கூற... தன்னை தெரிந்து கொண்டாளே என்று மகளின் புத்திசாலித்தனத்தை அந்த நேரத்திலும் மெச்சிக் கொண்டவர் முகத்தில் சிறு புன்னகை தோன்றியது.

"இல்லைடா... நான் அந்த அர்த்தத்தில் சொல்லல. உன்னை பத்தி எனக்கு நல்லா தெரியும். உன் அம்மாவும், அண்ணனும் பேசியதுக்கு வீம்பாய் எதிர்த்து பேசணும்ன்னு தான் இப்படி சொல்லியிருக்க... மத்தபடி உனக்கு காதல் கல்யாணம் பிடிக்காதுன்னு எனக்கு தெரியாதா என்ன? என்ன இருந்தாலும் கோபத்துக்கு கூட இந்த மாதிரி நீ பேச கூடாது பாப்பா..." அவளை புரிந்து கொண்டதாய் அவர் சொன்னாலும்... அவளின் வார்த்தை மீறலை அவர் கண்டிக்கவும் தவறவில்லை.

"நீங்க சொல்றதும் ஒருவிதத்தில் உண்மை தான்ப்பா. எனக்கு காதலிக்கிறவங்களை பிடிக்கும். ஆனா அதேசமயம் நான் காதலிக்கணும்னு நினைக்கல. நீங்க சொல்ற மாப்பிள்ளையை கல்யாணம் பண்ணிக்கணும்... கல்யாணத்துக்கு அப்புறம் அவனை உருகி உருகி காதலிக்கணும்... இப்படியெல்லாம் தான் நான் கற்பனை பண்ணி வச்சிருந்தேன். ஆனா இப்போ..." ஒருவித ஏக்க குரலில் சொல்லியவள்... விரக்தியில் முடிக்க...

"இப்போ அதுக்கு என்னம்மா?" மகளின் குரலில் தெரிந்த மாற்றத்தில் அவரின் மனம் பதறியது.

"இப்போ... இப்போ... எல்லாம் முடிஞ்சு போச்சுப்பா..." முகத்தை மூடி கொண்டு அழுதாள்.

"அம்மாவும், அண்ணனும் பேசிய வார்த்தைகள் என் ஆயுள் முழுமைக்கும் என்னை துரத்தும். அதிலிருந்து தப்பிக்கணும்ன்னா..." அவள் நிறுத்திவிட்டு அவர் முகம் பார்க்க,

"எதையாவது நினைச்சுட்டு லூசுத்தனமா உளறாதே பாப்பா. உன் அம்மாவும், அண்ணனும் பேசினால் போதுமா?

அப்பா நான் எதுக்கு இருக்கேன். அதை எல்லாம் நான் பார்த்துக்கிறேன். இனிமேல் அவங்க எதுவும் பேச மாட்டாங்க" கோபமாகவும் அதேசமயம் கவலையாகவும் ஒலித்தது அவரின் குரல்.

"நீங்க அவங்க ரெண்டு பேர் வாயை மூட முடியும்... ஆனா ஊர் வாயை...? அது நிச்சயம் உங்களால முடியாதுப்பா. என்னோட வாழ்க்கை அவர் கூட தான்னு அந்த கடவுள் தீர்மானிச்சுட்டாரு... நானும் அதை அப்படியே ஏத்துக்க முடிவு பண்ணிட்டேன். கடவுள் போட்ட வழியிலேயே நான் போக போறேன். காதல் வேண்டாம்ன்னு இருந்த என்னை காதலில் தள்ளியது நீங்க எல்லோரும் தான். பரவாயில்ல... எனக்கு இந்த வாழ்க்கையையும் எதிர் கொள்கிற அளவுக்கு தைரியமும் இருக்கு... தன்னம்பிக்கையும் இருக்கு" தீர்மானமாக அதேசமயம் தீர்க்கமாகவும் பேசுகிற அரசி அவரின் கண்களுக்கு வித்தியாசமாக பட்டாள்.

கரிகாலனுக்கு மகளை பற்றி நன்கு தெரியும். அவளின் பிடிவாதமும் வீம்பும் அவளை எங்கு கொண்டு போய் விடுமோ என்று அவருக்கு கவலையாக இருந்தது. அதேசமயம் அவளின் காதலை ஏற்று கொள்ளும் அளவுக்கு பரந்த மனமும் அவரிடத்தில் இல்லை.

"முட்டாள்த்தனமா பேசாதே பாப்பா... இது காதலும் கிடையாது... எந்த கருமமும் கிடையாது. உனக்கு என்ன இல்லன்னு வேற வழியில்லாமல் அவனை காதலிக்கிற? உன் அழகுக்கும், அறிவுக்கும் பணக்கார மாப்பிள்ளையை வரிசையில் கொண்டு வந்து நிறுத்தறேன். அதுக்குள்ள நீ அவசரப்பட்டு முடிவெடுக்காதே..."

"முக்கியமானது இப்போ என்கிட்ட இல்லையே... நீங்க சொல்ற எல்லாத்தையும் விட முக்கியமானது கற்பு. அது என்கிட்ட இல்லையே..." கண்களில் கண்ணீர் மல்க கூறிய மகளை,

"அரசி... அப்படி சொல்லாதேம்மா... நீ ரொம்ப... ரொம்ப... நல்ல பொண்ணு... உன்னை விட கற்புக்கரசி யார் இருக்காடா?" என்று நெஞ்சோடு அணைத்து கொண்டார்

அவர். மனைவியும் மகனும் மகளின் மனதை எந்தளவுக்கு காயப்படுத்தி இருக்கிறார்கள் என்பது அப்போது தான் புரிந்தது.

“நீங்க சொல்லலாம்... நான் சொல்லலாம்... ஆனா இந்த உலகம் சொல்லாதே...” அவரை பார்த்து பரிதாபமாய் கேட்டாள்.

“நீ எந்த காலத்தில் இருக்க பாப்பா... கெடுத்தவனையே கல்யாணம் பண்ணிக்கிறது அந்த காலம் பாப்பா... இப்போ காலம் மாறி போயிருச்சு... இதுல உன் மேல எந்த தப்பும் இல்லைங்கிற போது... வீணா நீ ஏன் கவலைப்படுற?”

“நீங்க தானேப்பா... என் பேர் கெட்டுவிடக் கூடாதுன்னு அர்ஜூனுக்கு கல்யாணம் பண்ணி வைக்க நினைச்சீங்க. பின்னே நீங்களே இப்படி முன்னுக்கு பின் முரணா பேசறீங்களே? நீங்க சொன்ன மாதிரி நான் உடலால மட்டுமல்ல... மனசாலேயும் நான் கற்புக்கரசி தான். அதனால தான் நீங்க யாரோட என்னை இணைச்சு வச்சு பேசுறீங்களோ... அவரையே கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு நான் முடிவு பண்ணிட்டேன். இப்போ நான் கெட்டு போனவள் இல்லை. யாரும் என்னை கை நீட்டி பேச முடியாது பாருங்க” அரசியின் நிதான பேச்சிலேயே அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள் என்று அவருக்கு புரிந்தது.

“அரசி... இதுக்கு நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன்...” அவளை மாதிரியே அவரும் நிதானமாக கூறினார்.

“யாரோட சம்மதமும் எனக்கு தேவையில்ல...” முகத்தில் அடித்தார் போல் வந்தது அவளின் பதில்.

“அவன் கிட்ட அப்படி என்னத்தை கண்ட... உன் தகுதிக்கு... உன் கால் தூசி பெற மாட்டான் அவன். நீ புரிஞ்சு தான் பேசுறியா?”

“நான் அவர் கிட்ட எதையும் எதிர்பார்க்கல... அவர் என் மனசை புரிஞ்சு என்னை ஏத்துக்கிட்டா போதும்”

“ம்... ஏத்துக்குவான்... ஏத்துக்குவான்... ஏன் ஏத்துக்காம? இவ்வளவு வசதியான பொண்ணு வலிய வந்து பழகினா ஏத்துக்காம என்ன பண்ணுவான்? ஆனா ஒண்ணு அரசி... என்னை பத்தி உனக்கு நல்லாவே தெரியும்... உன்னை எப்படி என் வழிக்கு கொண்டு வர்றதுன்னும் எனக்கு நல்லா தெரியும். நீ எப்படி அவனை காதலிக்க போற... அவனை எப்படி கல்யாணம் பண்ணிக்க போறன்னு நானும் பார்க்கிறேன்” அவர் கோபமான குரலில் தன் முடிவை உறுதியாய் கூற...

“நானும் ஒண்ணு சொல்றேன் நல்லா கேட்டுக்கோங்க... அவர் தான் எனக்கு கணவரா வர முடியும். நீங்க மாத்த சொன்னா மாத்திக்க இது ஒண்ணும் போட்டுக்கிற ட்ரெஸ் இல்லை. இது மனசு... என் மனசுல அவரை பிக்ஸ் பண்ணி ஒரு மணி நேரத்துக்கும் மேலே ஆச்சு” அவளும் தன் முடிவை உறுதியாய் அறிவிக்க...

“நாளைக்கே அர்ஜூனுக்கும் உனக்கும் நிச்சயதார்த்தம்...” அவளின் கண்களை நேராக சந்தித்தபடி சொன்னார் கரிகாலன்.

“அப்பா...” அவ்வளவு நேரம் பேசியும் அவர் தன்னை புரிந்து கொள்ளவில்லையே என்று ஆதங்கத்துடன் அவரை பார்த்தாள் அவள்.

“நீ பார்த்திருக்கும் பையனுக்கு... இந்த அர்ஜூன் எவ்வளவோ மேல்...” என்று சொல்லி நிறுத்தியவர், “இப்பவும் ஒண்ணும் கெட்டு போகல. நீ காதல் அது இதுன்னு பேசாம இரு. அப்பா ஒரே மாசத்துல நல்ல பையனா பார்த்து முடிக்கிறேன்” அவள் பதில் பேசாது அமர்ந்திருக்கவும்,

“அப்படின்னா... எனக்கும் வேற வழி தெரியல... நாளைக்கு நடக்க போற நிச்சயத்திற்கு தயாரா இரு” என்றவர் பேச்சு முடிந்தது என்பது போல் அறையை விட்டு வெளியேற... அவர் போனதையே பார்த்து கொண்டிருந்தவள் முகத்தில் புன்னகை அரும்பியது.

‘அப்பா… என் கிட்டேயே சவால் விடுறீங்களா? நீங்க நினைச்சது நடக்குதா? இல்லை நான் நினைச்சது நடக்குதான்னு பொறுத்திருந்து பாருங்க’ மனதுக்குள் சொல்லி கொண்டவள் முகத்தில் ஏகத்துக்கும் விசமத்தனம் தெரிந்தது.

வசீயரசியின் அறையிலிருந்து வெளியேறிய கரிகாலன் நேரே மனைவி, மகனிடம் சென்று அவர்கள் இருவரையும் திட்டி தீர்த்துவிட்டார்.

“அவளை பத்தி உங்களுக்கு நல்லாவே தெரியும் தெரிஞ்சிருந்தும் அவ கிட்ட போய் இப்படி பேசலாமா? சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்தானாம்… அது மாதிரி சும்மா இருந்த அவ மனசுல… காதல்ங்கிற விதையை தூவி விட்டு இருக்கீங்க… இப்போ அது மரமா வளர்ந்து நிக்குது. உறுதியா அவனை தான் கல்யாணம் பண்ணிக்க போறேன்னு சொல்றா. இப்போ இதுக்கு நீங்க ரெண்டு பேரும் என்ன பதில் சொல்ல போறீங்க?” கத்தி தீர்த்துவிட்டார். அவரின் பேச்சில் மற்ற இருவரும் ஆடி போய்விட்டனர்.

“சரி போனதை விடுங்க… இனிமே என்ன செய்றதுன்னு யோசிங்க. கலை… உன் அண்ணனுக்கு ஃபோன் பண்ணி நிச்சயம் பண்ண நாளைக்கே வர சொல்லு…”

“நாளைக்கேவா…?” கலைமகள் தயங்க…

“பின்னே உன் மக அவன் கூட ஓடி போன பிறகா நிச்சயம் பண்ண சொல்ற… எழவெடுத்தவளே சொல்றதை முதல்ல செய்யி… அப்புறம் இன்னொரு விசயம்… இனிமே கொண்டு அரசி விசயத்துல நீங்க ரெண்டு பேரும் தலையிட்டீங்க… நான் பொல்லாதவன் ஆயிருவேன்” இருவரையும் எச்சரித்து விட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

அங்கே வசீயரசியோ காந்தனை பற்றி தான் நினைத்து கொண்டிருந்தாள். அவனை முதன் முதலில் பார்த்ததில் இருந்து இன்று நடந்தது வரை ஒவ்வொன்றாய் அவள் கண் முன் படமாய் ஓடியது. எந்தவொரு இடத்திலும் அவன் மீது

ஈர்ப்பு வந்தற்கான அறிகுறி இல்லை. ஆனால் அவனின் குணம் அவளை கவர்ந்து தான் இருந்தது. அவளை பெத்த அம்மாவே அவளை புரிந்து கொள்ளதாத போது... அவன் அவளை நன்கு புரிந்து கொண்டு அவளின் அன்னைக்கே அறிவுரை கூறி சென்றானே... அந்த குணம் அவளுக்கு பிடித்து தான் இருந்தது.

பிரியன் அவளை தகாத வார்த்தைகள் கூறி அடிக்கும் போது தான்... அவளை நன்கு புரிந்து கொண்டு பேசிய காந்தனின் முகம் ஒரு கணம் அவள் மனதில் பளிச்சிட்டது. அந்த நிமிடம் தன்னையும் புரிந்து கொள்ள ஒரு ஜீவன் இருக்கிறதே என்பதே அவளுக்கு போதுமானதாய் இருந்தது. தன்னை புரிந்து கொள்ளாத இவர்களுடன் வாழ்வதை விட... தன்னை ஓரிரு முறை பார்த்தாலும்... தன்னை நன்கு புரிந்து கொண்ட அவனுடன் வாழ்வது சாலச் சிறந்தது என்று அந்த நொடி முடிவெடுத்தாள்.

அவனிடம் காதல் வருமா? என்று யோசித்து கொண்டிருந்தவள்... அவன் உருவத்தை மனக்கண்ணில் கொண்டு வர முயன்றாள். அவளை அவன் முதன் முதலில் பார்த்த போது கண்களில் ஆச்சிரியத்தை தேக்கியபடி... பிரமிப்புடன் பார்த்த அவனின் தோற்றமே அவள் கண் முன் வந்து நின்றது. அவனை அந்த தோற்றத்தில் கண்டதும் விதிர்த்து போனாள். முதன் முதலாய் அவனை பார்த்த தோற்றம் தன் மனதில் இவ்வளவு அழுத்தமாக பதிந்திருக்கிறது என்றால்... அவன் தன்னை எந்தளவு பாதித்து இருக்கிறான் என்பது அந்த கணம் அவளுக்கு புரிந்தது. அந்த நிமிடம் அவள் மனதை அவன் முழுதாய் ஆக்கிரமித்தான்.

“ரூபன்...” அவள் உதடுகள் மென்மையாய் அவனின் பேரை உச்சரித்து பார்த்தது. அடுத்தவர்களால் திணிக்கப்பட்ட காதல்... தன் விதி இது தான் என்று ஏற்று கொள்ளப்பட்ட காதல்... இப்போது அவள் முழு மனதிலும் உண்மையாய்... உணர்வாய்... சுகமாய்... நிரம்பியது.

அவன் அவளை காதலிக்கிறானா? என்று அவளுக்கு தெரியாது... அவன் மனதில் என்ன இருக்கிறது? என்றும் அவளுக்கு தெரியாது. ஆனாலும் எதிர்காலம் இல்லா இந்த காதலை அவள் மனம் பொக்கிசமாய் தனக்குள் பூட்டி பத்திரப்படுத்தி கொண்டது.

**********************************************

மறுநாள் மாலையில் அர்ஜூனுக்கும் அவளுக்கு நிச்சயம் என்று பேச்சு அடிபட்ட போதும் அதை பெரியதாய் அவள் கண்டு கொள்ளவில்லை. தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பது போல் இயல்பாக தன்னை காட்டிக் கொண்டாள். ஆனால் அவள் மனமோ இதை எப்படி நிறுத்துவது? என்று வேகமாய் கணக்கிட்டது. அதன் முடிவாய் அவளின் கை அலைப்பேசியில் அர்ஜூனின் எண்ணை அழுத்தியது.

“ஹாய் அரசி... நீ எப்படியும் ஃபோன் பண்ணுவன்னு நினைச்சேன். அதே மாதிரி நீயும் பண்ணிட்ட... இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ டியர்... அதுக்கு அப்புறம் நீ என்னுடையவள் ஆகிருவ...” சக்கரையாய் பேசினான் அந்த கயவன். அவள் பல்லை கடித்து பொறுத்துக் கொண்டாள்.

“நீ உன்னுடையவள் ஆக்கிக்கிறது சரி... நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் ஒவ்வொரு முறையும் நீ என்னை தொடுறப்போ எல்லாம் நான் அவனை தான் நினைச்சுக்குவேன்... அது உனக்கு பரவாயில்லையா?”

“ஹேய்... என்னடி சொன்ன? யாருடி அவன்?” அந்த பக்கம் உறுமினான் அவன்.

“அதான் என்னை கெடுத்துட்டதா போட்டு கொடுத்தியே அந்த காந்தனை தான் சொல்றேன். ஆம்பிள்ளைன்னா அவன் ஆம்பள... ஹப்பா... அவன் கூட இருந்த அனுபவம் இன்னமும் மனுசுக்குள்ளேயே சுகமா இருக்கு. அந்த மாதிரி நடந்துக்க உனக்கு தெரியுமா? வேணும்ன்னா... அவன் கிட்ட ட்யூஷனுக்கு போயிட்டு வர்றியா?” எகத்தாளமாய் கேட்டாள் அரசி.

“அப்போ… உண்மையிலேயே நீ அவன் கிட்ட கெட்டு போயிட்டியா?” அதிர்ச்சியாய் கூவியவன், “போடி உன்னை விட்டா உலகத்துல பொண்ணா இல்ல… நீ என்ன என்னை வேணாம்ன்னு சொல்றது… நீ எனக்கு வேண்டாம் போடி” அவன் ஆங்காரமாய் சொல்லியபடி அலைப்பேசியை துண்டித்தான். இந்த பக்கம் அவளுக்கு கண்ணீர் முட்டி கொண்டு வந்தது.

அவள் அழுதாள் நன்றாக இல்லை என்று கூறிய காந்தனின் முகம் அந்நேரம் அவளுக்கு நியாபகம் வந்தது. சட்டென்று அழுத கண்களை அழுந்த துடைத்து கொண்டாள். இனி இது போல் நிறைய போராட வேண்டி வரும்… நிறைய துயரங்களை சந்திக்க வேண்டி வரும். அதனால் இப்படி அடிக்கடி துவண்டு போவதை நிறுத்த வேண்டும் என்ற மனதுக்குள் எண்ணி கொண்டாள்.

அர்ஜூன் அவன் வீட்டில் என்ன கூறினானோ… நடக்கவிருந்த நிச்சயம் நின்று போனது. அதை அறிந்த கரிகாலனுக்கு தான் ஆத்திரத்தில் மீசை துடித்தது. “உன் அண்ணன் பையன் இல்லைன்னா என்ன… என் மகளுக்கு எப்படிப்பட்ட மாப்பிளையை கொண்டு வந்து நிறுத்தறேன் பாரு…” என்று மனைவியிடம் வீம்பாய் கூறியவர் அடுத்து மாப்பிள்ளை பார்க்கும் படலத்தை தீவிரப்படுத்தினார்.

அவர் கூட்டி வந்த மாப்பிள்ளைகளிடம் எல்லாம் அரசி… தான் காந்தனை காதலிப்பதாய் சொல்லி… துண்டை காணோம் துணியை காணோம் என்று அவர்களை அங்கிருந்து ஓடச் செய்தாள். கரிகாலனுக்கு மகளின் யுக்தி புரிந்து போனது.

“என் கிட்ட உன் வேலையை காட்டாதே… கடைசியில் தோற்க போறது நீ தான்…” என்றவரை… ‘பார்க்கலாமா…?’ என்பது போல் கண்ணால் பதிலுக்கு சவால் விட்டாள் அவள்.

அர்ஜூன் அவனையும் அறியாமல் அவளுக்கு ஒரு நன்மை செய்ய ஆரம்பித்தான். அவளுக்கு கரிகாலன் கொண்டு வரும் வரனை அவன் எதையாவது சொல்லி துரத்தி விட்டான். தனக்கு கிடைக்காத அரசி வேறு யாருக்கும்

கிடைக்க கூடாது என்ற கெட்ட எண்ணம் தான் அதற்கு காரணம்.

காந்தனும் அவளும் காதலிப்பதாய் அவளின் சொந்தக்காரர்கள் மத்தியில் வம்பு உலா வர ஆரம்பித்தது. இந்த செய்தி அவளின் சொந்தக்காரனான அறிவுமதியின் காதுக்கும் எட்டியது. தன் நண்பனை பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும். அவன் மனதில் அந்த மாதிரி சலனம் ஏதும் இல்லை என்று. அதிலும் அவனின் மூத்த தங்கையின் நாத்தனாரை அவனுக்கு பேசி முடித்திருப்பதும் அறிவுக்கு தெரியும்.

'அரசி ஏன் இப்படி செய்கிறாள்?' என்று நினைத்தவனுக்கு குழப்பமாய் இருந்தது. எதுவாக இருந்தாலும் நண்பனின் காதில் போட்டு விடுவது நல்லது என்று காந்தனிடம் எல்லா விசயத்தையும் ஒன்றுவிடாமல் கூறிவிட்டான். இதை கேட்ட காந்தனுக்கும் குழப்பமே மிஞ்சியது. கடைசியில் அறிவிடம் அவளின் அலைப்பேசி எண்ணை கேட்டு வாங்கியவன் அவளுக்கு அழைத்தான்.

புரியாத எண்ணில் இருந்து வந்த அழைப்பை எடுப்பதா? வேண்டாமா? என்று அவள் யோசிக்க... அலைப்பேசி ஒலி நின்று ஒரு நிமிடம் கழித்து மீண்டும் அழைத்தது. 'யாராக இருக்கும்?' என்று யோசித்து கொண்டே எடுத்து காதில் வைத்தாள்.

"நான் காந்தன் பேசறேன்... உங்க கிட்ட நான் பேசணும்" நேரே விசயத்துக்கு வந்தான் காந்தன். அவனின் குரல் கேட்டு அவளது உடல் ஒரு முறை சிலிர்த்து அடங்கியது.

"ம்... பேசலாம்... எங்கே வரணும்?" அவள் குரல் மென்மையாய் ஒலித்தது.

அவன் யோசிக்க எடுத்து கொண்ட அந்த ஒரு நிமிடத்தில் அவளே அவனிடம் பேசினாள். "இன்னும் அரை மணி நேரத்தில் உங்க கடைக்கே வந்து உங்களை பிக்கப் பண்ணிக்கிறேன்" அவள் சொல்லவும் அவன் மறுபேச்சு பேசாமல் "ம்..." என்றதோடு அலைப்பேசியை துண்டித்தான்.

அவனின் சுருக்கமான பேச்சு எதையும் உணரும் மனநிலையில் அவள் இல்லை.

அவனை முதன்முறையாய் பார்க்க போவது போன்று என்ன உடை அணிவது என்று தன் அலமாரியை திறந்து வைத்து கொண்டு முழித்தாள். பிறகு ஒரு மனதாய் அடர் பச்சை நிற ஷிபான் சேலையை எடுத்தாள். சேலையை உடுத்தி கொண்டு அதற்கு பொருத்தமாய் அணிகலன் அணிந்து கண்ணாடியில் முன் நின்று பார்த்தாள். வெகு கவனமாய் செய்த அலங்காரம் அவளின் அழகை மேலும் கூட்டி காட்டியது. உற்சாகமாய் காரை எடுத்தவள் அடுத்த கால் மணி நேரத்தில் அவன் கடை முன் வந்து நின்றாள்.

கடையின் முன்பு நின்று கொண்டிருந்த அவனை கண்டதும் கார் கண்ணாடியை இறக்கியவள், அவனை பார்த்து, “ஹாய்...” என்று கையசைக்க... அவனோ பதிலுக்கு கையசைக்காமல் காரின் பக்கம் வந்தான்.

“காரில் ஏறிக்கோங்க... வேற எங்கேயாவது போய் பேசலாம்” அவள் சொன்னதும் அவனுக்கும் அது தான் சரியென்று பட்டது. ஒன்றும் பேசாமல் கார் கதவை திறந்து உள்ளே ஏறி அமர்ந்தான்.

அவன் அமர்ந்ததும் காரை எடுத்தவள் அவனின் முகத்தை ஓரக் கண்ணால் பார்த்தாள். எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பாறை போல் அவன் முகம் இறுகி இருந்தது கண்டு அவளும் யோசனையில் ஆழ்ந்தாள்.

திருநெல்வேலியில் இருந்து செவ்வந்திபட்டி செல்லும் சாலையில் அவள் கார் பறந்தது. அங்கிருந்த மண் குன்று வந்ததும் காரை ஒரு ஓரமாய் நிறுத்தியவள் அவன் முகத்தை பார்த்தாள்.

“இப்போ சொல்லுங்க... என் கிட்ட என்ன பேசணும்?” சாவகாசமாய் கேட்டவளை ஆத்திரமாய் உறுத்துப் பார்த்தான் காந்தன். ஆனாலும் முயன்று தன்னை கட்டுப்படுத்தி கொண்டு,

“ஏன் எல்லார் கிட்டேயும் இப்படி சொல்லி இருக்கீங்க?” அவன் எதை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை... அவளும் எதை என்று கேட்கவும் இல்லை.

அப்போது அவள் தன் மனதில் இருந்த காதலை அவனிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள்... ஆனால் அவளுக்கு குரலே எழும்பவில்லை. ஏனோ தயக்கமாக இருந்தது. இருந்தாலும் சொல்லித்தான் ஆக வேண்டும். பேச வேண்டும் என்று வந்துவிட்டு இப்படி பேசாமல் இருப்பது நல்லதல்ல என்று எண்ணியவள்,

“நா... நான் உங்களை காதலிக்கிறேன்...” ஆரம்பத்தில் தயங்கினாலும் முடிக்கும் போதும் தெளிவாய் முடித்தாள்.

அவளின் வார்த்தையை கேட்டு நம்ப முடியாதவனாய்... ஜீரணிக்க இயலாதவனாய் அவன் அமர்ந்திருந்தான். அதிலும் அவள் தன் புடவை முந்தானையை திருகி கொண்டு, முகமெல்லாம் சிவக்க அவள் அமர்ந்திருந்த தோற்றம் அவள் பொய் கூறவில்லை என்று உறுதியாய் கூறியது. அவன் தன்னை சுதாரித்து கொண்டு,

“நீங்க என்னை இதுல இழுத்து விடுறது சரியில்ல...” அவன் முடிக்கும் முன்னே,

“ஏன்... உங்களுக்கு என்னை பிடிக்கலியா?” பாவம் போல் அவனை பார்த்து பரிதாபமாய் கேட்டாள் அவள். அழகின் மொத்த உருவமாய் இருந்தவளை யாருக்கு தான் பிடிக்காது என்று மனதுக்குள் நினைத்து கொண்டவன் தன் எண்ணத்திற்கு முற்று புள்ளி வைத்து விட்டு,

“உங்களை போய் பிடிக்கலைன்னு சொன்னா அவனுக்கு கண் இல்லைன்னு தான் அர்த்தம். ஆனா நீங்க எதுக்கு என்னை போய் காதலிக்கணும்? வாழ்க்கையை எப்பவும் போல விளையாட்டா எடுத்துக்காதீங்க. போங்க போய் உங்க அப்பா அம்மா பார்க்கிற பையனை கல்யாணம் பண்ணிக்கோங்க. உங்க கல்யாணத்துக்கு ஃபோட்டோ எடுக்க என்னை மறக்காம கூப்பிடுங்க”, ‘என் தகுதி

இவ்வளவு தான்...' என்பதை அவன் அவளுக்கு சொல்லாமல் சொன்னான்.

"நான் விளையாடல... உண்மையா தான் சொல்றேன்... என்னை நான் நிரூபிக்கிறதுக்கு... நான் என்ன செய்யணும்?" அவளின் குரலில் இருந்த தீவிரம் அவனுக்கு புரிய... என்ன செய்வது? என்று தெரியாமல் விழித்தான். பிறகு நிமிர்ந்து அமர்ந்து,

"எனக்கு வேறு பொண்ணோட நிச்சயம் முடிஞ்சிருச்சு..." அலுங்காமல் அணுகுண்டை தன் தலை மேல் போட்டவனை அவள் நம்ப முடியாமல் பார்த்தாள்.

"இல்ல... என்னை தவிர்க்கிறதுக்காக நீங்க பொய் சொல்றீங்க..." அவள் குரலில் பதட்டம் அப்பட்டமாய் தெரிந்தது.

"உண்மையா தான் சொல்றேன். இதுல போய் பொய் சொல்ல என்ன இருக்கு. என் தங்கச்சியோட நாத்தனாரை தான் எனக்கு பேசி முடிச்சிருக்காங்க" அவன் தெளிவாய் கூற... அவள் கண்களில் குளம் கட்டியது.

ஆழ பெருமூச்செடுத்து அவள் தன்னை சமன்படுத்த முயன்றாலும் அவள் கண்களின் கண்ணீரை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. அது அவள் கன்னங்களில் இறங்கி கைகளில் பட்டு தெறித்தது. அவளின் கண்ணீர் அவனையும் ஏதோ செய்திருக்க வேண்டும்.

"ப்ளீஸ் அழாதீங்க... நீங்க அழுற அளவுக்கு ஒண்ணும் நடக்கல"

"நான் அழல... நான் அழல... நான் அழுதா உங்களுக்கு பிடிக்காதுல்ல.." சொல்லியவாறு அழுத கண்களை துடைத்து கொண்டவள் முயன்று சிரிக்க முற்பட்டாள். அவள் உதடுகள் சிரித்தாலும் கண்கள் கலங்கி இருப்பது அவனுக்கு தெளிவாய் தெரிந்தது. அதை கண்டு அவனுக்கும் உள்ளுக்குள் என்னமோ மாதிரியாக இருந்தது.

“ஓகே... உங்களுக்கு நிச்சயம் ஆயிருச்சு ஓகே... நீங்க உங்க வாழ்க்கையை வாழுங்க. ஆல் த பெஸ்ட்...” என்று அவனை வாழ்த்தியவள், “ஆனா அதுக்காக நான் உங்களை காதலிக்க கூடாதுன்னு ஒரு சட்டமும் இல்லையே...அதே மாதிரி நீங்க என்னை காதலிக்கணும்ன்னு நான் சொல்லலையே...” என்றவளை பார்த்து,

“பைத்தியமா உனக்கு... கொஞ்சமாவது அறிவு இருக்கா உனக்கு? அடுத்தவளுக்கு கணவனாக போகிறவன் கிட்ட போய் இப்படி காதலிக்கிறேன்னு சொல்றீயே... உனக்கு வெட்கமா இல்ல...” அவன் சீறலாய் கேட்க,

“நீங்க இன்னும் அடுத்தவ புருசனா ஆகலையே... அது ஆகும் போது பார்த்துக்கலாம்” என்று அலட்சியமாய் சொன்னவள், “என்ன சொன்னீங்க எனக்கு வெட்கம் இல்லையா? இல்லை கொஞ்சம் கூட இல்ல...” என்றவள் அவனின் சட்டை காலரை இறுக பற்றி தன் அருகே இழுத்தவள் அவன் கண்களுக்குள் தன் கண்களால் உற்று நோக்கினாள். சட்டென்று அவன் எதிர்பாராத விதமாக அவனின் இரு கன்னத்தில் தன் இதழ்களை அழுத்தமாய் பதித்தாள்.

அவளின் அருகாமையில் அவனின் மனமும் கண நேரம் மயங்க தான் செய்தது. அவன் வாழ்நாளில் பார்த்தறியாத அழகுடன் ஒரு பெண்... அதுவும் இவ்வளவு நெருக்கத்தில் அவன் அருகில் இருப்பதை அவனால் நம்ப முடியவில்லை. அதிலும் மயிலிறகு போல் தீண்டிய அவள் இதழ் ஒற்றல் அவனை எங்கெங்கோ இழுத்து சென்றது. எல்லாம் சில நொடி தான்... தன் நிலை உணர்ந்து தன்னை மீட்டு கொண்டவன் அவளை உதறி தள்ளினான்.

“உண்மையில் நீ பைத்தியம் தான்டி... எக்கேடோ கெட்டுப் போ...” என்றவன் கார் கதவை திறக்க போனான். அவனின் கையை பிடித்து தடுத்தவள், அவன் முகத்தை வேகமாய் தன் பக்கமாய் திருப்பியவள் கண்ணிமைக்கும் நேரத்தில் அவனின் இதழில் தன் முத்திரையை ஆழமாய் பதித்தாள்.

சில மணி துளிகள் வேகமாய் கரைய நிதானமாய் அவனிடமிருந்து விலகியவள்,

“இப்போ புரிந்திருக்குமே உங்க மேல நான் எந்தளவு பைத்தியம்ன்னு…” சிரித்தபடி கூறியவளை கோபமாய் முறைத்தவன் கார் கதவை திறந்து கொண்டு இறங்கினான்.

“போங்க ரூபன்… எவ்வளவு தூரம் தான் என்னிடம் இருந்து விலகி போவீங்கன்னு நானும் பார்க்கிறேன். என் காதலுக்கு சக்தி இருந்தா… ஒரு நாள் இல்ல ஒரு நாள் அது உங்களை என்னிடம் கொண்டு வந்து சேர்க்கும்…” அவள் கத்தி சொல்லி கொண்டிருக்கும் போதே… அங்கே ஆட்டோ ஒன்று வர அதை கையை காட்டி நிறுத்தியவன் அவளை திரும்பியும் பாராமல் அதில் ஏறி சென்றான்.

அவன் போன திசையை வெறித்து பார்த்து கொண்டிருந்தவள் கண்களின் கண்ணீர் நிற்காமல் வழிந்தோடியது. அந்த கணம் அவளுக்கு ஒன்று மட்டும் நன்றாக புரிந்தது… தன் காதலுக்காக தன் வீட்டினரிடம் மட்டும் தான் போராட வேண்டி இருக்கும் என்று எண்ணி இருந்தவளுக்கு… தன் காதலுக்காக தன் காதலனிடமும் போராட வேண்டியிருக்கும் என்ற உண்மை அவளுக்கு அப்போது தான் உரைத்தது. கானல் நீராய் காட்சியளிக்கும் தன் காதலுக்காக நட்ட நடு வீதியில் யாரும் கேட்பாரற்று உடல் குலுங்க தேம்பி தேம்பி அழுது கொண்டிருந்தாள் அந்த செல்வ செல்ல மகள்.

அதிகாலை காற்றில் அங்குமிங்கும் நர்த்தனமாடிய பச்சை பசேலென்று இருந்த வயல்வெளிகளை ரசித்தபடி காலைநேர நடைப்பயிற்சியை தொடர்ந்தான் காந்தரூபன். திருநெல்வேலி டவுனில் இருந்து தச்சநல்லூர் செல்லும் சாலையில் தான் அவன் எப்போதுமே நடைப்பயிற்சி மேற்கொள்வது. புறவழிச் சாலை வந்துவிட்ட காரணத்தால் இந்த சாலையில் போக்குவரத்து வெகுவாய் குறைந்து போனது. அதிலும் இந்த மாதிரி அதிகாலை நேரத்தில் வாகன போக்குவரத்து என்பது சுத்தமாய் இருக்காது.

பக்கவாட்டில் இருந்த இயற்கை காட்சியை பார்த்து கொண்டு வந்தவன், ஏதோ தோன்ற சாலையில் தன் கண்களை பதித்தான். அவன் உள்ளுணர்வு பொய்க்கவில்லை என்பது போல... வசீயரசி காரில் சாய்ந்தபடி அவனையே பார்த்து கொண்டு நின்றிருந்தாள்.

‘இவள் எங்கே இங்கே? நமக்கு ஏழரையை கூட்டி விடாம போக மாட்டா போலிருக்கே... காந்தா எதுக்கும் அவ கிட்ட உசாரா இரு’ அவன் மனம் அவனை எச்சரித்தது.

“ஹாய் ரூபன்...” அவளின் ரூபன் என்றழைப்பு கேட்டு ஒற்றை புருவத்தை தூக்கி ஆச்சிரியமாய் அவளை பார்த்தவன் ஒன்றும் பேசாமல் மேலே நடந்தான்.

அவன் பேசாததை அவள் கண்டு கொண்டது போல் தெரியவில்லை. அவனுக்கு சமமாய் வேகநடை நடந்து அவனுடன் இணைந்து நடந்தவள், “குட்மார்னிங்...” என்று சொல்லி அவனை பார்த்து புன்னகைத்தாள். அவளின் புன்னகையும், காலை வணக்கமும் தன்னை பாதிக்கவில்லை என்பது போல் அவளை கண்டு கொள்ளாமல் நடந்தான்.

“குட்மார்னிங் சொன்னா... பதிலுக்கு குட்மார்னிங் சொல்லணும். இப்படி உம்ன்னு வர்றது பேட் ஹாபிட்” அதற்கும் அவனிடத்தில் பதில் இல்லாது போகவும் அவளும் மௌனமாய் அவனுடன் நடந்தாள்.

“நீங்க அந்த பொண்ணை காதலிக்கிறீங்களா?” திடுமென அவள் அப்படி கேட்டதில் அவன் அதிர்ந்து போய் அப்படியே நின்றுவிட்டான்.

“என்ன சொன்ன... நான் காதலிக்கிறேனா? யாரை?” புரியாமல் அவன் கேட்க... அவனின் அறியாமையில் அவளுக்கோ கோடி பூக்கள் தன் மேல் கொட்டியது போல் சுகமாய் இருந்தது.

“உங்களுக்கு நிச்சயித்த பொண்ணை உங்களுக்கு...” பேச்சில் கூட அவனை அடுத்தவளோடு இணைத்து பேச முடியாமல் அவளின் காதல் கொண்ட மனம் தவித்தது.

“இல்ல... கல்யாணத்துக்கு முன் எந்த நினைப்பும் வச்சுக்கிறது இல்ல...” அவன் நினைத்திருந்தால்... ‘ஆம் அவளை காதலிக்கிறேன்... நீ என்னை விட்டு விலகிவிடு’ என்று பொய் கூறி அவளை தவிர்த்து இருக்கலாம். அவனுக்கு சட்டென்று பொய் கூற வரவில்லை.

தன்னை போலவே அவனும் சிந்தித்து இருக்கிறானே என்று நினைத்தவளுக்கு இருவரின் ஒத்த மனம் கண்டு உள்ளுக்குள் தித்தித்தது. ஒரு மனம் படைத்த இருவரும் வாழ்வில் ஒன்றானால் அது அல்லவா வசந்தம். அந்த வசந்தத்தை அவன் தனக்கு தருவானா? என்று அவள் மனம் ஏங்கியது.

“நீங்க ஏன் என்னை புரிஞ்சிக்க மாட்டேங்கிறீங்க?” மெதுவான குரலில் கேட்டவளை விசித்திரமாய் பார்த்தான் அவன்.

“அந்த பொண்ணு என்னை விட அழகா?” அழகின் மறு உருவமாய் இருந்தவள் அவனை பார்த்து அப்படியொரு கேள்வியை கேட்டாள்.

அழகில், பணத்தில், படிப்பில் என்று எதிலுமே தேவி, அரசியின் அருகில் நிற்க முடியாது என்பது அவனுக்கு சர்வ நிச்சயமாய் தெரியும். அதிலும் குணம்... அரசியின் குணத்துக்கும் தேவியின் குணத்துக்கும் ஏணி வைத்தாலும்

எட்டாது. அரசி ஆரம்பத்தில் திமிர் பிடித்த பெண்ணாக அவன் எண்ணியிருந்தாலும், போக போக... அவளின் மறுப்பக்கம் அவனுக்கு தெரிய ஆரம்பித்து அவளின் நல்ல குணங்கள் அவனுக்கு தெரியலானது.

தேவியிடம் இவ்வளவு பணம் இருந்தால்... அவளை கையில் பிடிக்க முடியாது. தேவியின் மற்ற குணநலன்கள் அவனுக்கு நன்கு தெரியும் தான்... ஆனாலும் தங்கைகளின் நலன் கருதியே அவளை மணம் முடிக்க சம்மதித்தான். ஆக மொத்தம் அவன் வீட்டினரின் திருப்திக்காக தான் இந்த திருமணம்.

எல்லாம் சரி தான்... தேவி அவனின் எளிமையான வாழ்க்கையை நன்கு புரிந்து கொண்டு அவனுடன் அனுசரித்து வாழ கூடியவள். ஆனால் இந்த அரசி பிறந்ததில் இருந்து பணத்தில் புரள்பவள்... அவள் எப்படி தனக்கு வாழ்க்கை துணையாக வர முடியும்? அதிலும் அன்று அவள் அவன் ஏழ்மையை இகழ்ந்து பேசியது இன்று அவனுக்கு நியாபகம் வந்து... அவன் முகத்தை இறுக செய்தது. தன் நடையை நிறுத்திவிட்டு அவளை வெறித்து பார்த்தவன், மேலே பேசலானான்.

“நீங்களும் நானும் எப்போ பார்த்தாலும் சண்டை கோழி மாதிரி சண்டை போட்டு கொள்வோம்! இப்போ என்ன திடீர்ன்னு வந்து காதல்ங்கிறீங்க? ஒருவேளை அன்னைக்கு நான் காப்பாத்தியதால் உங்களுக்கு என் மேல்... அதாவது இந்த சினிமாவில் எல்லாம் காட்டுவாங்களே அந்த மாதிரி காதல் வந்துவிட்டதா...? அப்படின்னா இது சாதாராண இனக்கவர்ச்சி தான். நாளாக நாளாக உங்களுக்கு அந்த நிகழ்ச்சியும் மறந்து விடும். உங்கள் நினைவில் இருந்து நானும் மறைந்து விடுவேன்” நிதானமாய் அவளுக்கு புரியும் வகையில் வாழ்வின் நிதர்சனத்தை எடுத்து கூறினான்.

அவனின் தாயாரின் வளர்ப்பு, தங்கைகளுடன் சேர்ந்து வளர்ந்ததால் இயல்பாகவே அவனுடன் ஒட்டி கொண்ட பெண்களை மதிக்கும் குணம் எல்லாம் சேர்த்து

அவளிடத்திலும் அவனை கோபப்பட வைக்காமல் பொறுமையாய் பேச செய்தது.

அவனின் பேச்சு அவளுக்கு ஆச்சிரியத்தை அளித்தது. தானாக வலிய வந்து மேலே விழுவது போல் தான் பழகியும்... அதை தனக்கு சாதகமாக எடுத்து கொண்டு அவளுடன் பழக நினைக்காமல்... இந்த காதலில் உள்ள எதார்த்தத்தை எடுத்து பேசிய அவன்... அவள் மனதில் இமயமாய் உயர்ந்து நின்றான்.

“இல்லை... அப்படியெல்லாம் இல்ல...” அவசரமாய் அவன் கூற்றை அவள் மறுத்தாள்.

“அப்படி இல்லைன்னா வேற எப்படி? உங்க வீட்டில் உள்ளவங்க பேசியதுக்காக... அதை உண்மையாக்கணும் நீங்க இப்படி நடந்துக்கிறீங்களா?”

“அதுவும் காரணம் தான்...” மறைக்காமல் உண்மையை ஒத்து கொண்டவளை கொலை வெறியுடன் பார்த்தான் அவன்.

“நீங்க விளையாடுறதுக்கு நானா கிடைச்சேன்...?” கோபமாய் அவளை பார்த்து தன் குரலை உயர்த்தினான். அவன் கோபப்பட்டதில் அவள் கண்கள் கலங்கியது. ஆனால் அவனுக்கு தெரியாமல் இமைகளை தாழ்த்தி அதை மறைத்து கொண்டாள்.

“அது ஒரு காரணம் தான்... அதை நான் மறுக்கல... அதுக்கு பின்னாடி ரொம்ப நேரம் யோசிச்ச பின் தான் ஒரு உண்மை எனக்கு புரிஞ்சிச்சு...” என்று நிறுத்தியவள், ‘நான் சொல்வதை... நீ புரிந்து கொள்வாயா?’ என்று தவிப்பாய் பார்த்தாள்.

என்னே ஆச்சிரியம்! அவளின் கண்களில் மொழியின் அர்த்தத்தை அவனின் கண்கள் புரிந்து கொண்டு... அதை அவனின் இதயத்திற்கு அனுப்பியது. ‘மேலே சொல்...’ என்பது போல் அவன் அமைதியாய் அவளை பார்த்தான்.

“அதாவது முதன் முறையாய் உங்களை பார்த்த போதே... நீங்க என்னை பாதிச்சு இருக்கீங்கன்னு புரிஞ்சது. அந்த நொடியில் இருந்து என் மனசு பூரா நீங்க ஆக்கிரமிச்சு இருக்கீங்க... நான் சொல்றதை நீங்க நம்புறீங்களா?”

“நான் நம்புறது இருக்கட்டும்... நீங்க என்னென்னமோ சொல்றீங்க அதை தான் என்னால் நம்ப முடியல... இப்போ மட்டும் என் ஸ்டேடஸ் மாறியிருச்சா என்ன? இப்பவும் நான் அதே ஃபோட்டோகிராபர் காந்தன் தான்... அதே வக்கில்லாத காந்தன் தான். நீங்க காதலிப்பதால மட்டும் என் நிலைமை மாறிடல” அவள் அன்று கூறியதை அவன் இன்று அவளுக்கு எடுத்து கூறினான். அதில் கிண்டல் ஏகத்துக்கும் இருந்தாலும் அவன் நிஜத்தை தான் கூறினான்.

“அய்யோ... அன்னைக்கு நான் உங்களை ஹர்ட் பண்ணியிருந்தா... ஐயம் ரியலி சாரி... அன்னைக்கு இருந்த அரசி... இன்னைக்கு இல்ல. அதை மட்டும் நிச்சயமாய் என்னால் சொல்ல முடியும்” அவன் கையை பிடித்து கொண்டு மன்னிப்பு கேட்டவள் முகத்தில் தெரிந்த வேதனையில் அவன் ஒரு கணம் பிரமித்து போனான்.

இது என்ன மாதிரியான காதல்? அவனுக்கே அது புரியவில்லை. இத்தகைய காதலை அவள் தன் மேல் வைக்கும் அளவுக்கு தான் தகுதியானவன் தானா? என்றும் அவனுக்கு தெரியவில்லை. நடுவீதியில் தன் கையை பிடித்து கொண்டு மன்னிப்பு கேட்பவளை கண்டு அவனின் இதயம் கனமானது. அவனை காதலிப்பதாய் சொல்லி கொள்ளும் தேவியின் கண்களில் கூட அவன் இத்தகைய காதலை கண்டது இல்லை. அரசியின் காதலை என்ன சொல்லி தவிர்ப்பது... மறுப்பது? என்று முதன் முறையாக திகைத்து தடுமாறி நின்றான்.

இருந்தாலும் அவளின் காதலை ஏற்று கொள்ளும் அளவுக்கு தனக்கு தகுதியில்லை என்று உறுதியாய் நம்பினான். அவளே இந்த காதலை தூக்கி எறிந்து விட்டு போவதற்கு என்ன வழி? என்று யோசித்தவனுக்கு ஒரு

திட்டம் பளிச்சிட்டது. அதனை செயலாற்ற எண்ணியவன் தன் கையை அவள் பிடியிலிருந்து உருவி கொண்டு,

“நீங்க காலையில் பத்து மணிக்கு என் வீட்டுக்கு வர முடியுமா?” முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் கூறியவனை புரியாமல் பார்த்தாள்.

“எதுக்கு…?” யோசனையாய் அவள் கேட்டாள்.

“எதுக்கா… இது என்ன கேள்வி? நீங்க வாழ போற வீட்டை… நீங்க பார்க்க வேணாமா?” அவன் குரல் ஒரு மாதிரியாய் ஒலித்தது.

“நிச்சயமாய்… பார்க்கணும்” அவன் தன் வீட்டிற்கு அழைத்தது அவளுக்கு சந்தோசமாயிருந்தது. அந்த சந்தோசத்தில் அவனின் குரலில் இருந்த பேதத்தை அவள் கவனிக்க தவறிவிட்டாள்.

“அப்போ சரி… நீங்க கிளம்புங்க… பத்து மணிக்கு சந்திக்கலாம்… என் வீட்டில்” என்றவன் அவனின் முகவரியை அவளிடம் கூறினான். அதை அவள் தன் ஐபோனில் குறித்து கொள்வதை எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பார்த்து கொண்டிருந்தான்.

“பை ரூபன்…” சந்தோச மிகுதியில் கையசைத்து விடை பெற்றவளை வெறித்து பார்த்தவாறு நின்றிருந்தவன் மனம்… அடுத்து என்ன செய்ய வேண்டும்? என்பதை வேகமாய் யோசித்தது.

**********************************************

திருநெல்வேலி டவுனில் இருந்த அக்ரஹார வீடுகள் நிறைந்த அந்த பகுதியில் தன் காரை நிறுத்திய வசீயரசி… காந்தன் கொடுத்த முகவரியை எப்படி கண்டு பிடிப்பது? என்று தெரியாமல் விழித்தாள். பிறந்தது முதல் இதே திருநெல்வேலியில் தான் அவள் இருக்கிறாள். ஆனால் இந்த மாதிரி ஒரு இடத்தை இப்போது தான் முதன் முறையாய் பார்க்கிறாள். இப்படியொரு இடத்திற்கு அவள் வாழ்நாளில் அவள் வந்தது கிடையாது.

காரை விட்டு இறங்கியவள் அதை பூட்டிவிட்டு தெருவில் இறங்கி நடந்தவள் அங்கிருந்த டீக்கடைக்காரரிடம் காந்தனின் முகவரியை கூறி விசாரித்தாள். அவர் இடத்தை சுட்டி காட்டவும், அவருக்கு நன்றி கூறியவள் அவனின் வீடு நோக்கி நடந்தாள். சற்று குறுகலான சந்தில் தான் அவன் வீடு இருந்தது. அந்த பாதையில் ஆங்காங்கே சிறுநீர் கழித்து இருந்ததால்... அதிலிருந்து வந்த துர்நாற்றம் அவளுக்கு குடலை புரட்டியது. கைக்குட்டையால் மூக்கை மூடி கொண்டவள் அவனின் வீட்டின் எண்ணை சரி பார்த்து அதன் முன் போய் நின்றாள்.

அவளின் வருகையை எதிர்பார்த்து காந்தன் தன் வீட்டின் முன் இருந்த தார்சாவில் அமைதியில்லாமல் அமர்ந்திருந்தான். அவனின் இந்த முயற்சி சரி வருமா? என்ற குழப்பமே அவனின் மனதை ஆக்கிரமித்திருந்தது.

“ரூபன்...” இனிமையாய் வந்த அவளின் குரலில் அவன் வாசலை நோக்கினான்.

வீட்டு வாசலில் தேவதை போல் நின்றிருந்தவளை கண்டு கண்ணிமைக்க மறந்து அப்படியே அமர்ந்திருந்தான். மேக வண்ண ஷிபான் சேலை அவள் உடலோடு ஒட்டி தழுவியிருக்க... தலையை தளர பின்னி பூச்சூடி, அரக்கு நிற வட்ட பொட்டு வைத்து அதன் அடியில் சிறு கீற்றலாய் குங்குமம் வைத்து அதிக ஒப்புனை செய்யாத முகத்துடன் அவள் இருந்த விதம் அவன் மனதுக்கு இதமாக இருந்தது. இந்த இதம் எதற்காக என்று அவனுக்கு தெரியவில்லை.

“உள்ளே வரலாமா?” அவள் கேட்கவும் தான் அவன் தன் சுயநினைவுக்கு வந்தவன் வேகமாய் எழுந்து வாயில் நோக்கி சென்றான்.

“வாங்க... வாங்க...” வலிய வரவழைத்து கொண்ட உற்சாகத்துடன் அவளை வரவேற்றான்.

காந்தன் தன்னை கண்டதும் பிரம்மித்ததை கண்டவளுக்கு மனதுக்குள் உற்சாகம் குமிழிட்டது. அதே உற்சாகத்துடன்

வெகு ஜாக்கிரதையாய் வலது காலை எடுத்து வைத்து உள்ளே நுழைந்தாள்.

“உட்காருங்க…” அங்கிருந்த பிளாஸ்டிக் நாற்காலியில் அவளை அமர சொன்னான்.

“ம்…” என்றவள் அவன் சொன்னதை செய்தாள்.

“இருங்க… அம்மாவையும், தங்கச்சியையும் கூட்டிட்டு வர்றேன்…” என்றவன் அவளின் அனுமதி பாராது உள்ளே சென்றான்.

அரசி கண்களை சுழற்றி அந்த இடத்தை பார்த்தாள். அவளின் படுக்கையறையை விட பல மடங்கு சிறியதாய் இருந்த அந்த தார்சா பகுதி அவளுக்கு விந்தையாய் இருந்தது. இப்படிப்பட்ட வீடுகளிலும் மக்கள் வசிக்க தான் செய்கிறார்கள் என்று ஆச்சிரியமாய் நினைத்து கொண்டாள். இனி இது தான் அவளின் புகுந்த வீடு என்று நினைக்கும் போது உள்ளுக்குள் ஏதோ ஒருவித புது உணர்வு அவளை தாக்கியது.

“வாம்மா… வா…” என்று வரவேற்றபடி அங்கு வந்தார் காவேரி. அவரை தொடர்ந்து கார்த்திகாயும் வந்தாள். காவேரியை கண்டதும் அவசரமாய் எழுந்த அரசி வேகமாய் அவர் அருகில் வந்து அவரின் காலில் விழுந்தாள்.

“அய்யோ… பார்த்தா பெரிய இடத்து பொண்ணு மாதிரி இருக்குற… நீ எதுக்கும்மா என் காலில் எல்லாம் விழுந்துட்டு?” காவரி மனம் பதறியவராய் அவளை கை கொடுத்து தூக்கிவிட்டார். அவளின் இந்த செயலை காந்தன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவன் மனதில் அவள் ஒரு படி உயர்ந்து தான் போனாள். ஆனாலும் அதற்காக…? தன் தலையை குலுக்கி தன்னை சமன் செய்தவன் அன்னைக்கு அவளை அறிமுகப்படுத்தினான்.

“அம்மா… இவங்க வசீயரசி… நம்ம அறிவுக்கு தங்கச்சி முறை வேணும். அவங்க காலேஜில் ஏதோ ப்ராஜெக்ட் பண்றாங்களாம்… அதுக்காக நடுத்தர குடும்ப வாழ்வை

பற்றி தெரிஞ்சிக்க வந்திருக்காங்க" ஏதோ வாய்க்கு வந்ததை சொல்லி சமாளித்தான். அரசி அவன் சொன்னதை கேட்டு ஆச்சிரியமாய் விழி விரித்து அவனை பார்த்தாள்.

"அப்படி எல்லாமா படிப்பு இருக்குது?" வெள்ளேந்தியாய் கேட்ட காவேரி, "அதுக்கு என்னம்மா... தாராளாமா இங்கே இருந்து... உனக்கு வேண்டியதை தெரிஞ்சிக்கோ..." தன் சம்மதத்தை சொன்னார். படிப்பறிவு இல்லாத அந்த தாய் மகன் கூறியதை அப்படியே நம்பிவிட்டார். கார்த்திகாவோ கண்ணில் சந்தேகத்துடன் அண்ணனை பார்த்தாள்.

"நீங்க தான் கார்த்திகாவா?" என்று கேட்டு அவள் கைகளை பிடித்து கொண்டு பேசிய அரசியை கண்டதும் அவளின் சந்தேகம் பின்னுக்கு தள்ளப்பட்டது. அவளும் அரசியிடம் சந்தோசமாய் பேசலானாள்.

"உங்க வீட்டில் குட்டி பையன் பிறந்திருக்கானாமே..." என்று அரசி கேட்க... கார்த்திகா அவளை அழைத்து கொண்டு உள்ளே சென்றாள்.

"காந்தா... இந்த பொண்ணு ரொம்ப அழகு இல்லடா..." காவேரி அரசியின் அழகை கண்டு பிரமித்தவராய் பேச... காந்தன் ஒன்றும் பேசாமல் தலையை அசைத்தான்.

காந்தன் காஞ்சனா இருந்த அறைக்குள் நுழைந்தவன்... அங்கே குட்டி பையனை கையில் வைத்து கொண்டு அரசி அமர்ந்திருந்த தோற்றம் அவனின் மனதை கவர்ந்தது. மலரின் கையில் இருந்த சாக்லேட்டும், பிறந்த குழந்தைக்கு தேவையான பொருட்கள் அடங்கிய பையையும் கண்டவன் அவள் தான் அதையெல்லாம் வாங்கி வந்திருக்க வேண்டும் என்று அவன் ஊகித்தான்.

"இது எல்லாம் எதுக்கு...?" தயக்கமாய் அவன் அவளை பார்த்து சொல்ல...

"பரவாயில்ல இருக்கட்டும்..." அவனை நிமர்ந்து பார்த்து சொன்னவள் பளிச்சென்று அவனை பார்த்து

புன்னகைத்தாள். அந்த புன்னகையில் அவன் மொத்தமாய் தடுமாறி தான் போனான்.

“அம்மா… நான் வெளியில் போயிட்டு வந்திர்றேன்…” என்றவன் அதற்கு மேல் அங்கு நிற்காமல் வெளியேறி விட்டான்.

ஒரு மணி நேரம் கழித்து வீட்டிற்குள் நுழைந்தவன் மனம் அமைதியாய் இருந்தது. கூடத்திற்குள் நுழைந்தவன் அங்கே யாருமில்லாததை உணர்ந்தான். ‘எங்கே போயிட்டாங்க…?’ மனதில் நினைத்தவன்… தண்ணீர் அருந்துவதற்காக சமையல்கட்டிற்குள் நுழைந்தான். அங்கே அவன் கண்ட காட்சி கண்டு திகைத்து போய் அப்படியே நின்றான்.

வெகுபாந்தமாய் தரையில் அமர்ந்து அரிவாள் மனையில் காய் வெட்டி கொண்டிருந்த அரசியை கண்டு தான் அவன் திகைத்தது. மெதுவே அவள் அருகில் குனிந்தவன்,

“என்னை காதலிச்சா… இந்த மாதிரி கஷ்டம் எல்லாம் நீங்க பட வேண்டியிருக்கும்… இது உங்களுக்கு தேவையா சொல்லுங்க?” காதுக்கருகில் கிசுகிசுப்பாய் ஒலித்த அவன் குரலில் திடுக்கிட்டு போய் திரும்பியவள்… அவனை கண்டதும் ஆசுவாசமானாள்.

“என்ன நான் கேட்டதுக்கு பதிலை காணோம்?” அவன் மீண்டும் கேட்க,

“நீங்க இதுக்காக தானே என்னை இங்கே வரவழைச்சு இருக்கீங்க?” அமைதியாய் அவள் கூற, தன்னை கண்டு கொண்டாளே என்று அவன் முகம் இறுகி கருத்தது.

“இது எல்லாம் ஒரு கஷ்டமே இல்லை…” என்று அவனை பார்த்து கூறியவள், தன் கைகளை பின்னால் விட்டு அவனின் சட்டை காலர் பகுதியை பற்றி தன் அருகில் இழுத்தவள்… அவன் மேல் வாகாய் சாய்ந்து கொண்டு,

“நீங்க என் கூட இருந்தால்… எதுவுமே எனக்கு கஷ்டம் இல்லை. நான் கஷ்டமே உணர கூடாதுன்னா… என்

வாழ்நாள் முழுவதும் என் கூட நீங்க இருப்பீங்களா?"
அவனின் கண்ணோடு கண் கலந்து உயிர் உருக
கேட்டவளை கண்டு... அவனின் உயிரும் மெல்ல... மெல்ல...
உருக ஆரம்பித்தது.

“அரசி…” என்று கார்த்திகா அழைத்ததில் முதலில் சுய உணர்வுக்கு வந்தது வசீயரசி தான். காந்தனின் சட்டையை பற்றியிருந்த கைகளை உடனே விடுவித்தவள்… நல்ல பிள்ளையாய் கறிகாய் நறுக்குவது போல் தலையை குனிந்து கொண்டாள்.

எதிர்பாராத விதமாக அரசி அவனை விடுவிக்கவும்… அவன் தான் பிடிமானம் இல்லாமல் சற்று தடுமாறி போனான். பின்பு ஒருவழியாய் சமாளித்து கொண்டு எழுந்தவன் சமையலறையை விட்டு வேகமாய் வெளியில் வந்தான். அவனின் உடல் மட்டுமா தடுமாறுகிறது… உள்ளமும் அல்லவா தடுமாறுகிறது. அந்த தடுமாற்றத்தை துரத்தும் வண்ணம் தலையை இருபுறமும் குலுக்கி கொண்டவன்… அங்கே நின்றிருந்த தங்கையை கூட கவனிக்காமல் வெளியேறினான்.

கனவில் மிதப்பவன் போல் சுற்று புறம் உணராமல் செல்லும் அண்ணனை வெகு ஆச்சிரியமாய் பார்த்தாள் கார்த்திகா. அவனுக்கு என்னானதோ? என்ற நினைவில் உள்ளே நுழைந்தவள்… அங்கே அரசி காய் வெட்டி கொண்டிருப்பதை கண்டு பதறி போனவளாய், “நீங்க எதுக்கு இதையெல்லாம் செய்துக்கிட்டு இருக்கீங்க? நகருங்க… உங்களை காய் வெட்ட விட்டு இந்த அம்மா எங்கே போனாங்க?” என்றவளை பார்த்து சமாதானமாய் புன்னகைத்தாள் அரசி.

“ஏன் நான் செய்தால் என்ன? அத்… ஆன்டி கடைக்கு போறேன்னு சொன்னாங்க…” அவளுக்கு பதில் அளித்து கொண்டே அரசி தன் வேலையை தொடர, அவளின் தடுமாற்றத்தை கார்த்திகா கவனித்து விட்டாள்.

“உங்களுக்கு இந்த வேலை பழக்கம் இருக்குமோன்னு தான் சொன்னேன்?” என்ற கார்த்திகாவிடம்,

“பழகி கிட்டா போச்சு…” என்றவள், “இந்த ‘ங்க’ வேண்டாமே… ரெண்டு பேருக்கும் ஒரே வயசு தான்

இருக்கும். அதனால வா போன்னே பேசிக்கலாம்” அரசி அவளை பார்த்து கேட்க, அவளின் நட்பில் கார்த்திகாவின் முகமும் மலர்ந்தது.

“அதுகென்ன பேசிட்டா போச்சு” என்றவள் அரசியுடன் இணைந்து கலகலவென பேசி சிரித்தபடி வேலையை பார்த்தாள். கிங்கிணி நாதமாய் ஒலித்த அரசியின் சிரிப்பு சத்தம் காந்தனின் காதில் விழுந்து அவனின் நிம்மதியை குலைத்தது.

தன்னுடைய குடும்ப சூழ்நிலையை பார்த்தாவது அரசி தன் முடிவை மாற்றி கொள்வாள் என்று அவன் நினைத்திருக்க… அவளோ அதை சுகமாய் ஏற்று கொண்டது அவனின் மனதை கலங்கடித்தது. இந்த சிறிய வீட்டிலும் கலகலவென சிரித்து கொண்டிருக்கும் அரசியின் குணம் ஒருபக்கம் அவனுக்கு இதத்தை அளித்தாலும்… மற்றொரு பக்கம் எரிச்சலை மூட்டியது.

‘எதற்காக இவள் என்னை இந்த பாடு படுத்துகிறாள்? எவ்வளவு நிம்மதியாக சென்று கொண்டிருந்தது என் வாழ்வு… என்று இவளை சந்தித்தேனோ அன்றிலிருந்து பிரச்சினை மேல் பிரச்சினை தான். இந்த பாழாய் போன காதல் ரெண்டு குடும்பத்தையும் எந்தளவுக்கு பாதிக்கும்ன்னு அவளுக்கு தெரியவில்லையே? இவளுக்கு என்ன குறை? இவளுக்கு என்ன இல்லை என்று என்னை தொங்கி கொண்டு அலைகிறாள்? நான் எந்த விதத்திலும் இவளுக்கு பொருத்தமாய் இருக்க மாட்டேன்னு இவள் உணரவே மாட்டாளா?’ மனதில் அரசியை வைது கொண்டே கூடத்தில் இருந்த கண்ணாடியில் அவனின் உருவத்தை பார்த்தான்.

மாநிறமாய் சாதாரண தமிழ்நாட்டு குடிமகன்களில் ஒருவனாய் தெரிந்த தன் தோற்றத்தில் அவன் மேலும் குழம்பி கொண்டு அங்கேயே நின்றிருந்தான். ‘என் கூடயிருந்தா இவளுக்கு கஷ்டமே தெரியாதாமே? ம்ஹும்… என்னோடு வாழ்வில் சேர்ந்து நடுத்தர குடும்பங்களில் வரும் ஏற்ற தாழ்வுகளை சந்திச்சா தான் அவளுக்கு

தெரியும்... காதல் எவ்வளவு மோசமான நோயின்னு. நிச்சயம் இந்த பொண்ணுக்கு லூசு தான் பிடிச்சியிருக்கு...' மனதில் சொல்லி கொண்டவன் அத்தோடு அவளின் நினைவுக்கு முற்று புள்ளி வைத்தான்.

நேரே சமையலறைக்கு சென்றவன் அதன் வாயில் நின்று கொண்டு, "க்கும்..." என்று தன் தொண்டையை கனைக்க... அந்த சத்தத்தில் பெண்கள் இருவரும் திரும்பி பார்த்தனர்.

இருகையையும் மார்பின் குறுக்கே கட்டி கொண்டு அறை வாயிலில் இருந்த நிலையின் மீது லேசாக சாய்ந்தபடி அவன் நின்றிருந்த தோற்றம் அரசியின் மனதை அப்படியே அள்ளி கொண்டது. கண்ணிமைக்க மறந்தவளாய் அந்த காட்சியை தன் மனப் பெட்டகத்தில் பத்திரமாக சேமித்து கொண்டாள்.

"போகலாம் வாங்க..." அவளை பார்த்தபடி அவன் சொல்ல... அவளோ புரியாமல் அவனை பார்த்தாள்.

"எங்கே அண்ணா...?" கார்த்திகா தான் அவனிடம் கேட்டாள்.

"அவங்க வீட்டுக்கு தான்ம்மா..." தங்கையிடம் பதில் சொன்னவன், அரசியை கூர்ந்து பார்த்தான்.

"என்ன அண்ணா இது... இப்ப தான் வந்தாங்க... அதுக்குள்ள கூட்டிட்டு போறீயே?" சற்று கவலையுடன் கேட்டாள் கார்த்திகா. 'ம்ஹூம்... இவளையும் கவுத்துட்டாளா?' மனதில் நினைத்தவனுக்கு தூக்கி வாரி போட்டது. 'இவளையும்... அப்படின்னா... என்ன அர்த்தம்? அப்படி என்றால் என்னையும் சேர்த்தா...?' தன் மனம் போன போக்கு கண்டு ஒரு கணம் அவன் அதிர்ந்து தான் போனான். 'இது ஏதுடா வம்பா போச்சு?' என்று மனதுக்குள் சலிப்பாய் உணர்ந்தான்.

"அறிவு ஃபோன் பண்ணினான்ம்மா... அவங்க வீட்டில் அவங்களை தேடுறாங்களாம்" ஏதோ சொல்லி சமாளித்தான்.

‘ஓஹ்... அப்படியா? ஓகே அரசி நீங்க கிளம்புங்க... அடிக்கடி வாங்க...” கார்த்திகா அவளுக்கு விடை கொடுக்க... அரசியோ கந்தனின் நடவடிக்கையில் குழம்பி போய் நின்றிருந்தாள். இருந்தாலும் அவன் சொல்வதை மறுக்க மனம் இல்லாமல் அவன் சொல்படி நடக்க முடிவு செய்தாள்.

“கட்டாயம் வருவேன் கார்த்தி...” அவளிடம் பதில் கூறினாலும் அரசியின் கண்கள் காந்தனின் கண்களை நொடி பொழுதில் சந்தித்து மீண்டது.

“வாங்க போகலாம்...” அவனை பார்த்து கூறியவள், கார்த்திகாவிடம் விடை பெற்று வெளியில் வந்தாள். அப்போது தான் உள்ளே நுழைந்த காவேரியிடமும் அவன் சொன்ன காரணத்தை கூறி அவள் விடை பெற,

“நீ இருப்பேன்னு தான்... பிரியாணிக்கு தேவையான சாமான் வாங்க போனேன்... இப்படி திடீர்ன்னு கிளம்பறியே கண்ணு” அவள் கையை பற்றி கொண்டு அவர் வருத்தப்பட,

“அதனால் என்ன ஆன்டி... அடுத்த முறை வரும் போது கட்டாயம் சாப்பிட்டுறேன்” அவள் சமாதானமாக கூற, அவர் மகிழ்ச்சியாய் தலையாட்டினார்.

எல்லோரிடமும் விடை பெற்றவள் கனத்த மனதுடன் அந்த வீட்டை ஒருமுறை ஏறிட்டு பார்க்க, “போகலாமா?” என்று அவளிடம் கேட்ட காந்தனை எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பார்த்தாள். பின்பு ஒன்றும் பேசாமல் அவள் நடக்க அவளை பின் தொடர்ந்தான் காந்தன்.

மௌனமாய் காரில் ஏற போனவள் ஒரு நொடி தாமதித்து, “உங்க கிட்ட பேசணும்... காரில் ஏறுங்க...” முகம் இறுக அவள் சொல்ல...

“நான் உங்க கூடவா? ம்ஹூம் நான் வர மாட்டேன்...” அன்றைய நினைவில் அவன் மறுக்க... அதை கண்டு அவளுக்கு லேசாக சிரிப்பு வந்தது.

“உங்க கற்புக்கு நான் உத்திரவாதம் தர்றேன் மிஸ்டர். ரூபன்... பயப்படாம வாங்க...” அவள் கிண்டலாய் கூறியது

அவனை சீண்டி விட,

“எனக்கென்ன பயம்? உங்களுக்கே பயமில்லைங்கிறப்போ… எனக்கு என்ன வந்தது?” காட்டமாய் கூறியவன் காரின் மறுபக்கம் ஏறியமர, அவள் காரை எடுத்தாள்.

ஊரை தாண்டி சற்று தொலைவு வந்ததும் அங்கிருந்த மரத்தின் அடியில் காரை நிறுத்தியவள்… சற்று திரும்பி அமர்ந்து அவனை கூர்மையாய் பார்த்தாள். அவள் பார்ப்பது தெரிந்தும் அவன் வேண்டுமென்றே தூரத்தில் மேய்ந்து கொண்டிருந்த எருமை மாட்டை அதி முக்கியமாய் பார்த்து கொண்டிருந்தான்.

“அந்த எருமை மாட்டை விட நான் என்ன அவ்வளவு அசிங்கமாவா இருக்கேன்?” அவனின் அலட்சியத்தில் அவள் கோபமாய் பேச, அவன் நிதானமாய் அவள் பக்கம் திரும்பினான்.

“இதுக்கு நான் என்ன சொல்லணும்ன்னு நினைக்கிறீங்க? நீங்க ரொம்ப அழகா இருக்கீங்கன்னா?” அவனின் வார்த்தைகள் அவளை கூர்மையாய் தாக்கியது.

“நீங்க சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் அழகு தான்…” என்று சிறுபிள்ளையாய் சிணுங்கியவாறு கூறியவளை கண்டு அவன் இதழோரம் சிரிப்பில் துடித்தது. ஆனாலும் முயன்று அடக்கி கொண்டான்.

“நீங்க உங்க மனசுல என்ன தான் நினைச்சிட்டு இருக்கீங்க?”

“நிச்சயமாய் நீங்க இல்லீங்க…” அவன் புன்சிரிப்புடன் பதிலளிக்க,

“ஈ…” என்று உதட்டை காத்து வரை இழுத்து பிடித்து இளித்தவள், “நீங்க சொன்ன ஜோக்குக்கு நான் சிரிச்சிட்டேன் போதுமா?” கடுப்பாய் அவனுக்கு பதில் கூறினாள். அவளின் பதிலில் அவன் தான் கடுப்பானான்.

“எதுக்கு என்னை கூட்டிட்டு வந்தீங்க? முதல்ல விசயத்தை சொல்லுங்க?”

“அதே தான் நானும் கேட்கிறேன்... என்னை எதுக்கு உங்க வீட்டுக்கு வரவழைச்சீங்க? எதுக்கு இப்படி பாதியிலேயே கூட்டிட்டு வந்திட்டீங்க?” அவளின் கேள்விக்கு அவன் பதிலளிக்காமல் மௌனமாய் அமர்ந்திருந்தான்.

“ஏன்னு எனக்கு தெரியும்? உங்க குடும்ப நிலைமையை பார்த்துட்டு நான் உங்களை விட்டு ஒதுங்கி போயிடுவேன்னு நினைச்சு தானே நீங்க என்னை கூப்பிட்டீங்க. என்னை எந்தளவுக்கு சீப்பா நினைச்சுட்டீங்க... மனசுல ஒருத்தனை நினைச்சிட்டு வேற ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு கேவலமானவள் நான் இல்லை”

“உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? எங்க வீட்டில் உங்க கூட இணைச்சு பேசும் போதே... நான் முடிவு பண்ணிட்டேன்... என் வாழ்க்கை உங்க கூட தான்னு. ஏன்னா... வார்த்தையால் கூட நான் கெட்டு போனவள்ன்னு எனக்கு பேர் வந்திற கூடாதுன்னு தான். யாரோட என்னை இணைச்சு பேசினாங்களோ அவங்க கூடவே வாழ்கையை அமைச்சுக்கணும்ன்னு தான் நான் உங்களை தேடி வந்தேன். ஆனா... ஆனா... அதுக்கு அப்புறம் நான் உங்களை மனசார நேசிக்கிறேன்... காதலிக்கிறேன்... என்னை புரிஞ்சிக்கோங்க. நீங்க தான் என் கணவன்னு நான் முடிவு பண்ணிட்டேன்... அப்புறம் எப்படி உங்க குடும்ப சூழ்நிலை பார்த்து நான் என் மனசை மாத்திக்குவேன்னு நீங்க நினைச்சீங்க... உங்களை நேசிக்கும் போதே... உங்க குடும்பத்தையும் நான் நேசிக்க ஆரம்பிச்சுட்டேன். என்னை புரிஞ்சுக்கோங்களேன் ரூபன்” அவன் கையை பற்றி கொண்டு கெஞ்சியவளை கண்டு அவனின் மனமும் இரங்க தான் செய்தது.

“நீங்க சொல்றது எல்லாம் சரி தான்... இருந்தாலும்...?” அவன் முடிக்காமல் நிறுத்த,

“இதுக்கு மேலே நான் என்ன சொல்றதுன்னு எனக்கு தெரியல? ஒருவேளை நான் என்னையே தந்தால்… நீங்க என் காதலை நம்புவீங்களா?” கலங்கிய விழிகளுடன் கேட்டவளை பார்த்து,

“ச்சீ… ச்ச்சீ… என்ன பேச்சு இது? அறிவு கெட்டத்தனமாய் பேசுவதை நிறுத்துங்க” அவளின் பேச்சு கண்டு அவன் அவளை கண்டிக்க,

“அப்படின்னா நான் என்ன தான் செய்யட்டும்… எனக்கு நீங்க வேணும்… பைத்தியக்காரி மாதிரி நான் உங்களை விரும்பறேன்… ஐ லவ் யூ ரூபன்” அவன் மார்பில் சாய்ந்து கதறியவளை… அவனுடைய கைகள் அவனையும் அறியாமல் அவளை ஆதரவாய் அணைத்து தட்டி கொடுத்தது. அவன் முகமோ சிந்தனையில் ஆழ்ந்தது.

அங்கே காந்தனின் வீட்டில் கார்த்திகா அவள் அன்னையிடம், “அம்மா… அண்ணன் எதுக்கு அந்த பொண்ணை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வந்திருக்கும்ன்னு நினைக்கறீங்க?”

“அதான் அவன் சொன்னானே… ஏதோ ப்ராஜெக்ட்ன்னு…” அவர் அப்பாவியாய் சொல்ல,

“அம்மா… எல்லா காலேஜுக்கும் லீவ் விட்டாச்சு… இப்ப போய் ப்ராஜெக்ட்ன்னா கொஞ்சம் இடிக்குதே?”

“அட ஆமாம்… நீ சொல்றதும் கரெக்ட் தான்… அப்படின்னா…” விழிவிரித்து ஆச்சிரியமாய் கேட்டவரை பார்த்து கண்ணமர்த்தி ஆம் என்பது போல் தலையசைத்தவள்,

“நீங்க நினைக்கிறது தான்… நானும் நினைக்கிறேன். அரசி அண்ணனை விரும்பறாளோன்னு தோணுது”

“கார்த்தி… அந்த பொண்ணை பார்த்தா பெரிய இடத்து பொண்ணு மாதிரி இருக்கே… அது எப்படி நம்ம காந்தனை?” அவர் யோசிக்க…

“ஏன்... அண்ணனுக்கு என்ன குறைச்சல்?” ரோஷமாய் கேட்டவள், “ஒருவேளை அண்ணனும் அவளை காதலித்தால் எனக்கு ரொம்ப சந்தோசம் தான்” தன் மகிழ்ச்சியை அவள் வெளிப்படுத்தினாள்.

“அப்போ என் நாத்தனார் கதி? உன் கதி என்னடி ஆகும்?” காஞ்சனா கலக்கமாய் கேட்டாள்.

“அண்ணனுக்கு அரசியை பிடிச்சிருந்தால்... அண்ணனுக்காக என் கல்யாணத்தை நானே நிறுத்திருவேன்... எனக்கு அண்ணன் சந்தோசம் தான் முக்கியம்” கார்த்திகா தீர்மானமாய் சொல்ல...

“நமக்காக எவ்வளவோ சந்தோசத்தை அவன் விட்டு கொடுத்து இருக்கான்... அவனுக்காக நாம விட்டு கொடுக்கிறதுல தப்பில்ல... அவனுக்கு பிடிச்சிருந்தா அதுக்கு குறுக்கே நானும் நிக்க போவதில்லை” சின்ன மகளின் கூற்றை ஆமோதிப்பது போல் காவேரியும் கூற... தாய் மற்றும் தங்கை கூறியதை கேட்டு காஞ்சனாவின் முகம் இருண்டது.

**********************************************

“ஐயா... வணக்கமுங்க...” தன் முன் வந்து நின்ற சூப்பர்வைசரை ஏறிட்டு பார்த்த கரிகாலன், ‘என்ன விசயம்?’ என்பது போல் அவனை பார்த்தார்.

“ஐயா... நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க... நம்ம சின்னம்மாவை ஒரு பையனுடன் பார்த்தேன்” தயக்கமாய் அவன் கூற...

“யாரவது தெரிஞ்ச பையனா இருக்கும்...” மகளை விட்டு கொடுக்காமல் கரிகாலன் பேச,

“இருக்கலாம்... அதுக்காக அவன் வீடு வரை வந்திட்டு போகணும்ன்னு அவசியம் இல்லையே... அந்த மாதிரி இடத்துக்கு எல்லாம் நம்ம சின்னம்மா வரவே கூடாதுங்க. அங்கே சின்னம்மாவை பார்த்ததும் எனக்கு கையும் ஓடல... காலும் ஓடல. நல்லவேளை சின்னம்மா என்னை பார்க்கல”

அவன் கூறியதை கேட்டு அவர் முகம் யோசனையில் ஆழ்ந்தது. “நீ எப்போ அவளை பார்த்த?”

“காலையில் வேலைக்கு வரும் போதுங்க...”

“சரி நீ போ... நான் பார்த்துக்கிறேன். இந்த விசயத்தை யார்கிட்டேயும் சொல்ல வேணாம்”

“என் உசிர் போனா கூட சொல்ல மட்டேங்கய்யா...” விசுவாசமான அந்த வேலையாளின் பேச்சு அவரின் உள்ளத்தை குளிர்விக்க கையில் இருந்த பணத்தை எடுத்து அவர் அவனிடம் கொடுக்க...

“ஐயா வேணாமுங்க... பணத்துக்காக நான் இதை சொல்லல... உங்க மேல உள்ள விசுவாசத்தால தான் சொல்ல வந்தேன்... அப்போ நான் வர்றேங்க...” அவன் விடை பெற... இந்த சிக்கலை எப்படி தீர்ப்பது? என்று அவர் யோசிக்க ஆரம்பித்தார்.

மதியம் நேர உணவுக்கு வீட்டிற்கு வந்தவர், நேரே தன் மகள் முன் வந்து நின்றார். மகளின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியில் அவரும் விசயத்தை ஊகித்துவிட்டார். இனியும் தாமதிக்க கூடாது என்று முடிவு செய்தவர்,

“பாப்பா... இன்னும் ஒரு வாரத்தில் காலேஜில் சேர சொல்லி லெட்டர் வந்திருக்கு. இன்னும் ரெண்டு நாளில் கிளம்ப வேண்டியிருக்கும். அங்கே போய் உனக்கு வேண்டியதை வாங்கி கொடுத்திட்டு... ஹாஸ்டல் எல்லாம் ஓகேவான்னு பார்த்துட்டு உன்னை அங்கே விட்டுட்டு வர நாள் சரியாயிருக்கும்...” அவர் பேச பேச அவள் திகைத்து போய் அமர்ந்து விட்டாள்.

குடும்பத்தை விட்டு தூர போக வேண்டும் என்று விரும்பியவளுக்கு... காந்தனை விட்டு தூர போவது என்பது அவளுக்கு மிகவும் துன்பமாய் இருந்தது. காதல் முக்கியம் தான்... இருந்தாலும் படிப்பும் முக்கியம் தான்... என்ன செய்வது? என்று மனதுக்குள் ரொம்பவும் குழம்பித்தான் போனாள். உண்மையான காதலுக்கு தூரம் என்பது ஒரு

பெரிய விசயம் இல்லை என்பதை உணர்ந்தவளாய் நிமிர்ந்து அமர்ந்தாள். அதிலும் அவள் அழுத போது அவளை அணைத்து ஆறுதல் படுத்திய காந்தனின் செயல் அவளுள் நம்பிக்கை விதையை விதைத்திருந்தது.

“ம்... சரிப்பா...” தான் கூறியதை மறுக்காமல் ஏற்று கொண்ட மகளை சந்தேகமாய் பார்த்தவர் ஒன்றும் பேசாமல் வெளியேறினார்.

*********************************

“வா அறிவு... எப்படி இருக்க?” கரிகாலன் தன்னை பார்க்க வந்த அறிவுமதியை நலம் விசாரித்தார். மகளின் போக்கு அவருக்கு வித்தியாசமாக பட... காந்தனை பற்றி அறிவிடம் பேசுவதற்காக அவனை அவர் அழைத்திருந்தார். நேரே காந்தனிடம் பேசுவது அவரின் கௌரவத்திற்கு இழுக்காக அவர் நினைத்தது தான் அதற்கு காரணமும் கூட.

“நல்லா இருக்கேன் பெரியப்பா...” என்றவனை அமர சொன்னவர், அவன் அமர்ந்ததும், “அப்புறம் உன் பிரெண்ட்... அதான் அந்த ஃபோட்டோஃகிராபர் பையன் எப்படி இருக்கான்?”

காந்தனை பற்றி அவர் கேட்டதும் அறிவுக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது. கரிகாலன் தன்னை வரவழைக்கும் போதே அதில் ஏதோ விசயம் இருக்கிறது என்று அவன் உள்ளுக்குள் நடுங்கி கொண்டே தான் வந்தான். ஆனால் அது காந்தன் பற்றிய விசயமாக இருக்கும் என்று அவன் நினைத்து கூட பார்க்கவில்லை. அப்போது தான் அரசியை பற்றி உறவினர் மத்தியில் உலாவி கொண்டிருக்கும் அந்த வதந்தி அவனுக்கு நியாபகம் வந்தது.

“அவனுக்கென்ன நல்லா இருக்கான்...” தயக்கத்துடன் அவன் பதில் கூற,

“இனியும் நல்லாயிருக்கணும்ன்னா... என் பொண்ணு இருக்கும் திசை பக்கம் அவனை வராம இருக்க சொல்லு...”

“அய்யோ என்ன பெரியப்பா சொல்றீங்க?” அறிவு அலறினான். நண்பன் என்ன செய்து வைத்தானோ? என்று மனதுக்குள் பதறினான்.

“அந்த பையனோட இணைச்சு நம்ம அரசியை பத்தி ஒரு செய்தி உலாவிக்கிட்டு இருக்கே அது உனக்கு தெரியுமா?” அவனை கூர்மையாய் பார்த்தபடி அவர் கேட்க,

“தெரியாதே பெரியப்பா…” அப்பாவியாய் அவன் விழி விரிக்க, அதை உண்மை என்று நம்பி அவர் எல்லா விசயத்தையும் அவனிடம் விலாவாரியாய் கூறினார்.

“இது தானா விசயம்…! அவனுக்கு நிச்சயம் முடிஞ்சிருச்சு பெரியப்பா… பொண்ணு அவன் தங்கை நாத்தனார் தான். அதனால நீங்க கவலைப்பட வேண்டியது இல்ல…”

“அப்படின்னா ரொம்ப சந்தோசம்… என் பொண்ணை எப்படி கரெக்ட் பண்றதுன்னு எனக்கு தெரியும். உன் பிரெண்ட் தேவையில்லாமல் அரசி விசயத்தில் தலையிட்டான்… அதுக்கு அப்புறம் நான் பேச மாட்டேன்… என் செயல் தான் பேசும்” இத்துடன் பேச்சு வார்த்தை முடிந்தது என்பது போல் அவனை பார்க்க… தன் நிலையை எண்ணி நொந்து கொண்டு அவரிடம் விடைபெற்று கொண்டு வெளியில் வந்தான் அறிவு.

கரிகாலனை பற்றி அறிவுக்கு நன்கு தெரியும். அவர் நல்லவனுக்கு நல்லவன்… கெட்டவனுக்கு கெட்டவன். அதாவது நண்பனுக்கு நண்பன்… எதிரிக்கு எதிரி. காந்தனை எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று எண்ணியவன் தன் வீட்டிற்கு புறப்பட்டான். போகும் வழியில் இரவு உணவையும் முடித்து கொண்டு அவன் வீட்டிற்கு வரும் போது… வீட்டின் வாயிலில் அவனுக்காக காந்தன் காத்து கொண்டிருந்தான்.

“டேய் காந்தா… நீ எங்கேடா இங்கே?” ஆச்சிரியமானவனாய் அவனை வரவேற்றபடி கதவை திறந்து உள்ளே அழைத்து சென்றான்.

“நீ உட்காருடா... நான் ட்ரெஸ் சேன்ஜ் பண்ணிட்டு வர்றேன்” காந்தனின் பதிலை எதிர்பார்க்காமல் அவன் உள்ளே சென்றான். ஐந்து நிமிடம் கழித்து வந்தவன், காந்தனின் செய்கையை கண்டு பதறி போய் அவன் அருகில் வந்தான். அறிவு வீட்டில் வைத்திருந்த மது பாட்டில்களில் ஒன்றை எடுத்து காந்தன் தன் வாயில் சரித்து கொண்டிருந்தான்.

“டேய் என்னடா பண்ணிட்டு இருக்க?” அவன் கையிலிருந்த பாட்டிலை அறிவு பிடுங்க...

“மனசே சரியில்லடா... இது எனக்கு வேணும்...” அறிவின் கையை தடுத்த காந்தன்... மீதமிருந்ததையும் தன் வாயில் ஊற்றி கொண்டான்.

“காந்தா என்ன செய்திட்டு இருக்கேன்னு தெரிஞ்சு தான் செய்றியா? உனக்கு தான் இந்த பழக்கம் எல்லாம் பிடிக்காதே. இன்னைக்கு என்ன புதுசா?”

“எனக்கு நடக்குறது எல்லாமே புதுசு பதுசா தான்டா இருக்கு... மனசுல நிம்மதியே இல்ல... அதான்” சோபாவில் சாய்ந்த காந்தன் அறிவை பார்த்து விரக்தியாய் சிரித்தான்.

“அப்படியே ராவா அடிக்கிற அளவுக்கு அப்படி என்னடா பிரச்சினை உனக்கு? வீட்டுல ஏதாவது பிரச்சினையா?” அவன் கேட்டதற்கு இல்லை என்று மறுப்பாய் தலையசைத்தான் காந்தன்.

“அப்போ வெளியில் ஏதும் பிரச்சினையா?” அதற்கும் இல்லை என்பது போல் உதட்டை பிதுக்கினான்.

“வேற என்ன தான்டா உனக்கு பிரச்சினை?”

“எனக்கு நானே தான்டா பிரச்சினை...” என்றவன் வசீயரசி தன் மீது வைத்திருக்கும் காதலை பற்றி சொன்னான். அவன் சொல்ல சொல்ல... அதை கேட்டு அறிவு திகைப்பாய் அமர்ந்திருந்தான்.

“நீயே இதுக்கு ஒரு முடிவை சொல்லுடா...” காந்தன் அவனை பார்த்து கேட்க,

“டேய் காந்தா… இங்கேயாடா கிஸ் கொடுத்தா…” என்று தன் உதட்டை தொட்டு காட்டிய அறிவு, “உனக்கு எங்கேயோ மச்சம் இருக்குடா…” என்க,

“நாதாரி… நானே கவலையில புலம்பிட்டு இருக்கேன்… உனக்கு கிளுகிளுப்பு கேட்குதால? உன்னை…” அருகிலிருந்த குஷனை எடுத்து அறிவை நோக்கி காந்தன் வீச, அதை லாவகமாய் பிடித்த அறிவு… குஷனை தன் மடியில் போட்டு கொண்டு கைகளுக்கு முட்டு கொடுத்து… முகத்தை தன் கைகளில் தாங்கியவாறு,

“அப்புறம்…” சுவாரசியமாய் கதை கேட்டவனை கொலைவெறியுடன் பார்த்தான்.

“டேய்… என்னை வெறியேத்தாதே…” சுட்டு விரல் நீட்டி எச்சரித்தவனை அறிவு கொஞ்சமும் லட்சியம் பண்ணாமல்,

“சரி அதை விடு… உனக்கு அரசியை பிடிச்சியிருக்கா?” அறிவு கேள்வி கேட்டதும் சட்டென்று அமைதியானான் காந்தன். அறிவு அவன் அருகில் வந்தமர்ந்து,

“என்ன காந்தா… உனக்கு அரசியை பிடிச்சியிருக்கா…? அவனை பார்த்து மீண்டும் கேட்க,

“இதுக்கு என்ன பதில் சொல்றதுன்னு எனக்கு தெரியல” காந்தனின் இந்த பதில் அறிவை அதிர வைத்தது.

“அப்படின்னா…” அவன் திகைப்புடன் கேட்க,

“எனக்கே என்னன்னு புரியாத போது… உனக்கு நான் என்ன பதில் சொல்ல?” என்று சொல்லிய காந்தன் தன் முகத்தை அழுந்த துடைத்து கொண்டான். அவன் விழிகள் கலங்கி சிவந்திருந்தது. எந்தவொரு சூழ்நிலையிலும் தன் இயல்பு மாறாது புன்னகை முகத்துடன் இருப்பவன்… இன்று கலங்கி இருப்பது கண்டு அறிவும் கலங்கிவிட்டான். அவன் ஆறுதலாய் காந்தனின் தோளில் கையை வைக்க… அவ்வளவு தான் காந்தன் மடை திறந்த வெள்ளம் போல் தன் மனதில் உள்ளதை அவனிடம் கொட்டி தீர்த்து விட்டான்.

“டேய் அறிவு… நானும் மனுசன் தான்டா. எனக்கு மட்டும் என்ன இதயம் இரும்பாலா செஞ்சிருக்கு?” தனது இடது நெஞ்சில் கை வைத்து சொன்னவன், “அவளா வந்தா… காதல்ங்கிறா… நீ இல்லைன்னா நான் இருக்க மாட்டேங்கிறா… என்னை பிடிக்கலையான்னு கேட்குறா… நான் விலகி விலகி போனாலும் விடாம துரத்துறா… நான் என்ன தான் செய்றது? அவளுக்கு என்னடா குறை? அவ அப்பா நினைச்சா… பணக்கார மாப்பிள்ளையை வரிசையில் கொண்டு வந்து நிறுத்துவாரு… என் கிட்ட அப்படி என்னத்தடா கண்டா? அப்படி நான் என்ன அவ்வளவு அழகா? இல்லை பணக்காரனா? என் கிட்ட ஒண்ணுமே இல்லையே? அப்புறமும் எதுக்குடா என் பின்னாடி சுத்துறா?”

“அதுக்கு தான் அவளுக்கு வாழ்க்கையோட நிதர்சனத்தை உணர்த்தணும்ன்னு அவளை வீட்டுக்கு வரவழைச்சேன்…” அவன் சொல்லும் போதே குறுக்கிட்ட அறிவு, “இது எப்போடா நடந்தது?”

“இன்னைக்கு காலையில்… அழகு தேவதை மாதிரி என் வீட்டுக்கு வந்தா… வீட்டை பார்த்ததும் ஓடி போயிருவான்னு பார்த்தா…” இடையில் நிறுத்தியவன் அறிவின் முகத்தை பார்க்க, அவனோ ஆர்வமாய், “என்னடா சொன்னா?”

“நீங்க பக்கத்துல இருந்தா எனக்கு கஷ்டமே தெரியாதுன்னு…” தனது வலது தோள் பக்கம் சுட்டி காட்டியவன், “இதோ இங்கே சாய்ஞ்சு தான் சொன்னாடா… அப்போ பார்த்தாளே ஒரு பார்வை… அப்படியே உயிரை உருக்குற பார்வை அது அறிவு. என்னால முடியலடா… அந்த நிமிசம் ‘உன் கூடவே நான் இருப்பேன்னு’ அவக்கிட்ட சொல்லணும்ன்னு தோணிச்சு. இது எல்லாத்தையும் விட… அவ சொன்னாடா… அவ சொன்னாடா…” என்று புலம்பியவனை பார்த்து,

“என்ன சொன்னாடா?” நண்பன் புலம்பும் அளவுக்கு இந்த அரசி அப்படி என்ன தான் சொல்லி தொலைத்தாள்? என்று அறிவுக்கு கவலையாக இருந்தது.

“அவ சொன்னாடா… அவ காதலை நிரூபிப்பதற்கு அவளையே தர்றேன்னு சொன்னாடா… என்ன மாதிரியான லவ் இது? ஒரு நிமிசம் ஆடி போயிட்டேன்… அப்போ என் கண்ணுக்கு என் அம்மாவோ… என் தங்கைகளோ… எனக்கு நிச்சயம் பண்ணியிருக்கிற தேவியோ… யாருமே என் கண்ணுக்கு தெரியல. என்னையும் மனுசனா மதிச்சு காதலை சொல்லி… அதுக்காக தன் பெண்மையையும் தர தயாராயிருந்த அவ மட்டும் தான் என் கண்ணுக்கு தெரிஞ்சா… தேவதையான அவளே… சாதாராண ஆளான என் காதலுக்காக அவளையே தர நினைக்கும் போது… என்னால் மட்டும் எப்படிடா சும்மா இருக்க முடியும்? அதான் என்னையும் அறியாம அவளை கட்டிபிடிச்சு ஆறுதல் சொல்லிட்டேன்… அதையே அவ கிட்ட நான் காதலை சொல்லிட்ட மாதிரி அவ்வளவு சந்தோசமா போனாள்டா… இப்போ எனக்கு என்ன பண்றதுன்னு தெரியல அறிவு?” பரிதாபமாய் கேட்டான் காந்தன்.

“என்ன செய்யலாம் நீயே சொல்லு?” அறிவு அவனை பார்த்து கேட்க,

“என்னால என் தங்கைகளோட வாழ்க்கை பாதிக்கிறதை நினைச்சு கூட பார்க்க முடியாது. அதுக்கு நான் இந்த அரசியை விட்டு தூர விலகி போகணும்… எங்கேயாவது கண் காணாத இடத்துக்கு போயிறணும். கொஞ்ச நாள் அவளுக்கு வருத்தமா இருக்கும். அதுக்கு அப்புறம் அவ வேறொருத்தனை கல்யாணம் பண்ணிக்குவா… அதோட எல்லாம் சரியா போகும்…” மது அருந்தியதால் கண்கள் சொருக அமர்ந்திருந்த நண்பனை வருத்தமாய் பார்த்தான் அறிவு.

“சரி இப்போ நீ படுத்து தூங்கு… காலையில் இதுக்கு ஒரு முடிவு எடுக்கலாம்” என்றவன் காந்தனை படுக்கையறைக்கு அழைத்து வந்து படுக்க வைத்தான்.

“அறிவு…” வெளியில் செல்ல முயன்ற அறிவை கை பிடித்து தடுத்து நிறுத்திய காந்தன், “அந்த அரசி பாவம்டா…” என்று சொல்லியவன் அப்படியே கண்களை மூடி படுத்து விட்டான்.

காந்தன் மனதிலும் காதல் வந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்ட அறிவு அடுத்து என்ன செய்வது? என்று தெரியாமல் விழித்தான். முதலில் கரிகாலனிடம் இருந்து காந்தனை காப்பாற்ற வேண்டும்... அதற்காகவாவது அவனை ஊரை விட்டு கிளப்ப வேண்டும் என்று எண்ணியவன் சென்னையில் இருக்கும் தன் நண்பனை அழைத்தான். அவனிடம் சில விசயங்களை பேசி உறுதி செய்து கொண்டவன் நிம்மதியுடன் அலைப்பேசியை அணைத்து விட்டு தானும் படுத்தான்.

சென்னை இருவரின் காதலையும் உரம் போட்டு வளர்க்க போகிறதா? இல்லை அவர்களின் காதலுக்கு எமனாக இருக்க போகிறதா? காலம் தான் விடை சொல்ல வேண்டும்.

“சார்... உங்களை எடிட்டர் கூட்டிட்டு வர சொன்னார்...” ஆபிஸ் பியூன் வந்து சொன்னதும் காந்தன் எழுந்து எடிட்டரின் அறைக்கு சென்றான்.

“வாங்க மிஸ்டர். காந்தன்... வாழ்த்துக்கள்... உங்களோட சின்சியர் வொர்க்குக்கு என்னோட சின்ன கிப்ட்...” என்ற சுந்தரம் அவனிடம் ஒரு கவரை நீட்டினார். என்னவென்று புரியாமல் அதை வாங்கி திறந்து பார்த்தவனின் கண்கள் வியப்பில் விரிந்தது.

“தேங்க்யூ சார்...” அவருக்கு நன்றியை தெரிவித்தவனுக்கு நெகிழ்ச்சியில் பேச வார்த்தைகள் வரவில்லை.

“கமான் யங் மேன்... சியர் அப்... உன் தகுதிக்கு கிடைத்த உயர்வு தான்...” என்றவரிடம் வேலை சம்பந்தமாக மேலும் சிறிது நேரம் பேசிவிட்டு வெளியில் வந்தான் காந்தன்.

சென்னையில் இருக்கும் இந்த பிரபல பத்திரிக்கை அலுவலகத்துக்கு அவன் வேலைக்கு வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. அறிவின் நண்பனின் பெரும் முயற்சியால் தான் இந்த வேலை அவனுக்கு கிடைத்தது. அறிவு ஏற்கெனவே அவனை போக சொல்லி வலியுறுத்தி கொண்டிருந்த வேலை தான் இது. அவன் தான் அம்மா, தங்கைகளை விட்டு பிரிய மனமில்லாமல்... அங்கு உள்ள வருமானம் போதும் என்ற அளவில் இருந்து விட்டான்.

அரசியின் காதலால் ஏற்பட்ட பிரச்சினையில்... அவளை பார்ப்பதை தவிர்ப்பதற்காக தான் அவன் இந்த சென்னை வேலைக்கு வந்தது. அங்கிருந்த கடையை சுடலை வசம் ஒப்புடைத்து விட்டு அவன் இங்கு வந்துவிட்டான். ஒரு பெண்ணுக்கு பயந்து கொண்டு இப்படி தலைமறைவு வாழ்வு வாழ்கிறோமே என்று அவனுக்கு ஆரம்பத்தில் சிறு வருத்தம் இருந்தது. அவனின் அந்த வருத்தத்தையும் நேரம் காலம் இல்லாமல் உழைக்கும் இந்த பத்திரிக்கை தொழில் பின்னுக்கு தள்ளிவிட்டது.

அலுவலகத்திலும் எடுத்த உடனேயே அவனுக்கு பெரிய வாய்ப்புகளை அளித்து விடவில்லை. சிறு சிறு நிகழ்ச்சிகளுக்கு தான் அவனை புகைப்படம் எடுக்க அனுப்பினார்கள். வேலை சிறியதாக இருந்தால் என்ன... பெரியதாக இருந்தால் என்ன... தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை அவன் சிரத்தையுடன் செய்தான். பல வார்த்தைகள் கொண்ட ஒரு கட்டுரை சொல்லாத செய்தியை... அவனின் ஒற்றை புகைப்படம் சொல்லியது. அந்தளவுக்கு எதார்த்தமாய், நுணுக்கமாய், உணர்வுகளை பிரதிபலிக்க கூடியதாய் இருந்தது அவனின் புகைப்படங்கள்.

அவனின் திறமையை பார்த்து இப்போது அவனை அரசியல் பிரிவுக்கு மாற்றி இருக்கின்றார்கள். அதோடு கூடுதல் சம்பளமும் கூட. அவனுக்கு மிகுந்த சந்தோசமாக இருந்தது. இந்த வாய்ப்பை வாங்கி கொடுத்த நண்பனிடம் இதை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. உடனே அறிவுக்கு அழைத்தான். அறிவிடம் சந்தோசத்துடன் இந்த விசயத்தை பகிர... அறிவும் அவனுக்கு வாழ்த்து கூறினான்.

“அப்புறம் வேற என்ன காந்தா...?”

“வேற ஒண்ணும் இல்லைடா...” என்றவன், “அறிவு... உன்கிட்ட அந்த அரசி ஏதும் என்னை பத்தி...?”

“என் கிட்ட அவ பேசவே இல்லைடா... அப்படியே பேசினாலும் நீ இருக்கிற இடத்தை நான் சொல்ல மாட்டேன். நீ கவலை படாதே”

“தேங்க்ஸ் அறிவு...” நிம்மதி பெருமூச்சு விட்ட காந்தன் அலைப்பேசியை அணைத்து விட்டு வீடு நோக்கி கிளம்பினான்.

வீட்டிற்குள் நுழைந்ததும் தன் பையை சோபாவில் வைத்துவிட்டு தானும் சோபாவில் சரிந்தான். ஒற்றை படுக்கையறை கொண்ட இந்த அடுக்கமாடி குடியிருப்பு வீடு அறிவின் நண்பனோடது. அவன் கேரளாவிற்கு மாற்றலாகி

போய் விட... தற்போது காந்தன் மட்டுமே அங்கு இருக்கிறான்.

அவனின் மனம் முழுவதும் வசீயரசியின் எண்ணங்களே நிறைந்திருந்தது. அவளை மறக்க வேண்டும் என்பதற்காகவே அவன் தினமும் அவளை நினைத்து கொண்டிருந்தான். அவளை தான் என்ன காதலிக்கவா செய்கிறோம்? அவளை மறக்க வேண்டும் என்று நினைப்பதற்கு...? அவனின் மனம் குறித்து அவனுக்கே குழப்பமாக இருந்தது. அவனையும் அறியாத சோர்வு வந்து அவனை ஆட்கொள்ள... அந்த சோபாவிலேயே கண்களை மூடி தூங்கி போனான்.

*****************************************

காந்தனை போலவே வசீயரசியும் அவனை தான் நினைத்து கொண்டிருந்தாள். அவள் கல்லூரியில் சேர்ந்து ஒரு மாதம் முடிந்துவிட்டது. அவளுக்கு கல்லூரி விடுதியின் அறை, அங்கே கொடுக்கப்படும் உணவு எதுவுமே பிடிக்காமல் போனது. என்ன செய்வது என்று கரிகாலன் யோசித்து கொண்டிருக்கும் போது அவருக்கு தன் நண்பனின் நியாபகம் வந்தது. அந்த நண்பனின் மகள் அவள் தோழிகளுடன் சேர்ந்து வீடு ஒன்று எடுத்து தங்கியிருந்தாள். அதை கேள்விப்பட்ட அவர் மகிழ்வுடன் அவளுடன் அரசியையும் தங்க வைத்தார். அந்த வீட்டிற்கு அருகிலேயே மெஸ் ஒன்று இருந்தது. அங்கு உணவு வீட்டு சாப்பாட்டின் சுவையுடன் தரமாகவும் இருந்ததால்... உணவு பிரச்சினையும் தீர்ந்து விட, அவளை அங்கே விட்டு விட்டு கரிகாலன் நிம்மதியாக ஊருக்கு கிளம்பி சென்று விட்டார்.

தனது அறையில் படுத்திருந்த அரசி எப்படி காந்தனிடம் தொடர்பு கொள்வது என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவளும் சென்னைக்கு புறப்படுவதற்கு முன்பிருந்து அவனை அலைப்பேசியில் அழைத்து பார்த்துவிட்டாள்... அவளின் அழைப்பை அவன் எடுக்கவே இல்லை. சரி... நேரில் சந்தித்து பேசலாம் என்று போனால்... அவனை

சந்திக்கவே முடியவில்லை. அவள் அவனின் கடைக்கு போகும் நேரம் எல்லாம் அவன் வெளியில் போயிருப்பதாய் பதில் வந்தது.

அவள் மனம் மிகவும் துன்பப்பட்ட நிலையில் வேறுவழியின்றி வெட்கத்தை விட்டு அவனின் வீடு வரை சென்று அவனை பார்க்க முயற்சித்தாள். ம்ஹும்... அங்கும் அவனை பார்க்க முடியவில்லை. அவள் மனம் கனக்க, சோகத்துடன் தான் இங்கு கிளம்பி வந்தாள். எப்படி அவனிடம் பேசுவது? என்று யோசித்து கொண்டிருந்தவளுக்கு திடீரென்று அறிவின் நியாபகம் வந்தது.

‘ச்சே... இவ்வளவு நாள் அறிவு அண்ணன் நியாபகம் வரவே இல்லையே... அவர் மூலம் ரூபனிடம் பேசியிருக்கலாமே... நான் ஒரு மடச்சி... இத்தனை நாள் வீணாக்கி விட்டேனே..’ தன்னை தானே கடிந்தவள் உடனே தன் எண்ணத்தை செயலாற்றினாள்.

“ஹலோ... அறிவு அண்ணா...” உற்சாகமாய் ஒலித்த அரசியின் குரலில் அறிவு உள்ளுக்குள் கதி கலங்கிவிட்டான்.

‘போச்சுடா... இவ காந்தனை பத்தி கேட்டால்... நான் என்ன பதில் சொல்றது? இவ என் வாயை பிடுங்காம விட மாட்டாளே?’ முழி பிதுங்கியது அவனுக்கு. ஆனாலும் முயன்று தன்னை சமாளித்து கொண்டு, “சொல்லு அரசி... எப்படியிருக்க...?”

“நான் நல்லாயிருக்கேன்... நீங்க?” வழக்கமான சம்பிராதய வார்த்தைகள் முடிந்ததும், “அண்ணா... உங்க பிரெண்ட் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரிந்ததா? அவரோட பேசவும் முடியல... அவரை பார்க்கவும் முடியல?”

“நீ எதுக்கும்மா... அவனை பார்க்கணும்... பேசணும்?” ஒன்றும் அறியாதவனாக அறிவு கேட்க,

“அது வந்து... நா... அவரை விரும்பறேண்ணா...” காந்தனை நேசிப்பதை அறிவிடம் தயக்கமாய் சொன்னாள். அவன் ஏதும் தவறாய் எடுத்து கொள்வனோ என்று தான் தயங்கினாள்.

“ஏம்மா... இதை நீ என்கிட்ட சொல்லவே இல்ல பார்த்தியா?” வேண்டுமென்றே வருத்தப்படுவது போல் அவன் கூற,

“உங்க பிரெண்ட் என் காதலை ஒத்துக்கிட்டு இருந்தா... நான் சந்தோசமா உங்க கிட்ட சொல்லிருப்பேன். அவர் தான் என்னை பார்த்தாலே பேயை பார்த்தது மாதிரி பயந்திட்டு ஒடுறாரே... இதில் நான் எங்கே உங்க கிட்ட சொல்ல?”

“அரசி... நான் ஒண்ணு சொன்னா கோபிக்க மாட்டியே? அவனுக்கு வேற பொண்ணை நிச்சயம் பண்ணிட்டாங்கம்மா... அவன் எப்படி உனக்கு சரி வருவான்?” காந்தனின் உள்மனது தனக்கு தெரிந்திருந்தாலும்... அவளின் தந்தைக்கு பயந்து அறிவு இதை கூறினான்.

“தெரியும்ண்ணா...” அரசியின் பதிலை கேட்டு அறிவு ஆடி போய்விட்டான்.

“எல்லாம் எனக்கு தெரியும். என்னோட லவ் உண்மையா இருந்தா... அவரை என்னோட கொண்டு வந்து சேர்க்கும். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு...” என்றவள், “அவரை பார்க்காம சென்னைக்கு வந்ததிலிருந்து எனக்கு ஒண்ணுமே ஓட மாட்டேங்குது. அவரை எனக்கு பேச சொல்லுங்கண்ணா”

ஏற்கெனவே அவளின் வார்த்தையில் ஆடி போயிருந்தவன்... அவள் சென்னையில் இருப்பதாய் சொன்னதும், “என்னது... நீயும் சென்னையில் இருக்கியா?” அதிர்ந்து போனவனாய் தன்னையும் அறியாமல் வாயை விட்டு விட்டான்.

“நானும் ன்னா... அப்போ வேற யார் இங்கே இருக்கா?” கூர்மையாய் வந்து விழுந்தது அவளின் வார்த்தைகள்.

“வந்தும்மா…” அவன் என்ன பதில் சொல்வது? என்று தெரியாமல் இழுக்க,

“அப்போ அவர் இங்கே… சென்னையில் தான் இருக்காரா?” அழுகையுடன் ஒலித்தது அவளது குரல். அவளின் அழுகை கண்டு அறிவு பதறிவிட்டான்.

“நான் இவ்வளவு தூரம் கேட்டும்… நீங்க அவரை பத்தி என்கிட்ட சொல்லவே இல்லை. என்னை நீங்க நம்பல தானே அண்ணா. நான் அவரை காதலிக்கிறது உண்மை… என்னை நம்புங்க…” என்றவளின் அழும் குரல் அறிவை நெகிழ்த்தியது.

“நான் உனக்காக பார்க்கல அரசி… காந்தனுக்காக தான் பார்க்கறேன்” என்றவன் அவளின் தந்தை தன்னிடம் மிரட்டியதை கூறினான். “இப்போ சொல்லு… உங்க அப்பாவை பத்தி தெரிஞ்சதுக்கு அப்புறமும் உன்னை காந்தனோட பழக விட என்னால் முடியுமா? நீயே சொல்லு?”

“என் அப்பாவை தேர்ட் க்ரேட் வில்லன் மாதிரி சொல்றீங்களே” என்று விரக்தியாய் சிரித்தவள், “அவர் சும்மா மிரட்டுறதுக்கு தான் அப்படி சொல்லியிருக்காரு… நீங்க பயப்படாதீங்க… அவரால உங்க நண்பன் உயிருக்கு ஆபத்து வந்தா… அடுத்த நொடி நான் உயிரோட இருக்க மாட்டேன்னு அவருக்கு நல்லா தெரியும்… அதனால அவர் எதுவும் செய்ய மாட்டார்” அரசி வார்த்தையில் இருந்த காதலின் ஆழம் அறிவின் நெஞ்சை தொட… மறுநொடி காந்தனின் முகவரியை அவளிடம் கொடுத்து விட்டான்.

‘நீங்க எங்கே ஒளிந்திருந்தாலும்… நான் உங்களை விட மாட்டேன் ரூபன்…’ மனதுக்குள் சொல்லி கொண்டவளுக்கு இன்று ஞாயிறு என்பது நியாபகம் வர… மாலையில் அவனை சந்திக்க முடிவு செய்தாள்.

****************************************

அன்று ஓய்வு நாள் என்பதால்… ஒரு வார அழுக்கு துணிகளை மொத்தமாக எடுத்து போட்டு துவைக்க

ஆரம்பித்தான் காந்தன். அப்போது பார்த்து வீட்டின் அழைப்பு மணி ஒலிக்க... ‘யாராக இருக்கும்?’ என்ற யோசனையுடன் கைகளை கழுவியவன் அவசரமாக கையில் கிடைத்த டிசர்ட்டை அணிந்து கொண்டு கதவை திறந்தான்.

“ஹாய்... குட்ஈவினிங் ரூபன்...” வலது கையை லேசாக அசைத்தபடி உற்சாகமாய் அன்றலர்ந்த மலர் போல் புத்துணர்வோடு நின்றிருந்த வசீயரசியை கண்டு அப்படியே திகைத்து போய் நின்றிருந்தான் அவன்.

“வீட்டுக்கு வந்தவளை... உள்ளே வான்னு கூப்பிட மாட்டீங்களா?” அவனை இடித்து கொண்டு அவள் உள்ளே செல்ல... அதில் உணர்வு பெற்றவன் அவளின் பின்னே சென்றான்.

‘திருநெல்வேலியில் இருக்க வேண்டியவள்... இங்கே எங்கே சென்னையில்?’ அவன் மனம் வேகமாய் யோசித்தது. ஆனாலும் அவளிடம் கேட்க அவனுக்கு விருப்பமில்லை.

அவளோ அவனின் அனுமதி கேட்காமல் உள்ளே நுழைந்ததும் மட்டும் அல்லாமல் அவன் சொல்லாமலே சோபாவில் அமர்ந்தவள்,

“என்ன ரூபன்... இன்னமும் நின்னுக்கிட்டு இருக்கீங்க? வாங்க உட்காருங்க...” அவன் வீட்டிற்கு வந்து அவனையே உபசரித்தவளை கண்டு அவனின் ரத்த அழுத்தம் ஏகத்துக்கும் ஏறியது.

“நான் இங்கே இருக்கேன்னு உனக்கு யார் சொன்னா?”

“வேற யார்? அறிவு அண்ணா தான்...” அவள் அலட்சியமாக சொல்ல...

“நம்பிக்கை துரோகி...” அறிவின் அறிவு கெட்ட செயலை நினைத்து பல்லை கடித்தான் காந்தன்.

“அப்படி எல்லாம் அண்ணாவை சொல்லாதீங்க... அவர் நம்ம நல்லதுக்கு தான் சொல்லி இருக்காரு...” அவள் அறிவுக்கு

பரிந்து கொண்டு வர,

“யாருக்கு நல்லது? உனக்கா? இல்லை எனக்கா?” என்று வாய்க்குள் முணுமுணுத்து கொண்டு உள்ளே சென்றவன், அடுத்த பத்து நிமிடங்களில் குளித்து முடித்து வெளியில் செல்வதற்கான உடையுடன் வந்தவன் அவளை பார்த்து,

“நான் வெளியில் கிளம்பறேன்…” ‘நீ கிளம்பலாம்…’ என்பதை அவன் சொல்லாமல் சொல்ல…

“நானும் உங்க கூட வரவா?” அவள் ஆர்வமாய் கேட்க,

“ம்… நான் தண்ணி அடிக்க பாருக்கு போறேன் வர்றியா?” நக்கலுடன் கேட்டவனை அதே நக்கலுடன் பார்த்தவள்,

“அதுக்கென்ன நானும் உங்க கூட வர்றேன்” கைப்பையை எடுத்து கொண்டு அவள் எழும்ப… அவளின் வார்த்தையில் அவன் அதிர்ந்து போனான்.

“எனக்கு காதல் நிறைவேறாததால் நெஞ்சு நிறைய கவலையிருக்கு… அதை போக்க குடிக்கணும். வாங்க போகலாம்” என்க,

“உனக்கு எதுக்கு எடுத்தாலும் விளையாட்டு தானா? முதல்ல நீ கிளம்பு?” என்றவனின் வார்த்தையை மறுக்காமல் வெளியில் வந்தவளை தொடர்ந்து அவனும் வந்து கதவை பூட்டி விட்டு மின்தூக்கியை நோக்கி நடந்தான். மின்தூக்கியில் ஏறும் போது தன்னை பின் தொடர்ந்து உள்ளே நுழைந்தவளை அவன் கோபமாய் பார்க்க… அவளோ,

“நான் கீழே போக இது தானே வழி?” அப்பாவியாய் விழி விரித்து கேட்க… அவன் முகத்தை திருப்பி கொண்டான். திரும்பியவன் பார்வையில் அங்கிருந்த கண்ணாடி தென்பட்டது. தன்னை காதலோடும் ஏக்கத்துடனும் பார்த்து கொண்டிருந்த அரசியின் பிம்பம் அதில் தெரிய, ஒரு நொடி அதில் தன்னை தொலைத்தவன்… முயன்று தன்னை மீட்டு கொண்டான்.

பேருந்து நிலையம் நோக்கி சென்றவனுடன் அவளும் இணைந்து நடக்க, அவன் ஒன்றும் பேசாமல் நடந்தான். கேள்வி கேட்டால் மட்டும் என்ன உருப்படியாய் பதில் சொல்லிவிட போகிறாளா என்ன? பேருந்திற்கு இங்கு தானே நிற்க வேண்டும் என்று அதி முக்கிய கண்டுப்பிடிப்பை தன்னிடம் சொல்லுவாள்... அதற்கு அவளிடம் பேச்சு கொடுக்காமல் இருப்பது நல்லது என்று நினைத்தவன் அமைதி காத்தான்.

அங்கு வந்த பேருந்து ஒன்றில் வேகமாய் சென்று அவன் ஏறி கொள்ள... அவனின் திடீர் செய்கையில் திகைத்தவள் பின் தானும் ஓடி சென்று பேருந்தில் ஏறினாள். அவன் பின்னால் ஏறியிருக்க... அவள் முன்னால் ஏறியிருந்தாள்.

‘இவள் எதுக்கு நான் போகும் பஸ்ஸில் ஏறியிருக்கா? ஒருவேளை அவள் போகும் இடமும் அங்கு தான் இருக்கோ?’ குழப்பத்துடன் அவள் முதுகை பார்த்தவன், அவள் திரும்பி பார்த்து தன்னை தேடுவது தெரிந்ததும், தனக்கு முன்னால் நின்று கொண்டிருந்தவர் முதுகுக்கு பின் மறைந்து கொண்டான். பேருந்தில் அவனை காணாது திகைத்தவள்... மீண்டும் அவனை தேடி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அவளின் தேடலை தவறாக புரிந்து கொண்ட ஒருவன் அவள் அருகில் வந்து அவள் முதுகோடு தன் உடல் முழுவதும் படும்படி உரசி கொண்டு நிற்க, அவளோ செய்வதறியாது நின்று கொண்டிருந்தாள். அவள் பின்னால் திரும்பி பார்த்து அவனை முறைக்க... அவனோ ‘ஈ’ என்று பல்லை இளித்தான். சென்னை அவளுக்கு புதிது என்பதால் அமைதியாக சகித்து கொண்டு நின்றிருந்தாள். இதே இது திருநேல்வேலியாக இருந்திருந்தால்... அவளை இடித்து கொண்டிருந்தவனுக்கு அவள் கையால் தான் இழவு விழுந்திருக்கும்.

தன் முன்னால் நின்றிருந்தவர் இறங்க முற்படவும் காந்தனின் விழி வட்டத்தில் அரசியும், அவளை உரசி கொண்டிருந்த பொறுக்கியும் விழுந்தார்கள். அவன் வேண்டும் என்றே அவளை உரசுவது கண்டு இவன் மனம்

பொறுக்காமல்... கூட்டத்தினரை இடித்து கொண்டு அரசியை நோக்கி வந்தான்.

“மிஸ்டர்... கொஞ்சம் தள்ளி நிக்கிறீங்களா?” காந்தன் அவனை பார்த்து கேட்க,

“நான் எதுக்கு சார் தள்ளி நிக்கணும். பொண்ணுங்களை கண்டா போதுமே உரசுறதுக்கு வந்திருவீங்களே...” அவன் கண்ணியவானாய் பேச... காந்தனுக்கு ஆத்திரம் வந்தது.

காந்தனின் குரல் கேட்டதும் திரும்பி பார்த்த அரசி... அவனை கண்டதும் நிம்மதி அடைந்தவளாய் அவன் அருகே வந்து நின்று கொண்டாள். அரசியின் செயலில் அவளை உரசி கொண்டிருந்தவன், “உங்க ஆளா சார்...?” என்று காந்தனை பார்த்து பல்லை காட்டி இளித்தவன் முன்னாடி நகர்ந்து செல்ல... காந்தன் அவளை பார்த்து முறைத்தான்.

“அவன் இடிக்கான்னு தெரியுதுல... செருப்பை கழட்டி நாலு போடு போடுறதுக்கு என்ன? உன் தைரியம் எல்லாம் என் கிட்ட மட்டும் தானா? எட்டூருக்கு வாய் கிழிப்பியே... அந்த வாய் இப்ப எங்கே போச்சு? தேவையில்லாத விசயத்துக்கு தைரியம் காட்டுறது... தேவையான விசயத்துல கோட்டை விட்டுறது...” அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் கோபக் குரலில் அவன் கடிந்தான்.

அவளிடம் ஒரு வார்த்தை பேச நூறு முறை யோசிக்கும் காந்தன் அடுத்தடுத்து பேச... அதில் வாயடைத்து போனவளாய் அவள் நின்றிருந்தாள். திடுமென பேருந்தின் ஓட்டுனர் அதை வளைத்து ஓட்ட... பிடிமானம் இல்லாமல் தடுமாறியவள் அவனின் இடுப்பை ஒற்றை கையால் வளைத்து பிடித்து கொண்டாள். அவளின் கை தன் உடலை தழுவியதும் அப்படியே ஸ்தம்பித்து போனவனாய் நின்றிருந்தான் அவன்.

எத்தனையோ தடவை அவள் அவனை தொட்டிருக்கிறாள்... இவ்வளவு ஏன் அவனுக்கு முத்தம் கூட கொடுத்திருக்கிறாள்... அதில் எல்லாம் அவன் மனம் கரைய தான் செய்தது. உருக தான் செய்தது. ஆனால் இன்று

அவனுக்கு ஏற்பட்டு இருக்கும் இந்த உணர்வு புதிது. அடி வயிற்றில் இருந்து இதயத்திற்கு ஊடுருவி சென்ற இந்த உணர்வு... அவனின் நாடி நரம்பெல்லாம் ஓடி அவனின் சித்தம் தடுமாற செய்தது. மூவுலகமும் தன் இயக்கத்தை நிறுத்தியது போல், அவன் மூச்சு விட மறந்து... மெய் மறந்து... தன்னையே மறந்து... நின்றிருந்தான்.

“சாரி…” வசீயரசியின் குரலில் தன்னுணர்வு அடைந்த காந்தரூபன்… தன்னை சமாளித்து கொள்ள அருகில் இருந்த கம்பியின் மேல் சாய்ந்து நின்றான்.

அவனை தாக்கிய அந்த புதுவித உணர்வு அவனின் உடலை லேசாக நடுங்க செய்தது. கால்கள் அந்தரத்தில் மிதப்பது போல் அவனுக்குள் மாயத் தோற்றத்தை உண்டு பண்ண… கால்களை நன்றாக ஊன்றி தன்னை நிலைப்படுத்தி கொண்டான். அலைப் பாய்ந்த தனது மனதை ஒருமுகப்படுத்தி தனக்குள் ஏற்பட்ட மாற்றத்தை அவன் ஆராய தொடங்கினான்.

அவன் ஒன்றும் பெண்களின் அன்பை அறியாதவன் அல்ல. அன்னையாய், சகோதரியாய், தோழியாய் என்று அவனை சுற்றி பெண்கள் இருக்க தான் செய்தார்கள். அவர்களின் அன்பை அவன் நன்கு அறிந்தவனும் கூட. ஆனால் முதன் முறையாக அந்த அன்பையும் தாண்டி வேறொரு உணர்வை அவனுள் தோற்றுவித்தவள் வசீயரசி மட்டுமே.

எந்தவொரு பெண்ணிடத்திலும் வீழாத அவன் மனதை… அவளிடத்தில் வீழ்த்திய பெருமை அவளையே சாரும். அவனுக்கு என்று பார்த்த பெண் தேவி… இவ்வளவு ஏன் அவனை காதலிப்பதாய் சொல்லி கொள்பவளும் கூட… அப்படி இருந்தும் அவளின் அருகாமையில் கூட அவன் மனம் மயங்கவில்லை. அவளை ஏறிட்டு பார்க்க வேண்டும் என்று கூட அவனுக்கு தோன்றியது இல்லை. கல்யாணம் என்பதை வாழ்வின் கடமையாக… தங்கைகளுக்காக செய்யும் தியாகமாக தான் அவன் எண்ணியிருந்தான்.

கல்யாணம் என்பது கடமை அல்ல… அதில் காதல் முதல் இடம் வகிக்கிறது என்பதை அவனுக்கு உணர வைத்தவள் அரசி. முதன் முறையாக காதல் என்ற உணர்வை… அதுவும் அவன் கற்பனையில் கூட நினைக்க முடியாத அழகோடு இருப்பவளின் காதல் அவனை இதமான சாரலாய் நனைத்தது. அதில் அவனும் சுகமாய்… விருப்பமாய்

நனைந்தான். ஆம்... அரசியின் காதல் அவன் உள்ளத்தையும் தடுமாற செய்து... அவன் உள்ளத்தில் அவளுக்கு என்று ஒரு இடத்தையும் பிடித்து கொடுத்து விட்டது.

அவன் தன்னருகில் நின்று கொண்டிருந்தவளை ஏறிட்டு பார்த்தான். கூட்ட நெரிசலில் அவன் உடலோடு ஒட்டி கொண்டு நின்றிருந்தவளின் அருகாமை அவனை செயலிக்க செய்வதாய் இருந்தது. நெற்றில் வியர்வை முத்துக்கள் துளிர்க்க... அவனின் அருகாமையினாலோ அல்லது வெக்கையினாலோ அவள் முகம் லேசாக சிவந்திருக்க... அவள் நின்றிருந்த கோலம் அவன் மனதை மயக்குவதாய்... அவளின் அழகு அவனுள் பெருமூச்சை கிளப்ப... அது அவளின் காதோரத்தை தீண்ட... அதன் வெப்பத்தில் அவள் திரும்பி அவனை பார்க்க... அவனோ சட்டென்று தன்னை மீட்டு கொண்டு வெளிப்புறம் பார்க்கலானான்.

அவன் இறங்க வேண்டிய இடம் வந்ததும் அவன் இறங்குவதற்கு ஆயத்தமாக அவளும் அவனை பின் தொடர்ந்து பேருந்தை விட்டு கீழிறங்கினாள். அவனுடன் ஒட்டி கொண்டு அவள் நடக்க... அவனோ அவளை ஒரு மாதிரியாய் பார்த்தான்.

“என்ன...?” புருவம் ரெண்டும் சுருங்க அவள் அவனை பார்க்க...

“இப்போ எதுக்கு என் கூட வர்றீங்க?” அவளின் அருகாமையை அவன் மனம் விரும்பினாலும் அதை வெளி காட்டி கொள்ளாமல் அவளை பார்த்து கேட்டான்.

“சும்மா தான்...” என்று பதிலளித்தவள் அப்போது தான் சுற்றுபுறத்தை கவனித்தாள்.

“ஹேய்... பீச்சுக்கா வந்திருக்கோம்... ஹை... ஜாலி... ஜாலி...” சிறுபிள்ளையாய் அவன் கையை பிடித்து குதூகளித்தவளின் மகிழ்ச்சி அவனையும் தொற்றி கொள்ள... அவன் உதடுகள் புன்னகையின் அடையாளமாய்

லேசாக வளைந்தது. தூரத்தில் தெரிந்த கடலை ரசித்து கொண்டிருந்தவள் தன்னவனின் மாற்றத்தை கவனிக்க தவறி விட்டாள்.

“சீக்கிரம் வாங்க…” என்று அவனை துரிதப்படுத்தியவள் வேகமாய் கடலை நோக்கி சென்றாள்.

“நீங்க போங்க… நான் வரல…” அவளிடம் கூறியவன்… அங்கு ஓரமாய் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த படகின் அருகில் சென்று அமர்ந்து கொண்டான்.

“நீங்க வரலியா?” சற்று வருத்தத்துடன் கூறியவள், “பரவாயில்ல… நான் போய் அலையில் விளையாண்டுட்டு வர்றேன்…” என்று தன் கைப்பையை அவன் மடியில் போட்டு விட்டு… அவன் பதிலை எதிர்பாராமல் சிட்டாக பறந்து விட்டாள்.

‘பெர்மிஷன் கேட்கணும்ங்கிறதே கிடையாது. எல்லாம் ஆர்டர் தான்…’ அவளை பத்தி சலிப்பாய் நினைத்தாலும்… மனதுக்குள் சந்தோசமாய் உணர்ந்தான்.

பால் போல் பொங்கி வரும் அலைகளில் சிறு பிள்ளையாய் துள்ளி விளையாடியவளை அவன் ஆர்வமாய் ரசித்து பார்த்தான். முக்கால் பேண்ட்டும், மேலே டீசர்ட்டுமாய் அவள் உண்மையில் பார்ப்பதற்கு சிறு பெண்ணை போல் தான் தெரிந்தாள். ஊரில் அவளை புடவையிலும், சுடிதாரிலும் பார்த்தவனுக்கு அவளின் இந்த தோற்றம் சற்று தடுமாற்றத்தை அளித்தது. அதிலும் தண்ணீரில் நனைந்த அவளின் வெண் பாதங்கள் அவனை பித்தம் கொள்ள செய்தது.

ஒரு பெண்ணிற்கு கால் கூட இவ்வளவு அழகாக இருக்க கூடுமா என்று மனதுக்குள் வியந்து தான் போனான். மனதுக்குள் அவளை எண்ணி வியந்தவனாய் அவன் அவளை ரசித்து கொண்டிருக்க… அப்போது பார்த்து எழுந்த ராட்சச அலை ஒன்று அவளை தடுமாற செய்ய கீழே விழ போனாள். அருகில் இருந்த இளைஞன் ஒருவன் அவள் கையை பற்றவதற்கு முயல, அதை கண்டு காந்தனுக்கு

சட்டென்று கோபம் மூண்டது. ஆத்திரத்துடன் அவன் எழுவதற்கு முன்னரே... அரசியே அந்த இளைஞனின் கையை உதறி விட்டு அங்கிருந்து நகர்ந்தாள். அதில் மனம் சமாதானம் ஆனவனாய் காந்தன் அமர்ந்தான்.

“சூப்பரா இருந்துச்சு...” என்றபடி அவன் அருகில் வந்தவளை கோபமாய் அவன் பார்க்க... அவளோ அவனின் பார்வையின் அர்த்தம் புரியாமல் குழம்பினாள்.

அதற்குள் அவள் மேல் பந்து ஒன்று விழ... அவளின் கவனம் அந்த பந்தின் மீது திரும்பியது. அங்கு சிறுவர்கள் சிலர் விளையாடி கொண்டிருக்க,

“ட்ரெஸ் காயற வரைக்கும் நான் விளையாடிட்டு வர்றேன்...” என்றவள் வழக்கம் போல் அவனின் பதிலை எதிர்பாராமல் சிறுவர்கள் பக்கம் சென்றாள். சிறுவர்களோடு சேர்ந்து கத்தி கூச்சல் போட்டு விளையாடியவளை கண்டு அவன் தலையில் கையை வைத்து கொண்டான்.

‘கொஞ்ச நேரத்துக்கே இப்படி கண்ணு கட்டுதே... இதில் வாழ்க்கை முழுவதும் இவளுடன் என்றால்...’ அவன் மனம் வேகமாய் சிந்தித்தது. ஆனாலும் ஏனோ அவனுக்கு அவளை பிடித்து தான் இருந்தது.

எப்போதுமே பக்குவப்பட்ட மனிதனாய்... உணர்வுகளை அடக்கி பழக்கப் பட்டவனாய் வாழ்ந்து பழகியவனுக்கு அவளின் குழந்தைத்தனமான செயல்கள் பிடித்து இருந்தது பெரும் அதிசயம் தான். தன் உள்ளத்து உணர்வுகளை அது கோபமாக இருக்கட்டும்... அழுகையாக இருக்கட்டும் எதுவாக இருந்தாலும் அவள் சட்டு சட்டென்று அதை வெளிப்படுத்தும் அழகு அவனை பெரிதும் கவர்ந்தது.

“ஹேய்...” சிறுவர்களின் கூச்சலில் அவர்கள் பக்கம் பார்த்த காந்தனின் கண்களில் வசீயரசி கையை தூக்கி பந்தை அடித்து கொண்டிருந்தது பட்டது. அவள் கையை தூக்கி விளையாடியதில் அவளின் இளமை அப்பட்டமாய் தெரிய... அவளை ஒருசிலர் ஆர்வத்துடன் பார்த்ததை கண்டவனுக்கு

ஆத்திரம் தலைக்கேறியது. அவன் வேகமாய் அவளை நோக்கி சென்றான்.

அவள் கையிலிருந்த பந்தை அந்த சிறுவர்களிடம் கொடுத்தவன்.. அவளின் கையை பற்றி கொண்டு, “வாங்க...” என்று அடிக்குரலில் உறுமியவன் அவளை ஏறத்தாழ இழுத்து சென்றான். அவனின் செய்கைக்கான காரணம் அறியாதவளாய் அவள் திகைத்தாலும் அவன் பின்னே செல்ல மறுக்கவில்லை.

படகில் சாய்ந்து அமர்ந்தவன், அவளின் கைப்பையை அவளிடம் கொடுத்து, “அடுத்தவங்களுக்கு காட்சிப் பொருளாகாமல்... முதல்ல இடத்தை காலி பண்ணுங்க...” அவள் முகம் பாராமல் கூற...

“அப்படியென்ன காட்சிப் பொருளாகிட்டேனாம்... எனக்கு இதுக்கு முதல்ல பதில் தெரிஞ்சாகணும்...” அவள் அவனுக்கு எதிராய் போர் கொடி உயர்த்துவதில் குறியாய் இருந்ததில்... அவன் கூறுவதின் அர்த்தத்தை புரிந்து கொள்ள முற்படவில்லை.

‘கண்டவன் எல்லாம் உன்னை பார்த்து ரசிக்கிறான்... அது எனக்கு பிடிக்கவில்லை’ என்று அவளிடம் எப்படி கூறுவது? என்று தெரியாமல் அவன் விழித்தான்.

“நான் உங்க கூட இருக்கிறது உங்களுக்கு இடைஞ்சலா இருந்தா... அதை பளிச்சுன்னு சொல்லுங்க... இப்படி தேவையில்லாம அபாண்டமா பேசாதீங்க...” என்றவள் அவன் அருகில் பொத்தென்று அமர்ந்து, அவன் கை விரல்களோடு தன் கைவிரல்களை கோர்த்து கொண்டு, “ஏன் நான் உங்க கூட இருந்தா பொண்ணுங்களை சைட் அடிக்க கஷ்டமா இருக்கா? இருக்கும்... இருக்கும்... யார் கண்டா? ஆனா அப்படி எல்லாம் உங்களை தனியா என்ஜாய் பண்ண விட மாட்டேன் மை டியர் ரூபன்...” என்று கூறியவளை கண்டு மானசீகமாய் தலையில் அடித்து கொண்டான்.

அப்போது அந்த பக்கமாய் சுண்டல் விற்று கொண்டு ஒரு பையன் போக, அவனை நிறுத்தியவள், "ரூபன்... எனக்கு சுண்டல் வாங்கி தர முடியுமா?" என்று கேட்டவளிடம் முடியாது என்றா சொல்ல முடியும்... அவளை முறைத்து கொண்டே சுண்டலை வாங்கி அவள் கையில் திணித்தான்.

அதற்கு அடுத்து மாங்காய், ஐஸ்க்ரீம், பஞ்சுமிட்டாய், குளிர்பானம் என்று அவள் ஒவ்வொன்றாய் கேட்க, கேட்க அவன் வாங்கி கொடுத்தான்.

'பார்க்க தான் இவ்வளவு ஒல்லியா இருக்கா... ஆனா ரெண்டு ஆளுக்கு வேண்டியதை ஒரே ஆளாய் முழுங்குறாளே... இவளுக்கு வாங்கி கொடுத்தே... நான் போண்டியாக வேண்டியது தான்... வாங்குற சம்பளம் இவ வாய் அரைக்கிறதுக்கே பத்தாது போலிருக்கே...' மனதுக்குள் முனங்கினாலும்... முகம் சுளிக்காமல் அவள் விரும்பியதை வாங்கி கொடுத்தான்.

"ரூபன்... அந்த குழந்தையை பார்த்தீங்களா? எவ்வளவு அழகு! நமக்கு குழந்தை பிறந்தா இது மாதிரி இருக்குமா?" கண்களில் கனவுடன் கூறியவளை கண்டு அவன் வியர்த்து விதிர்த்து தான் போனான்.

அவனே இப்போது தான் காதல் என்ற வலையில் விழுந்திருக்கிறான்... இந்த லட்சணத்தில் அவன் கல்யாணம், குழந்தை என்பதை கற்பனை செய்து கூட பார்க்கவில்லை. அவளின் காதலின் ஆழம் கண்டு அவனுக்கு கொஞ்சம் பயம் வர தான் செய்தது.

"அங்கே பாருங்களேன்... இந்த வயசுலேயும் எவ்வளவு லவ்வோட இருக்காங்க... அது மாதிரி நீங்களும் நானும் இருப்போமா?" சற்று தள்ளி அமர்ந்திருந்த வயதான ஜோடியை ஏக்கத்துடன் பார்த்தவள் அதே ஏக்கத்துடன் அவன் தோள் சாய்ந்தாள். அவனோ பேச்சற்றவனாய் அவளின் பேச்சை கேட்டு கொண்டிருந்தான். அவளின் கேள்விகளுக்கு அவனால் விடை சொல்ல முடியாத நிலையில் அல்லவா அவன் இருக்கிறான்.

“ம்ஹும்… கொடுத்து வச்சவன்டா… சூப்பர் பிகரை தள்ளிட்டு வந்திருக்கான்…” அவர்களை கடந்து சென்ற நண்பர்கள் கூட்டத்தில் இருந்து ஒரு குரல் அவர்கள் இருவரையும் பார்த்து கேலி செய்ய… காந்தனுக்கு முகத்தில் சுடு தண்ணீரை ஊற்றியது போல்… அவனின் கனவு கலைந்தது. இவ்வளவு நேரம் இருந்த அவனின் மயக்கம் தெளிய… அவனின் முகம் கறுத்து இறுகியது.

“முதல்ல தள்ளி உட்காருங்க…” அவளை அவன் கடிந்தான்.

“எதுக்கு தள்ளி உட்காரணும்…? அடுத்தவங்க பேசுறதை எல்லாம் மைன்ட் பண்ண கூடாது” என்றவள் அவனை விட்டு அகலவில்லை.

“அடுத்தவங்க பேசுறதை மைன்ட் பண்ண வேணாம்… ஆனா அடுத்தவளுக்கு ஹஸ்பெண்ட்டா போறவனை இப்படி உரசுறது தப்பில்லையா?” தன்னோட இயலாமையை… தன் மீது அவனுக்கு ஏற்பட்ட கோபத்தை அவள் மேல் வார்த்தைகளாய் கொட்டினான்.

ஆனால் அவளோ பதிலுக்கு கோபப்படாமல் அவனை தீர்க்கமாய் பார்த்தாள். அவளின் பார்வையை சந்திக்க முடியாமல் அவன் முகத்தை திருப்பி கொண்டான். “ரூபன்… இங்கே பாருங்க…” கண்டிப்பான குரலில் கூறியவள், அவனின் முகவாயை பிடித்து அவன் முகத்தை தன் பக்கம் திருப்பினாள்.

“இன்னொரு தடவை இந்த மாதிரி சொன்னீங்க… நான் மனுசியா இருக்க மாட்டேன்… உங்களுக்கு நிச்சயமும் ஆகல… கல்யாணமும் ஆகல. என்னை தவிர வேறு யார் கழுத்திலேயும் உங்களை தாலி காட்ட நான் விட மாட்டேன்… அப்படி நீங்க தாலி காட்ட போறீங்கன்னு தெரிஞ்ச அடுத்த நொடி… உங்களை…” என்றவள் அவன் கழுத்தை நெறிப்பது போல் சைகை செய்ய… அவன் பதறி போனவனாய் அவளின் கையை விலக்கினான.

“அந்த பயம் இருக்கணும்…” சுட்டு விரல் நீட்டி அவனை எச்சரித்தவளை கண்டு அவனுக்கு கோபம் வரவில்லை…

மாறாக அவனுக்கு சந்தோசமாக இருந்தது.

‘ஹப்பா… எப்படி எல்லாம் மிரட்டுறா? அச்சு அசல் சொர்ணாக்கா தான்…’ மனதுக்குள் சொல்லி கொண்டவன், அவளிடம்,

“அன்னைக்கு என்னமோ நீங்க யாரை வேணும்ன்னாலும் கல்யாணம் பண்ணிக்கோங்க… எனக்கும் ஒண்ணும் இல்லைன்னீங்க… இப்போ என்ன இப்படி கோபம் வருது?” ஒற்றை புருவத்தை தூக்கி அவன் கிண்டலாய் கேட்க,

“ரூபன் இப்போ நீங்க எவ்வளவு அழகா இருக்கீங்க தெரியுமா?” அவனின் பிம்பத்தை மனதில் உள்வாங்கியபடி மையலுடன் அவள் கூற…

“போச்சுடா…” என்று தலையில் கையை வைத்தவன், “உங்களுக்கு நிச்சயம் மறை கழண்டு போச்சு…” வலது நெற்றி ஓரமாக சுட்டு விரலை சுழற்றியபடி அவன் சொல்ல…

“ம்… மறை கழண்டு போய் ரொம்ப நாளாச்சு…” சொல்லியபடி மீண்டும் அவன் தோள் சாய்ந்தவள், “அது போன மாசம்… இது இந்த மாசம்…” நகைச்சுவையாய் கூறியவள்… பின் சீரியசாய், “ரூபன்… இந்த ‘ங்க’ வேண்டாமே… சும்மா வா போன்னே பேசுங்க… நீங்க இப்படி பேசும் போது… இவ்வளவு பக்கத்தில் இருந்தும்… நமக்கு ரெண்டு பேருக்கும் இடையில் ரொம்ப தூரம் இருக்கிற மாதிரி இருக்கு” அவள் கூற…

அவனோ ஒன்றும் பேசாமல் அவளை விலக்கி விட்டு எழுந்தான். அவளும் பேசாமல் எழுந்தவள் அவன் அழைக்காமல் அவனுடன் சேர்ந்து நடந்தாள். அவனும் அவள் உடன் வருவதை ஆட்சேபிக்கவில்லை. பேருந்து நிலையத்திற்கு வந்து நின்றவன் அவள் எங்கே போக வேண்டும் என்று கேட்கவில்லை… அவளும் சொல்லவில்லை. அவன் அருகில் நின்று கொண்டு சுற்றி இருந்தவர்களை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள்.

அந்நேரம் அவனுக்கான பேருந்து வர... அவளை அப்படியே தனியாக விட்டு விட்டு போக அவனுக்கு மனம் வரவில்லை. மனம் கேட்காமல், “நீங்க எப்படி போக போறீங்க?” அவன் கேட்டதை அதிசயமாய் பார்த்தவள், “ஏன் பஸ்ஸில் தான் போகணும்?” அவன் மேலும் தயங்கி நிற்க, “ஓ... உங்களுக்கு பஸ் வந்திருச்சா... ஓகே நீங்க போங்க... நான் போயிருவேன்...” அவனின் தயக்கத்தை கண்டு அவள் ஆறுதலாய் பதிலளிக்க... அவன் சரியென்பது போல் தலையசைத்தவன் அவளை பார்த்து கொண்டே பேருந்தில் ஏறினான்.

காந்தன் கிளம்பியதும் தனித்து விடப்பட்ட அரசி சற்று பயத்துடன் தான் நின்றிருந்தாள். அவள் அருகில் நின்று கொண்டிருந்தவனின் பார்வை அவளின் மேனியை அசிங்கமாய் வலம் வர... அவள் மனதுக்குள் அருவருத்து போனாள். அவனிடம் இருந்து சற்று தள்ளி நிற்க... அவனோ அவள் அருகில் வந்து நின்றான். மீண்டும் அவள் தள்ளி நிற்க... மீண்டும் அவன் அருகில் வந்து நின்றான்.

அரசிக்கு முள்ளின் மேல் நிற்பது போல் தவிப்பாய் இருந்தது. எப்போதுடா பேருந்து வரும் என்று இருந்தது? இல்லையென்றால் ஆட்டோ பிடித்து போய் விடுவோமா? என்று கூட யோசித்தாள். தனியாக ஆட்டோவில் செல்வதை விட... பேருந்தில் செல்வது பாதுகாப்பு என்று எண்ணியவள் பேருந்து வரும் திசையில் தன் கண்களை பதித்தாள்.

“ஹலோ மிஸ்... நீங்க எங்கே போகணும்?” அவள் அருகில் நின்றவன் தைரியமாய் அவளிடம் கேட்க,

“ம்... போலீஸ் ஸ்டேசனுக்கு போகணும்... வர்றீயா?” காந்தனின் குரல் கோபமாய் கேட்க... அவளிடம் கேட்டவன் சட்டென்று பின்வாங்கி தள்ளி சென்று நின்று கொண்டான்.

“வா...” என்ற காந்தன்... அரசியின் கையை பிடித்து கொண்டு... அருகில் நின்றிருந்த ஆட்டோவில் அவளை ஏற்றினான்.

“உன் வீட்டின் அட்ரெஸ் சொல்லு…” அவளை பார்த்து அவன் சொல்ல… அவள் ஓட்டுனரிடம் தன் வீட்டின் முகவரியை கூறியவள் அவனை திரும்பி பார்த்தாள்.

உணர்ச்சிகளற்று கல் போல் இறுகியிருந்த அவன் முகத்திலிருந்து எதையும் அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனாலும் தனக்காக… தன் பாதுகாப்புக்காக அவன் தன்னுடன் வருவதை அவள் பெரும் ஆறுதலாய் உணர்ந்தாள்.

“தேங்க்ஸ் ரூபன்…” அவன் கையோடு தன் கை கோர்த்து அவன் தோளில் நிம்மதியாய் அவள் சாய… அவனோ அவளின் செயலை எதிர்க்க மனம் வராமல்… அவளின் அருகாமையை மனதினுள் விருப்பத்துடன் ஏற்று கொண்டான். ஆனால் வெளியில் எதையும் காட்டிக் கொள்ளாமல் அவன் தனக்குள் இறுகி போய் அமர்ந்திருந்தான்.

“உன் கைகள் கோர்த்து உன்னோடு போக
என் நெஞ்சம் தான் ஏங்குதே தினம் உயிர் வாங்குதே
உன் தோளில் சாய்ந்து கண் மூடி வாழ
என் உள்ளம் அலைபாயுதே ஐயோ தடுமாறுதே
உன் கன்னம் மேலே மழை நீரைப் போலே
முத்தக் கோலம் போட ஆசை அல்லாடுதே
நீ பேசும் பேச்சு நாள் தோறும் கேட்டு
எந்தன் ஜென்மம் தீர ஏக்கம் தள்ளாடுதே”

அலைப்பேசி இன்னிசையாய் இசைத்து காந்தரூபனின் உறக்கத்தை கலைத்தது. எந்த நேரத்திலும், எப்படிப்பட்ட ஆழந்த உறக்கத்திலும் அவன் இருந்தாலும் இந்த பாடல் அவனின் செவியை தீண்டியதும் அவனின் துயில் கலைந்து விடும். இந்த பாடல் தன் மனதுக்கு இனியவளின் அழைப்புக்காக பிரத்யேகமாக தன் அலைப்பேசியில் வைத்திருந்தான் அவன்.

காலை நேரத்தில் அவள் அவனை அழைக்கிறாள் என்ற மகிழ்ச்சியே அவன் முகத்தில் நிறைந்திருந்தது. அதிலும் அந்த பாடல் வரிகளில் கூறியதை அவன் மனம் நினைத்து பார்த்தது. அவளுடன் கை கோர்த்து கொண்டு, அவளின் தோள் சாய்ந்து… அவளின் பட்டு போன்ற கன்னத்தில் அவனின் இதழ்கள் முத்த கோலம் போடுவதை… அவன் கற்பனை செய்தபடி படுத்திருந்தான். கனவு கூட சுகம் தரும் என்பது அப்போது அவனுக்கு புரிந்தது.

பாடல் திடீரென்று நின்றதும் அவனின் கனவும் கலைந்து… கற்பனையும் கலைந்து… நிஜம் முகத்தில் அறைந்தது. நிதர்சனம் உண்டாக்கிய மனசோர்வில் எழுந்து அமர்ந்தவன் மடியில் தலையணையை வைத்து கொண்டு அப்படியே அமர்ந்திருந்தான். மீண்டும் அலைப்பேசி அழைக்கவும் அவன் முகத்தில் புன்னகை வந்து ஒட்டி கொண்டது.

‘நான் விலகி போக நினைத்தாலும்… விட மாட்டாளே ராட்சசி…’ செல்லமாக அவளை மனதுக்குள் வைது கொண்டே அலைப்பேசியை உயிர்ப்பித்து காதில் வைத்தான்.

கடந்த மூன்று மாதமாக அவள் தன் காதலை அவனுக்கு உணர்த்தி கொண்டு தான் இருக்கிறாள். அதற்கு அவனிடமிருந்து எந்தவித பதிலும் கிடையாது. ஆனால் அதற்காக எல்லாம் அவள் ஒருநாளும் வருந்தியது கிடையாது. ஒருநாளின் பொழுது அவளின் காலை வணக்கத்துடன் ஆரம்பித்து இரவு வணக்கத்துடன் தான் அவனுக்கு முடிகிறது.

“ஹலோ குட்மார்னிங் ரூபன்…” வசீயரசியின் குரல் உற்சாகமாய் ஒலித்தது. காலையில் அவளின் குரலை கேட்டதும் அவனுக்குமே உற்சாகமாய் இருந்தது.

“குட்மார்னிங்…” அவனையும் அறியாமல் அவன் உதடுகள் முணுமுணுத்தது.

“ஹேய்…” பதிலுக்கு அவளின் குதூகலமான குரல் அவனின் செவிப்பறையை கிழித்தது.

“இவ்வளவு நாளில் இப்போது தான் முதன் முறையா… நீங்க எனக்கு விஷ் பண்ணியிருக்கீங்க… நான் ரொம்ப… ரொம்ப… சந்தோசமா இருக்கேன்…” விளம்பர பாணியில் கூறியவளை கண்டு அவன் முகம் மலர்ந்தது. ஆனாலும் அவள் கூறியதை கண்டு கொள்ளாதவனாய்,

“இன்னைக்கு என்ன விசேஷம்? உன் வீட்டு நாய் குட்டிக்கு பிறந்தநாளா?” அவன் அப்படி கேட்டதற்கும் அர்த்தம் இருக்கிறது.

அவள் அவனை பார்ப்பதற்காக ஒவ்வொரு நாளும் எதையேனும் சாக்கு சொல்லி கொண்டு அவனை பார்க்க வந்துவிடுவாள். அது போல் இன்றும் ஏதேனும் சொல்லுவாள் என்றெண்ணியே அவன் அவ்வாறு கேட்டது…!

“இன்னைக்கு உண்மையில் விசேஷம் தான்… நீங்க இவ்வளவு சுமுகமாய் பேசியதே அதிசயம் இல்லையா?” என்று போலியாய் வியந்தபடி அவனுக்கு பதிலளித்தவள் பின் தொடர்ந்து, “அதனால… இன்னைக்கு ஈவ்னிங் நீங்க என் கூட டைம் ஸ்பெண்ட் பண்ணனும்?”

சரியென்று சொல்ல வாயெடுத்தவனுக்கு அப்போது தான் நியாபகம் வந்தது… தான் இன்று மாலை ஊருக்கு செல்ல வேண்டுமென்று. ‘இவளிடம் பேசினால்… நான் என்னையே மறந்து விடுகிறேன்… அப்படி என்ன தான் சொக்கு பொடி போடுறாளோ… தெரியவில்லை…’ மனதுக்குள் நினைத்தவன், “நான் இன்னைக்கு ஈவ்னிங் ஊருக்கு போறேன்… சோ…” அவன் முடிக்கவில்லை…

“ஓ… பரவாயில்லை… நல்லபடியா போயிட்டு வாங்க… பை…” என்றபடி அவள் அழைப்பை துண்டித்து விட… அவனுள் ஏதோ ஒருவித ஏமாற்றம் குமிழிட்டது.

‘அவ்வளவு தானா? என் மேல் உனக்கு உள்ள காதல் அவ்வளவு தானா? நான் ஊருக்கு போகிறேன் என்றதும்… அது உன்னுள் எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தவில்லையா? நான் ஊருக்கு செல்வதற்கு முன் என்னை பார்க்க… நீ வர மாட்டாயா?’ அவனின் மனதுக்குள் ஒரு குரல் ‘ஓ’வென்று அழுது புலம்பியது.

அன்றைய நாளின் வேலைகளை ஒருவித இயந்திரத் தன்மையுடன் செய்து முடித்த காந்தன், மாலையில் பயணத்திற்கு தேவையானதை எடுத்து வைக்க ஆரம்பித்தான். எவ்வளவு நேரம் தான் எடுத்து வைக்க முடியும்…! அதுவும் ஒரு அரை மணி நேரத்தில் முடிந்துவிட… தன் பையை எடுத்து கொண்டு வெளியில் வந்தவனின் கைகள் கதவை பூட்டுவதற்கு முன் ஒரு நொடி தயங்கி நின்றது.

ஒருவேளை கடைசி நேரத்தில் அவள் தன்னை காண வருவாளோ? அவன் மனதின் ஓரத்தில் நம்பிக்கை பூ பூக்க… மேலும் பத்து நிமிடங்கள் தாமதித்து பார்த்தான். ம்ஹும்… அவள் வருவதற்கான அறிகுறி இல்லை என்றதும்… முயன்று தன்னை சமாளித்து கொண்டு வீட்டை பூட்டியவன் பேருந்து நிலையத்தை நோக்கி பயணமானான்.

பேருந்தில் ஏறியவன் தன் இருக்கை எண்ணை கண்டுபிடித்து அதில் சோர்வுடன் அமர்ந்தான். இதற்கு மேலும் அவள் அவனை வழியனுப்ப வருவாள் என்பதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. அதற்கு ஏற்றார் போல் பேருந்தும் கிளம்ப தயாரானது. தன் சிறு ஆசையே நிராசையானதில் அவன் உள்ளுக்குள் உடைந்து போனான்.

‘இந்த ஆசையே நிறைவேறவில்லை… இதில் அவளை கைப்பிடிப்பேன் என்று எந்த உறுதியில் அவளை காதலிக்க ஆரம்பித்தேன்…’ அவன் மனம் மீண்டும் குழம்ப ஆரம்பித்தது. அவன் ஆயாசத்துடன் இருக்கையில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடி கொண்டான்.

“ஹாய் ரூபன்…” அவனை இடித்து கொண்டு அமர்ந்தவரின் குரலும், ஸ்பரிசமும் அவனுள் மகிழ்ச்சியை ஏற்படுத்த…

அவன் கண்களை திறவாமல் அப்படியே அமர்ந்திருந்தான்.

தன்னவள் வந்து விட்டாள்... தன்னருகில் தான் அமர்ந்திருக்கிறாள் என்பதை நம்ப இயலாதவனாய்... அவளின் எதிர்பாராத வருகையால் அவனின் மனம் பரவசமாக அந்த மகிழ்ச்சியை உள்வாங்கியபடி அசையாது அப்படியே இருந்தான்.

“ரூபன்... பஸ் கிளம்ப கூட இல்லை... அதுக்குள்ளே தூக்கமா?” அவளின் குரலில் அவன் கண் திறந்து அவளை பார்த்தான்.

அவனின் விழுங்கி விடுவது போலிருந்த அந்த பார்வையில்... அவளின் முகம் சிவந்து தான் போயிற்று. ‘என்ன பார்வையடா இது? காதலை சொல்ல மாட்டேங்கிற... ஆனா பார்வை மட்டும் அப்படியே ஆளை முழுங்குற மாதிரி இருக்கு. காந்தன்ங்கிற உன் பேருக்கு ஏத்த மாதிரி உன் பார்வை என்னை காந்தமாய் உன் பக்கம் இழுக்குதடா...’ மனதுக்குள் அவள் உருகி தான் போனாள்.

தன் மன தடுமாற்றத்தை மறைப்பதற்காக அவள், “எனக்கு ஜன்னலோரம் உட்கார்ந்தா தான் பிடிக்கும்...” என்றவள் எழுந்து அவனை தள்ளி அமர சொல்லி விட்டு தான் ஜன்னலோரமாய் அமர்ந்து கொண்டாள்.

“அப்புறம் ரூபன்...” அவள் அவன் புறம் திரும்ப... அவனோ தன் பார்வையை கொஞ்சமும் மாற்றி கொள்ளாமல் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண்டிருக்க... அவனின் பார்வையில் அல்லிராணி வசீயரசி மீண்டும் முகம் சிவந்தாள். தன் முக சிவப்பை மறைப்பதற்காக வெளிப்புறம் திரும்பி வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

பேருந்தில் இருந்த குழந்தை ஒன்றின் அழுகை ஒலியில் காந்தனின் மயக்கம் விலகியது. தான் அவளை கண்சிமிட்ட மறந்து பார்த்து கொண்டிருந்ததை கண்டு அவள் என்ன நினைப்பாள்? என்று தன்னை தானே கடிந்து கொண்டு தன்

முக மாறுதலை உடனடியாக மாற்றி கொண்டு இயல்பு போல் காட்டி கொண்டான்.

“நீ எங்கே இங்கே?” இப்போது எல்லாம் அவன் அவளை ஒருமையில் தான் அழைக்கிறான். அவளை மரியாதை பன்மையில் அழைத்தால்... ஏனோ அவன் மனதுக்கு நெருக்கமாய் இல்லாத காரணத்தால்... அவன் அவளிடம் பேசும் முறையை மாற்றி கொண்டான்.

“ஏன்... உங்களுக்கு மட்டும் தான் ஹாலிடேயா? எங்களுக்கு எல்லாம் ஹாலிடே இருக்க கூடாதா?” அவனின் இயல்பில் அவளின் இயல்பான துடுக்குத்தனம் திரும்பி இருந்தது.

“இருக்கலாம்... இருக்கலாம்... இருக்க கூடாதுன்னு ஒரு சட்டமும் இல்லையே...” இரு கைகளை தூக்கி கொண்டு அவன் அவளிடத்தில் சரணடைவது போல் சொல்ல... அதில் அவளுக்கு சிரிப்பு வந்தது.

“எல்லாம் சரி தான்... நான் போகும் அதே பஸ்ஸில்... எனக்கு பக்கத்து சீட்டில்... அது தான் கொஞ்சம் இடிக்குது...” அவன் கண்களை சுருக்கி கொண்டு அவளை பார்த்து கூர்மையுடன் கேட்க,

“கொஞ்சம் தான் இடிக்குதா...?” என்றவள் அவனை நன்றாக இடித்து கொண்டு அமர்ந்து, “இப்போ நல்லா இடிக்குதா?” அப்பாவியாய் விழி விரித்து கேட்க... அவன் அவளை முறைத்தான்.

“சரி சரி... கோபப்படாதீங்க...” என்று அவனை சமாதானம் செய்தவள், “அறிவு அண்ணா...” ஒற்றை வார்த்தையில் அவள் பதிலளிக்க... அவனுக்கு எல்லாம் விளங்கியது.

“ரெண்டு பேரும் சேர்ந்து கூட்டு சதியா?” அவன் ஒருமாதிரி குரலில் கேட்க,

“என்னது கூட்டு சதியா?” முகம் சுளித்தவள்... “ஹலோ அவர் எப்பவும் நம்மளோட நலம் விரும்பி... அதை மனசுல வச்சிட்டு பேசுங்க...” அவளின் கூற்று உண்மை என்பதால் அவன் அமைதி காத்தான். அறிவு அவனுக்கும் நண்பன்

அல்லவா...! அதிலும் இன்பத்திலும்... துன்பத்திலும் தோள் கொடுக்கும் உயிர் காக்கும் தோழன் அவன்.

அவனின் அமைதியை அவளும் கலைக்க விரும்பாதவளாய் தனது கையிலிருந்த பையில் எதையோ தேடி கொண்டு இருந்தாள். அவளின் மௌனத்தில் தன் அமைதியை கலைத்தவன்... அவளை ஏறிட்டு பார்த்தான். தான் பேசாமல் இருப்பது அவளுக்கு வருத்தமாக இருக்கும் போலும் என்று எண்ணி கொண்டு அவன் வாய் திறக்க போக... அவனை முந்தி கொண்டு அவள்,

"ரூபன்... மசாலா பொரி வேணுமா? செம டெஸ்ட்டா இருக்கும். நான் வழக்கமா இங்கே தான் வாங்குவேன்..." ஒரு கடையின் பேரை சொன்னவள் அவனிடம் பொரியை நீட்டினாள்.

'அடப்பாவி... நீ வருத்தப்படுவேன்னு நினைச்சா... நீ சாப்பிடற இன்ட்ரஸ்ட்ல இருந்தியா? அதானே என்னடா அம்மிணி வாயை திறக்க காணோம்ன்னு பார்த்தேன்... என்ன கொடுமை காந்தா...!' மனதுக்குள் நினைத்தவனுக்கு சிரிப்பாக வந்தது.

"இல்ல... எனக்கு வேணாம்..." என்றவன் அவள் உண்பதை ஆசையுடன் பார்த்து கொண்டிருந்தான்.

அந்த பயணம் முழுவதும் அவள் தன்னை பற்றி... தன் விருப்பு வெறுப்பு பற்றி ஒவ்வொன்றாய் கூற... கூற... அவன் ஆவலுடன் கேட்டு கொண்டான். அவனை பற்றி அவள் கேட்க... அவனோ வாய் திறக்கவில்லை... அவளும் அதை பற்றி அதிகம் யோசிக்கவில்லை. அவனுடன் பேசுவது ஒன்று தான் தன் வாழ்நாளின் லட்சியம் என்பது போல் வாய் ஓயாமல் பேசி கொண்டு வந்தாள். அவள் என்ன பேசினாலும்... அவள் கைக்கும் வாய்க்குமான வேலை செவ்வன நடந்தை கண்டவனுக்கு சிரிப்பு பிறீட்டது. அவன் முயன்று தன்னை அடக்கி கொண்டான்.

"ரூபன்... எனக்கு தூக்கம் வருது... வழியிலே எங்கேயாவது சாப்பிட நிறுத்தினா மறக்காம என்னை எழுப்பி விடுங்க..."

அவள் கூறியதை கேட்டு,

“இதுக்கு மேலேயும் சாப்பிட்ட... அப்புறம் உன்னை தூக்கிட்டு கூட போக முடியாது... உருட்டிட்டு தான் போகணும்....” கேலியாய் கூறியவனை கோபமாய் முறைத்தவள்,

“யோவ்... என்ன கிண்டலா?” அவனின் சட்டையை பிடித்து இழுத்து அவனை தன் அருகில் இழுத்தபடி கேட்க, அதில் அவன் தடுமாறி தான் போனான்.

“அம்மா தாயே... என்னை ஒண்ணும் செய்திடாதே... கட்டாயம் உன்னை எழுப்பி விடுறேன்...” இருகரம் கூப்பி அவன் வேண்ட... அவள் போனால் போகிறது என்றபடி அவனின் சட்டையை விடுவித்தவள் கண்களை மூடி கொண்டு உறங்க ஆரம்பித்தாள்.

அவள் உறங்கும் அழகை சிறிது நேரம் பார்த்து கொண்டிருந்தவன்... பின் தன் கையிலிருந்த பத்திரிகையில் கண்களை பதித்தான். திடுமென பேருந்து குலுங்கியதில் சாய்ந்திருந்த அவள் முன்னால் விழ போக... அவன் அவளை தாங்கி பிடித்தான். அவளின் தோளை இறுக்கி பிடித்தவனுக்கு அவள் மேல் இருந்து கையை எடுக்க மனம் வரவில்லை. அவளை தன் தோளில் சாய்த்து கொண்டு தன் கையணைப்பிலேயே வைத்து கொண்டான். தனது இடது கையை அவள் தோள் சுற்றி போட்டவன்... வலது கையால் அவளின் கையை பிடித்து கொண்டான்.

அவள் நினைத்தால்... அவளின் தந்தை ஊருக்கு செல்வதற்கு விமான சீட்டை பதிவு செய்து அனுப்பி இருப்பார். இல்லை ரயிலில் முதல் வகுப்பு பயணசீட்டை பதிவு செய்திருப்பார். இவை அனைத்தையும் மறுத்துவிட்டு தனக்காக... தன் அருகாமைக்காக... இந்த மாதிரி சாதாரண பேருந்தில் பயணம் செய்யும் அவளின் அன்பு கண்டு அவனின் உள்ளம் உருகியது.

‘அப்படி என்னடி என்னிடம் கண்டாய்... இந்தளவு காதல் கொள்வதற்கு... உன்னளவுக்கு எனக்கு தைரியம் இல்லையே கண்ணம்மா... என் காதலை சொல்வதற்கு! நீ

எனக்கு ஏற்றவள் தானா என்று இப்போதும் என் மனம் குழம்பி தவிப்பது எனக்கு மட்டும் தான் தெரியும்... நான் உனக்கு ஏற்றவனா? என்னால் உன்னை நன்றாக வைத்து கொள்ள முடியுமா? என் வருமானத்தில் உன்னால் சந்தோசத்துடன் வாழ முடியுமா? இப்படி பல கேள்விகள் என் நெஞ்சில் படை எடுக்கிறதே... நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்கே தெரியவில்லை...'

'இப்படியே என்னுடன் வந்துவிடுகிறாயா... யாருமில்லா உலகத்தில்... நீயும் நானுமாய்... தனிமையில் இனிமை காணுவோமா... நீ வருவாய்... எனக்கு தெரியும்... நான் கூப்பிட்ட அடுத்த நொடி நீ அனைத்தையும் துறந்து விட்டு என்னுடன் வருவாய்... அது எனக்கு நிச்சயம் தெரியும். ஆனால் நான்... என்னால் அப்படி வர முடியுமா? தாய்க்கு ஒற்றை மகனாய்... தங்கைகளுக்கு அண்ணனாய்... பொதி சுமக்கும் கழுதையாய் இருக்கும் என்னை ஏன் நீ காதலித்தாய்?'

அவளிடம் கேட்பது போல் அவன் தனக்குள் கேள்வி கேட்டு கொண்டான். ஆனால் அதற்கு விடை தான் கிடைக்கவில்லை. தன் மனதில் எழுந்த காதலின் அழுத்தம் தாங்காமல் அவன் அவளின் உச்சந்தலையில் அழுத்தமாய் தன் இதழை பதித்தான். அவன் அணைவில் சுகமாய் உறங்கி கொண்டிருந்தவளோ அவனின் செயலை சற்றும் உணரவில்லை... உணர்ந்திருந்தால்... பின்னால் ஏற்பட போகும் பல விபரீதங்களை தவிர்த்து இருக்கலாமோ?

பின்பு அவளை சிறு குழந்தை போல் அணைத்து கொண்டு அவனும் உறங்கிவிட்டான். மதுரை வந்ததும் தான் அவன் எழுந்தான். இன்னமும் அவளை தன் கையணைப்பில் இருப்பதை உணர்ந்தவன் இதழ்கள் தானாக விரிந்தது. திருநெல்வேலி அருகே வரும் போது அவளை விட்டு விலகி அமர்ந்தவன், அவளை எழுப்பிவிட்டான். அவளுக்காக அவள் தந்தை அந்த நேரத்திலும் பேருந்து நிலையத்தில் வந்து காத்திருந்தார்.

அவரை கண்டதும் அவன் பின் தங்க, “அவரை பார்த்து பயப்பட வேண்டியது நான்... நீங்க இல்ல... நானே பயப்படல... இப்போ நீங்க என் கூட வர போறீங்களா இல்லையா...?” அவன் கையை பிடித்து கொண்டு அவள் வம்பு செய்ய,

“உனக்கு பயம்ன்னா பயத்துக்கே காய்ச்சல் வந்திரும்... நான் அதுக்கு சொல்லல... ஒண்ணுமில்லாததுக்கு எதுக்கு வீணா பிரச்சினையை கிளப்பிட்டு?”

“என்னை லவ் பண்ணுறது... உங்களுக்கு ஒண்ணுமில்லாததா?” அந்த நிலையிலும் அவள் கோபப்பட...

“ப்ளீஸ்... நான் சொன்னா கேட்க மாட்டியா?” அவன் இறைஞ்சும் குரலில் கேட்க...

“ரொம்ப கெஞ்சி கேட்கறதால போனா போகுதுன்னு விடுறேன்...” என்று தன் பைகளை எடுத்து கொண்டு நகர்ந்தவள்... பின் ஏதோ நினைத்தவளாய் நின்று அவன் கையை பிடித்து அழுத்தி விட்டு, “பை...” என்றவள் அவனை ஆழமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு சென்றாள்.

அவளின் பார்வையில் என்ன இருந்தது? அதன் அர்த்தம் என்ன? எதுவுமே அவனுக்கு புரியவில்லை. அவள் சென்றுவிட்டாளா என்று ஜன்னல் வழியே எட்டி பார்த்தவனின் கண்களில் காரில் ஏறி கொண்டிருந்தவள் பட்டாள். காரிலேறி அமர்ந்தவள் அவன் தன்னை பார்ப்பது கண்டு அவனை பார்த்து புன்னகை செய்தவள் லேசாக கையை அசைத்தாள். அவளின் தைரியம் கண்டு அவனுக்கு தான் பக்கென்றது. உடனே தன் தலையை உள்ளுக்குள் இழுத்து கொண்டான்.

வீட்டிற்கு சென்றவனை தாயும் தங்கையும் பாசமாய் வரவேற்க... அந்த பாச மழையில் அவன் விருப்பத்துடன் நனைந்தான்.

“என்ன அண்ணா... சென்னைக்கு போய் ஆளே மாறிட்டீங்க... நல்ல கலராகி... கொஞ்சம் வெயிட் போட்டு... இப்போ தான் ரொம்ப அழகா இருக்கீங்க...” கார்த்திகா தான் நினைத்ததை மறைக்காமல் கூற... காவேரியும் அதை ஆமோதித்தார்.

காதலில் விழுந்த தனது உள்ளத்தின் உவகை முகத்தில் அப்பட்டமாய் தெரிகிறதோ என்ற சந்தேகத்தில், “அப்படியா தெரியுது... எனக்கு ஒண்ணும் தெரியலியே...” என்று அவர்களை சமாளித்தவன், “அம்மா... மலருக்கும் குட்டி பையனுக்கும் ட்ரெஸ், விளையாட்டு சாமான் எல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன். நான் காஞ்சனாவை நேரில் பார்த்து கொடுத்துட்டு வரவா?”

“தாராளமா போயிட்டு வாப்பா... அவ வீட்டுக்கு கொண்டு போய் விட்டு பத்து நாளு தான் ஆகுது... என்னமோ வருச கணக்கான மாதிரி அந்த குட்டி பயல் கண்ணுக்குள்ளேயே இருக்கான்... மலரையும் பார்க்கணும் போலிருக்கு...”

“நீங்களும் வாங்களேன்ம்மா...”

“இல்ல... வேணாம்ப்பா நீ மட்டும் போயிட்டு வா...” அவர் சம்மதம் அளிக்க... அவன் தங்கையின் வீட்டிற்கு செல்ல ஆயத்தமானான்.

அங்கே தங்கையின் வீட்டிற்கு சென்றவனுக்கு வருங்கால மாப்பிள்ளை என்ற முறையில் வரவேற்பு பலமாய் இருந்தது. அதில் அவன் மிகவும் கூச்சப்பட்டு தான் போனான். இதில் தேவியின் மையல் பார்வையோ அவனுக்கு மேலும் சங்கடத்தை கூட்ட... எப்போதடா கிளம்புவோம் என்றாகி போனது அவனுக்கு.

தனிமையில் காஞ்சனாவை அழைத்தவன், அவள் கையில் கொஞ்சம் பணம் கொடுத்து, “செலவுக்கு வச்சுக்கோம்மா...” பாசமுள்ள அண்ணனாய் அவன் சொல்ல... அவளுக்கு கண்கள் கலங்கியது.

“என் மேலே உங்களுக்கு பாசம் இருக்குதாண்ணா...?”

“என்னம்மா இப்படி கேட்குற… உங்க ரெண்டு பேரு மேல நான் உயிரையே வச்சிருக்கேன்னு உனக்கு தெரியாதா? இதில் உனக்கு என்னம்மா அவ்வளவு சந்தேகம்?” அவன் வருத்த குரலில் கூற,

“அப்படின்னா… முதல்ல என் நாத்தனாரை நீங்க கல்யாணம் பண்ணிக்கோங்க… அப்போ தான் எனக்கு இங்கே மரியாதை கிடைக்கும்… நீங்க கல்யாணத்தை தள்ளி போட போட… அவங்க சந்தேகமா பேசுறாங்க… இதனால என் வாழ்க்கைக்கு ஏதும் பிரச்சினை வந்திருமோன்னு பயமாயிருக்கு…”

கண்களில் கண்ணீர் வழிய கூறிய தங்கையை கண்டு அவன் செய்வதறியாது திகைத்தான். காஞ்சனாவிற்கு அண்ணனின் மனம் தெரியும்… ஆனாலும் தன் வாழ்க்கையை காப்பாற்றி கொள்ள வேண்டும் என்ற சுயநலம் அவளை இப்படி மாற்றிவிட்டது.

இவ்வளவு காலம் அவன் மேல் பாசம் காட்டிய அவன் குடும்பம் பெரியதா? இல்லை நேற்று வந்தவளின் காதல் பெரியதா? என்ற மிக பெரிய கேள்வியை அவன் முன்னால் வைத்தாள் அவனருமை தங்கை. அவனோ பதில் பேச இயலாதவனாய் வாயடைத்து போய் நின்றான்.

காஞ்சனாவின் கேள்விக்கு எந்தவொரு பதிலும் கூறாமல் சமாளித்து விட்டு வீடு வந்த காந்தன்... களைப்பாக இருக்கிறது என்று கூறி தன் அறைக்குள் சென்று அடைந்து கொண்டான். அவன் மனதில் தான் ஏதோ செய்ய கூடாத தவறை செய்து விட்டது போன்ற குற்றவுணர்வு எழ... அடுத்து என்ன செய்வது? என்று தெரியாமல் தலையை பிடித்து கொண்டான்.

காந்தனின் மனம் இருபக்கமும் ஊசலாடும் ஊஞ்சல் போல் ஒரு நிலையில் இல்லாமல் தவித்து கொண்டிருந்தது. ஒரு பக்கம் குடும்பத்தின் பாசம், மறுபக்கம் வசீயரசியின் காதல்... இந்த இரண்டும் அவன் மனதை அலைக்கழித்தது. வெகுநேரம் யோசித்து பார்த்தவனுக்கு ஒரே ஒரு வழி தான் புலப்பட்டது. இத்தனை நாள் அவனை பாசத்தோடு வளர்த்த குடும்பத்தினரின் அன்பு முன்... மூன்று மாதமே ஆன அவனின் காதல் சற்று தாழ்ந்தே காணப்பட்டது. குடும்பத்தினருக்காக காதலை துறக்க அவன் ஏகமனதாய் முடிவு செய்தான்.

‘சரியான கோழையடா நீ... அவளின் தந்தையை எதிர்க்க உனக்கு துணிவு இல்லை... அவளின் பணம் கண்டு உனக்கு பயம்... மொத்தத்தில் அவளுக்கு ஏற்றவன் இல்லை என்ற பொய்யின் பின்னால் மறைந்து கொண்டு அவளின் காதலை நிராகரிக்கும் பயந்தாங்கொள்ளி நீ... உனக்கு எல்லாம் எதுக்கு மீசை... பேசாமல் புடவை எடுத்து கட்டி கொள்...’ அவனின் மனசாட்சி அவனை பார்த்து ஏளனம் செய்தது.

அவன் இத்தனை நாள் அவனை பார்த்து கேட்க பயந்து கொண்டிருந்த கேள்வியை அவனின் மனசாட்சி சிறிதும் பயமில்லாமல் கேட்டது. அந்த கேள்வியில் அவன் முற்றிலுமாய் நிலைக்குலைந்து போனான்.

‘இல்லை... இல்லை... நான் யாருக்காகவும் பயப்படவில்லை... எனக்கு எந்தவித நிர்பந்தமும்

இல்லாமல் இருந்திருந்தால்... அவளை தூக்கி கொண்டு வந்து தாலி கட்டி இருப்பேன். அப்படி என்னை செய்ய விடாமல் தடுப்பது என் குடும்பம். எனக்கு என் குடும்பத்தின் மகிழ்ச்சி தான் முக்கியம்... அதுக்கு இந்த காதல் தடையாக இருந்தால்... அதை தூக்கி ஏறிய ஒரு நொடி கூட தயங்க மாட்டேன். அதிலும் என் தங்கையின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கி விட்டு... எனக்கு வாழ்க்கை கேட்கிறதா? அவளின் கண்ணீரில்... என் சந்தோசத்தை நான் அடைய வேண்டுமா? வேண்டவே வேண்டாம்... ஒரு தங்கையின் வாழ்க்கையை கலைத்து... இன்னொரு தங்கையின் கல்யாண கனவை கலைத்து... அப்படிப்பட்ட பாழாய் போன காதல் எனக்கு தேவையில்லை. அதற்கு நான் கோழையாகவே இருந்துவிட்டு போகிறேன்...' மனசாட்சிக்கு பதில் சொல்வது போல் தனக்கும் சேர்த்து சொல்லி கொண்டான்.

'உனக்கு உன் குடும்பத்தின் பாசம் பெரியது தான் இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆனால் உன் மேல் கண்மூடித்தனமான காதல் வைத்திருக்கும் அந்த பெண்ணின் மனம்... உன் திருமண செய்தியால் என்ன பாடுபடும் என்று ஒரு கணம் யோசித்து பார்த்தாயா? இது நீ காதலிக்கும் பெண்ணிற்கு செய்யும் துரோகம் இல்லையா?' மறுபடியும் மனசாட்சி கேள்வி கேட்க... அவனிடம் பதில் இல்லை. மனசாட்சியின் கேள்விகள் மனதில் வலியை ஏற்படுத்த... கண்களை இறுக மூடிக் கொண்டான்.

"காந்தா..." என்று அழைத்தபடி அறைக்குள் நுழைந்த காவேரியை கண்டு கண்களை திறந்தவன் என்னவென்று பார்க்க, "சாப்பிட்டு படுப்பா..."

"உங்க கூட கொஞ்சம் பேசணும்... உட்காருங்கம்மா" மகன் சொன்னதும் அவன் அருகில் அமர்ந்தவர்,

"என்ன விசயம் காந்தா?"

"காஞ்சனா... கல்யாணத்தை பத்தி பேசினா... அவங்க வீட்டில் சீக்கிரம் வைக்க சொல்றாங்க போல... என்ன பதில்

சொல்றதும்மா?” என்றவனை கூர்ந்து பார்த்தவரின் பார்வையில் இருந்து அவனின் முக சோர்வு தப்பவில்லை.

“அதுக்கு உன் பதில் என்ன காந்தா?”

“உங்க பதில் தான் என் பதிலும் கூட… எனக்கு இதில் தனிப்பட்ட கருத்து எதுவும் இல்லை” அவனின் பதிலில் அவர் தான் குழம்பிவிட்டார்.

“நீ அன்னைக்கு கூட்டிட்டு வந்த பொண்ணை லவ் பண்றதா கார்த்தி சொன்னாளே? அது உண்மையா காந்தா? அது உண்மைன்னா உன் காதலுக்கு எங்களுக்கு முழு சம்மதம்…”

“அய்யோ… அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை அம்மா…” அவசரமாய் அவரின் கூற்றை மறுத்தான் அவன். அவனின் அவசரமான மறுப்பு அவரின் கவனத்தை கவர்ந்து மனதை கவலைக்குள்ளாக்கியது.

“உன் தங்கச்சிங்க வாழ்க்கைக்காக உன் வாழ்க்கையை தியாகம் பண்றதா நினைச்சிட்டு… உன் சந்தோசத்தை விட்டு கொடுத்திடாதே காந்தா… என்ன தான் கூடப் பிறந்தவங்கன்னாலும்… இந்த காலத்துல கொஞ்சம் சுயநலமா இருந்தா தான் பொழைக்க முடியும். உன் தங்கச்சிங்க ரெண்டு பேரும் என்னோட பிள்ளைங்க தான். அதேசமயம் நீயும் என்னோட பிள்ளை தான் என்பதையும் மறந்திடாதே. எங்களுக்காக இதுவரை நீ பண்ணிய தியாகம் எல்லாம் போதும். இது உன் வாழ்க்கை… இதில் தியாகத்துக்கு இடமில்லை காந்தா…! உன் மனசுக்கு என்ன தோணுதோ அதை செய். அதுக்கு இந்த அம்மாவோட முழு ஆதரவும் உண்டு”

அன்னையின் அன்பில் அவனுக்கு மனம் நெகிழ்ந்தது. இந்த தூய அன்பிற்காக எதையும் செய்யலாம் என்று அவன் மனம் எண்ணியது. “அம்மா… அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை… கார்த்தி கண்ட கண்ட சினிமா பார்த்து கற்பனை கதை உண்டாக்குகிறாள். நான் யாரையும்

காதலிக்கவில்லை” அவரின் கையை பிடித்து  கொண்டு அவன் சொல்ல… அவர் தான் குழம்பி போனார்.

“அப்போ இந்த கார்த்தி தான் தேவையில்லாம சொன்னாளோ? என்ன பொண்ணோ… தெரியல? சரி அதை விடு… அடுத்து என்ன செய்யலாம்… நீயே சொல்லு?”

“அதான் சொல்லிட்டேனே உங்க இஷ்டம்ன்னு…” அவன் சொல்லவும்,

“நாளைக்கு காஞ்சனா மாமியாரிடம் பேசவா?”

“ம்…” என்றவாறு தலையாட்டியவனிடம், “சரிப்பா… சாப்பிட வா…” என்றழைத்தவர் வெளியேற… அவன் அவரை பின் தொடர்ந்தான்.

**************************************************

“ரூபன்… நீங்க எங்கே இருக்கீங்க? நான் பஸ்ஸில் ஏறி டென் மினிட்ஸ் ஆச்சு” வசீயரசியின் குரல்… அலைப்பேசியின் வழியே வந்து அவனின் காதை நிறைத்தது.

“நா… நான் சென்னை வந்துட்டேன்…” அவன் புறப்படுவதாக இருந்த நாளுக்கு முன்னரே அங்கிருந்து கிளம்பி இங்கே வந்துவிட்டான். அவளை தவிர்ப்பதற்காகவே அவன் அப்படி செய்தான்.

“என்னது…?” அவளின் அதிர்ந்த குரல் அவனுக்கு வருத்தத்தை அளித்தது. ஆனாலும் ஒன்றும் பேசாமல் மௌனம் காத்தான்.

“திடீர்ன்னு முக்கியமான வேலை ஏதும் வந்திடுச்சா ரூபன்?” இறங்கி போன குரலில் அவள் கேட்க,

“ஆங்… ம்…” என்று அவன் பதிலளிக்க…

“ஓகே… நாளைக்கு நாம மீட் பண்ணலாம்…” என்றவள் அலைப்பேசியை அணைக்க… அவன் ஒரு பெருமூச்சுடன் அலைப்பேசியை அணைத்தான்.

தொலைவில் தெரிந்த நட்சத்திர கூட்டத்தை வெறித்து பார்த்தவாறு அமர்ந்திருந்தவன் மனதில்... நாளை அவளை எப்படி எதிர் கொள்வது? என்ற எண்ணமே ஓடி கொண்டிருந்தது.

‘அவள் வருவதற்குள் நான் வேலைக்கு சென்று விட்டால் என்ன...? இப்படி எத்தனை நாள் அவளை கண்டு ஓடி ஒளிய முடியும்? என்றாவது ஒருநாள் அவளிடம் உண்மையை சொல்லி தான் ஆக வேண்டும். அது நாளை என்றே இருக்கட்டுமே... வீணான கற்பனையை அவள் மனதில் வளர்ப்பதும் நியாயம் இல்லையே... நாளை எப்படியும் அவளிடம் எனக்கு திருமணநாளை முடிவு பண்ணியிருப்பதை சொல்லி தான் ஆக வேண்டும்’ மனதுக்குள் உறுதி எடுத்து கொண்டான்.

அந்நேரம் அவனின் அலைப்பேசி மீண்டும் சிணுங்க எடுத்து பார்த்தான். அறிவு தான் அழைத்தான்.

“சொல்லுடா அறிவு?” வரவழைத்து கொண்ட உற்சாகத்துடன் காந்தன் பேச...

“என்ன சொல்லுடா...? ஊருக்கு வந்திருக்க... ஆனா என்னை பார்க்க மட்டும் நீ வரல? அந்தளவுக்கு நான் வேத்து ஆளாகிட்டேனா உனக்கு? ஏண்டா இப்படி பண்ணின?” அறிவு படபடவென பொரிந்து விட்டான்.

“அவசர வேலை வந்ததுன்னு கிளம்பி வந்துட்டேன்...” சமாளித்தவனை அறிவின் வார்த்தைகள் கூர்மையாய் தாக்கியது.

“என்ன வேலைடா? உன்னோட கல்யாண வேலையா?” இவனுக்கு எப்படி தெரியும்? என்று காந்தன் குழம்பும் போதே,

“உன்னை பார்க்கலாம்ன்னு உன் வீட்டுக்கு போயிருந்தேன்... அப்போ அம்மா தான் சொன்னாங்க” இனியும் அறிவிடம் மறைத்து பயனில்லை என்று

எண்ணியவன் தன் மனதில் உள்ளதை அவனிடம் கொட்டி விட்டான்.

“போடா முட்டாள்… குடும்பத்துக்காக வாழ வேண்டியது தான் இல்லைங்கல்ல… அதுக்காக உன் மனசை பலி கொடுத்துட்டு வாழணும்ன்னு அவசியம் இல்லடா?”

“என்னை என்ன தான் பண்ண சொல்ற அறிவு?”

“நீ பண்ணியது வரைக்கும் போதும்… நீ யார் கிட்ட இருந்தும் தப்பிவிடலாம்… ஆனா அரசி கிட்ட இருந்து தப்ப முடியாது? அவள் கேட்கிற கேள்விக்கு நீ என்ன பதில் சொல்ல போற? நீ என்ன பதில் சொன்னாலும் அவ நம்ப மாட்டா… கேட்கவும் மாட்டா… நாளைக்கு அவளுக்கு சொல்ல வேண்டிய பதிலை தயாரா வச்சுக்கோ” என்ற அறிவு அவனின் பதிலை எதிர்பார்க்காமல் வைத்துவிட்டான்.

என்ன பதில் கூறி அவளை சமாதானப்படுத்துவது? என்று அவன் யோசிக்கும் போதே… எந்த பதிலிலும் அவள் அவ்வளவு எளிதில் சமாதானமாக மாட்டாள் என்ற உண்மை அவனுக்கு முகத்தில் அறைந்தது. தன்னை கொன்றாவது அவளுடன் வைத்து கொள்ளும் அளவுக்கு அவளுக்கு தன் மேலிருக்கும் காதலின் ஆழம் அவனுக்குமே தெரியுமே! அதை நினைத்ததும் அவனின் இதழ்கள் சிரிப்பில் வளைந்தது.

சிறிது நேரத்தில் அவளிடம் என்ன பேச வேண்டும்? என்று ஒரு முடிவுக்கு வந்தவனின் மனம் இரும்பு குண்டாய் கனத்து போயிருந்தது. ஆனாலும் அவனுக்கு வேறு வழியில்லை… அவன் அப்படி பேசினால் தான் அவள் அவனை விட்டு விலகி போவாள் என்பது அவனுக்கு நிச்சயமாய் தெரியும். எனவே தான் பேச நினைத்ததில் அவன் உறுதியாய் இருந்தான்.

******************************************

“ரூபன்… என்ன இது… இப்படி தான் சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டு ஓடி வருவதா?” வழக்கம் போல்

குறும்புத்தனத்துடன் கேட்டவளை கண்ணிமைக்காமல் பார்த்தான். ஏனோ அடுத்த நொடி பார்வை இழந்து விடுபவன் போல் அவளை தனக்குள் நிறைத்து கொண்டான்.

“ரூபன்…” அவன் கண் முன் தன் கையை ஆட்டியபடி அவள் கேட்க… அதில் தன்னுணர்வு பெற்றவன்,

“வா… உட்காரு…” என்று இருக்கையை காண்பிக்க… அவன் சொல் தட்டாமல் அவள் சமர்த்தாய் அமர்ந்து கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் பார்வை சொன்னதன் அர்த்தம் புரிந்தவனாய் தானும் அமர்ந்தான்.

அவளிடம் பேச வேண்டும் என்று மனதுக்குள் ஒத்திகை பார்த்த வார்த்தைகள் எல்லாம்… வினா தாளை கண்டதும் விடை மறந்த மாணவன் போல் அவளை பார்த்தும் அவனுக்கு அனைத்தும் மறந்து போனது.

“என்ன ரூபன்… ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?” அவனின் முக வாட்டம் பார்த்து அவளே ஆரம்பித்தாள். அதை அவன் கெட்டியாக பிடித்து கொண்டு தொடர்ந்தான்.

“அரசி… இனிமேல் நீ என்னை பார்க்க வர வேண்டாம்…” அவள் முகம் பார்க்காமல் அவன் எங்கோ பார்த்து கொண்டு பேச… அவளோ அவனின் வார்த்தையில் திகைத்து போய்,

“ஏன்?”

“எனக்கு அடுத்த மாசம் ஆறாம் தேதி கல்யாணம் பிக்ஸ் பண்ணியிருக்காங்க. இனியும் நீ இங்கே அடிக்கடி வந்தா… பார்க்கிறவங்க தப்பா பேசுவாங்க. இது பொண்ணு வீட்டுக்கு தெரிஞ்சா தேவையில்லாத அசிங்கம். அதனால நீ இங்கே வராதே” அவனுக்கு திருமணம் என்றதில் அதிர்ந்தவள்… அவனின் வார்த்தையில் பெண் சிங்கமாய் சிலிர்த்து எழுந்தாள்.

“யோவ் எதுய்யா அசிங்கம்? நான் இங்கே வர்றது உனக்கு அசிங்கமா? நான் என்ன அந்த மாதிரி பொண்ணா… உன் வீட்டுக்கு வர்றதால நீ கேவலப்படுவதுக்கு? வார்த்தையை

அளந்து பேசு” அவன் அருகில் வந்து அவனின் சட்டை காலரை பற்றி இழுத்து அவள் கோபமாய் கேட்டாள். அவள் முகம் ஆத்திரத்தில் கன்றி போய் சிவந்திருந்தது.

“முதல்ல சட்டையை விடு… என்ன இது? எதுக்கு எடுத்தாலும் சட்டையை பிடிச்சு இழுத்து ரௌடி மாதிரி பிஹேவ் பண்ணிட்டு?” அவள் கோடு போட்டு கொடுத்ததில் அவன் ரோடே போட்டான்.

“நான் விட மாட்டேன்… எனக்கு பதில் சொல்லுங்க… உண்மையா உங்களுக்கு கல்யாணமா?” அவள் தீவிரமாய் அவனை பார்த்தபடி கேட்டாள்.

“இன்னும் என்ன சந்தேகம்? ஏற்கெனவே பேசியிருந்தது உனக்கு தெரியும் தானே?” அவன் அவளையே கேள்வி கேட்டான். அவனின் பதிலில் அவளின் உக்கிரமாய் முறைத்தாள்.

“தெரியும்? எல்லாம் தெரியும்… ஆனா அதுக்கு நான் சொன்ன பதிலும் உங்களுக்கு தெரியும்னு நினைக்கிறேன். என்னை தவிர வேறு யார் கழுத்திலும் நீங்க தாலி கட்ட உங்க உடம்புல உயிர் இருக்காதுன்னு உங்களுக்கு நல்லாவே தெரியும் தானே?” அவனை போல் பேசி காட்டியவள் வார்த்தையில் ஏகத்துக்கும் கிண்டல் இருந்தது.

“உன் கழுத்தில் நான் ஏன் தாலி கட்டணும்?” அவன் விறைப்பாய் பதில் கூற,

“ஏன்னா நாம ரெண்டு பேரும் லவ்வர்ஸ்… அதான் காரணம்…” அவளும் சளைக்காமல் பதில் கூறினாள்.

“அதை நீ தான் சொல்ற… நான் இல்லையே… நான் உன்னை காதலிக்கவே இல்லையே…” அவன் நிதானமாய் கூறிய ஒவ்வொரு வார்த்தைகளும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

“அப்போ என் கூட பழகியது? உங்க கண்ணில் நான் கண்ட காதல்…?” அவளின் குரல் நடுக்கமே அவளின் அதிர்ச்சியை காட்டி கொடுத்தது.

“நான் எங்கே உன்னை காதலிக்கிறேன்னு சொன்னேன். நீயா வந்து மேலே பிடுங்குவது போல் பழகினே... நீயா காதலிக்கிறேன்னு சொன்னே... அதுக்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்? அப்படியே நீ என்னை உண்மையா விரும்பியிருந்தா நானும் பதிலுக்கு உன்னை விரும்பி இருப்பேன். நீயோ உன் மேல் விழுந்த பழியை போக்க என்னை காதலிக்க ஆரம்பிச்ச... இதே இது உன் மேல் இந்த மாதிரி பழி ஏற்படாமல் இருந்திருந்தா... நீ இந்த ஏழை ஃபோட்டோகிராபர் காந்தனை திரும்பி பார்த்திருப்பியா? இல்லை காதலிக்க தான் செய்திருப்பியா? மொத்ததுல நீ பழகியதுக்கு பேர் காதலே இல்லை...” அவனின் வார்த்தைகள் அவளுக்கு கூடை கனலை அவள் மேல் கொட்டியது போலிருந்தது. அவனின் ஒவ்வொரு சொல்லிலும் இருந்த உண்மை அவளை குத்தீட்டியாய் குத்தி கொன்றது.

“என் காதல் எப்படி வந்ததாய் இருந்தாலும்... அது உண்மையான காதல் ரூபன். நீங்க சொல்வது போல் கேவலமானது இல்லை...” தன்னை அவனுக்கு உணர்த்திடும் வேகத்தில் அவள் பேசினாலும் அவள் குரல் நடுங்க தான் செய்தது.

“ஒரு பெண் ஆணிடத்தில் வலிய வந்து பழகினா... அதுக்கு பேர் வேறு... அந்த பெண்ணிற்கும் பெயர் வேறு...” உள்ளுக்குள் வலித்தாலும் அவள் தன்னை விட்டு போக வைக்க வேண்டும் என்பதில் அவன் உறுதியாய் இருந்ததால் வார்த்தைகளை சற்று கடுமையாக கொட்டினான். அவனின் வார்த்தைகளின் உக்கிரத்தை அவளின் பூவினும் மெல்லிய இதயத்தால் தாங்க முடியவில்லை.

காதலை கூட கம்பீரமாக நிமிர்வோடு கூறியவள் அவள்... அந்தளவுக்கு தைரியமானவள் அவள்... ஆனால் இன்று அதே காதலுக்காக அவனிடம் மேலும் கெஞ்சி கொண்டிருக்க அவள் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. அவள் தன் தாயிடமே அவர் கூறிய தகாத வார்த்தைகளுக்காக இன்று வரை அவர் முகம் காண

மறுப்பவள்… அவரிடம் ஒரு வார்த்தை பேச ஆயிரம் முறை யோசிப்பவள்… அவள். அப்படிப்பட்டவளை நோக்கி அவன் வீசிய கடுஞ்சொற்கள் அவள் மனதில் பெருத்த காயத்தை உண்டு பண்ணியது. அதிலும் அவன் அவளை தாழ்த்தி பேசிய வார்த்தைகள் அவள் காதில் ரீங்காரமிட… அவள் காதல் கொண்ட மனம் கொஞ்சம் கொஞ்சமாய் செத்து கொண்டிருந்தது.

“போதும் ரூபன்… இதுக்கு மேலே எதுவும் பேச வேணாம்…” ஒற்றை கையால் அவனை தடுத்தவள், “நீங்க நினைக்கிற அளவுக்கு நான் கேவலமானவள் இல்லை. என் காதலும் அப்படிப்பட்டது இல்லை. நீங்க எவ்வளோ சொல்லியும் நான் தான் வலிய வந்து பழகினேன். அதுக்கு எனக்கு இந்த தண்டனை தேவை தான். அன்பில்லாத இடத்தில் என் அன்பை நான் கொட்டியது என் முட்டாள்த்தனம். அது என் அறிவீனம்…” என்றபடி அழுத விழிகளை துடைத்தவாறு கூறியவள்,

“ஆனால் மிஸ்டர். ரூபன் என்னையும், என் காதலையும் ரொம்ப சாதரணமாய் எடை போட்டுட்டீங்க. எனக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கு… என் காதல் உண்மைன்னா… கட்டாயம் அது உங்களை என்கிட்ட கொண்டு வந்து சேர்க்கும். ஆனா அப்போ உங்களை ஏத்துக்கிற நிலையில் நான் இருக்க மாட்டேன். உங்களை நேசித்த அரசி இந்த நிமிசம் செத்து போயிட்டா… இனி நீங்களே வந்தாலும் எனக்கு… நீங்க தேவையில்லை. நீங்க எனக்கு வேண்டவே வேண்டாம்…” கம்பீரமாய் கூறியவள்… ஒரு அரசியின் கம்பீரத்துடன் அங்கிருந்து வெளியேறினாள். காதலை எந்தளவுக்கு கம்பீரமாய் அவனிடத்தில் சொன்னாளோ அதே கம்பீரத்துடன் பிரிவையும் கூறி விட்டு அவனை திரும்பியும் பாராமல் சென்றாள்.

அவள் போவதை பார்த்து கொண்டிருந்தவனின் விழிகள் வேதனையை பிரதிபலித்தது. அவளின் வாக்கு பொன்னாக போவதை… பலிக்க போவதை… அந்நேரம் அவன் உணரவில்லை. உணர்ந்த போதோ…?????

“டென் மினிட்ஸ் வெய்ட் பண்ணுங்க…” அமைச்சரின் செயலாளர் சொல்லிவிட்டு செல்ல…

“ஒரு மணி நேரமா இதையே தான் சொல்லிட்டு இருக்கான்” காந்தனுக்கு மட்டும் கேட்கும் குரலில் எரிச்சலுடன் முணுமுணுத்தார் மூத்த பத்திரிக்கையாளர் கேசவன். அவருக்கு புன்னகையையே பதிலாக தந்தான் காந்தன்.

“உன் கிட்ட இது ஒண்ணுய்யா… எது சொன்னாலும் சிரிச்சி கிட்டே இரு… அது எப்படி உன்னால் மட்டும் இப்படி சிரிச்சிட்டே இருக்க முடியுது?” அவரின் கேள்விக்கு அவன் மீண்டும் புன்னகையே தர… அவர், “அட போய்யா…” என்று சலித்தவராய் அமைதியானார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அமைச்சரின் பேட்டியை முடித்து விட்டு வெளியில் வந்தவன் தன் அலைப்பேசியை உயிர்ப்பித்தான். அதில் அறிவிடமிருந்து இருபது முறை அழைப்பு வந்திருந்தது.

‘ஒரு நாளும் அறிவு இது போல் அழைத்தது இல்லையே… ஒருவேளை வீட்டில் உள்ளவர்களுக்கு ஏதும் ஆகிவிட்டதோ?’ மனதில் பதற்றத்துடன் அறிவை அழைத்தான்.

“ஃபோனை ஸ்விட்ச் ஆப் பண்ணி வைக்கிறதுக்கு… உனக்கு எல்லாம் எதுக்கு ஃபோனு?” அறிவு எரிச்சலுடன் பேச,

“என்னடா… வீட்டில் யாருக்காவது… ஏதாவது?” அவன் முடிக்கவில்லை…

“எப்ப பாரு உனக்கு உன் வீட்டு நியாபகம் தானா? அவங்களுக்கு ஒண்ணுமில்லை” அறிவு சொன்னதும் தான் அவனுக்கு நிம்மதி வந்தது.

“அப்புறம் எதுக்குடா… இத்தனை கால் பண்ணியிருக்க?”

“ஏண்டா காந்தா... உனக்கு அரசி நியாபகமே வரலையா? நீ சொன்ன மாதிரி அவளை உண்மையாவே மறந்துட்டியா?” காந்தனிடம் கேட்கும் போதே அறிவின் குரல் கம்மியது.

அறிவின் வார்த்தையில் காந்தன் சற்று திடுக்கிட்டு தான் போனான். ‘அரசியை பத்தி இவன் எதுக்கு இந்நேரம் பேசுறான்? ஒருவேளை நான் அவளிடம் பேசியதை... அவள் அறிவிடம் சொல்லியிருப்பாளோ?’ என்று யோசித்தவன்,

“அவளுக்கு என்னடா?” தயங்கி கொண்டே அவன் கேட்க,

“அவள் ஆக்சிடெண்ட் ஆகிருச்சாம்டா...” அறிவு கூறிய விசயம் அவன் மூளையை சென்றடையவே சில நிமிடங்களானது.

“எப்போ?” அவன் குரல் பிசிறு தட்டி ஒலித்தது.

“அவ இன்னைக்கு காலையில் காலேஜ் போறதுக்காக ரோடை கிராஸ் பண்ணும் போது... வேகமா வந்த கார்காரன் ஒருத்தன் அவளை இடிச்சு தூக்கி போட்டு போயிட்டானாம். பெரியப்பா பேமிலி சென்னைக்கு போறதுக்காக நான் தான் என் பிரெண்ட் ட்ரவல்ஸ்ல பிளைட் டிக்கெட் புக் பண்ணி கொடுத்தேன். விசயம் கேள்விப்பட்டதில் இருந்து நான் உனக்கு ட்ரை பண்ணிட்டே இருக்கேன். நீ எடுக்கவே இல்லை”

அவளுக்கு விபத்து என்று அறிவு சொன்னதை கேட்டவனுக்கு அப்படியே உலகம் ஸ்தம்பித்து போனது போலானது. அடுத்து அறிவு சொன்னது எதுவும் காதில் விழவில்லை. அவன் உள்ளம் அவளின் பெயரை சொல்லி அவளின் நலனுக்காக துடித்து கொண்டிருந்தது.

“காந்தா... காந்தா...” அறிவு உரக்க அழைக்கவும் தான் சுயஉணர்வு அடைந்தவன்,

“எந்த ஹாஸ்பிட்டல்ன்னு தெரியுமா அறிவு?” அறிவு சொன்ன மருத்துவமனையை கவனமாய் கேட்டு கொண்டவன்... அடுத்த அரை மணி நேரத்தில் மருத்துவ மனையில் இருந்தான்.

ஐசியூ வாயிலில் காத்து கொண்டிருந்த அரசியின் குடும்பம் அவன் கண்களுக்கு தெரியவில்லை. நேரே ஐசியூவின் அறையை நோக்கி போனவன்... அதன் கதவிலிருந்த கண்ணாடி வழியே உள்ளே எட்டி பார்த்தான். அங்கே அவனின் உயிர் பூ வாடி வதங்கி போய் கண்களை மூடி படுத்திருந்தது.

அவள் உடலில் ஆங்காங்கே சில கட்டு போட்டிருந்த போதும்... அவள் தலையை சுற்றி தான் பெரிதாக கட்டு போடப்பட்டு இருந்தது. அந்த கட்டிலிருந்து கசிந்திருந்த ரத்த கறையே அவளின் உடல் நிலையை அவனுக்கு சொல்லாமல் சொல்லியது. எப்போதும் குறும்புடனும், சிரிப்புடனும் இருக்கும் அவள் இந்த மாதிரி அமைதியாய் படுத்திருப்பது அவன் மனதை கொன்றது. அவளை இந்த நிலையில் பார்த்த அந்த கணம் அவனின் உடம்பில் இருந்த சக்தி எல்லாம் வடிந்தார் போல் இருந்தது. நிற்க மாட்டாமல் அவனின் கால்கள் துணி போல் துவள... அங்கிருந்த நாற்காலியில் தொப்பென்று அமர்ந்தான்.

சற்று தள்ளி அமர்ந்திருந்த கரிகாலன் அவனை பார்க்க தான் செய்தார். அவனை கண்டதும் அவனை அவருக்கு நன்கு அடையாளம் தெரிந்தது. இவன் எங்கே இங்கே? என்று மனதுக்குள் கேள்வி எழுந்தாலும் அவர் இருந்த மனநிலையில் அவனிடம் போய் பேசவோ... சண்டை போடவோ விருப்பம் இல்லை. தன்னோட செல்ல மகளுக்கு விபத்து என்றதும் அலறி அடித்து கொண்டு இங்கே ஓடி வந்தார். அவர் மனம் முழுவதும் அரசி எப்படியாவது பிழைத்து எழ வேண்டும் என்ற எண்ணமே கவலையாக உருமாறி அவரை வதைத்து கொண்டிருந்தது.

கலைமகளும், பிரியனும் அவனை வெறுப்புடன் பார்த்து கொண்டிருந்தனர். பிரியன் சட்டையை மடித்து கொண்டு அவனிடம் சண்டை போடுவதற்கு தயாராக... கலைமகள் தான் கணவனை சுட்டி கட்டி மகனிடம் கண்ஜாடை செய்து தடுத்து விட்டார். தந்தைக்கு பயந்து பிரியனும் அடக்கி வாசித்தான்.

காந்தனோ தனக்குள் மருகி உருகி கொண்டிருந்தான். தன்னால் தான் அவளுக்கு இந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது என்பதை அவன் நிச்சயமாய் நம்பினான். அவளின் கவனமற்ற தன்மைக்கு தான் தான் காரணம் என்பதை உறுதியாய் எண்ணினான். ஏனெனில் இத்தனை மாதத்தில் அரசியின் நடவடிக்கைகள் அத்துனையும் அவனுக்கு அத்துப்படி. அதில் ஒன்று தான் அவள் ரோட்டை கடக்கும் போது சர்வ ஜாக்கிரதையாய் கடப்பது. அதை கண்டு அவனே பலமுறை அவளை கிண்டலடித்து இருக்கிறான். அவனின் கிண்டல் கேட்டு அவள் அவனிடத்தில் சண்டைக்கு வருவாள்.

“என்ன லொள்ளா ரூபன்... எதுக்கு என்னை பார்த்து கிண்டலடிக்கிறீங்க? எனக்கு நூறு வயசு வரை வாழணும்ன்னு ஆசையிருக்கு. அந்த நூறு வருசமும் உங்க கூட இணை பிரியாமல் நான் வாழணும்ன்னு விருப்பம் இருக்கு” என்றவள்,
‘கன்னம் சுருங்கிட நானும்... மீசை நரைத்திட நீயும்
வாழ்வின் கரைகளை காணும்... காலம் அருகினில்
தானோ!’
தன் மனதின் ஆசையை பாடலாய் அன்று பாடி காண்பித்ததை இன்று நினைவு கூர்ந்தவனின் கண்கள் கலங்கியது.

‘உன் ஆசைப்படி நாம் இருவரும் வாழலாம் செல்லம்... வந்துவிடு கண்ணம்மா... என்னை விட்டு போய்விடாதே... நீ போய்விட்டால் அடுத்த கணம் என் உயிர் என் உடல் தங்காது... பிழைத்து எழுந்து வா கண்மணியே...’ அவன் மனம் விடாமல் புலம்பியது.

அப்போது ஐசியூவின் அறை கதவை திறந்து கொண்டு வெளியில் வந்த மருத்துவர் நேரே கரிகாலனிடம் சென்றார். “எங்களால் முடிந்தளவு எல்லாம் செய்து பார்த்துட்டோம். பேசண்ட்டிடம் எந்த முன்னேற்றமும் இல்லை. இனி கடவுள் விட வழி... நீங்க ஒவ்வொருத்தரா போய் பாருங்க” என்றவர் கரிகாலனின் தோளை ஆறுதலாய் தட்டி கொடுத்து சென்றார்.

அப்படியே உடைந்து போய் அமர்ந்துவிட்டார் கரிகாலன். கலைமகள் தலையில் அடித்து கொண்டு அழ ஆரம்பிக்க... பிரியனோ என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான். காந்தனுமே மருத்துவரின் வார்த்தையில் தளர்ந்து போய் விட்டான். அவனின் மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் ஆட்டம் காண ஆரம்பித்தது.

பிரியன் தன்னை சமாளித்து கொண்டு... தங்கையை பார்க்க பெற்றோரை அழைத்து கொண்டு சென்றான். உள்ளே சென்றவர்களுக்கு அரசி இருந்த கோலம் கண்டு பெத்த வயிறு பதறி துடித்தது. அவளின் கையை பிடித்து கொண்டு இருவரும் கதறி தீர்த்துவிட்டனர். அங்கிருந்த தாதி பெண்கள் சத்தம் போடவும் பிரியன் அவர்களை வலுக்கட்டாயமாய் வெளியில் அழைத்து வந்தான்.

“நான் போய் பார்க்கட்டுமா?” காந்தன் பிரியனிடம் கேட்க... அவனோ,

“நீ ஒண்ணும் பார்க்க போக வேணாம். என் தங்கச்சி இப்படி ஆனதுக்கு நீ தான்டா காரணம். அவளுக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆகட்டும். அதுக்கு அப்புறம் நீ உயிரோட இருக்க மாட்ட” அவன் ஆத்திரமாய் கத்த,

“அவ உயிர் போன பின்னால வாழற ஐடியா எனக்கு இல்ல. நீங்க என்ன என் உயிரை எடுக்கிறது... நானே என் உயிரை விட்டுருவேன்” விரக்தியாய் பதிலளித்தான் காந்தன்.

அவனின் பதிலில் அவ்வளவு நேரம் துயரத்தில் மூழ்கி இருந்த கரிகாலன் அவனை நிமிர்ந்து பார்த்தார். பின்பு மகனிடம், “அவரை விடு பிரியா...” என்க... பிரியனோ அதிர்ச்சியாக தந்தையை பார்த்தான். கலைமகளோ உள்ளுக்குள் குமுறினாலும் வெளியில் ஒன்றையும் காட்டி கொள்ளவில்லை. அப்படியே அவர் சொன்னாலும் கணவன் அதை காது கொடுத்து கேட்பாரா என்பது சந்தேகமே?

“தேங்க்ஸ் சார்...” என்றபடி அவசரமாய் அரசி இருந்த அறைக்குள் நுழைந்தான் காந்தன்.

விரல் நுனி அழுக்கு படாமல் அழகுற வலம் வந்தவள் இன்று ரத்த காயங்களுடன் படுத்திருந்த நிலை அவனின் மனதை பிழிந்தது. அவள் அருகில் வந்தவன் அவள் முகத்தை கண்ணிமைக்காமல் உற்று பார்த்தான். அவன் தன் பார்வையை நொடி பொழுது கூட அங்குமிங்கும் திருப்பாமல் அவளிடமே பதித்திருந்தான்.

துருதுருவென்று அலைப்பாயும் கருந்திராட்சை விழிகள், எந்நேரமும் பேசி கொண்டும்... எதையாவது உண்டு கொண்டும் இருக்கும் அந்த செப்பு இதழ்கள்... இன்று வேலை நிறுத்தம் செய்தது போல் அமைதியாய் இருந்ததை கண்டவனின் இதயம் கனத்தது. அவனின் கண்கள் தன்னவளின் நிலை கண்டு தானாகவே நீரை சொரிந்தது.

மெல்ல நடுங்கும் தன் கைகளை கொண்டு அவள் தலையிலிருந்து கண், மூக்கு, கன்னம், உதடுகள் என ஒவ்வொன்றாய் தடவி பார்த்தான். முதன்முறையாய் அவளை அவன் தொடுகிறான். ஆனால் அதனை ரசிக்கும் மனநிலையில் அவன் இல்லை. இந்த கிடைப்பதற்கரிய பொக்கிசத்தை இழக்க போகிறோமே என்ற துன்பமே அவன் மனம் முழுவதும் வியாபித்து இருந்தது.

அவளின் மென் இதழ்களை விட்டு அவனின் கை நகரவில்லை. எத்தனை நாள் இந்த இதழ்களால் தன்னை அர்ச்சித்து இருக்கிறாள். 'நம் வாழ்நாள் முழுவதும் என்னை அதே போல் முத்தமிட வருவாயா கண்மணி?' அவன் மனம் ஊமையாக அழுதது. அதற்கு மேல் தாங்க முடியாதவனாய்,

"வசீ..." என்று கூவி அழுதவன்... அவள் கையை இறுக பற்றி அதில் முகம் புதைத்தவன், "என்னை ஏமாத்திடாதே வசீ... வந்துவிடு... உன் அருமையை... உன் காதலின் ஆழத்தை நான் இப்போது உணர்ந்து கொண்டேன். இனி உன்னை விட்டு நான் போக மாட்டேன். உன் மீது சத்தியமாய் சொல்கிறேன் நான் உன்னை விட்டு போக மாட்டேன். இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல ஏழேழு ஜென்மத்திலும் நீ தான் என் மனைவி"

அவனின் வார்த்தைகள் அவளின் உள்ளத்தை சென்றடைந்ததோ என்னமோ தெரியவில்லை. ஆனால் அதன் பின் அவளின் உடல் நிலை நல்ல முன்னேற்றத்தை காட்டியது. அதன் பின்னரே அனைவரும் நிம்மதியடைந்தனர்.

“எனக்கு தேங்க்ஸ் சொல்லாதீங்க.. அவருக்கு சொல்லுங்க…” மருத்துவருக்கு கரிகாலன் தன் நன்றியை தெரிவிக்கும் போது அவர் காந்தனை கை காட்டினார்.

“இந்த காலத்தில் இப்படி ஒருவர் மருமகனாய் கிடைப்பதற்கு… நீங்கள் புண்ணியம் செய்திருக்கணும்” என்று வேறு சொல்லிவிட்டு சென்றார்.

“ரொம்ப நன்றிப்பா…” காந்தனை நோக்கி இருகரம் கூப்பி கும்பிட்டார் கரிகாலன்.

பின்னே அவரின் செல்ல மகளின் உயிரை அல்லவா அவன் மீட்டு கொடுத்திருக்கிறான். அதில் அவர் மனம் நெகிழ்ந்து போய் இருந்தது. காந்தனோ இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அமைதியாய் இருந்தான். அவரின் நன்றியை கேட்டு கலைமகளும், பிரியனும் முகத்தை சுளித்தனர்.

மறுநாள் அவள் கண்விழித்ததும் அவளை காணவென அனைவரும் அவள் இருந்த அறைக்குள் நுழைந்தனர். மெதுவே கண்களை திறக்க முயன்றவளால் உடனே கண்களை திறக்க முடியவில்லை. காதலர்கள் போல் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொண்டு பிரிய மறுப்பது போல் இமைகள் பிரிய மறுத்தது. சற்று சிரமப்பட்டு கண் திறந்தவளுக்கு ஒரே இருட்டாக தெரிய பதட்டத்துடன்,

“எனக்கு யாரையும் பார்க்க முடியலையே… ஒரே இருட்டாக தெரியுதே” என்று ஏறக்குறைய அலறினாள்.

“அரசி என்னடா சொல்ற? அப்பா உனக்கு தெரியறேனாமா?” கரிகாலன் அவள் அருகில் வந்து அவள் கையை பிடித்து கொண்டு கேட்க, அவளோ அவரை

காணாது காற்றில் தன் கைகளால் துழாவினாள். அந்த காட்சியை கண்ட காந்தன் உள்ளுக்குள் நொறுங்கி உடைந்து போனான்.

“அப்பா உன் பக்கத்துல தான்டா இருக்கேன்” அரசியின் அருகில் அமர்ந்தார் கரிகாலன்.

“உங்களை பார்க்க முடியலையேப்பா…” கைகளை விரித்து உதட்டை பிதுக்கி அழுது விடுபவள் போல் கூறியவளை கண்டு அவர் அதிர்ந்து தான் போனார். மருத்துவருக்கோ குழப்பமாய் இருந்தது.

“நியூரோ ஸ்பெசலிஸ்டை வந்து பார்க்க சொல்கிறேன்… அவங்களால் தான் என்ன பாதிப்புன்னு கணிக்க முடியும்” என்றவர் அதற்கான ஏற்பாட்டை செய்தார்.

தலையில் அடிபட்டதால் பார்வை நரம்புகள் பாதிக்கப்பட்டு அதனால் பார்வை பறி போயிருக்க வாய்ப்பு இருக்கிறது. அதையும் சத்திர சிகிச்சை மூலம் சரி செய்ய முடியும் என்று நம்பிக்கை அளித்தார் அவளை பரிசோதித்த நரம்பியல் மருத்துவர். அவரின் நம்பிக்கை வார்த்தையில் தான் அனைவருக்கும் போன நிம்மதி திரும்பி வந்தது.

“எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை… என் மகளுக்கு பார்வை மீண்டும் வர வேணும் டாக்டர்…” கரிகாலன் அவரிடம் கெஞ்சி கேட்டு கொள்ள…

“என்னால் முடிந்ததை செய்கிறேன்” என்று புன்னகைத்தார் அந்த மருத்துவர்.

“டாக்டர்… என்னோட கண்ணை எடுத்து அவளுக்கு வைக்க முடியும்ன்னா… அதை தர நான் தயாரா இருக்கேன். அவளுக்கு மீண்டும் பார்வை வரணும் டாக்டர். குழந்தை மனம் படைத்த அவளுக்கு போய் இப்படியொரு துன்பம் வந்திருக்க கூடாது. அவ எப்போதும் சந்தோசமா இருக்கணும் டாக்டர்” காந்தன் உணர்ச்சி வசப்பட்டவனாய் மருத்துவரிடம் கூற… கரிகாலன் அவனை வியப்பாய் பார்த்தார்.

அவருக்கும் தன் மகளின் மீது பாசம் இருக்கிறது. அவளுக்காக எதையும் செய்வதற்கு தயாராக இருக்கிறார் தான். ஆனால் காந்தனை போல் அவர் நினைத்தும் பார்க்கவில்லை. அவன் தன் மகள் மேல் வைத்த காதல் முன்... அவரின் பாசம் சற்று குறைவாகவே தெரிய... மனதுக்குள் வெட்கி போனார். தன் மகளுக்காக பார்வையையே துறக்க தயாராக இருக்கும் அவனை விட சிறந்த கணவனை தன் மகளுக்கு தன்னால் தேட முடியாது என்று நினைத்தவர்... அவன் தான் தன் மகளுக்கு ஏற்ற மாப்பிள்ளை என்பதை அந்த கணம் முடிவு செய்தார்.

“மிஸ்டர்... நீங்க அவங்களுக்காக கண் கொடுக்க முன் வருவது நல்ல விசயம் தான். ஆனால் அதற்கு அவசியமில்லை. ஐ பேங்கில் பதிவு பண்ணிட்டு போங்க. கிடைச்சதும் ஆபரேசன் வச்சுக்கலாம்” மருத்துவர் கூறியதும் அனைவருக்கும் சற்று நிம்மதியாய் இருந்தது.

“காந்தன்...” வெளியில் வந்த கரிகாலன் அவனை அழைக்க... அவன் விழிகளில் வியப்பை தேக்கியபடி அவரை பார்த்தான்.

அவன் அருகில் வந்தவர் அவன் இரு கரங்களையும் பிடித்து கொண்டு, “ரொம்ப நன்றி தம்பி... இப்போ உங்க காதலை நான் புரிஞ்சிக்கிட்டேன். காதல்ன்னாலே ஏதோ அருவருக்கத்தக்க விசயம்ன்னு தான் இவ்வளவு நாள் நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஆனால் அது எவ்வளவு உன்னதமானதுன்னு நீங்க என் மகள் மேல் வச்சிருக்கும் காதல்ல இருந்து நான் உணர்ந்திட்டேன். என் மகளுக்கு ஏத்த மாப்பிள்ளை நீங்க தான்...” என்று உணர்ச்சி வசப்பட்டவராய் அவர் கூறியதை கேட்டு அவன் நம்ப முடியாமல் அவரை பார்த்தான்.

“நீங்க என்னை நம்பலையா?”

“அய்யோ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை சார்...” அவன் அவசரமாய் மறுத்தான்.

“இன்னும் என்ன சார்... மாமான்னு கூப்பிடுங்க மாப்பிள்ளை” அவன் தோளில் கை போட்டவாறு அவர் சொல்ல... அவரின் செயலில் அவன் கூச்சப்பட்டு நெளிந்தான்.

“என்னை மாமான்னு சொல்ல முடியாதபடி அவ்வளவு கொடூரமாவா நான் இருக்கேன்” அவர் தன் மீசையை நீவியபடி கேட்க,

“அப்படியெல்லாம் இல்லை மாமா...” அவன் சொல்ல,

“இப்போ தான் நீங்க என் மாப்பிள்ளை...” அவர் சந்தோசத்துடன் அவனை அணைத்து கொள்ள... இந்த காட்சியை கலைமகளும், பிரியனும் குமுறும் மனதுடன் பார்த்து கொண்டிருந்தனர்.

‘இந்த அன்னக்காவடி எனக்கு மருமகனா? கேட்கவே சகிக்கல...’ மனதுக்குள் பொருமினார் கலைமகள்.

‘என்னை பார்த்து கை நீட்டி எதிர்த்து பேசிய ஒருவன்... என் முன் நிக்க கூட தகுதியில்லாத ஒருவன்... அவனை போய் நான் மாப்பிள்ளைன்னு கூப்பிடணுமா?’ பிரியன் முகத்தை திருப்பி கொண்டான்.

கண் வங்கியில் அரசியின் பெயரை பதிவு செய்யும் போதே... காந்தன் தனது கண்களை தானம் செய்வதற்கு எழுதி கொடுத்துவிட்டு வந்தான். அவனின் செயலில் மனம் நெகிழ்ந்து போன கரிகாலன் தானும் கண் தானம் செய்ய போவதாக அறிவித்தார். அதோடு நில்லாமல் மனைவியையும் மகனையும் கண் தானம் செய்ய சொல்லி வலியுறுத்தினார். பிரியன் தங்கையின் நிலையை மனதில் கொண்டு கண் தானம் செய்ய முன் வந்தான்.

“நீங்க சொன்னதுக்காக இல்லை... அரசி மாதிரி மத்தவங்க கஷ்டப்பட கூடாதுன்னு தான் செஞ்சேன்” என்று விறைப்பாக தந்தையிடம் பதில் சொன்னவன்... காந்தனை முறைத்து பார்த்தான்.

“அய்யோ... என் கண்ணை பிடுங்குவாங்களா? என்னால் முடியாது சாமி” கலைமகள் மறுக்க...

“ஆமாம்... செத்ததுக்கு அப்புறம் உன் கண்ணை பிடுங்குறது உனக்கு தெரிய போகுது பாரு... பெருசா பேசுறதை பாரு. மண்ணோடு மண்ணா மக்கி போறதை... நாலு பேருக்கு தானம் செஞ்சா தான் என்ன? அரசியை பார்த்துமா நீ திருந்தல? முதல்ல கையெழுத்து போடுடி...” கரிகாலன் அதட்டினார்.

“மாமா... அவங்களை திட்டாதீங்க... நான் அவங்களுக்கு எடுத்து சொல்றேன்...” என்ற காந்தன் கண் தானத்தை பற்றி அவருக்கு புரியும்படி எடுத்து சொல்ல ஆரம்பித்தான். முதலில் வேண்டா வெறுப்பாய் கேட்டாலும் அவன் சொன்ன கருத்து அவரின் மனதை கவர கலைமகள் முழுமனதுடன் கண் தானம் செய்ய சம்மதித்தார்.

அடுத்து வந்த நாட்களில் வசீயரசியின் உடல்நிலை கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறியது. ஆனாலும் காந்தன் தான் அங்கு இருப்பதை அவளுக்கு தெரியாமல் பார்த்து கொண்டான். ஏனெனில் இந்த மாதிரி நேரத்தில் அவள் மனம் துன்பப்படுவதை அவன் விரும்பவில்லை. அன்றும் வழக்கம் போல் அவளின் அறைக்கு வந்தவன் அங்கே கலைமகளும், பிரியனும் இருப்பது கண்டு அவர்களிடம் பேச தயங்கியவனாய் நின்றிருந்தான். அப்போது அங்கே நுழைந்த கரிகாலன் அவனை பார்த்து வரவேற்பது போல் புன்னகைத்தவர் நேரே மகளிடம் சென்றார்.

“அம்மாடி இப்போ வலி எப்படி இருக்கு?” கரிகாலன் கேட்டு கொண்டே அவள் அருகில் அமர...

“பரவாயில்லைப்பா...” என்றபடி எழுந்து அமர போனவளை தாங்கி பிடிப்பதற்காக அவள் அருகில் சென்ற கலைமகள் மகளின் கையை பற்றிய அடுத்த நொடி அவரின் கையை பற்றி கொள்ளாமல் வெடுக்கென்று தன் கையை இழுத்து கொண்டாள் அவள். இதை காந்தனும் பார்த்து கொண்டு தான் இருந்தான்.

‘பெத்த அம்மாவையே அவர் பேசிய பேச்சுக்கு இன்னமும் மன்னிக்காம இருக்குறவ... நான் பேசிய பேச்சுக்கு என்னை எப்படி மன்னிக்க போறாளோ?’ மனதுக்குள் திகிலடித்தது அவனுக்கு.

“ஏண்டி குருடாகியும் உன் கொழுப்பு அடங்கல...” மகளின் உதாசீனம் ஏற்படுத்திய ஆற்றாமையில் கலைமகள் கோபமாய் வார்த்தைகளை விட்டார்.

பிரியனுக்குமே தங்கை இருக்கும் இந்த நிலையில் தாய் இப்படி பேசியதில் உடன்பாடு இல்லை. தன் ஆட்சேபணையை அவன் தன் முகத்தில் காட்டினான்.

“கலை... இப்போ வாயை மூட போறியா இல்லையா?” மனைவியை அதட்டிய கரிகாலன்...

“பாப்பா தப்பா எடுத்துக்காதேடா... அம்மா ஏதோ கோபத்தில் பேசிட்டா?” அவர் மகளை சமாதானப்படுத்தினார்.

“அவங்க என்ன புதுசாவா பேசறாங்க... பேசிட்டு போகட்டும். என்னை கொஞ்ச நேரம் தனியா விடுங்க” என்றவள் அமைதியாய் தலையணையில் சாய்ந்தாள்.

மற்ற மூவரும் அவளின் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து வெளியேற... காந்தன் மட்டும் அங்கேயே தேங்கினான். அவன் அவளுடன் பேச விரும்புவதை புரிந்து கொண்டவராய் கரிகாலன் அவனின் தோளில் கை வைத்து ஆறுதலாய் அழுத்திவிட்டு சென்றார்.

“இப்போ அவனை எதுக்கு அவளை தனியா பார்க்க விட்டுட்டு வந்திருக்கீங்க... இது எனக்கு சுத்தமா பிடிக்கல. அவன் எல்லாம் ஒரு மனுசன்னு... மருமகன்... மாப்பிள்ளைன்னு நீங்க கொண்டாடுறது சரியில்லை சொல்லிட்டேன்” அறையை விட்டு வெளியில் வந்ததும் கலைமகள் படபடவென பொரிய ஆரம்பித்தார்.

“இவ்வளோ பேசுறவ... அங்கே டாக்டர் கிட்ட என் மகளுக்கு நான் கண் கொடுக்கிறேன்னு சொல்லியிருக்க வேண்டியது தானே? அப்போ எங்கே போச்சு இந்த வாய்? என்

மகளுக்காக எதையும் செய்ய தயாரா இருக்கும் இவனை விட வேறு யாரை உன் மகளுக்கு புருசனா கொண்டு வர போற?”

“ஏன் என் அண்ணன் மகன் அர்ஜுன் இல்லையா? அவன் கிட்ட அரசி நிலையை எடுத்து சொன்னா நாளைக்கே அவளை கல்யாணம் பண்ணிக்குவான். இவனுக்கு அர்ஜுன் ஆயிரம் மடங்கு மேல்...” கித்தாப்பாய் கலைமகள் சொல்ல... கரிகாலனுக்கு ஆத்திரம் வந்தது.

“முதல்ல அவங்க கிட்ட பேசி உன் பதிலை சொல்லு... அப்போ இதுக்கு நான் பதில் சொல்றேன்” என்றவர் அத்துடன் பேச்சை முடித்து கொண்டார்.

அரசியோ யோசனையில் மூழ்கியிருந்தாள். அவள் தனக்கு பார்வை தெரியவில்லை என்றதும்... அந்த நேரம் மட்டுமே அவளுக்கு கண்ணீர் வந்தது. அதன் பின் அதை நினைத்து பெரிதாக அவள் மருகவில்லை... அழவில்லை. நேரத்திற்கு நேரம் நிறம் மாறும் இந்த மனிதர்களை பார்த்து தினம் தினம் செத்து கொண்டிருப்பதை விட... இப்படி பார்வையில்லாமல் இருப்பது நல்லது என்றே அவளுக்கு தோன்றியது. அதிலும் காந்தனின் முகமும்... அன்று அவன் பேசிய பேச்சும் அவளுக்கு நியாபகம் வந்து அவள் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

என்ன தான் அவனை வேண்டாம் என்று தூக்கியெறிந்து விட்டு வந்தாலும்... மனதுக்குள் அவனின் நியாபக அலையடிப்பதை அவளால் தடுக்க முடியவில்லை. அவள் தனக்குள் கரைந்து கொண்டிருந்த போது... ஒரு கை அவளின் கண்ணீரை மென்மையாய் துடைத்து விட்டது.

அந்த கையின் ஸ்பரிசம் அது யார்? என்பதை அவளுக்கு சொல்லாமல் சொல்லியது. எவனின் அன்புக்கு, கடைக்கண் பார்வைக்கு, அணைப்புக்கு அவள் ஏங்கி கொண்டிருந்தாளோ அவனின் தொடுகை அது. அவனின் சிறு தொடுகையில் உயிர் உருகுபவள் இன்று கல்லாய் தனக்குள் இறுகி போய் அமர்ந்திருந்தாள்.

“இங்கே எதுக்கு வந்தீங்க?” அவன் கையை தட்டி விட்டபடி கடுமையாய் பேசினாள் அவள். அவளின் கோபத்தில் நியாயம் இருப்பதால் அவன் அமைதியாய் இருந்தான்.

“என்னை மன்னித்துவிடு வசீ...” அவளின் இரு கையையும் பிடித்து கொண்டு அவன் மன்னிப்பு கேட்க, அவளோ அவனின் ‘வசீ’ என்றழைப்பில் அசையாது அப்படியே இருந்தாள்.

“உன்னை நான் ரொம்ப நோகடிச்சிட்டேன்... நான் பேசிய பேச்சுக்கு நீ என்னை மன்னிக்க மாட்டேன்னு எனக்கு தெரியும். இதுக்கு மேலேயும் என் மனசை நான் மறைக்க விரும்பல. இப்போ சொல்றேன் கேட்டுக்கோ... என் மனசுல நுழைஞ்ச முதல் பொண்ணும் நீ தான்... கடைசி பொண்ணும் நீ தான்...”

“அப்போ உங்களுக்கு பேசி முடிச்சி இருக்கிற அந்த பொண்ணு எத்தனையாவது சார்?” அவனை இடைமறித்து கிண்டலாய் கேட்டாள் அவள்.

“அது நிர்பந்தத்தால் ஏற்பட்ட திருமண பேச்சு... நான் அவளை காதலிக்கலையே”

“இவ்வளவு நாள் இல்லாத காதல்... இப்போ மட்டும் என் மேல் உங்களுக்கு எப்படி வந்தது...? என்னால் நம்ப முடியலையே” இரு கையையும் விரித்து உதட்டை பிதுக்கி தன் நம்பிக்கையின்மையை அவனிடம் வெளிப்படுத்தினாள்.

“நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் சொல்வது அத்தனையும் உண்மை. உன்னை பார்த்த அந்த நொடி காதலில் விழுந்திட்டேன்னு என்னால் சொல்ல முடியாது. ஆனால் அதுக்கு அப்புறம் உன் மேல் நான் காதல் கொண்டது உண்மை. அதுவும் உன்னை இந்த மாதிரி நிலையில் பார்த்த பின்னும்... என்னால் உன்னை விட்டு போக முடியல”

“சோ… எனக்கு கண்ணில்லைங்கிற பரிதாபத்தில் என்னை காதலிக்கிறீங்களா சார்… யாருக்கு வேணும் உங்க பரிதாப காதல்? நீங்க காதல் பிச்சை போடுற அளவுக்கு நான் ஒண்ணும் கேவலமா போயிடல. போங்க போய் அந்த பொண்ணுக்காவது உண்மையா இருங்க. என் மனசை நோகடிச்ச மாதிரி அவங்க மனசையும் நோகடிக்காதீங்க” என்றும் போல் இன்றும் கம்பீரமாய் பேசியவள்,

“என் வாழ்க்கையை எப்படி அமைச்சுக்கணும்ன்னு எனக்கு தெரியும்… நீங்க போகலாம் மிஸ்டர்…”

அவளின் பேச்சுக்கு அவன் சிறிதும் அசரவில்லை. அவள் அருகில் வந்தவன் அவளை இடித்து கொண்டு நெருங்கி அமர்ந்தான்.

“என்ன நீங்க இப்படி எல்லாம் பண்றீங்க? முதல்ல வெளியில் போங்க… இல்லைன்னா நான் கத்துவேன்…” சொல்லும் போதே அவள் குரல் இறங்கி போனது. அதை அவன் கண்டு கொண்டவனாய் மனதுக்குள் சிரித்து கொண்டான்.

“எங்கே கத்து பார்ப்போம்…” அவன் நக்கலாய் சொன்னான்.

“கத்த மாட்டேங்கிற தைரியமா?” என்றவள் கத்துவதற்கு ஏதுவாய் வாயை திறக்க முயல… அடுத்த நொடி அவளின் இதழ்களை அவன் சிறை செய்தான்.

அவனின் ஆழ்ந்த முத்தத்தில் அவளின் காதல் கொண்ட மனம் மெல்ல விழிக்க… அவள் உள்ளம் அவனிடத்தில் உருக ஆரம்பித்தது. எவ்வளவு நேரம் நீண்டதோ தெரியாது? முதலில் அவன் தான் அவளை விடுவித்தான்.

“என் முத்தம் சொல்லியதா என் காதலின் ஆழத்தை?” அவள் காதில் மென்மையாய் முணுமுணுத்தான் அவன்.

அதை கேட்டு அவளின் முகம் செவ்வானமாய் சிவந்தது. அவளின் முக சிவப்பை ஆசையுடன் பார்த்தவன், அவள் நெற்றியில் தன் இதழை ஒற்றி எடுத்தான்.

“என் உயிரே நீதான்… உன்னை விட்டுட்டு நான் இருப்பேன்னு நீ எப்படி நினைச்ச வசீ?” தாங்கலுடன் வந்தது அவனின் வார்த்தைகள்.

“உங்க ஊருல உயிரா நினைக்கிறவங்களை இப்படி தான் கேவலமா பேசுவாங்களா?” அவளின் வார்த்தையில் அவன் முகம் ஒரு நொடி வேதனையில் ஆழ்ந்தது. அடுத்த நொடி அவன் தன்னை மீட்டு கொண்டான்.

“என்னை விட்டு நீ விலகி போகணும்ன்னு தான் நான் அப்படி பேசினேன். உன் மேல் காதல் இல்லாம பேசல…” தன்னை பற்றி அவளிடம் விளக்கிடும் நோக்கில் கூறியவன்… தன் குடும்ப சூழ்நிலையை அவளுக்கு சொல்லலானான்.

அவன் பக்கம் இருக்கும் நியாயம் அவளுக்கு புரிந்தாலும்… அவளின் காதல் கொண்ட மனம் அதை ஏற்று கொள்ள முடியாமல் தவித்தது. தன் காதலை விட அவன் தன் குடும்பத்தை பெரிதாக நினைக்கிறான்… நேசிகிறான்… என்ற உண்மை அவளுக்கு சற்று கசப்பாக இருந்தது. ஏனெனில் அவள் தன் மனதுக்கு பட்டதை தைரியமாய் செய்து பழக்கப்பட்டவள். அவனின் இந்த குடும்ப பாசம் அவளுக்கு சற்று வினோதமாய் இருந்தது.

இன்று தனக்கு பார்வை இல்லை என்கிற ஒரே காரணத்துக்காக அவன் தன் பக்கம் சாயந்துள்ளான். இதே இது தனக்கு மறுபடியும் பார்வை வந்தால்… இவன் நிச்சயம் தன்னை விட்டு போய்விடுவான் என்று அவள் உறுதியாய் நம்பினாள். அப்படிப்பட்ட அவனின் பரிதாப காதல் அவளின் புனிதமான காதலை அசிங்கப்படுத்துவது போல் இருந்தது அவளுக்கு.

“நீங்க பேசிய வார்த்தைகளை என்னால் மறக்கவும் முடியாது… மன்னிக்கவும் முடியாது… வேண்டாம் நமக்குள் எந்தவித உறவும் வேண்டாம்” உறுதியாய் மறுத்தாள் அவள்.

“நீ தான் என்னோட உறவு வேணாம்ன்னு சொல்ற… ஆனா உங்க அப்பா என்னை மருமகனா ஏத்துக்கிட்டு ரொம்ப

நாளாச்சு… நான் தான் உன் கணவன்… நீ தான் என் மனைவி… இதில் உன் விருப்பத்துக்கு கொஞ்சமும் இடமில்லை செல்லம்” அவளின் மூக்கை மெல்ல ஆட்டியபடி கொஞ்சமும் அலட்டி கொள்ளாமல் அவன் சொல்ல… அவளுக்கோ ஆத்திரம் தலைகேறியது.

“ஓ… இதுக்கு அவரும் உடந்தையா? எல்லோரும் எனக்கு எதிரா சதியா செய்றீங்களா? எனக்கு கோபம் வர்றதுக்குள்ள முதல்ல நீங்க இங்கே இருந்து போங்க…” தலையில் கையை வைத்தபடி வலியில் முகத்தை சுளித்து கொண்டு அவள் பேச…

“என்னடா… வலிக்குதா?” அவள் தலையை தன் கையால் தடவியபடி கவலையுடன் கேட்டவனின் குரலிலிருந்த இதம் அவளுக்கு பெருத்த ஆறுதலை தர… அமைதியாய் அமர்ந்திருந்தாள்.

“நீ ரெஸ்ட் எடு வசீ… நான் அப்புறம் வர்றேன்…” என்றவன் மீண்டும் அவள் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு விட்டு சென்றான். அவனின் முத்தத்தின் ஈரத்தை தடவி பார்த்தவளின் விழிகள் ஈரமாயின.

அன்று அவளை வீட்டிற்கு அழைத்து செல்ல வேண்டிய நாள்… அந்நேரம் பார்த்து அவனுக்கு முக்கிய வேலை வந்துவிட்டது. அந்த வேலையை அவசரமாய் முடித்து விட்டு மருத்துவமனைக்கு ஓடி வந்தான் அவன். அவள் அறையை நோக்கி வேகமாய் வந்தவன் அங்கே கண்ட காட்சியில் அப்படியே அதிர்ந்து போய் நின்றுவிட்டான்.

கண்களில் கறுப்பு கண்ணாடியும், கையில் ஊன்றுகோலுடனும் அவள் நடந்து வந்த காட்சி அவன் இதயத்தை பிசைந்தது. தன்னவளை இப்படி பார்ப்பதற்கா தான் உயிரோடு இருக்கிறோம் என்று கழிவிரக்கத்தில் அவன் கண்கள் கலங்கியது. எவ்வளவு கம்பீரமாய் வீறு நடை போட்டவள் இன்று சிறு குழந்தை போல் மெதுவாய் அடி மேல் அடி வைத்து நடப்பது கண்டு அவனுக்கு இதயமே இரண்டாய் பிளப்பது போல் வேதனையாய் இருந்தது.

அவள் அருகில் வேகமாய் வந்தவன் அவள் கையை பிடிக்க போனான். அதற்குள் கலைமகள், “அவ கிட்ட யாரும் பரிதாபம் காட்ட வேணாம்ன்னு சொல்லிட்டா...” எங்களுக்கும் அவள் மேல் அக்கறை இருக்கு என்பதை அவனுக்கு உணர்த்தினார்.

“ஆமாம் மாப்பிள்ளை... பாப்பா அவ வேலையை தானே செய்துக்கிறேன்... யாரும் ஹெல்ப் பண்ண வேணாம்ன்னு சொல்லிருச்சு...” கரிகாலனும் அவனிடம் சொல்ல...

அவன் பதில் பேசாமல் அவள் கையிலிருந்த ஊன்றுகோலை பிடுங்கி தூக்கி எறிந்தான். “ஹேய் என்ன பண்றீங்க?” அரசி பதற, அவளின் கையை கெட்டியாக பிடித்தவன், “வா... என் கூட...” என்றபடி அவளை அழைத்து கொண்டு அவன் நடக்க... அவளோ அவன் பிடியிலிருந்து விடுபட திமிறினாள்.

அவனோ அவளின் திமிறலை லட்சியம் செய்யாமல் ஒரு கையால் அவள் தோளை அழுத்தி பிடித்தவன், அவள் காதுக்கு அருகில் குனிந்து, “இன்னமும் அடம் பிடிச்ச... உன்னை தூக்கிட்டு போயிருவேன்... வசதி எப்படி?” கேலியாய் கேட்பது போல் இருந்தாலும் அவனின் வார்த்தையில் இருந்த உறுதி அவளை வாயடைக்க செய்தது. மறுபேச்சு இல்லாமல் அவனுடன் இணைந்து அவள் நடக்க... அவளின் செயலை அவர்கள் மூவரும் ஆச்சிரியமாய் பார்த்தனர்.

“என்ன காந்தா... கல்யாண பத்திரிகை அடிக்க கொடுக்க போற இந்த நேரத்துல போய் இப்படி சொல்றியே? நீ சம்மதம் சொன்னதுக்கு அப்புறம் தானே நான் அவங்க கிட்ட பேசினேன். திடீர்ன்னு கல்யாணத்தை நிறுத்திடுங்கன்னு சொன்னா நல்லாவா இருக்குப்பா?” காவேரியின் வார்த்தையில் இருந்த உண்மை காந்தனை சுட தான் செய்தது.

“அம்மா நீங்க சொல்றது எனக்கு புரியுதும்மா. ஆனா வசீயோட நிலமையை கொஞ்சம் நினைச்சு பாருங்க. இந்த மாதிரி சமயத்துல அவளை அப்படியே அம்போன்னு விட்டுட்டு வர முடியுமா?”

“காந்தா...” கண்டிப்புடன் அவனை அழைத்தவர், “நான் தான் ஏற்கெனவே உன் கிட்ட கேட்டேனே... நீ அந்த பொண்ணை காதலிக்கிறியான்னு? அப்போ எல்லாம் பேசாம இருந்துட்டு... எல்லாம் சுமுகமா போய்க்கிட்டு இருக்கும் போது நீ இப்படி சொல்றது சரியில்லை காந்தா... நீ எடுத்த ரெண்டு முடிவுமே ரெண்டு பெண்களோட மனசை எந்தளவுக்கு காயப்படுத்தும்ன்னு கொஞ்சமாவது யோசிச்சியா? காதலிச்சா மட்டும் போதாது காந்தா... அதை காப்பாத்துற தைரியமும் இருக்கணும். அதுவும் ஒரு ஆண்பிள்ளை நீ இப்படி பண்ணியது எனக்கு கொஞ்சமும் பிடிக்கலப்பா”

அரசி மாதிரியே அன்னையும் பேசுவதை கண்டு அவன் ஆச்சிரியப்பட்டு போனான். நுண்ணிய உணர்வுகளை கொண்ட பெண்ணின் மனம் குறித்து வியந்து தான் போனான். அதே சமயம் தன் மன குழப்பத்தால் எத்தனை பேருக்கு வேதனை என்பதை அறிந்து அவன் தன் மனதுக்குள் குமைந்தான்.

“சரி போனது போகட்டும்... இப்போ தேவிக்கு என்ன பதில் சொல்ல போற? தேவையில்லாமல் அந்த பொண்ணோட மனசுலேயும் ஆசையை வளர்த்து விட்டாச்சு. அவங்க

வீட்டில் நிச்சயம் இதுக்கு ஒத்துக்க மாட்டாங்க. உன்னால இப்போ ரெண்டு தங்கச்சியோட வாழ்க்கை கேள்விக்குறியாக போகுது”

காவேரியின் கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை. என்ன நடந்தாலும் சரி... அரசியை மணக்க போவதாய் எடுத்திருக்கும் முடிவில் இருந்து தான் பின் வாங்க போவதில்லை என்பதில் அவன் உறுதியாய் இருந்தான். அந்நேரம் அறிவு அவனின் வீட்டிற்கு வந்தான்.

“காந்தா...” வெளியில் நின்று கொண்டு அவன் குரல் கொடுக்க,

“வாடா...” என்றழைத்தபடி வந்த காந்தன் அவனை வீட்டினுள் அழைத்தான்.

“வேணாம்டா... இங்கேயே நின்னு பேசிட்டு போறேன். என்னடா என்னவெல்லாமோ சொல்ற? செய்ற? என்னால நம்ப முடியலையே?”

“நீ நம்பறதை பிறகு பார்த்துக்கலாம்... முதல்ல அம்மா கிட்ட வந்து பேசுடா. அவங்க கேட்கிற கேள்விக்கு என்னால் பதில் பேச முடியல”

“நீ பண்ணி வச்சியிருக்கிற வேலைக்கு அவங்க என்ன உன்னை கொஞ்சவா செய்யவாங்க? எதுவா இருந்தாலும் நீயே பேசிக்கோடா... என்னை இதில் இழுத்து விடாதே” அறிவு மெதுவாக கழண்டு கொள்ள பார்த்தான்.

“டேய் எனக்காக வாடா...” அவன் கையை பிடித்து காந்தன் உள்ளே இழுத்து கொண்டு போக,

“மஞ்சள் தண்ணி தெளிச்சு மாலை மரியாதையோட ஆட்டை வெட்ட இழுத்துட்டு போற மாதிரி என்னை இப்படி இழுத்துட்டு போறியே காந்தா... இது கொஞ்சம் கூட நல்லாயில்லை சொல்லிட்டேன்...” அறிவு புலம்பியவாறு வேறுவழியில்லாமல் காந்தனின் வீட்டினுள் சென்றான்.

“வாப்பா அறிவு...” அவனை வரவேற்றார் காவேரி.

“பேசுடா…” காந்தன் அவன் விலாவில் இடித்து சொல்ல… அறிவு நெளிந்து கொண்டே அவனை முறைத்தான். பின்பு தொண்டையை செருமி கொண்டு பேச ஆரம்பித்தான்.

“அம்மா… காந்தன் விசயம் இப்போ தான்ம்மா எனக்கும் தெரியும். நீங்க அரசியை கொஞ்சம் நினைச்சு பார்க்கணும். நீங்க பார்த்து இருக்கிற பொண்ணுக்கு வேற நல்ல மாப்பிள்ளை கிடைப்பாங்க. ஆனா அரசியை இவனை தவிர வேற யாராலும் நல்லா பார்த்துக்க முடியாது. நீங்க கொஞ்சம் மனசு வைங்கம்மா” அறிவு காவேரியிடம் விளக்கினாலும் அவர் முகம் தெளியவில்லை.

“நீ சொல்றது எல்லாம் சரி தான்ப்பா. அன்னைக்கே எனக்கு அந்த அரசியை பொண்ணை ரொம்ப பிடிச்சு தான் இருந்தது. அவளுக்கு பார்வை இல்லைங்கிற குறைபாடு கூட எனக்கு பெரிசா தெரியல. இவன் அவளை விரும்பறான்… அதனால அவங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்க தான் நான் நினைப்பேன். ஆனா இவனோட உறுதியில்லாத பேச்சால் கார்த்தியின் கல்யாணமும் நிக்கிற அபாயம் இருக்கு. அடுத்து காஞ்சனாவின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகிடும். அதே சமயம் அந்த பொண்ணு தேவி இதை கேள்விப்பட்டா அவ மனசு என்ன பாடுப்படும்? இதை எந்தவித சிக்கலும் இல்லாமல் தீர்க்க முடிஞ்சா எனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லை” என்றதோடு அவர் முடித்து கொண்டார்.

“கார்த்தி… உன் கல்யாணம் நிக்க நானே காரணம் ஆயிட்டேன். என்னை மன்னிச்சுரும்மா. நீ எவ்வளவு ஆசையோட இருந்த… உன் கனவை நானே கலைச்சுட்டேனே கார்த்தி” காந்தன் தங்கையின் கையை பிடித்து கொண்டு வேதனையுடன் சொல்ல,

“அண்ணா… என்னை பத்தி கவலைப்படாதீங்க. கல்யாணத்துக்கு முன்னால நான் எந்த நினைப்பும் வச்சுக்கிறதா இல்லை. எனக்கு இந்த கல்யாணம் வேணாம். என் மேல் பாசமா இருக்கிற உங்களுக்காக நான்

இதை கூட செய்யலேன்னா எப்படி? அண்ணா... நீங்க கஞ்சனாக்கா வீட்டுல போய் பேசி கல்யாணத்தை நிப்பாட்டுற வழியை பாருங்க. லேட்டாக லேட்டாக அவங்க இதை பெரிய பிரச்சினை ஆக்கிட போறாங்க" கார்த்திகா அவனை சமாதானம் செய்தவள், அடுத்து அவன் என்ன செய்ய வேண்டும்? என்பதை கூறி அவனை முடுக்கிவிட்டாள்.

அதுவரை அவள் ஒருத்தி இருப்பதையே கவனிக்காத அறிவு... அவளின் பேச்சில் கவரப்பட்டு அவள் புறம் திரும்பினான். அடக்கமான அழகோடு, துடைத்து வைக்கப்பட்ட குத்துவிளக்கு போல் பளிச்சென்று இருந்த கார்த்திகா அவனின் கவனத்தை ஈர்த்தாள். அவனும் எத்தனையோ முறை காந்தனின் வீட்டிற்கு வந்திருக்கிறான்... ஆனால் ஒரு தடவை கூட அவளை நிமிர்ந்து பார்த்தது கிடையாது. அவளும் காந்தன் இல்லாத சமயம் அவனுக்கு பதிலளிக்க வருவாள். அத்தோடு உள்ளே சென்றுவிடுவாள். அவனும் அவளை பற்றி பெரிதாக நினைக்கவில்லை.

அவள் அழகை விட... அவள் தன் அண்ணன் மேல் வைத்திருக்கும் பாசம் அவனை பெரிதும் கவர்ந்தது. உடன்பிறப்பு இல்லாத அவனுக்கு அவளின் பாசம் புதிதாய் தெரிந்தது. நண்பனின் தங்கையை ஏறெடுத்து பார்ப்பது கூட பாவம் என்று நினைத்திருந்த அவனின் மனதை அவள் தன் செயலால் சொல்லாமல் கொள்ளாமல் வீழ்த்தி விட்டாள். தனக்கென்று யாருமில்லை என்று தனிமையில் வாடியவன் அவளை தன் சொந்தமாய் கொண்டாட விரும்பினான்.

யாருக்கும் தெரியாமல் பார்த்து கொண்டிருக்கிறோம் என்று நினைத்து கொண்டு அறிவு அவளை கண்ணிமைக்காமல் பார்த்து வைக்க... கார்த்திகா மனதின் உந்துதலில் எதேச்சையாய் அவனை பார்த்தாள். அவனின் பார்வையில் தெரிந்த வித்தியாசத்தில் அவள் சற்று தடுமாறி தான் போனாள்.

‘எப்போதும் நிமிர்ந்து பார்க்க யோசிக்கிற இவன் ஏன் இன்னைக்கு இப்படி பார்க்கிறான்? என்னானது இவனுக்கு?’ மனதுக்குள் குழம்பி போனவளாய் அவனை பார்த்தாள்.

“அறிவு வாடா... போகலாம்” காந்தன் அழைக்கவும் தான் அறிவு தன் கனவு உலகத்தில் இருந்து மீண்டான்.

“ஆங்... எங்கேடா போகணும்?” அவன் உளற,

“இவ்வளவு நேரம் அதை தான்டா சொல்லிட்டு இருந்தேன்... முதல்ல குமரனை பார்த்து பேசுவோம். அவர் புரிஞ்சிப்பார்ன்னு நினைக்கிறேன்” காந்தன் யோசனையாய் சொல்ல...

“பேசி பாருங்க... அவங்க கோபத்துல பேசினாலும் பொறுமையா பேசிட்டு வாங்க” என்று மட்டும் காவேரி சொன்னார்.

இருவரும் நேரே இளங்குமரனை சந்திக்க அவனின் அலுவலகத்திற்கு சென்றனர். அவனை பார்த்து ஒருவழியாய் விசயத்தை சொல்ல அவன் முகம் மாறியது.

“என்ன மச்சான் விளையாடுறீங்களா? எல்லா வேலைகளும் வேகமா நடந்திட்டு இருக்கிறப்போ... இப்ப போய் இப்படி சொல்றீங்களே?”

“மாபிள்ள... நீங்க ஒருத்தர் தான் நல்ல அன்டர்ஸ்டாண்டிங் உள்ளவர். நீங்களே இப்படி சொன்னா எப்படி?” காந்தன் குரலில் இருந்த வருத்தம் குமரனுக்கும் புரிந்தது.

இவ்வளவு நாள் பழக்கத்தில் காந்தனின் குண இயல்புகள் அவனுக்குமே நன்கு தெரியும். காந்தனை போன்ற ஒரு நல்லவனை பார்க்க முடியாது. அவனே இப்படி சொல்லும் போது அவனின் காதலின் வலியை குமரனால் புரிந்து கொள்ள முடிந்தது.

“சரி மச்சான் பேசி பார்ப்போம்... ஆனா சுமுகமா முடியும்ன்னு மட்டும் நினைக்காதீங்க. கொஞ்சம் போராட

வேண்டியிருக்கும். நீங்களும் வீட்டுக்கு வாங்க… பேசி பார்ப்போம்” மூவருமாக சென்று குமரனின் வீட்டிற்கு சென்றனர்.

விசயம் கேள்விப்பட்ட அவனின் பெற்றோர் தாம் தூம் என்று குதித்தனர். இதில் தேவி வேறு கண்ணீரை அருவி போல் கொட்டி பெற்றோரின் கோபத்திற்கு தூபம் போட்டாள். காஞ்சனாவோ தன் அண்ணனை வார்த்தையால் குத்தி கிழித்து விட்டாள். ராஜா தான் சற்று அதிகமாய் கத்தினான். தன் தங்கையை காந்தன் திருமணம் செய்யாவிட்டால்… தான் அவன் தங்கையை திருமணம் செய்ய மாட்டேன் என்று ஆர்ப்பாட்டம் செய்தான்.

அதை கேட்ட அறிவு, ‘போடா… நீ கார்த்தியை கல்யாணம் பண்ண நினைச்சாலும் நான் அதுக்கு சம்மதிக்க மாட்டேன். அவளை உனக்கு விட்டு கொடுக்க நான் ஒண்ணும் கேனை இல்லை’ மனதுக்குள் சொல்லி கொண்டான்.

“ராஜா நீ பேசுறது சரியில்லை… அவர் சூழ்நிலையை நாம புரிஞ்சிக்கலைன்னா எப்படி? இதுல கார்த்தி என்ன பாவம் பண்ணிச்சு” குமரன் தம்பியை சமாதானப்படுத்த ஆரம்பிக்க அறிவு கடுப்பானான்.

‘அவன் தான் வேண்டாம் சொல்றான்ல விட வேண்டியது தானே? பெரிய நல்லவன் மாதிரி இவன் லொள்ளு தாங்கலையே…’ எங்கே அந்த ராஜா கார்த்திகாவை திருமணம் செய்ய சம்மதித்து விடுவானோ என்று அறிவு மனதுக்குள் திகில் அடைந்தான்.

“அதே மாதிரி என் தங்கச்சி என்ன பாவம் பண்ணிச்சு” ராஜா பதிலுக்கு எகிற…

“டேய் நானும் அவளுக்கு அண்ணன் தான்டா…” குமரன் அவசரமாய் சொல்ல…

“உன் பொண்டாட்டி வீட்டுக்கு சப்போர்ட் பண்ணுற நீ அவளுக்கு அண்ணனா?” கேலியாய் அவன் கேட்க,

“நான் யாருக்கும் சப்போர்ட் பண்ணல ராஜா… கண் பார்வை இல்லாத ஒரு பொண்ணுக்கு நியாயம் செய்தேன் அவ்வளவு தான்” குமரன் சொல்ல… காந்தன் அவனை நன்றியுடன் பார்த்தான்.

கணவனை கொழுந்தன் எதிர்த்து பேசுவது பொறுக்க மாட்டாமல் காஞ்சனா அண்ணனை பார்த்து, “இப்போ உங்களுக்கு திருப்தியா? நீங்க பண்ணி வச்சியிருக்கிற வேலையால் என் நிம்மதி போச்சு. போங்க போய் அந்த குருட்டு பொண்ணை கல்யாணம் பண்ணிட்டு சந்தோசமா வாழுங்க. என் முகத்துல முழிக்காதீங்க” என்று கத்தியவள் முகத்தை மூடி கொண்டு அழ ஆரம்பித்தாள்.

“இல்ல காஞ்சனா…” காந்தன் தங்கையை சமாதானப்படுத்த முயல, குமரன் அவன் தோள் பற்றி தடுத்தான்.

“இப்போ அவ கோபமா இருக்கா. நீங்க என்ன பேசினாலும் அவ காதுல ஏறாது. கொஞ்ச நாள் ஆற போடுவோம்… அதுக்கு அப்புறம் பார்த்துக்கலாம். அவளை சமாதானப்படுத்த வேண்டியது என் பொறுப்பு. நீங்க கவலைப்படாதீங்க மச்சான்” காந்தனுக்கு ஆறுதல் சொல்லி அவனை அனுப்பி வைத்தான்.

“எப்படியோ பிரச்சினை தீர்ந்திடுச்சு அறிவு” காந்தன் நிம்மதியாய் சொல்ல… அறிவு அவனை காறி உமிழாத குறையாக முறைத்து பார்த்தான்.

“என்னடா இப்படி முறைச்சு பார்க்கிற?”

“ஆமாம் நீ எனக்கு முறைப்பொண்ணு பாரு முறைச்சு பார்க்கிறதுக்கு… எந்த பிரச்சினையும் இல்லாமல் முடிச்சிருக்க வேண்டிய விசயத்தை இந்தளவுக்கு போக வச்சது நீதான்டா. உன்னை எல்லாம்…” கோபத்தில் பல்லை கடித்தான் அறிவு.

“என்ன அறிவு நீயே இப்படி சொன்னா எப்படி? வசீயை பத்தி உனக்கே தெரியும். அவ வசதி என்ன… அழகு என்ன… அவளுக்கு நான் கொஞ்சமாவது ஈடாவேனா? ஏதாவது

ஒருவிதத்தில் அவளுக்கு நான் பொருத்தமா இருந்திருந்தா சரி… ஆனா எந்தவிதத்திலும் பொருத்தமில்லாத நான் எப்படி அவளுக்கு சரி வருவேன்? இது வாழ்க்கை அறிவு… அவசரப்பட்டு காதலிச்சிட்டு அப்புறம் வாழ்க்கையை தொலைச்சிட்டு நிக்க முடியாது. எனக்கும் மனசு இருக்கு… அதில் வசீ மீது காதல் கடலளவு இருக்கு. நான் அவளை விட்டு ஒதுங்கி போனதுக்கு காரணம்… என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டு அவ கஷ்டப்பட வேணாம்ன்னு தான். நான் அவளை மறுக்கிறது அவளுக்கு கொஞ்ச நாள் கஷ்டமா தான் இருக்கும். அதுக்கு அப்புறம் காலப்போக்கில் அதுவும் சரியாகிரும். நீங்க எல்லோரும் நினைக்கிற மாதிரி தங்கைகளுக்காக அவளை விட்டு நான் விலகல. அவளுக்காக தான் அவளை விட்டு விலகி போனேன்”

“இப்போ மட்டும் என்ன… உன் நிலமை மாறி போயிருச்சா? இப்பவும் உன்னை கல்யாணம் பண்ணிக்கிட்டா அரசி கஷ்டப்பட தானே செய்வா?” அவனை பார்த்து கூர்மையாய் கேட்டான் அறிவு.

“ம்… இப்பவும் அவ என்னோட வாழ்வது என்பது அவளுக்கு கொஞ்சம் கஷ்டமா தான் இருக்கும். ஆனா இந்த நிலைமையில் அவளை பார்த்த பிறகும் என் மனதை என்னால் கட்டுப்படுத்த முடியல. அதான் என் காதலை அவளிடம் சொல்லிட்டேன். ஆனா ஒண்ணு அறிவு… அவ அப்பா அளவுக்கு என்னால் ஆடம்பரமா வச்சுக்க முடியலைன்னாலும்… என்னால் முடிந்தளவு அவளை நல்லா வச்சுக்குவேன். எனக்கு அந்த நம்பிக்கை இருக்குடா” காந்தனின் உறுதி அறிவை நெகிழ்த்தியது.

“காந்தா…” என்று அவனை கட்டி கொண்டவன், “உண்மையான காதலுக்கு வசதி எல்லாம் ஒரு தடையில்லை காந்தா. அரசி நிச்சயம் உன் வீட்டில் வந்து சமாளிப்பா பாரேன். எனக்கு அவ மேல் நம்பிக்கை இருக்கு” அறிவு சொல்லவும் காந்தனின் முகம் பளிச்சென்று மலர்ந்தது.

****************************************

அதே நேரம் சென்னையில் அரசி காந்தனை தான் நினைத்து கொண்டு இருந்தாள். அரசியின் சிகிச்சைக்காக கரிகாலன் சென்னையில் வீடு எடுத்திருந்தார். அரசியை பார்ப்பதற்கு என்று தனியே ஒரு ஆளை நியமித்திருந்தார். கலைமகளும், பிரியனும் அவளுடன் இருந்தனர். அவர் மட்டும் அவ்வப்போது திருநெல்வேலி சென்று தொழில்களை கவனித்து கொண்டார்.

“என்னடா பாப்பா… சாப்பிட்டியா? டேப்லெட் போட்டியா?” கரிகாலன் மகளிடம் கேட்டபடி அவளின் அருகில் அமர்ந்தார்.

“ம்… ஆச்சுப்பா…” தலையாட்டிய மகளின் கண்கள் எங்கோ வெறித்து கொண்டிருந்ததை கண்ட அவரின் கண்கள் கண்ணீரை சிந்தியது. அதை மகளுக்கு தெரியாமல் துடைத்து கொண்டார்.

“பாப்பா… நான் ஒண்ணு சொன்னா கோச்சுக்க மாட்டியே?”

“என்னன்னு சொல்லுங்கப்பா…?”

“நீ ஏன்ம்மா அவரை அவாய்ட் பண்ற?”

“யாரை சொல்றீங்க?” உண்மையில் புரியாமல் விழித்தாள் அவள்.

“மாப்பிள்ளையை தான்ம்மா சொல்றேன்”

“யாரு அர்ஜுனையா? அவன் தான் இங்கே வரவே இல்லையே?” இடக்காக கேட்டாள் அவள். இப்போது அவளுக்கு தெரிந்து விட்டது அவர் யாரை சொல்கிறார் என்று?

“ச்சு… அவனை இல்லைடா… நான் காந்தனை பத்தி பேசுறேன்”

“எப்போ இருந்துப்பா அவர் உங்களுக்கு மாப்பிள்ளை ஆனாரு? உங்க முன்னாடி நிக்க கூட தகுதியில்லாத ஒருத்தரை நீங்க மாப்பிள்ளைன்னு கொண்டாடுறது அதிசயமா இருக்கு” போலியாய் வியந்தாள் அவள்.

“ஏன்ம்மா வார்த்தையால் என்னை கொல்லுற? நான் பேசியது... செஞ்சது எல்லாம் தப்பு தான்... உங்க காதலை புரிஞ்சிக்காம நான் அப்படி நடந்துக்கிட்டேன். ஆனா இப்போ நல்லா புரிஞ்சுக்கிட்டேன்”

“இப்போ மட்டும் அப்படி என்ன புரிஞ்சது உங்களுக்கு?” அவள் இன்னமும் தன் கேலியை விடவில்லை.

“நீ பொழைக்க மாட்டேன்னு சொன்னப்போ... அவர் தான் அந்த எமனோட போராடி உன்னை உயிர் பொழைக்க வச்சார். அப்போ புரிஞ்சதும்மா... உன்னோட உயிர் அவர் தான்னு. நீ தன்னிலை மறந்த நிலையிலும் அவரின் வார்த்தைகள் உன் மனதை போய் அடைஞ்சதுன்னா... நீ எந்தளவுக்கு அவரை நேசிக்கிறேன்னு நான் புரிஞ்சிக்கிட்டேன். அதையெல்லாம் விட உனக்காக அவர் தன் கண்களையே கொடுக்க முன் வந்தார் பாரு... அப்போ அவர் உன் மேல் வச்சியிருக்கிற உண்மையான காதலை நான் புரிஞ்சுக்கிட்டேன். அவரை நான் மாப்பிள்ளைன்னு கொண்டாடுறதுக்கு இதை விட வேறு என்ன வேணும்மா? இதுக்கு அவரை விட வேறு யாருக்கு தகுதியிருக்கு? அந்த மாதிரி நல்ல மனுசனை நீ ஏன் உதாசீனப்படுத்துறன்னு தான் கேட்கிறேன்”

கரிகாலன் பேச பேச அரசி... காந்தனின் காதலின் வீரியத்தை உணர்ந்தவளாய் அப்படியே பிரமித்து போய் அமர்ந்திருந்தாள். அவன் தன் மேல் வைத்திருக்கும் காதலை கண்டு அவள் மனம் பெருமிதம் கொண்டது. கை சேர மாட்டானோ என்று நினைத்த தன்னவன் தன்னிடம் வந்து சேர்ந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைந்தாள்.

“பாப்பா...” அவள் தோள் தொட்டு கரிகாலன் அழைக்கவும் தான் தன் எண்ணங்களில் இருந்து அவள் மீண்டாள்.

“அவருக்கும் உனக்கும் கல்யாணம் பண்ணி வைக்கலாம்ன்னு இருக்கேன். கல்யாணம் பண்ணினா எல்லா மனக்குழப்பமும் தீர்ந்து போகும்டா...”

கல்யாணம் என்றதும் அதுவரை அவள் மனதில் எழுந்த இனிய கனவு கலைந்தது. பழையபடி அவள் மனம் இறுகி போனது.

“ஒருவேளை எனக்கு பார்வை போகாம இருந்திருந்தா... நீங்க அவரை எனக்கு கல்யாணம் பண்ணி வைக்க நினைச்சிருப்பீங்களாப்பா?” அரசியின் வார்த்தை வாளின் கூர்மையுடன் அவரை தாக்கியது. மகளின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் அவர் விக்கித்து போய் அமர்ந்திருந்தார்.

“என்னண்ணா இப்படி சொல்றீங்க?” கலைமகள் தன் அண்ணனின் பேச்சில் அதிர்ந்து போய்விட்டார். கையிலிருந்த அலைப்பேசி நழுவி விடுமோ என்கிற பயத்தில் அதை கெட்டியாக பிடித்து கொண்டார்.

“பின்னே எப்படிம்மா பேச சொல்ற? உன் பொண்ணு என் பையனை மதிக்கிறதே இல்லை. இதுல நீ எல்லாம் ஒரு ஆண்பிள்ளையா என்கிற ரீதியில் பேசியிருக்கா. இதையெல்லாம் கேட்டும் உன் பொண்ணை… அதுவும் கண்ணில்லாத ஒரு குருடியை என் பையனுக்கு கட்டி வைக்கணும்ன்னு எங்களுக்கு ஒண்ணும் தலையெழுத்து இல்ல. அந்தளவுக்கு என் பையனும் குறைஞ்சு போயிடல. இதுக்கு மேலேயும் ஃபோன் போட்டு தொந்திரவு பண்ணினா… அண்ணங்கிற இந்த உறவும் நிலைச்சுயிருக்காது சொல்லிப்புட்டேன்” அவர் கோபத்துடன் அலைப்பேசியை வைக்க… இங்கே கலைமகள் கண்களில் கண்ணீர் வழிய அப்படியே அமர்ந்திருந்தார்.

அடுத்து அவரின் அலைப்பேசி அடிக்க… அது இளவரசியின் அழைப்பு என்றதும் அவசரமாய் எடுத்தவர், தன் அண்ணன் பேசிய பேச்சை மகளிடம் சொல்லலாமா என்று நினைக்கும் போதே… இளவரசி படபடவென பொரிந்து தள்ளிவிட்டாள்.

“அப்படி என்னத்தம்மா என் மாமனார் கிட்ட பேசி தொலைச்சிங்க… அவர் கோபத்துல என்னை சத்தம் போடுறாரு. அரசி தான் தேவையில்லாததை பேசி இந்த கல்யாணத்தை நிறுத்திட்டாளே… அதுக்கு அப்புறமும் அவளுக்கு பார்வை இல்லாத இந்த நேரத்தில் நீங்க இந்த கல்யாண பேச்சை எடுக்கணுமா?”

“இளா… அவ உனக்கு தங்கச்சிடி… அவளை நேரில் பார்க்க வர வேணாம். ஆனா அவளை பத்தி ஒரு வார்த்தை கேட்கணும்ன்னு கூடவா உனக்கு தோணல”

“அவ என் தங்கச்சியா? என் வாழ்க்கைக்கு உலை வைக்க வந்தவ... அவ எப்படி போனா எனக்கு என்ன? அவ வாய்க்கு தான் அந்த ஆண்டவன் அவளுக்கு பார்வையை புடுங்கிட்டான்”

“போதும் நிறுத்து இளா... இதுக்கு மேலே அரசியை ஏதாவது சொன்ன... நான் பொல்லாதவ ஆகிருவேன். அவ வாயடிப்பா தான்... ஆனா உன்னை மாதிரி அடுத்தவங்க மனசு நோகுற மாதிரி அவளுக்கு பேச தெரியாது. இனிமே எந்த காரணம் கொண்டும் அம்மான்னு என்னை தேடி வராதே” என்றவர் பட்டென்று அலைப்பேசியை அணைத்தார்.

அவரும் கோபத்தில் அரசியை பேசியிருக்கிறார் தான். ஆனால் இதே இது அடுத்தவர்கள் அவளை பேசும் போது அவருக்கு சுருக்கென்று முள் தைத்தது போல் வலித்தது. கணவனின் வார்த்தைகள் எவ்வளவு சத்தியமானவை... துன்பம் வரும் போது தான் மனிதர்களை எடை போட முடிகிறது. அப்போது அவர்களின் சாயம் வெளுத்து சுயரூபம் தெரிகிறது. ஏனோ கணவனின் தோள் சாய்ந்து ஒரு பாட்டம் அழ வேண்டும் என்பது போல் தோன்றியது.

அறையை விட்டு வெளியில் வந்தவர் காதுகளில் கரிகாலன் அரசியின் அறையில் பேசி கொண்டிருப்பது தெரிந்து அங்கே சென்றார். அறையின் அருகே செல்லும் போது அரசியின் கணீர் குரல் அவர் காதில் விழுந்தது.

“ஒருவேளை எனக்கு பார்வை போகாம இருந்திருந்தா... நீங்க அவரை எனக்கு கல்யாணம் பண்ணி வைக்க நினைச்சிருப்பீங்களாப்பா?” அவளின் வாரத்தைகளில் கலைமகள் அப்படியே நின்றுவிட்டார்.

கரிகாலன் மௌனத்தை கண்டு மனதுக்குள் விரக்தியாய் சிரித்த அரசி, “உங்களால பதில் சொல்ல முடியாது இல்லையாப்பா? எனக்கு பார்வை இல்லைங்கிற ஒரே காரணத்துக்காக நீங்க என் காதலுக்கு சம்மதம் தெரிவிச்சு இருக்கீங்க. அதே மாதிரி அவரும் எனக்கு பார்வை போனதாலேயே தன் காதலை ஒத்துக்கிட்டார். ஆக

மொத்தம் என்னோட உண்மையான காதலுக்கான பலன் உங்க ரெண்டு பேர் கிட்டேயிருந்தும் எனக்கு கிடைக்கல”

“என்ன பாப்பா சொல்ற? மாப்பிள்ளை... உன்னை காதலிக்கவே இல்லையா?” அதிர்ச்சியாய் கேட்டார் கரிகாலன்.

“தயவுசெஞ்சு மாப்பிள்ளை... மாப்பிள்ளைன்னு சொல்லாதீங்க...” என்று தன் இரு காதுகளையும் பொத்தி கொண்டு கத்தியவள், “அது முடிஞ்சு போன அத்தியாயம்... மீண்டும் தொடர வேணாம்ப்பா...” என்று அழுதவளை தோளோடு அணைத்து கொண்டார்.

“ஏன்ம்மா அவர் உன்னை காதலிக்கல... உனக்கு என்னடா குறை?” தன் அழகு மகளை காந்தன் நிராகரித்ததை கேட்டு கரிகாலனுக்கு மனம் தாங்கவில்லை.

“பணம், அழகு இதையெல்லாம் தாண்டி ஒண்ணு இருக்கு... அது மனசு. அவர் மனசுல அவர் குடும்பத்துக்கு தான் முதலிடம். அதனால என் காதல் அவருக்கு இரண்டாம் பட்சமாய் போயிருச்சு” என்றவள் அவன் தன் காதலை நிராகரித்ததை அவரிடம் சொன்னாள்.

அதை கேட்டு கொண்டிருந்த கலைமகள் மனதில் காந்தனை பற்றி நல்ல அபிப்ராயம் எழுந்தது. ‘நான் நினைத்தது போல் அவன் பணத்துக்காக என் மகள் பின்னே அலையல. உண்மையில் அவன் நல்லவன் தானோ? நான் தான் அவனை சரியாக புரிந்து கொள்ளாமல் போயிட்டேனோ?’ அவருக்கு அவனிடத்தில் மதிப்பு கூடியது.

“அவருக்கு அவர் குடும்பம் பெருசா போச்சு... உங்களுக்கு உங்க கௌரவம் பெருசா போச்சு. இப்போ என் பார்வை போனதும் ரெண்டு பேரும் என் காதலுக்கு சரின்னு சொல்றீங்க... இதை எப்படி என்னால் ஏத்துக்க முடியும். எனக்கும் சுயகௌரவம் இருக்கு... தன்மான உணர்வு இருக்கு. யாரும் எனக்கு வாழ்க்கை பிச்சை போட வேண்டாம். எனக்கு கல்யாணம் வேண்டாம். நான்

இப்படியே இருந்திட்டு போறேன்” அவளின் வார்த்தைகள் என்றும் போல் இன்றும் உறுதியாய் கம்பீரமாய் வந்தது.

மகளின் முடிவை கேட்ட கரிகாலன் அவளை மாற்றுவது என்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை என்பது புரிய மௌனம் காத்தார். மேலும் இது காதலர்கள் இருவரும் அவர்களுக்குள் பேசி முடிவெடுக்க வேண்டிய விசயம். தான் இதற்கு மேல் இதில் தலையிட முடியாது என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவருக்கு காந்தன் மேல் நம்பிக்கை இருந்தது. தன் மகளின் மனதை மாற்றி நிச்சயமாய் அவளை மணம் முடிப்பான் என்று அவர் நம்பினார். அதனால் அதற்கு மேல் அவர் அதை பற்றி பேசவில்லை. அந்நேரம் பார்த்து,

“அரசி…” என்று அழுதபடி அங்கே வந்த கலைமகளை ஆச்சிரியமாய் பார்த்தார் கரிகாலன். அன்னையின் அழுகுரல் அரசிக்கும் வியப்பை அளித்தது.

“என்னை மன்னிச்சிரு அரசி… உன் மனசை புரிஞ்சிக்காம உன்னை எப்படி எல்லாம் பேசிட்டேன். உன் மனசுல இவ்வளவு வேதனை இருக்கும்ன்னு நான் நினைக்கல அரசி. அதோட நானும் உன்னை வார்த்தையால் குத்தி கிழிச்சிட்டேனே” மகளிடம் மன்னிப்பு கேட்டவர்… கணவர் பக்கம் திரும்பி,

“நீங்க சொன்னது நிஜம்தாங்க… கஷ்டப்படும் போது தான் நம்ம மேல யார் யார் உண்மையா பாசம் வச்சிருக்காங்கன்னு தெரிஞ்சிக்க முடிஞ்சது” என்றவர் தன் அண்ணன் பேசியதை அவரிடம் கூறினார்.

“அவனை பத்தி தான் தெரியுமே விடு கலை… இப்பவாவது உன் புத்தி தெளிஞ்சதே அதுவே எனக்கு சந்தோசம்” கரிகாலன் மனைவியை ஆறுதல் படுத்தினார்.

“அரசி… ஏண்டி என் கூட பேசாம இருக்க? இன்னும் உன் கோபம் தீரலையா?” மனத்தாங்கலுடன் கேட்டார் கலைமகள். அன்னை மன்னிப்பு கேட்டதும் அவர் பேசிய வார்த்தைகள் அவள் மனதிலிருந்து அழிந்தே போனது.

“அம்மா…” என்ற கூவலுடன் அன்னையை நோக்கி கையை நீட்ட… கலைமகள் மகளின் கையை பிடித்து கொண்டு அவள் அருகில் அமர்ந்தார்.

“உங்களால தான் எனக்கு அவர் கிடைச்சாரு… அப்புறம் எப்படி உங்களை நான் வெறுப்பேன்?” என்று அவரின் மடியில் ஆறுதலாய் முகம் புதைத்தாள்.

கலைமகள் மகளின் தலையை ஆதரவாய் கோதி கொண்டு அமர்ந்திருந்தார். அந்த காட்சியை நிறைவுடன் பார்த்திருந்தார் கரிகாலன்.

*****************************************************

வசீயரசி தன் அறையில் அமைதியில்லாமல் பரபரப்புடன் அமர்ந்திருந்தாள். இன்னும் கொஞ்ச நேரத்தில் காந்தன் அவளை பார்க்க வர போகிறான் என்பதை கேட்டதில் இருந்து அவள் மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. அன்று அவன் வீட்டிற்கு சென்ற போது அணிந்து சென்ற மேக வண்ண புடவையை அன்னையின் உதவியுடன் ஆசையுடன் அணிந்து கொண்டாள். இந்த புடவையில் தன்னை கண்டதும் அன்று போல் அவனின் கண்கள் பிரமிப்பாய் எப்படி அகலமாக விரியும்? என்பதை கற்பனை செய்து பார்த்தவளுக்கு அந்த கற்பனையே மழைச்சாரலில் நனைந்த சுகத்தை அவளுக்கு அளித்தது.

“வாங்க தம்பி… வாங்க” என்று கலைமகள் காந்தனை வரவேற்க… அவனோ தலைச்சுற்றாத குறையாக அவரை அதிசயமாய் பார்த்தான்.

“என்ன மாப்பிள்ளை அப்படி பார்க்கிறீங்க? கலை இப்போ அவள் தப்பை உணர்ந்து திருந்திட்டா…” கரிகாலன் அவனிடம் சொல்ல… அவன் கலைமகளை பார்த்து சிரித்து வைத்தான்.

“எப்படி காந்தா…? இப்படி எல்லாரையும் கைக்குள் போட்டுக்குற? இந்த வித்தையை எனக்கும் கொஞ்சம் சொல்லி கொடுடா” அறிவு அவனின் காதுக்குள்

முணுமுணுத்தான். அவன் அரசியை பார்த்துவிட்டு கரிகாலனிடம் முக்கியமான விசயத்தை பற்றி பேசுவதற்காக வந்திருந்தான். அந்த விசயத்தை காந்தனிடம் கூட சொல்லாமல் மறைத்து வைத்திருந்தான்.

“என்னடா அறிவு எப்படி இருக்க?” வழக்கம் போல் கரிகாலன் அவனை கேள்வி கேட்க அவன் அதற்கு பதில் சொல்லலானான்.

“அறிவு… வசீயை பார்க்க வரலையா?” காந்தன் அவனிடம் கேட்க… அதை கேட்டு அறிவு எழ போக… கரிகாலன்,

“மாப்பிள்ள… நீங்க அரசியை போய் பாருங்க… நான் அறிவு கிட்ட கொஞ்சம் பேசணும்” என்க, வேறுவழியில்லாமல் காந்தன் அரசியின் அறையை நோக்கி நடந்தான்.

“எலேய் அறிவு… ஆள் தான் வளர்ந்திருக்க… ஆனா உன் அறிவு அப்படி வளர்ந்த மாதிரி தெரியலையே?”

‘இந்த ஆளுக்கு லொள்ளை பாரு… பேங்க்ல ஆபிசரா இருக்கிற என்னை பார்த்து அறிவு இருக்கான்னு கேட்கிறாரு. இவருக்கு தான் கொஞ்சமும் அறிவில்லை’ மனதுக்குள் ஆத்திரமாய் நினைத்தாலும் வெளியில் பவ்யமாய் அவரை பார்த்தான். இந்த பூனையும் பால் குடிக்குமா என்பது போல் அப்பாவி பார்வை ஒன்றை அவரை பார்த்து பார்த்து வைத்தான்.

“அவங்க ரெண்டு பேரும் தனியா பேச எவ்வளவோ விசயம் இருக்கும்? நீ எதுக்கு நடுவுல போற? கொஞ்ச நேரம் சென்று போ அறிவு” அவர் சொல்லவும் தான் அறிவுக்கு மூளையில் பல்ப் எரிந்தது.

“ஆமாம் பெரியப்பா… நான் இதை யோசிக்கவே இல்லை” அசடு வழிந்து கொண்டே தலையை சொரிந்தான்.

“நீ எதைத்தான் யோசிச்ச” என்றவர், “அப்புறம் ஊர்ல வேற என்ன விசயம்?”

“உங்களுக்கு தெரியாம அந்த ஊருல எதுவும் நடந்திட முடியுமா பெரியப்பா” அவர் தலையில் பெரிய பனிகட்டியை தூக்கி வைத்தான்.

“அப்புறம் பெரியப்பா... ஒரு விசயம் உங்க கிட்ட சொல்லணும்?” அவன் சொன்னதும் அவர் என்னவென்று அவனை பார்க்க,

“அது காந்தன் தன் கல்யாணத்தை நிறுத்தியதால... அவன் தங்கச்சியோட கல்யாணமும் நின்னு போச்சு. அவனுக்கு அது ஒரு பெரிய கவலையா இருக்கு. இவங்க கல்யாணத்துக்கு முந்தி அந்த பொண்ணுக்கு கல்யாணம் நடந்தா நல்லாயிருக்கும்” அவன் சொன்னதும்,

“நீ சொல்றது சரி தான் அறிவு... இதுக்கு என்ன செய்யலாம்?” அவனிடம் கேட்டவர் யோசனையில் ஆழ்ந்தார். பின்பு முகம் மலர்ந்தவராய், “ஏன் அறிவு... நம்ம பிரியனுக்கு அந்த பொண்ணை பேசினா என்ன? பொண்ணு கொடுத்து பொண்ணு எடுத்தா நல்லா இருக்கும்ல” அவர் பேச்சில் அவன் இடிந்து போய்விட்டான்.

‘நான் என்ன நினைச்சு சொன்னேன்... இவர் என்ன நினைச்சு பேசுறாரு’ மனதுக்குள் நொந்து போனவனாய்... “ஏன் பெரியப்பா... என்னை பார்த்தா உங்க கண்ணுக்கு மாப்பிள்ளையா தெரியலையா?” அவன் ஆதங்கத்துடன் கேட்க, அவர் வியப்பாய் அவனை பார்த்தார்.

“எனக்கு அம்மா, அப்பா இல்லைன்னாலும் அப்பா மாதிரி நீங்க இருக்குறீங்கன்னு தான் இவ்வளவு நாள் தைரியமா இருந்தேன். ஆனா நீங்க...” வராத கண்ணீரை துடைப்பது போல் பாவனை செய்தபடி உருக்கமாய் பேசி அவரை வீழ்த்தினான்.

“நீ அந்த பொண்ணை விரும்பறியா அறிவு?”

“ஆமாம் பெரியப்பா...” என்றவன் அவன் கார்த்திகாவை காதலித்த கணத்தை அவரிடம் விளக்கமாய் சொன்னான்.

“நீ நேரே மாப்பிள்ளை கிட்ட பேசியிருக்கலாமே?”

“அய்யோ பெரியப்பா… அவனுக்கு காதல்ன்னா பிடிக்காது. அதிலேயும் நான் அவன் தங்கச்சியை காதலிச்ச விசயம் மட்டும் அவனுக்கு தெரிஞ்சது… நான் தொலைஞ்சேன். நீங்க தான் இதை அரேன்ஜ்டு மேரேஜா நடத்தி வைக்கணும். ப்ளீஸ் பெரியப்பா…” அவன் கெஞ்ச…

“என்னப்பா நீ… இதுக்கு போய் இவ்வளவு கெஞ்சணுமா? நீயும் என் பையன் மாதிரிடா.. உன் கல்யாணம் என் பொறுப்பு” அவனின் திருமணத்துக்கு அவர் உத்திரவாதம் தர… அப்போது தான் அவனுக்கு நிம்மதியாய் இருந்தது.

அரசியின் அறைக்குள் நுழைந்த காந்தன் அங்கே கட்டிலில் அமர்ந்திருந்த அரசியின் தோற்றத்தில் அப்படியே கண்ணிமைக்க மறந்தவனாய் நின்றிருந்தான். அழகு தேவதையாய் இருந்தவளின் அழகு என்றும் போல் இன்றும் மனதை கொள்ளை கொள்வதாய் இருந்தது. அப்போது தான் அதை கவனித்தான். அவளின் சேலை சற்று விலகி இருப்பதை கண்டவன் வேகமாய் அவள் அருகில் வந்தான்.

அவள் உடல் மேல் விரல் படாமல் அவள் சேலையை இழுத்து அவன் சரி செய்து விட, அதில் அரசி பதறி போனவளாய் எழுந்தவள், “ஹேய்… யாரது?” முகம் பயத்தில் வெளுக்க… கருவிழிகள் அங்குமிங்கும் அலைப்பாய… கையை அடிப்பது போல் முன்னுக்கு நோக்கி வீசினாள்.

“வசீ நான் தான்டா…” என்று சொன்னவன் அவளின் கையை பிடித்து தன் வரவை அவளுக்கு உணர்த்தினான்.

“நீங்களா?” என்று ஆசுவாசமாய் கேட்டவள் தன் கைகளை கொண்டு அவன் உடலில் தடவி பார்த்தாள். அவன் அவள் அருகில் வந்து அவளை அணைத்து கொண்டான்.

“நான் யாரோன்னு பயந்துட்டேன்…” என்றவள் தன் பதற்றத்தை தணிக்க அவனின் மார்பில் முகம் புதைத்து கொண்டாள். அவளின் செயலில் அவன் மனம் கிறங்கி போனான். மெல்ல அவளை தட்டி கொடுத்து ஆறுதல் படுத்தினான்.

அவளின் இதயம் படபடவென பயத்தில் வேகமாய் துடிக்கும் ஓசை அவனுக்கு கேட்க... அவனின் மனது அவளின் நிலை அறிந்து வலித்தது. இனியும் தாமதிக்க முடியாது என்று நினைத்தவன், “நாம கல்யாணம் பண்ணிக்கலாமா வசீ?” அவள் உச்சந்தலையில் இதழ் பதித்தபடி அவன் கேட்க... அவள் சட்டென்று அவனிடம் இருந்து விலகினாள்.

“வேண்டாம்...” ஒற்றை வார்த்தையில் அவள் மறுக்க... அவன் இயலாமையுடன் அவளை பார்த்தான்.

“இப்போ நான் உன்னோட ரூபன்னா வந்திருக்கேன். என் கல்யாணத்தை நிறுத்திட்டு... உனக்காக நான் வந்திருக்கேன் வசீ... ப்ளீஸ் என்னை புரிஞ்சிக்கோடா” அவன் சொன்னதை கேட்டு அவள் உள்ளுக்குள் நெகிழ்ந்தாலும் வெளியில் அதை காட்டிக் கொள்ளாமல் இறுக்கமாய் இருந்தாள்.

“சொல்லு வசீ... பதில் சொல்லு...”

“என்ன பதில் சொல்ல சொல்றீங்க? நீங்க போன்னா... போகணும். வான்னா... வரணுமா? என்னை நீங்க என்ன நினைச்சிட்டீங்க? எனக்கும் சூடு சொரணை இருக்கு... தன்மானம் இருக்கு. நீங்க ஒண்ணும் என்னை பார்த்து பரிதாபம் பட வேணாம்” நிமிர்வுடன் அவள் கூற,

“உனக்கு சூடு, சொரணை, தன்மானம் எல்லாம் இருக்கான்னு நான் டெஸ்ட் பண்ணி பார்க்கவா?” அவன் சொன்னதும், ‘என்ன செய்ய போகிறான்?’ என்று அவள் யோசிக்கும் போதே கதவை தாழிடும் ஓசை கேட்க... அவள் மனதுக்குள் திடுக்கிட்டவளாய் அசையாது நின்றிருந்தாள்.

“என்ன ரெடியா?” என்று கேட்டவனின் கைகள் அவளை தன்னுடன் சேர்த்து இறுக்கமாய் அணைத்து கொண்டது.

அடுத்து அவனின் இதழ்கள் அவளின் முகத்தில் முத்த கோலத்தை போட ஆரம்பிக்க... எதிர்க்க வேண்டிய அவளோ அவனின் செயலில் மனம் மயங்கியவளாய் அவனின் செயலுக்கு உடன் பட்டாள். கடைசியில் அவன் இதழ்கள்

அவளின் இதழில் வந்து இளைப்பாற... அதற்கு மேல் தாங்க முடியாதவளாய் அவள் அவன் மேல் சரிய... அதை எதிர்பாராத அவனோ அவளோடு சேர்ந்து கட்டிலில் விழுந்தான்.

பூங்கொடியாய் தன் மேல் படர்ந்திருந்தவளை கண்டு அவனின் உணர்வுகள் கட்டவிழ்க்க ஆரம்பித்தது. அவளை கீழே சரித்து அவனின் கைகளும் இதழ்களும் அவள் மேனியில் அத்துமீற... அதற்கு கொஞ்சமும் சளைக்காமல் அவளும் அவனுடன் உடன்பட்டாள். எல்லை மீறும் முன் அவன் தான் தன்னை சட்டென்று மீட்டு கொண்டான். ஆனால் அவளோ இன்னும் உணர்வின் தாக்கத்தில் இருந்து மீளாதவளாய் அவனை காற்று கூட புக முடியாதபடி இறுக அணைத்திருந்தாள்.

“இவ்வளவு ஆசையை மனசுல வச்சுக்கிட்டு ஏண்டி பிடிக்காதவ மாதிரி நடிக்கிற?” அவள் கழுத்தில் முகம் புதைத்து அவளின் வாசனையை நுகர்ந்தபடி அவன் கேட்க... அதில் அவளின் கைகள் தன் அணைப்பை தளர்த்தியது.

“அதுக்கு நான் பதில் சொல்லவா? கண்ணில்லாத நீ எனக்கு பொருத்தம் இல்லைன்னு நினைக்கிற... ஒருவேளை உனக்கு பார்வை வரலைன்னா... நீ எனக்கு பாரமாயிடுவேன்னு பயப்படுற அப்படித்தானே?” அவளின் கையை பிடித்து அதில் தன் தாடையை தாங்கியபடி அவள் முகம் பார்த்து அவன் கேட்டான். அவன் பேசியதை கேட்டு, ‘தன்னை கண்டு கொண்டானே’ என்ற பதற்றத்தில் எழுந்தமர்ந்தவள்... முகம் மாறாமல் காக்க மிகவும் சிரமப்பட்டாள்.

“இது எல்லாத்தையும் விட முக்கியமானது... என்னை எனக்காக உன் அப்பா, அம்மா மாப்பிள்ளையா ஏத்துக்கல. உனக்கு கண் போனதால வேறுவழியில்லாமல் என்னை ஏத்துக்கிட்டாங்கன்னு நீ பீல் பண்ற. எனக்காக என் தன்மானத்துக்காக உன் காதலை என்னிடம் இருந்து

மறைக்கிற” அவன் சொல்ல சொல்ல... அவள் பதில் பேச முடியாமல் விக்கித்து போய் அசையாது அமர்ந்திருந்தாள்.

“சாரி மாமா... கோவிலுக்கு போயிட்டு வந்ததில் கொஞ்சம் லேட்டாகிருச்சு. வசீ கிளம்பிட்டாளா?” வீட்டின் முன் நின்று கொண்டிருந்த கரிகாலனிடம் கேட்டு கொண்டே வந்தான் காந்தன். இன்று தான் அரசிக்கு கண் சத்திர சிகிச்சை செய்வதற்கு நாள் குறித்திருந்தனர் மருத்துவர்கள். அது நல்லபடியாக நடந்து முடிய வேண்டுமென்று அவன் கோவிலுக்கு சென்றுவிட்டு வந்தான்.

“வசீ கிளம்பியிருப்பான்னு நினைக்கிறேன்... நீங்க போய் அவளை பாருங்க” அவர் சொல்லியதும் அவன் வேகமாய் உள்ளே நுழைந்தான்.

அந்நேரம் பார்த்து பிரியன் உள்ளே இருந்து வந்தவன் காந்தனை பார்த்தான். இந்த ஒரு மாதத்தில் காந்தன் தன் தங்கையை அன்பாக கவனித்து கொள்ளும் விதத்தில் அவனின் மனம் கொஞ்சம் மாற ஆரம்பித்திருந்தது. அவனின் மனதில் காந்தனை பற்றி நல்ல அபிப்ராயம் ஏற்பட தொடங்கியது.

எந்தவொரு ஆண்மகனும் காதலிக்கும் பெண்ணுக்கு பார்வை இல்லையென்றால் பயந்து போய் விலகி ஓடிவிடுவான். இவ்வளவு ஏன் ஆண் மகனாகிய பிரியன் கூட அவ்வாறு தான் நினைத்து இருப்பான்... விலகி இருப்பான். ஆனால் காந்தன் அவ்வாறு நடந்து கொள்ளாமல் தன் தங்கையிடம் அன்பு பாராட்டுவது அவனுக்கு அதிசயமாய் இருந்தது.

“வாங்க...” என்று காந்தனை பார்த்து அவன் அழைக்க... காந்தன் பதிலுக்கு தலையசைத்தபடி உள்ளே சென்றான்.

அரசியின் அறைக்குள் அவன் நுழையும் போது அங்கே அவள் கிளம்பாமல் அப்படியே அமர்ந்திருந்தாள். அவன் குழப்பமாய் அவள் அருகில் சென்றவன்...

“என்ன கிளம்பலையா? டைம் ஆகுது பாரு...” தன் கையிலிருந்த கோவில் குங்குமத்தை எடுத்து அவள்

நெற்றியில் வைத்தபடி அவன் கேட்க… அவள் பேசாமல் அமைதியாய் இருந்தாள்.

அன்று அவள் மனதிலிருந்ததை அவன் உணர்ந்ததிலிருந்து அவள் அப்படித்தான் அமைதியாய் இருக்கிறாள். அதற்காக அவன் கூறியதை அவள் ஏற்று கொள்ளவும் இல்லை அதேசமயம் அதை மறுக்கவும் இல்லை. அவனும் அவள் மனதில் இருந்ததை உணர்ந்தாலும் அதை பற்றி பெரியதாய் அலட்டி கொள்ளவில்லை.

“காலையில் என்ன மூட் அவுட் என் செல்லத்துக்கு?” என்றபடி அவள் அருகில் அமர்ந்தான்.

“நான் ஆபரேசனுக்கு வரல…” மெதுவாய் தன் மனதில் உள்ளதை அவள் தெரிவிக்க… அதை கேட்டு அவன் அதிர்ச்சியுற்றான்.

“என்ன விளையாடுறியா?” அவனுக்கு கோபம் வந்தது.

“நான் வரல… நான் இப்படியே இருந்திட்டு போறேன்” அவள் விடாப்பிடியாய் மறுக்க…

“எனக்காக கூட வர மாட்டியா?” அவனின் குரலில் இருந்தது ஆதங்கம் மட்டுமே.

“அப்படி நான் வரணும்ன்னா… நீங்க நான் போடுற கண்டிசனுக்கு ஒத்துக்கணும்?”

‘என்ன இது? கண்டிசன் அது இதுன்னு மிரட்டுறாளே? அப்படி வில்லங்கமாய் எதை கேட்டு வைக்கப் போறான்னு தெரியலியே’ மனதில் கிலியுடன் அவளை பார்த்திருந்தான்.

“நீங்க கல்யாணம் பண்ணிக்கணும்” அவள் சொன்னதும் அவன் அதுவரை இழுத்து பிடித்து வைத்திருந்த மூச்சை நிம்மதியுடன் வெளியிட்டான்.

“பண்ணிக்கலாமே… இப்பவே உன் கழுத்தில் தாலி கட்டவா… சொல்லு நான் கட்டுறேன்” அவள் கையை பிடித்து கொண்டு அவன் உறுதியளிக்க…

“இல்லை நான் என்னை சொல்லல... நீங்க வேற பொண்ணை கல்யாணம் பண்ணிக்கணும். அதுக்கு முதல்ல எனக்கு சத்தியம் பண்ணுங்க. அப்புறமா நான் ஆபரேசன் பண்ணிக்க வர்றேன்” அவள் சொன்னதை கேட்டு அவன் ஆத்திரத்துடன்,

“அப்படியே கன்னத்துல நாலு அப்பு அப்பினேன்னா தெரியும். எதுக்கும் எதுக்கும் முடிச்சு போடுற. என்னடா கொஞ்ச நாளா ரொம்ப குணசாலியா மாறிட்டியேன்னு நான் சந்தோசப்பட்டேன். ஆனா சமயம் பார்த்து என் கழுத்தை அறுக்கிறதுக்கு தான் நீ அமைதியா இருந்திருக்கன்னு எனக்கு தெரியாம போச்சு. முடியாதுன்னு சொன்னா என்னடி பண்ணுவ? பெரிய ஹார்ட் ஆபேரசன் பாரு... நான் பயந்து போய் உனக்கு சத்தியம் பண்ணி கொடுக்கிறதுக்கு. நீ ஆபேரசன் பண்ணவே வேண்டாம். உனக்கு கண்ணும் தெரிய வேண்டாம். உனக்கு கண்ணு தெரியலைன்னாலும் உன்னை நான் பத்திரமா பார்த்துக்கிறேன்”

“வா... இப்பவே உன் கழுத்துல நான் தாலி கட்டுறேன். அதுக்கு அப்புறமும் நீ இப்படி லூசுத்தனமா எப்படி பேசுறேன்னு பார்க்கிறேன்” அவள் கையை பற்றி எழுப்பியவன் அவளை இழுத்து கொண்டு நகர முயல... அவளோ அவன் கையை உதறி விட்டு அழுத்தமாய் நின்றாள்.

“நான் ஒண்ணும் சின்ன பொண்ணு இல்ல. என் கையை காலை கட்டி வச்சு கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு. அப்படியே நீங்க கல்யாணம் பண்ணினாலும் போலீசில் கம்ப்ளைன்ட் கொடுப்பேன். என்னை கட்டாய கல்யாணம் பண்ணிக்கிட்டாங்கன்னு அங்கே போய் சொல்வேன்”

“எங்கே வேணும்ன்னாலும் போய் சொல்லு... என்ன தண்டனை வேணும்ன்னாலும் வாங்கி கொடு. நான் அதுக்கு எல்லாம் பயப்பட மாட்டேன். ஆனா அதுக்கு முன்னாடி நம்ம கல்யாணம் நடக்கணும்” அவனும் தீவிர

பாவத்துடன் பேசியவன் மீண்டும் அவள் கை பற்றி அழைத்து கொண்டு போக முயற்சித்தான்.

“ப்ளீஸ் ரூபன்... என்னை புரிஞ்சிக்கோங்க... நீங்க என்னை கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நினைக்கிறது உங்க பெருந்தன்மை. ஆனா இதனால என் மனசு என்ன பாடுப்படும்ன்னு கொஞ்சமாவது யோசிச்சு பார்த்தீங்களா? ஒருவேளை எனக்கு பார்வை வரலைன்னா நான் வாழ்நாள் முழுவதும் குற்ற உணர்ச்சியோட வாழ வேண்டியிருக்கும். நீங்க காதலிக்கிற பெண்ணுக்கு கொடுக்கிற பரிசு இந்த குற்றவுணர்ச்சி தானா?”

‘பார்வை வராமல் இருந்தால் தானே பிரச்சினை... பார்வை கிடைத்துவிட்டால்... இது பெரிய பிரச்சினை இல்லையே. இவ எதுக்கு தேவையில்லாம இவ்வளவு பில்டப் கொடுக்கிறா?’ மனதில் நினைத்தை சொல்லத்தான் நினைத்தான்.

இன்று சத்திர சிகிச்சை செய்ய போகும் நாளில் அவளின் மனதை குழப்ப வேண்டாம். அவளை நல்ல மனநிலையில் வைத்திருப்பது தான் அவளுக்கு நல்லது என்று எண்ணியவன்,

“நீ சொல்றபடி நான் கல்யாணம் பண்ணிக்கிறேன். இப்போ உனக்கு சந்தோசமா?” என்று மட்டும் கேட்டான். அவன் சொன்னதின் உள் அர்த்தத்தை அந்த பேதை பெண் புரிந்து கொள்ளவில்லை. அவன் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்ததில் சந்தோசப்பட்டவள் அவனின் பேச்சை சரிவர புரிந்து கொள்ளவில்லை.

“தேங்க்ஸ் ரூபன்...” என்று அவன் கையை பிடித்து கொண்டு தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவள். “கொஞ்ச நேரம் வெயிட் பண்ணுங்க... நான் கிளம்பி வர்றேன்” உற்சாகமாய் சொன்னவளை மர்ம புன்னகையுடன் பார்த்தவன் ஒன்றும் பேசாது அறையை விட்டு வெளியேறினான்.

சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து அன்றே அவளை வீட்டிற்கு அனுப்பிவிட்டனர். இரண்டு வாரம் கழித்து அவள்

கண் கட்டை பிரிக்கலாம் என்று சொல்லியிருந்தார்கள் மருத்துவர்கள். இந்த இரு வாரமும் காந்தன் அவளுடனே இருந்தான்.

அவளுக்கு பார்வை வருமா? என்ற மனத்தவிப்பில் அவன் இருந்தான். அவளோ அவன் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்ததில் மகிழ்ந்தவளாய் அவனிடத்தில் சகஜமாய் உரையாடினாள். அவன் தான் தொண்டையில் ஏதோ மாட்டி கொண்டது போல் பேச்சு வராமல் தவித்தான். வீட்டில் உள்ளவர்களுக்குமே சற்று கவலையாக தான் இருந்தது. அவளுக்கு பார்வை வந்துவிட வேண்டும் என்று அவர்களும் கடவுளை வேண்டி கொண்டனர்.

“ரூபன்... எனக்கு ரொம்ப பயமாயிருக்கு” அருகில் அமர்ந்திருந்த காந்தனின் கைகளை இறுக பற்றி கொண்டாள் அரசி. இன்று அவள் கண் கட்டை அவிழ்ப்பதற்காக மருத்துவமனைக்கு வந்திருந்தனர். அவள் அம்மா, அப்பா, அண்ணன் என அனைவரும் அங்கிருக்க... அவளோ காந்தனின் அருகாமையே பெரிதும் விரும்பினாள்.

‘மனதுக்குள் இவ்வளவு காதலை வச்சுக்கிட்டு ஏண்டி இப்படி என்னை கொல்ற? நீயும் சந்தோசமா இல்லை... நானும் சந்தோசமா இல்லை...’ மனதுக்குள் புலம்பினாலும் அவளுக்கு ஆறுதல் சொல்ல அவன் தவறவில்லை.

“பயப்படாதே...” அவள் கையை பிடித்து கொண்டு அவன் ஆறுதல் சொல்ல... அவளோ கலக்கமாய் அவன் தோள் சாய்ந்தாள்.

அவளின் கண் கட்டை அவிழ்த்த மருத்துவர் அவளை மெதுவாய் கண்களை திறக்க சொல்ல... அவளும் அதன்படி செய்தாள். அடுத்த நொடி,

“என்னால் பார்க்க முடியல...” அவள் அலற... மருத்துவரோ,

“கண்ணை மெதுவாய் திறந்து பாரும்மா. திடீர்ன்னு வெளிச்சம் பட்டால் கண்கள் கூச்சம் எடுக்கும். மெதுவாய்

வெளிச்சத்தை பழக்கப்படுத்தி கொண்டு திறந்து பார்” என்க, அவர் சொன்னதை செய்தவள், “இல்லை டாக்டர்... என்னால் பார்க்க முடியலை” அவள் கண்களில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

“ஆபேரசன் பண்ணி இருக்கும் போது இப்படி அழ கூடாதும்மா” என்று அவளை சமாதானம் செய்தவர், அவளின் பெற்றோரை அழைத்தார். உடன் காந்தனும் உள்ளே வந்தான்.

அவளுக்கு பார்வை வரவில்லை என்பதை அவர் சொன்னதும் அதை கேட்டு அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சியாயினர். அவர்களின் நம்பிக்கை கோட்டை ஒரு நொடியில் இடிந்து விழுந்ததை அவர்களால் தாங்கி கொள்ள முடியவில்லை.

“நாங்க எல்லாம் சரியா தான் பண்ணினோம். ஆனா எங்கே மிஸ்டேக் நடந்ததுன்னு எங்களுக்கு புரியல. சாரி பார் தட்...” அவரும் உண்மையாக வருத்தப்பட... அதற்கு மேலும் அவரை நொந்து பயனில்லை என்று நினைத்தவர்கள் அரசியை அழைத்து கொண்டு வெளியில் வந்தனர்.

“பாப்பா... நீ கவலைப்படாதே... நான் வெளிநாட்டுக்கு அழைச்சிட்டு போயாவது உனக்கு பார்வை வரவழைக்கிறேன்” கரிகாலன் மகளுக்கு ஆறுதல் சொல்ல... மற்றவர்கள் என்ன சொல்வது என்று தெரியாமல் பேசாது இருந்தனர்.

வீடு வந்ததும் அவளை அவள் அறையில் கொண்டு வந்து விட்ட காந்தன், அவளை இறுக அணைத்து கொண்டான். அவனுக்குமே துக்கம் தாங்க முடியவில்லை. அவளோ அதையெல்லாம் உணராதவளாய்,

“ரூபன் எப்போ கல்யாணம் பண்ணிக்க போறீங்க?” மெதுவாய் கேட்க, அவனுக்கு கோபமாய் வந்தது.

“எந்த நேரத்தில் எது பேசுவதுன்னு ஒரு விவஸ்தை இல்லையா உனக்கு?” அவளை கடிந்து கொண்டான்.

“இப்போ என்ன நடந்து போச்சுன்னு கவலைப்படுறீங்க? இது எதிர்பார்த்த ஒண்ணு தானே” சகஜமாய் பேசியவளை அவன் முறைத்தான். பின்பு தான் முறைப்பதை அவள் எங்கே உணர போகிறாள் என்று நினைத்தவன்,

“இப்போ என் கல்யாணத்துக்கு என்ன அவசரம்?”

“எனக்கு பிராமிஸ் பண்ணி கொடுத்திருக்கீங்களே” அவனின் சத்தியத்தை அவள் நியாபகப்படுத்தினாள்.

“எப்படி உன்னால இப்படி ஒரு காதலனோட மனசை கொல்ல முடியுது? எனக்கு கல்யாணம்ன்னா உனக்கு கொஞ்சம் கூடவா வருத்தமாயில்லை” அவன் குரல் வேதனையாய் ஒலித்தது.

“நம்ம காதலை எல்லாம் காதல்ன்னு சொல்லாதீங்க. சந்தர்ப்பவசத்தால் உண்டான இதுக்கு பேர் காதலே இல்லை. அன்னைக்கு நீங்க சொன்ன மாதிரி இது ஒரு பொருந்தா காதல். இந்த காதலால யாருக்கும் எந்த சந்தோசம் இல்லை” அவள் அவனின் கூற்றை முற்றிலும் மறுத்தாள்.

“உனக்கு வேணும்ன்னா சந்தோசம் இல்லைன்னு சொல்லு. இதில் என்னை கூட்டு சேர்க்காதே. உன்னை கல்யாணம் பண்ணினா தான் நான் சந்தோசமாய் இருப்பேன். உன் முடிவை மறுபரிசீலனை செஞ்சு பாருடா” அவன் கெஞ்ச அவள் மௌனம் காத்தாள்.

“இப்போ முடிவா என்ன சொல்ற?”

“நீங்க சத்தியம் செஞ்ச மாதிரி கல்யாணம் பண்ணிக்கோங்க”

“அது என்னால் முடியாது... என்னை கட்டுப்படுத்த நீ யாருடி? நான் கல்யாணம் பண்ணிக்கிறதும் பண்ணிக்காததும் என் இஷ்டம். இனிமேல் உன் முகத்துல முழிக்க மாட்டேன். உன் இஷ்டத்துக்கு நீ இருந்துக்கோ” கோபமாய் கத்தியவன் அங்கிருந்து அகல போனான். ஒரு கணம் அப்படியே நின்றவன் பின் மனம் மாறியவனாய்,

“இப்போ உனக்கு என்னடா நான் கல்யாணம் பண்ணிக்கணும் அவ்வளவு தானே. கூடிய சீக்கிரம் கல்யாண பத்திரிக்கையோட உன்னை வந்து சந்திக்கிறேன்” அவள் புறம் திரும்பி சொன்னவன் அவள் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்.

“ரூபன்...” அவன் கைப்பற்றி தடுத்தவள் அவன் முகத்தை தன் கைகளில் தாங்கியவள், “கடைசியாய் ஒரு முறை...” என்று சொல்லியவள் அவன் உதட்டில் அழுத்தமாய் தன் இதழை பதித்தாள்.

அத்தோடு அவள் விடவில்லை அவன் முகம் முழுவதும் முத்திரையை பதித்தவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவன் முகம் முழுவதும் அவள் முத்தத்தின் எச்சிலாலும், கண்ணீராலும் ஈரமாயின. அவனும் அவளுக்கு ஏதுவாய் தன் முகத்தை கொடுத்தபடி அவளின் காதலை உணர்ந்தவனாய் அப்படியே அசையாது நின்றிருந்தான்.

“தேங்க்ஸ் ரூபன்... தேங்க்ஸ். எல்லாத்துக்கும் தேங்க்ஸ்” அவள் அவனுக்கு நன்றி தெரிவிக்க... அவனோ அவள் முகத்தை கூர்ந்து பார்த்தவன், “இவ்வளவு நேரம் எனக்கு புரியாமல் இருந்தது... இப்போ புரிஞ்சிருச்சு...” ஒருவித சிரிப்புடன் கூறியவன் அவளின் அறையை விட்டு வெளியேறினான். அவளோ அவன் சொன்னதின் அர்த்தம் புரியாதவளாய் குழம்பி போனாள்.

**************************************************

கரிகாலன் மகளை அழைத்து கொண்டு திருநெல்வேலிக்கே வந்துவிட்டார். வந்ததும் முதல் வேலையாக அறிவின் காதலுக்காக காந்தனின் வீட்டிற்கு சென்று பெண் கேட்டார். முதலில் காவேரி யோசித்தாலும் காந்தன் தன் நண்பனை பற்றி நல்லவிதமாய் சொல்லி அன்னையை சம்மதிக்க வைத்தான். அடுத்த நாளே நிச்சயம் வைத்து திருமண நாளை உறுதிப்படுத்தினர்.

இந்நிலையில் ஒருநாள் காந்தன் அரசியை பார்க்க வந்தான். அவனை உற்சாகமாய் வரவேற்றவள் என்ன

விசயம்? என்று கேட்க,

“நீ விரும்பின மாதிரி எனக்கு கல்யாணம் பிக்ஸ் பண்ணிட்டாங்க. நம்ம அறிவு, கார்த்தி கல்யாணத்தோட சேர்த்து வச்சுக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கோம்” என்னவோ செய்தி சொல்வது போல் உணர்ச்சி இல்லாமல் வந்தது அவனின் வார்த்தைகள்.

அவனுக்கு திருமணம் என்றதும் அவள் முகம் ஒரு நொடி வேதனையில் ஆழ்ந்தது. அடுத்த நொடி தன்னை சமாளித்து கொண்டாள். “பொண்ணு என்ன பண்றாங்க?”

“டிகிரி முடிச்சிருக்கா... வேலைக்கு போகல” என்றவன், “கட்டாயம் நீ என் கல்யாணத்துக்கு வரணும். ஏன்னா இந்த கல்யாணம் நடக்க உதவியாய் இருந்தது நீ தானே?” அவனின் வார்த்தைகள் நக்கலாய் வந்தது. அது அவள் உள்ளத்தை குத்தினாலும் வெளியில் காட்டி கொள்ளவில்லை.

“கட்டாயம் வருவேன்... நான் இல்லாமலா?” அவள் வலிய வரவழைத்த உற்சாகத்துடன் சொல்ல...

“அதானே... நீ இல்லாமலா?” ஒரு மாதிரி குரலில் கேட்டவன் அதற்கு மேல் நிற்காமல் சென்று விட்டான். அவன் சென்றதை அறிந்ததும் அவள் அப்படியே கதறி அழுதாள். இது அவள் எதிர்பார்த்தது என்றாலும்... அவள் இதயத்தில் எழுகின்ற வலியை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

காந்தனின் திருமணநாளும் வந்தது. அன்றைக்கு எழுந்ததில் இருந்து அவளுக்கு துக்கமாய் இருந்தது. கண்களில் கண்ணீர் பொங்கி பொங்கி வழிந்தது. அவனின் திருமணத்தை தடுத்து அவன் கையால் தாலி வாங்கி கொள்ள அவள் மனம் துடித்தது.

“என்ன அரசி இன்னமும் கிளம்பலையா?” என்று கேட்டு கொண்டே கலைமகள் வந்தார்.

“நான் வரணுமாம்மா?”

“இது என்ன கேள்வி வரணுமான்னு? அறிவுக்காகவாவது நாம போக வேண்டமா? முதல்ல நீ கிளம்பு...” என்றதோடு அவர் பேச்சை குறைத்து கொண்டு மகளை தயார் செய்தார்.

இயந்திர கதியில் கிளம்பியவள் மண்டபத்திற்கு போய் இறங்கியதும் அங்கு ஒலித்த நாதஸ்வர ஓசையில் சுய உணர்வு அடைந்தாலும், மீண்டும் தன் மனதுக்குள் போராட துவங்கிவிட்டாள். தன் தலையில் தானே மண்ணை அள்ளி போட்டு கொண்டோமே என்று அவள் மனம் ஓவென்று அலறியது. தனக்குள் உழன்று கொண்டு வந்தவளை கலைமகள் தான் கை பிடித்து அழைத்து சென்றார்.

“கெட்டிமேளம்... கெட்டிமேளம்...” என்ற ஓசை அவள் காதில் நாராசாரமாய் விழ, கண்களில் கண்ணீர் வழிய துடித்து போனவளாய் இருந்தவளின் செவியருகே,

“நீ ஆசைப்பட்ட கல்யாணம் தானே... அப்புறம் எதுக்கு இந்த கண்ணீர்...?” காந்தனின் குரல் சீறலாய் ஒலித்தது.

“இன்னும் எத்தனை நாள் நடிச்சு ஏமாத்தலாம்ன்னு ஐடியா இருக்கு?” காந்தன் ஒற்றை புருவத்தை தூக்கியபடி கிண்டலாய் அரசியை பார்த்து கேட்டான்.

தனக்கு பார்வை வந்தது இவனுக்கு எப்படி தெரியும் என்று குழம்பி போனவளாய், “நா… நான்… அது வந்து…” வார்த்தைகள் வராமல் தடுமாறி போய் நின்றிருந்தவளின் கையை பிடித்து கொண்டு, “நீ பேச வந்ததை பிறகு பேசலாம்” என்றவன் அவளை அழைத்து கொண்டு மணமேடையில் அமர்ந்தான்.

அப்போது தான் மேடையை கவனித்தாள்… முதலில் நடந்தது அறிவு – கார்த்திகாவின் திருமணம். அதற்கு மேல் காலம் தாழ்த்தாமல் காந்தன் அவளின் கழுத்தில் தாலி கட்ட… அவளோ அதை மறுக்க முடியாமல் பிரமிப்பாய்… நம்ப முடியாமல் அமர்ந்திருந்தாள்.

அதை விட ஆச்சிரியம் என்னவென்றால் அரசிக்கு நாத்தனார் முடிச்சு போட்டது காஞ்சனா. கரிகாலன் காஞ்சனாவின் மன குறையை அறிந்தவர்… உடனே அதை களைய எண்ணினார். காஞ்சனாவின் புகுந்த வீட்டினரிடம் பேசி… ராஜாவுக்கு நல்ல வேலையை வாங்கி கொடுக்க அதிலேயே அவள் வீட்டினர் விழுந்து விட்டனர். அத்தோடு அவர் விடவில்லை தேவிக்கும் நல்ல மாப்பிள்ளை பார்த்து கொடுத்தார். காந்தனை விட படிப்பிலும், உத்தியோகத்திலும், பணத்திலும் அதிக உயரத்தில் இருந்த அந்த மாப்பிள்ளையை அவளுக்கு பிடித்து போக… அந்த பிரச்சினையும் களையப்பட்டது. அதன் பின்னரே காஞ்சனா தன் பிறந்த வீட்டினருடன் சுமூகமானாள்.

காஞ்சனாவின் வீட்டினரை சமாதானப்படுத்த முடிந்த கரிகாலனால் தன் மகளின் வீட்டினரை சமாதானப்படுத்த முடியவில்லை. அதை அப்படியே விட்டு விட்டார்.

“பாப்பா… இந்த அப்பாவை கூட ஏமாத்திட்டியேடா…” கரிகாலன் மகளின் கல்யாண கோலத்தை பார்த்து மனம்

திருப்தியுற்றவராய் அவளை மகிழ்ச்சியுடன் அணைத்து கொண்டவர் ஆற்றாமையில் மகளிடம் கேட்டுவிட்டார். கண் பார்வை வந்தும் மகள் அதை யாரிடமும் சொல்லாமல் மறைத்து விட்டதை அவரால் தாங்கி கொள்ள முடியவில்லை.

“அப்பா… நான் வேணும்ன்னே செய்யல…” என்றவள் அதற்கு மேல் அதை பற்றி பேசவில்லை.

“நீங்க நினைச்சதை சாதிச்சிட்டீங்கல்ல…” என்று மட்டும் காந்தனை பார்த்து கேட்டாள். அவளின் வார்த்தையில் அவன் திடுக்கிட்டு போய் அவளை பார்க்க… அவளோ மையலாய் அவனை பார்த்தாள். அதில் நிம்மதியுற்றவனாய்,

“எனக்கு தெரியாம உன்னை என்னிடம் இருந்து மறைக்க முடியமா என்ன?” அவன் கண்சிமிட்டியபடி சொல்ல… அவள் முகம் செவ்வானமாய் சிவக்க தலையை குனிந்து கொண்டாள்.

அதன் பின்னர் சடங்கு, சம்பிராதயம் என்று நேரம் செல்ல… அரசி காந்தனிடம், “நம்ம வீட்டுக்கு போகலாம்” அவள் சொன்னதை கேட்டு கரிகாலன், கலைமகள் திடுக்கிட… காந்தன் யோசனையாய் பார்த்தான்.

“நான் அவர் வீட்டில் இருக்கிறது தான் முறை…” என்றவளிடம் எந்த சமாதானமும் எடுபடவில்லை. அதே போல் எந்தவித சீர் வரிசையும் வேண்டாமென்று அவள் கூறிவிட்டு… கட்டிய புடவையோடு கழுத்தில் ஒற்றை சங்கிலி, காதில் தோடு, கையில் ஒரு ஜோடி வளையல் இதை மட்டும் அணிந்து கொண்டு அவனுடன் செல்ல தயாரானாள்.

“ஏன் பாப்பா… இப்படி நடந்துக்கிற?” கரிகாலன் பதறி போய் கேட்க,

“என் கிட்ட உள்ள நகை எல்லாம் உனக்கு தானே கண்ணு. இப்படி ஒண்ணுமே போடாம போறீயே அரசி” கலைமகள்

தன் பங்கிற்கு புலம்ப,

“அவரை அவருக்காக நீங்க ஏத்துகிட்டு இருந்தா நான் இதையெல்லாம் சந்தோசமா ஏத்துகிட்டு இருப்பேன். ஆனா உங்க சுயநலத்துக்காக அவரை பணயமா வச்சது எனக்கு பிடிக்கல. உங்க மேல பாசமிருக்கு. அதே சமயம் என் கணவன் மேல் காதலிருக்கு. அவரோட தன்மானத்தை பாதிக்கிற எதையும் நான் செய்றதா இல்லை” அவள் உறுதியை கண்டு... காதலை கண்டு... மனம் நெகிழ்ந்து போனான் காந்தன். அதன் பின் அவளை யாரும் கட்டாயப்படுத்தவில்லை.

“அவ பேசியதை மனசுல வச்சுக்காதீங்க. நான் அவளை நல்லா பார்த்துக்குவேன். அடிக்கடி இங்கே கூட்டிட்டு வர்றேன்” என்று காந்தன் தான் அரசியின் பெற்றோரை சமாதானப்படுத்தினான்.

அவன் வீட்டிற்கு போகும் வழியில் அவள் உடுத்துவதற்கு உடைகளை காந்தனை வாங்கி தர சொன்னாள். அவன் வாங்கி கொடுத்த எளிமையான உடைகளை சந்தோசமாய் வாங்கி கொண்டாள். அவனின் சிறிய வீட்டில் வாழ்வதற்காக முதன்முறையாய் காலடியெடுத்து வைத்தவளின் மனம் முழுக்க மகிழ்ச்சி மட்டுமே நிரம்பியிருந்தது.

இரவு சடங்கையும் வேண்டாமென்று மறுத்தவள் மாமியாருடன் சென்று படுத்து கொண்டாள். அதை கேள்விப்பட்ட அவனோ கொதிப்படைந்தான்.

“வசீ...” அவன் அவளை மெதுவாய் அழைக்க... அவளோ காது கேளாதவளாய் படுத்திருந்தாள். மீண்டும் அழைக்க காவேரி, “காந்தன் கூப்பிடற மாதிரியிருக்கு... போம்மா” வேறுவழியில்லாமல் எழுந்து வெளியில் வந்தாள்.

“என்ன...?” இடுப்பில் இரு கையை வைத்து கொண்டு அவள் முறைக்க... அவனோ அவள் முறைப்பை கண்டு கொள்ளாமல் அவளை அணைத்தான்.

“மனுசனோட தவிப்பு புரியாம என்ன என்னன்னு கேள்வி கேட்டுக்கிட்டு?” அவள் காதில் முணுமுணுக்க,

“அதுக்காக இங்கே வச்சா?” அவள் அவனை பிடித்து தள்ள... அவளின் கையை எடுத்து முத்தமிட்டபடி அவன் முன்னேற...

“ப்ளீஸ் ரூபன் வேண்டாம்... அத்தைக்கு கேட்கும்” அவன் அம்மாவை சொன்னதும் அவனின் உணர்வுகள் அறுந்து போக அவளை விட்டு கையை விலக்கினான்.

“இதை நாம சென்னைக்கு போனதும் வச்சுக்கலாம். என்ன சரியா?” அவள் சொல்ல வருவது அவனுக்கு புரிய... அவன் சம்மதமாய் தலையை ஆட்டினான்.

“இப்போதைக்கு இதை வச்சுக்கோங்க” என்றவள் அவன் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு ஓட... அவள் போவதை சிரித்தபடி பார்த்திருந்தான் அவன்.

அவள் சொன்னது போல் இரட்டை படுக்கையறை கொண்ட வீட்டை வாடைக்கு எடுத்தான். அதன் பின்னர் வீட்டை தயாராக்க மேலும் ஒரு மாதம் பிடித்தது. அதுவரை இருவரும் அலைப்பேசியில் குடித்தனம் செய்தனர். ‘உனக்கு பார்வை வந்ததை ஏன் என்னிடம் இருந்து மறைத்தாய்?’ என்று அவன் மறந்தும் அவளிடம் கேட்கவில்லை அவளும் அதை பற்றி அவனிடம் பேசவில்லை.

கடைசியில் காவேரி, அரசி இருவரும் சென்னை கிளம்பும் நாளும் வந்தது. காவேரி கிளம்பும் போது... அங்கே சடங்குகள் செய்வதற்காக கார்த்திகாவை தங்களுடன் வருமாறு அழைத்தார். அவளை பிரிய மனமில்லாமல் அறிவும் அவளுடன் வர எல்லோரும் சென்னைக்கு செல்ல ஆயத்தமாயினர்.

ரயில் நிலையத்தில் காத்திருந்த காந்தன் எல்லோர் வரவையும் பார்த்து அதிர்ச்சியடைந்தான். ஆனால் ஒன்றும் பேசவில்லை.

“ஹாய் காந்தா… எப்படிடா இருக்க?” அறிவு உற்சாகமாய் அவனை பார்த்து கையை அசைத்தான்.

“வாடா…” வேறுவழியின்றி சிரித்தபடி காந்தன் அறிவை வரவேற்க…

“வாய் தான் அப்படி சொல்லுது? ஆனா முகம் அப்படி சொல்ல மாடேங்குதே…” நண்பனை சந்தேகமாய் பார்த்தான் அறிவு.

“தெரியுதுல்ல… அப்புறம் என்ன?” எரிச்சலுடன் முணுமுணுத்தான் அவன்.

“வீட்டு மாப்பிள்ளைங்கிற மரியாதை கொஞ்சமாவது இருக்கா?” புலம்பியவனை பார்த்து,

“சாரிடா…” என்று காந்தன் சொல்ல…

“அந்த பயம் இருக்கணும்டா…” அவன் சொல்லும் போதே அவன் கையில் பயண பொதிகளை திணித்தவன், அரசியுடன் பேசியபடி நடந்து சென்றான்.

“எல்லாம் என் நேரம்…” நொந்தபடி அவனை பின் தொடர்ந்தான் அறிவு.

காந்தனும், அரசியும் பரிமாறி கொள்ளும் காதல் பார்வைகளும்… செய்யும் சிறு சிறு சிலுமிசங்களையும் கண்ட கார்த்திகாவுக்கு பெருத்த சந்தேகம் வந்தது. அதை உடனே கணவனிடம் சென்று கேட்டும் விட்டாள்.

“ஏங்க உங்களுக்கு என்னை பிடிக்குமா?”

“இவ்வளவு நாளுக்கு அப்புறம் இதுல உனக்கு என்ன டவுட் கண்ணம்மா?” அறிவு சரசமாய் கேட்க…

“அண்ணனையும், அண்ணியையும் பார்க்கும் போது எவ்வளவு அன்னியோன்யமாய் இருக்காங்க… நாம அதே மாதிரி இருக்கோமான்னு ஒரு சந்தேகம் வந்திருச்சு. ஒருவேளை காதலிச்சவங்க தான் இப்படி இருப்பாங்களோ?”

“ஆமாம் உன் அண்ணனுக்கு மட்டும் தான் காதலிக்க தெரியுமா? நானும் உன்னை காதலிச்சு தான்டா கல்யாணம் பண்ணிக்கிட்டேன். என்ன உன் அண்ணனுக்கு பயந்து அரேஞ்சுடு மேரேஜா மாத்திட்டேன்” அவன் சொல்லி கொண்டு இருக்கும் போதே,

“நம்பிக்கை துரோகி…” என்று காந்தனின் குரல் கேட்க…

“டேய்… அப்படியெல்லாம் இல்லைடா… மீ பாவம்” அவன் அலற…

“ஏண்டா… என் கிட்ட சொல்றதுக்கு என்ன? நான் என்ன காதலுக்கு எதிரியா?” என்று கேட்டவனை ஆவென பார்த்தான் அறிவு.

“என் தங்கைக்கு உன்னை விட நல்ல மாப்பிள்ளை வேறு யார் கிடைப்பாங்க” என்றவன் அறிவை கட்டி கொண்டான்.

“டேய் எதுக்குடா எலும்பு நொறுங்குகிற மாதிரி கட்டி பிடிக்கிற? நான் அரசி இல்லைடா…” என்று அவனிடம் கத்தியவன், “கார்த்தி முதல்ல உன் அண்ணனுக்கு பர்ஸ்ட் நைட் ஏற்பாடு பண்ணு. பயபுள்ள காஞ்சி போய் கிடக்குது”

“அதை செய்டா…” அறிவின் காதில் முணுமுணுத்தான் காந்தன்.

“இதுக்கு மேலே இங்கே இருந்தா எங்களுக்கு மரியாதை இல்ல…” என்று சொன்ன அறிவு மனைவி மூலம் எல்லா ஏற்பாடை செய்தவன் அன்று இரவே திருநெல்வேலிக்கு புறப்பட்டு சென்றான்.

அவர்களை வழியனுப்பிவிட்டு வீட்டிற்கு வந்த காந்தன்… அன்னை உறங்க சென்று விட்டதை அறிந்து தன் அறையை நோக்கி சென்றான். கையிலிருந்த புத்தகத்தில் ஆழ்ந்திருந்த அரசி கதவு தாழிடும் ஓசை கேட்டு நிமிர்ந்தாள். அங்கே காந்தன் நின்று கொண்டிருக்கவும்,

“அதுக்குள்ளே விட்டுட்டு வந்துட்டீங்களா?” என்றவளின் பேச்சு பாதியில் நின்றது. கணவனின் பார்வையில்

தெரிந்த மாற்றத்தில் அவள் பேச்சற்று போனவளாய் எழுந்து நின்றாள்.

நிதான நடையுடன் அவளை நோக்கி வந்தவன்... அருகில் வந்ததும் அவளை அணைத்து கொண்டு முத்தமழை பொழிந்தான். அவனின் கால்களுக்கு இருந்த நிதானம் அவனின் கைகளுக்கும், உதட்டுக்கும் இல்லையோ!

“ஐயோ மூச்சு முட்டுதுங்க... கொஞ்சம் பொறுமையா...” அவள் குரல் கெஞ்ச...

“இதுக்கும் மேலே என்னால பொறுமையாய் இருக்க முடியாது...” அவன் சொல்லி கொண்டே தன் காரியத்தில் கண்ணாய் இருக்க...

“எனக்கு உங்க கூட பேசணும்... ப்ளீஸ் ரூபன்” அவளின் இந்த குரலுக்கு அவன் செவி சாய்த்தான். அவளை கட்டிலில் அமர வைத்தவன், தானும் அமர்ந்து கொண்டு,

“என்ன பேசணும் சொல்லு?”

“எனக்கு கண் தெரியும்ன்னு உங்களுக்கு எப்படி தெரியும்?” தான் அவனிடம் சொல்லாமல் மறைத்ததை எண்ணி அவள் தலை குனிய,

“அன்னைக்கு உன் கிட்ட கோபப்பட்டு வெளியில் போறதுக்காக திரும்பிய என் கண்ணுல உன் ரூமிலிருந்த கண்ணாடி தெரிஞ்சது. அதில் காதலோடு என்னை பார்த்துக் கொண்டிருந்த நீ தெரிஞ்ச... உனக்கு பார்வை வந்திடுச்சுன்னு உணர்ந்த அந்த கணம் என் மனசுக்கு எவ்வளவு சந்தோசமா இருந்தது தெரியுமா? அப்படியே உன்னை அணைச்சுட்டு அழணும் போல இருந்தது. ஆனா என் மனசை கட்டுப்படுத்திக்கிட்டேன். என்னை தவிக்க விட்ட உன்னை நானும் தவிக்க விட நினைச்சேன். அதான் நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு உன் கிட்ட சொன்னேன். அப்போ நீ என் முகத்தை அப்படியே பிடிச்சு கரெக்டா என் உதடு பார்த்து கிஸ் பண்ணியே அப்போ எனக்கு நல்லாவே கன்பார்ம் ஆனது உனக்கு பார்வை

வந்திடுச்சுன்னு” தன்னுடைய ஒவ்வொரு செயலையும் அவன் கவனித்து இருக்கிறான் என்பதில் அவளுக்கு பெருமையாய் இருந்தது.

“என் மேலே கோபம் இல்லையே?” அவளுக்கு இன்னமும் தவிப்பு தீரவில்லை. அவளின் தவிப்பு புரிந்து அவன் அவளை தன் நெஞ்சில் சாய்த்து கொண்டு,

“உன் மேல் நான் கோபப்பட முடியுமா? நீ என் தேவதைடா. நீ எனக்காக… என் தன்மானத்துக்காக தான் போராடுறேன்னு தெரிஞ்சுக்க முடியாத அளவுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்லை. உன் கிட்டே பேசிட்டு நேரே நான் உன் அப்பா, அம்மா கிட்ட தான் பேசினேன். இப்போ அவளுக்கு பார்வை தெரியுது. எனக்காக தெரியலைன்னு பொய் சொல்றா. இப்பவும் என்னை உங்க மாப்பிள்ளையா ஏத்துக்க சம்மதமான்னு கேட்டேன். அதுக்கு அவங்க உங்க காதலை பார்த்த பின்பும் நாங்க உங்களை பிரிக்க மாட்டோம். உங்களை உங்களுக்காக மட்டும் தான் மாப்பிள்ளையா ஏத்துக்கிறோம்ன்னு சொன்னாங்க “ அவன் சொல்ல சொல்ல… அவள் பிரமிப்பாய் கேட்டு கொண்டிருந்தாள்.

“இப்போ உனக்கு சந்தோசமா… அவங்க என்னை ஏத்துக்கிட்டதுக்கு காரணம் உன்னோட லவ் தான்” அப்போது தான் அவளுக்கு நிம்மதியாய் இருந்தது. தன் கணவனை அவனுக்காக தன் பெற்றோர் ஏற்று கொண்டது அவளுக்கு சந்தோசத்தை தந்தது.

“உன்னோட காதல் எனக்கு கிடைச்சது நான் பண்ணிய அதிர்ஷ்டம். உனக்கு என்ன வேணும் கேளுடா” அவன் கேட்க,

அவன் நெஞ்சில் இருந்து தலை நிமிர்த்தி அண்ணாந்து பார்த்தவள், “எப்போதும்… எந்த காரணத்தையும் கொண்டு என்னை நீங்க பிரியவே கூடாது. அது தான் அது மட்டும் தான் எனக்கு வேணும்” என்று கேட்டவள் கண்ணில் தெரிந்த காதலில் அவன் கரைந்தே போனான்.

அவளின் தாடையை தன் இருகைகளில் தாங்கியவாறு... அவள் கண்ணுக்குள் உற்று நோக்கியவன், அவளின் கேள்விக்கான பதிலை பாட்டாகவே படித்தான்.

“கண்ணே கனியே உன்னை கைவிட மாட்டேன்
சத்தியம் சத்தியம் இது சத்தியமே
மாலை சூடிய காலை கதிரின் மேலே
சத்தியம் சத்தியம் இது சத்தியமே
ஒரு குழந்தை போலே ஒரு வைரம் போலே
தூய்மையான என் சத்தியம் புனிதமானது”
அவன் பாடியது கேட்டு அவள் வியப்பாய் அவனை பார்த்தாள்.

“இப்பிறவியில் இன்னொரு பெண்ணை சிந்தையிலும் தொடேன்
பிறிதோர் பக்கம் மனம் சாயா பிரியம் காப்பேன்” என்று அவன் பாடியதும் அவள்,

“நீங்க வேண்ணா இன்னொரு பெண்ணை பார்க்கலாம். நான் அப்படியெல்லாம் இல்லை... என்னை எப்படி நீங்க இப்படி சொல்லலாம்?” என்று அவனை செல்லமாய் அடித்தவள் அவனிடம் கோபம் கொண்டு தலையணையில் முகம் புதைத்து கொண்டாள்.

அவளின் செல்ல கோபம் கண்டு அவன் சிரித்தபடி அவள் கால் பற்றி,
“செல்ல கொலுசு சிணுங்கல் அறிந்து சேவை செய்வேன்” என்று அவளின் கொலுசில் முத்தமிட்டவன் அவள் பாதத்திலும் தன் இதழை பதிக்க... அவளோ பதறி போனவளாய் எழுந்தவள் அவனின் செயலை தன் கரம் கொண்டு தடுத்தாள்.

அவனோ அவள் தடுப்பதை தன் கை கொண்டு அடக்கியவனாய் அவள் மேனியில் தன் இதழை பதித்தபடி முன்னேறினான். அவனின் இதழ் ஒற்றலில் மெழுகாய் உருகியவள் அவனின் செயலுக்கு தன்னையும் அறியாமல் உடன் பட்டாள். அவர்களின் காத்திருந்த காதல் தன் காத்திருப்பு விரதத்தை இன்றோடு முடித்து கொள்ள

எண்ணி அவர்களின் மனதில் காதல் தீயை மூட்டிவிட்டது. விடிய விடிய அவர்களின் காதல் தீ கொஞ்சமும் அணையாமல் கொழுந்துவிட்டு பற்றியெரிந்தது.

தங்கள் காதலுக்காக தன்னையே தந்த தன்னவளின் களைத்த முகத்தை பரிவுடன் தடவி கொடுத்தவன், அவள் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவாறு,

“நெற்றில் பொட்டில் முத்தம் பதித்து நித்தம் எழுவேன்
கைப்பொருள் யாவையும் கரைத்தாலும் கணக்கு கேளேன்
ஒவ்வொரு வாதமும் முடியும்போது உன்னிடம் தோற்பேன்”

“அடேங்கப்பா... பெரிய காதல் மன்னன் தான் போங்க...” கையை ஆட்டி கிண்டலாய் சொன்னவளின் கையை பிடித்து ஒவ்வொரு விரலாய் இதழ் பதித்தவன்,

“அர்த்த ஜாமம் திருடன் போல அதிர்ந்து பேசேன்
காமம் தீரும் பொழுதிலும் எந்தன் காதல் தீரேன்
மாத மலர்ச்சி மறையும் வயதில் மார்பு கொடுப்பேன்
நோய் மடியோடு நீ விழுந்தால் தாய் மடியாவேன்
சுவாசம் போல அருகில் இருந்து சுகப்பட வைப்பேன்
உந்தன் உறவை எந்தன் உறவாய் நெஞ்சில் சுமப்பேன்”

அவன் பாடிய பாடலின் அர்த்தம் புரிந்து அவள் கண்கள் கலங்கியது. “எனக்கு இதை விட என்ன வேணும்? உங்க காதலை விட எனக்கு வேறு என்ன வேணும்?” என்று சொல்லியவள், அந்த பாடலின் அடுத்த வரிகளை அவள் பாடினாள்.

“உன் கனவுகள் நிஜமாக எனையே தருவேன்
உன் வாழ்வு மண்ணில் நீள என்னுயிர் தருவேன்”

அவள் முடிக்கும் போது அவள் வாயை தன் கை கொண்டு மூடியவன், “அப்படி சொல்லாதேடி... என் ஆயுள் முழுமைக்கும் நீ வேணும் செல்லம்” அவனுக்குமே கண்கள் கலங்கியது.

“காதல் கணவா உன் கரம் விட மாட்டேன்
சத்தியம் சத்தியம் இது சத்தியமே

தாய் வழி வந்த எங்கள் தர்மத்தின் மேலே
சத்தியம் சத்தியம் இது சத்தியமே”

என்று சொல்லியவாறு அவள் அவன் நெஞ்சில் சாய, அந்த கணத்தை இருவரும் மௌனமாய் ரசித்தனர். அவள் தான் அந்த மௌனத்தை கலைத்தாள்…

“இப்போ தான் எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு ரூபன்… எங்கே என் காதல் கானல் நீராய் போய்விடுமோன்னு ரொம்ப பயந்திருந்தேன். நீங்க எனக்கு கிடைச்சது என்னால நம்பவே முடியல”

“இவ்வளவு நேரம் நடந்ததை பார்த்துமா உனக்கு நம்ப முடியல. இது ரொம்ப தப்பாச்சே…” என்றவன் மீண்டும் அவளின் இதழை நாட…

“ச்சீ… நீங்க ரொம்ப மோசப்பா…” என்று செல்லமாய் சிணுங்கினாலும் அவனின் செயலுக்கு விருப்பத்துடன் உடன்பட்டாள் அவன் காதல் மனைவி.

காந்தனின் காதல் கை கூடியது போல்… அவனின் கனவுகளும் கூடிய சீக்கிரம் கை கூட வேண்டுமென்று பிரார்த்தனையோடு நானும் உங்களிடம் இருந்து விடை பெறுகிறேன்.

******* கானலாய் காட்சியளித்த அவர்களின் காதல் கை சேர்ந்தது ******